www.padippakam.com

# பாசிசம்

எம்.என்.ராய்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# பாசிசம்

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

எம்.என்.ராய்

தமிழாக்கம் :

வெ. கோவிந்தசாமி

விடியல் பதிப்பகம்
கோவை

படிப்பகம்

www.padippakam.com

| | |
|---|---|
| தலைப்பு | : பாசிசம் |
| ஆசிரியர் | : எம்.என்.ராய் |
| பொருள் | : சமூகவியல் – அரசியல் ஆய்வு. |
| தமிழாக்கம் | : வெ. கோவிந்தசாமி. |
| ஒளி அச்சு | : தமிழோசை ஒளி அச்சகம்<br>797–ஈ, சிறீராம்மோகன் வணிக வளாதம்,<br>சத்தி சாலை, காந்திபுரம்,<br>கோவை – 641 012. |
| அச்சாக்கம் | : மணி ஆஃப்செட், சென்னை –5. |
| முதல் பதிப்பு | : அக்டோபர் 1999. |
| விலை | : ரூ. 35/– |
| வெளியீடு | : விடியல் பதிப்பகம்<br>3, மாரியம்மன் கோயில் வீதி,<br>உப்பிலிபாளையம்,<br>கோவை – 641015<br>தொலைபேசி : 0422– 576772. |

| | |
|---|---|
| Title | : Fascism |
| Editor | : M.N.Roy |
| Subject | : A socio -political study. |
| Tamil Translation | : V. Govindasamy. |
| Laser Print | : Tamilosai Laser Prints<br>797 E, Sri rammohan Complex,<br>Sathy Road, Gandhipuram,<br>Coimbatore - 641 012. |
| Off-set Printing | : Mani Offset, Chennai -5. |
| First Edition | : Oct 1999 |
| Price | : Rs.35/- |
| Publishers | : Vidiyal Pathippagam<br>3, Mariamman Kovil Street,<br>Uppilipalayam,<br>Coimbatore - 641 015. Ph : 0422- 576772. |

படிப்பகம்

www.padippakam.com

# பதிப்புரை

இரு வழிகளில் இந்நூலை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதுகிறோம் இதுநாள்வரை இந்திய கம்யூனிச இயக்கத்தில் மறக்கப்பட்டு வந்த அல்லது இன்னும் சரியாகச் சொல்வதானால் மறைக்கப்பட்டு வந்த தோழர் எம்.என்.ராய் அவர்களின் படைப்பு முதன்முதலாகத் தமிழில் வெளிவருவது ஒரு சிறப்பு. இந்திய அரசியல்வானில் வகுப்புவாத மேகங்கள் திரண்டு நிற்கும் இந்தக் காலகட்டத்தில் இந்நூல் வெளிவருவது இன்னொரு சிறப்பு.

பாசிசம் ஆட்சிக்கட்டில் ஏறிய அரசியல் நிகழ்வை எம்.என்.ராய் அவர்கள் மிகச் சிறப்பாக இந்நூலில் விவரித்துள்ளார். இந்துத்துவ வகுப்புவாதத்தின் இன்றைய அரசியல் செயல்பாடுகளோடு இதனை ஒப்பிட்டுப்பார்த்தால் பல ஒற்றுமைகள் புலப்படும். மனிதகுல வளர்ச்சிக்கு எதிராய் நின்ற அனைத்து கருத்தியல் சிந்தனைகளும், பாசிசக்கருத்தியலுக்கு அடிப்படையாய் இருப்பதை இவர் தெளிவாக முன்னெடுத்து வைத்துள்ளார். கூடவே, இந்தியப் பார்ப்பனியச்சிந்தனைக்கும், பாசிசக்கருத்தியலுக்கும் இடையிலான உறவையும் ஆங்காங்கே சிறுகுறிப்பாகச் சுட்டிக்காட்டியுள்ளார். அய்ரோப்பிய தத்துவ வகைகளை இவர் விவரிக்கும்போது இவரின் மேதைமை நமக்கு வியப்பை ஏற்படுத்துகிறது.

அய்ரோப்பியவகைப் பாசிசத்திற்கும் இந்தியவகைப் பாசிசத்திற்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டு கொள்ள இவர் எழுத்துக்கள் பயன்படக்கூடும்.

வகுப்புவாத அபாயம் குறித்த எச்சரிக்கைக் குறிப்பு என்ற வகையில் சனநாயக சக்திகளுக்கு இந்நூல் பயன்படும் என்பதே எங்கள் மகிழ்ச்சி.

இந்நூலின் ஆங்கிலப்படியைத் தந்து உதவிய எஸ்.வி. ராஜதுரை , மொழியாக்கம் செய்து தந்த வெ. கோவிந்தசாமி, மொழியாக்கத்தில் உதவி செய்த நடராஜ் ஆகிய அனைவருக்கும் எமது நன்றி.

விடியல் பதிப்பகம்

கோவை

படிப்பகம்

www.padippakam.com

# பொருளடக்கம்

| | |
|---|---|
| பாசிசத்தின் தத்துவம் | 5 |
| பாசிசதத்துவத்தின் அடித்தளம் | 12 |
| அதி மனித வழிபாடு | 33 |
| சுவஸ்திக் சின்னத்தின் கீழ் | 45 |
| தேசிய சோசலிசம் | 67 |
| 'இரத்தம் சிந்தாப்' புரட்சி | 90 |
| பாசிசத்தின் நடைமுறை | 102 |
| எம்.என். ராய் வாழ்க்கைக் குறிப்புக்கள் | 113 |

படிப்பகம்

www.padippakam.com

# பாசிசத்தின் தத்துவம்

பாசிசம் என்பது ஒப்பீட்டளவில் ஒரு புதிய சமூக–பொருளியல் நிகழ்வாகும். இது முதன்முதலில் 1919–ல் இத்தாலியில் தோன்றியது. அதன்பின், அய்ரோப்பிய நாடுகள் அனைத்திலும் பரவியதோடு சிலவற்றில் முழு வெற்றியும் பெற்றுவிட்டது. இதன் திடீர்த்தோற்றமும், இது பெற்ற கண்கவர் வளர்ச்சியும், இயல்பாகவே இன்றைய முக்கியச் செய்தியாக இதனை ஆக்கிவிட்டன. முன்னேற்றத்தையும், சுதந்திரத்தையும் விரும்பும் அனைவரும், இது இழைத்த கொடூரங்களைக் கண்டு அதிர்ச்சியடைந்திருக்கின்றனர். பாசிசத்திற்கு ஆதரவாகவும் எதிராகவும் பெருமளவு நூல்கள் எழுதப்பட்டுள்ளன. இதனை ஆதரிப்பதற்கு அல்லது இதன் புகழ்பாடுவதற்குப் புதிதாக யாரும் தேவையில்லை என்ற போதிலும், இது அரசியல் வழியில் பின்னடைவையும் சமூகவழியில் பிற்போக்கையும் கொண்ட இயக்கம் என்ற கண்டனத்திற்கு இலக்காகியுள்ளது. அழுகிப்போன முதலாளியத்திற்கு முட்டுக்கொடுக்கும் ஒரு வன்முறையான முயற்சி என இதன் பண்பு வரையறுக்கப்பட்டுள்ளது.

மகாயுத்தம் (முதல் உலகப்போர்–மொர்) தோற்றுவித்த கேடான விளைவுகளும்,அதனால் உண்டான குழப்பங்களும் சூழ்நிலைகளுமே இதன் வளர்ச்சிக்குக் காரணம் எனக் கண்டறியப்பட்டிருக்கிறது. ஜெர்மனியில் இது வெற்றி பெற்றது ஏன் என்பது குறித்து அறிவுக்குப் பொருத்தமாகப்படுகிற விளக்கங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

நம் காலத்தில் பாசிசம் நடத்தியுள்ள கொடுஞ்செயல்கள் குறித்து இவ்வாய்வுகள் எதுவுமே தேவையான அளவு ஆழமாகப் பார்க்கவில்லை. வரலாற்று வழியில் பார்த்தால், பாசிசம் என்பது போருக்குப் பிந்தைய ஒரு வளர்ச்சிப்போக்கு அல்ல. இம்மாதிரியான வேகமான ஒரு சமூக–பொருளியல் இயக்கம் திடுதிப்பெனத் தோன்றியிருக்க முடியாது. வரலாற்றுப்போக்கில், போதுமான அளவு நீண்டகால இடைவெளியில் உருவான தத்துவச் சிந்தனை வளர்ச்சியின் தர்க்க ரீதியான விளைவே பாசிசக் கருத்தியல் ஆகும். பாசிசம் ஒரு சமூக–பொருளியல் பிற்போக்குத்தனம் என்றால், அதன் கருத்தியலுக்கு அடிப்படையான தத்துவமும் பிற்போக்குத்தன்மை கொண்டதாகவே இருக்க வேண்டும். பாசிசத்திற்கென ஒரு தத்துவம் இல்லையெனச் சொல்லப்படுகிறது. இது மிகப்பெரும் தவறாகும். பாசிச நிகழ்வு குறித்த ஒரு சரியான புரிதலைப் பெற இத்தவறு தடையாயிருக்கிறது. பாசிசம் ஒரு சமூக–பொருளியல் நிகழ்வாகத் தோற்றம் பெறுவதற்கு முன்பாகவே அதற்கென ஒரு திட்டவட்டமான தத்துவம் இருந்திருக்கிறது. அத்தத்துவம் நீண்டகால இடைவெளியில் வளர்ந்து வந்திருக்கிறது. அத்தத்துவமானது

படிப்பகம்

www.padippakam.com

பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் தோன்றிய புரட்சிகரச் சமூக–பொருளியல் இயக்கங்களுக்குக் கருத்தியல்களை உருவாக்கித் தந்த நவீன அறிவியல் தத்துவத்திற்கு எதிரானதாகவே இருந்து வந்திருக்கிறது.

அதிநவீன நேர்க்காட்சிவாதம்(ultra modern positivism) நவ–எதார்த்தவாதம்(neo realism) அனுபவவாதம்(empiricism) போன்ற போலி–அறிவியல் சிந்தனைமுறைகளின் அதாவது, ஹெகலிற்குப் பிந்திய கருத்துமுதலியலின் (idealism) தர்க்கரீதியான விளைவே பாசிசத்தின் தத்துவமாகும். இச்சிந்தனை முறைகள் அனைத்தும், கருத்துமுதலியலை மறுத்தொதுக்குவதாகப் பாசாங்கு செய்துகொண்டே, புலனுலகுக்குத் தொடர்பற்ற ஒரு புதியவகை மாயாவாதத்தை (metaphysical mysticism) மறுநிர்மாணம் செய்வதில் நாட்டம் கொண்டிருந்தன. பொய் வேடந்தரித்துக் கொண்ட அல்லது நேர்மையற்ற இந்தக் கருத்துமுதலியல் சிந்தனைமுறைகள் பயன்பாட்டுவாதத்திலும்(pragmatism) நவ–ஹெகலியத்திலும் அவற்றின் உச்ச நிலையை அடைந்தன. இதில் முன்னது (பயன்பாட்டுவாதம்) உடலின்ப நாட்டம் கொண்ட கொச்சைப் பொருள்முதலியலை (vulgar materialism) “மதஅனுபவங்களோடு” ஒருங்கிணைக் கிறது. பின்னது (நவ–ஹெகலியம்) போர்க்குணம் கொண்ட பிற்போக்குத்தனத்தின் நலன்களுக்கு ஊழியம் புரிவதற்காக ஹெகலிய இயங்கியலின் புரட்சிகர ஆயுதத்தை உருத்திரிக்கிறது.

இவ்வுலகு சார்ந்த ஒழுக்கப்பண்புகள் நீதி,விடுதலை, ஆகிய அனைத்தையும் பாசிசம் சீர்குலைத்ததோடு, தான் ஒரு தெய்வீக ஒப்புதலைப் பெற்றிருப்பதாகக் கூறிக் கொண்டது. இத்தாலியப் பாசிசத்தின் அதிகாரப்பூர்வமான தத்துதவவாதியான ஜியோவனி ஜென்டிலே (Giovani Gentile) என்பவர்தான் பாசிசத்திற்கு இவ்வாறான தெய்வீக ஒப்புதல் இருப்பதாக முதன்முதலாக உரிமை கொண்டாடியவர். அவர் பின்வருமாறு எழுதுகிறார் :

“மனிதன் இயல்பிலேயே மதப்பண்பு கொண்டவன். சிந்திப்பது என்பதன் பொருள் கடவுளைத் தியானிப்பது என்பதாகும். ஒருவன் அதிகமாகச் சிந்திக்கச் சிந்திக்க தான் கடவுள் முன் நெருக்கமாக இருப்பதாகவே உணர்வான். கடவுளே அனைத்துமாக இருக்கிறார். மனிதன் ஒன்றுமற்றவனாக இருக்கிறான்.” *(பாசிசமும் பண்பாடும்)* அரசியல் பிற்போக்குத்தனத்தையும் சமூகக் காட்டுமிராண்டித்தனத்தையும் நியாயப்படுத்துவதற்காக, இந்தப் பாசிச தத்துவவாதி நவீன அய்ரோப்பியப் பண்பாட்டின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றான மனிதநேயத் தத்துவத்தை (humanism) கைகழுவுகிறார்.

இவ்வுலகு சார்ந்த விடுதலைக்கான போராட்டத்தை மனிதன் தொடங்குவதற்கு முன்னால், கடவுளின் பாதுகாப்பிலிருந்து தன்னை முதலில் அவன் விடுவித்துக்கொள்ள வேண்டும். கடுமையான போராட்டங்கள் மூலம் பெற்ற அரசியல் சுதந்திரத்தையும் குடியுரிமைகளையும், அவனிடமிருந்து பறிக்க வேண்டுமானால்



படிப்பகம்

www.padippakam.com

மறுமலர்ச்சிக் காலத்திலிருந்து மரபாக இருந்து வந்த ஆன்மீக விடுதலையை அவனிடமிருந்து வஞ்சகமாகப் பறிக்க வேண்டிய அவசியமிருந்தது. சுய–அழிப்பு(self-effecement) என்ற மிக அதீதமான மதநெறியை பாசிசத்தின் தத்துவம் மனிதனுக்குப் போதித்தது.சுய–அழிப்புஎன்பது தத்துவார்த்தப் பொருள்முதலியலின் (philosophical materialism) புரட்சிகரக் கோட்பாடுகளுக்கு எதிராகக் கலகம் செய்யும் கொச்சைப்பொருள்முதலியலின் வெளிப்பாடு ஆகும். பாசிச நம்பிக்கைகளைப் பற்றியொழுகும் மனிதன் அனைத்தையும் தன்னுள்ளடக்கிய இறைவனில் தன்னைத்தானே ஆழ்த்திக் கொள்வது, எல்லாம் வல்ல இறைவனின் ஒரு கருவியாகப் புத்துயிர் பெற்று எழுவதற்காக மட்டும்தான். ஆகவே அந்த மனிதனின் விருப்பங்களையும்செயல்பாடுகளையும், இவ்வுலகச் சட்டங்கள் ஏதும் கட்டுப்படுத்த முடியாது. பிரபஞ்சம் முழுவதிலும் வியாபித்திருக்கும் ஒரு தெய்வீக நோக்கத்தின் பொருட்டுச் செய்யப்படும் காட்டுமிராண்டித்தனத்தையும் வன்முறையையும் நியாயப்படுத்துவதற்காக அச்செயல்களை உருவாக்கும் சிந்தனைப்போக்கு ‘கடவுளைப் பற்றிய தியானம்’ என்ற மாய்மால மனச்சித்திரமாக்கப்படுகிறது. இம்மாதிரியான செயல்கள் தெய்வீகத் தூண்டுதல் பெற்றவைகளாகும். அழுகிப்போன, அவலநிலையிலுள்ள முதலாளியத்தைக் கடவுள் தன் பாதுகாப்பில் எடுத்துக்கொள்கிறார். அத்துடன் கந்தலாகிப்போன இந்த அமைப்பின் வெறிபிடித்த ஆதரவாளர்கள் அனைவருமே, ‘உன்னதமான தெய்வீகக் கருவிகளாக’ மாறுகிறார்கள். சுய–அழிப்பு என்ற இந்த நரித்தனமான சூழ்ச்சித் திட்டத்தின் மூலம் ஒருவன், தனக்கென எல்லையற்ற சுதந்திரத்தைத் தக்கவைத்துக் கொள்கிறான். இவ்வாறாக, ஒரு பாசிசவாதி அதிமனிதனாக (Super Man) உருவாகிறான்.

இருப்பினும், இந்த சுய–மறுப்பு (self -abregation) என்ற அதீதமான மதக்கொள்கையானது மனிதனின் எல்லையற்ற, “அழிவில்லாத சாரத்தைக்” கண்டு பிடிப்பதிலிருந்து, கதம்பவாத பாசிசத்தத்துவவாதியைத் தடுத்து விடவில்லை. கந்தலாகிப்போன ஒரு சமூக அமைப்பைப் பாதுகாப்பதென்பது வரலாற்று ரீதியாக சாத்தியமில்லாத பணியாகும். ஆகவே, சாத்தியமில்லாத இந்தப் ‘புனித லட்சியத்’தில் ஈடுபட்டிருக்கும் ஒரு மனிதனின் உள்ளுறையாற்றல் உண்மையில் “எல்லையற்றதாகவும், கட்டுப்பாடற்றதாகவும்,சுதந்திரமானதாகவும்”, இருந்தாக வேண்டும். பாசிசவாதியின் சுய–அழிப்பு என்ற கொள்கைக்கும்அவனது அனைத்து வல்லமை வழிபாட்டிற்குமிடையே காணப்படும் பாரிய முரண்பாட்டிற்குத் தத்துவார்த்த விளக்கம் தருவது ஜென்டிலேவிற்கு எளிதான பணியாக இருந்தது. காரணம்,அவர் ஒரு நவ–ஹெகலியவாதி. தன் சொந்த ஆதாயத்திற்காக இயங்கியலை எப்படி உருத்திரிப்பது என்பதை அவர் அறிந்து வைத்திருக்கிறார். சூழலுக்கேற்ப பயன்படுத்தப்படக்கூடிய “ஆன்மீகத்தத்துவ”மான பயன்பாட்டுவாதமும் கூட அவர் உதவிக்கு ஓடோடி வருகிறது. “கடவுளைப் பற்றிய தியானமே சிந்தனை” என்று கற்பித்து வந்த அவர் இயங்கியல் தத்துவ சாதனை என்று தான் நம்புகிற ஒரு விசயத்தை நிகழ்த்திக் காட்டுகிறார்.



படிப்பகம்

www.padippakam.com

"கடவுளும், சிந்தனையும் வாழ்க்கையின் இரு எதிர்முனைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இரண்டுமே அவசியமானவை. இரண்டுமே சாரமானவை. இருப்பினும் இரண்டுமே ஒன்றையொன்று எதிர்க்கின்றன. ஒன்றுக்கொன்று முரணாய் இருக்கின்றன" *(பாசிசமும் பண்பாடும்)* என்கிறார் அவர். சுயதரிசனம் என்ற முடிவற்ற பயணத்தில் கடவுளும்,மனிதனும் நெகிழ்வான ஒரு அய்க்கியத்தில் இருக்கின்றனர்; அது உயிரோட்டமான அய்க்கியம், ஆகவே ஓய்வற்ற அய்க்கியம்; தன்னளவில் ஒரு போதும் மனநிறைவு கொள்ளாத அய்க்கியம் என்றும் அவர் கூறுகிறார்." *(அதே நூல்)*

ஹெகலிய இயங்கியலின் கேலிச்சித்திரமான, இந்த நவ–சமயப்பண்டிதவாதம் (neo-scholosticism) குறிப்பிடத்தக்க அளவில் இந்துமாயாவாதத்துடன் (Hindu Mysticism) ஒற்றுமை கொண்டதாய் இருக்கிறது. மாயாவாதம் என்பது என்ன? நடைமுறையில் மெய்ப்பித்துக் காட்டப்பட்ட அறிவியல் உண்மைகளையும், பகுத்தறிவு நோக்கில் நிலைநிறுத்தப்பட்ட தத்துவக் கருத்தாக்கங்களையும், மறுத்தொதுக்குவதற்காக இருண்மைவாதத்தில் (obscurantism) அடைக்கலம் புகுந்த மனக்குழப்பம்தான் மாயாவாதம் என்பதைத் தவிர வேறென்ன? ஜெண்டிலே உருவாக்கிய பாசிசத் தத்துவம், மாயாவாதத்திற்கு ஒரு சிறப்பான எடுத்துக்காட்டாகும்.

கடவுளைப் பற்றிய தியானமே சிந்தனை எனப்படுகிறது. இருப்பினும், இது தன் குறிக்கோளுடன் கொண்டுள்ள உறவு எதிர்மறையானதாகும். அதாவது முரண்பாடானதாகும். தியானம் என்ற செயலற்ற நிலையைச் செயல்பாடு என்ற சுறுசுறுப்பான எதிர்மறையோடு எப்படி அடையாளப்படுத்த முடியும். குறிக்கோள் ஒன்றுதான். ஆனால் அது பகுத்தறிவின் எல்லைக்கு அப்பாற்பட்டதாகும். ஆன்மீகக் கருத்தாக்கங்கள் (spiritual conceptions) பகுத்தறிவின் எல்லைக்கு அப்பாறபட்டவையாகும்.சிந்தனையைத் தியானத்தோடு அடையாளப்படுத்துவது அறிவுத் தோற்றவியலின் புதுக்கண்டுபிடிப்புகளில் ஒன்றாகும். ஒரு பொருளைப் பற்றிச் சிந்திக்கையில் அப்பொருள் குறித்த அறிவை நாம் பெறுகிறோம். தியானம் இம்மாதிரியான பயன் எதனையும் தராது. தியானம் என்பது ஏற்கனவே தெரிந்த ஒன்றிலேயே ஊன்றி நிற்பதாகும். ஒருவர் மதம் குறித்த முற்கோள்களுடன் தொடங்குவாரானால் அவர் கடவுளுக்கு இருப்பதாகக் கற்பித்துச் சொல்லப்படும் பண்புகளைக் குறித்துத் தியானிக்கலாம். ஆனால் சிந்தனை என அழைக்கப்படும் மூளையின் செயல்பாட்டால் அடையமுடியாத இடத்தில் தியானத்தின் குறிக்கோளை அவரது முற்கோள்கள் வைத்து விடுகிறது; ஆகவே, சிந்தனையைத் தியானத்தோடு அடையாளப்படுத்துவது சுத்தமான சிந்தனைக் குழப்பமாகும். அல்லது அறிவுத்தோற்றவியலின் அடிப்படைக் கோட்பாடுகளைத் திட்டமிட்டு உருக்குலைப்பதாகும்.

இந்த மாயாவாதம் தத்துவரீதியாக எவ்வளவு குழப்பமானதாகவும் இருண்மைப்பண்பு கொண்டதாகவும் இருந்தபோதிலும்,நடைமுறையில் அதிலிருந்து



படிப்பகம்

www.padippakam.com

பெறப்படக்கூடிய விசயங்கள் மிகத் தெளிவாகப் புலப்படுகின்றன. அதாவது அவை மிகக் கொச்சையான பொருள்முதல்வாதத்தன்மை கொண்டவையாகும். அரசு குறித்த ஹெகலியக் கோட்பாட்டின் தாக்கம் பெற்ற ஜென்டிலே, பாசிசச் சர்வாதிகாரத்திற்கு தெய்வீக ஒப்புதல் இருப்பதாகக் கூறினார். பாசிச அரசானது மதம் உள்ளிட்ட அனைத்து ஆன்மீக மதிப்பீடுகளையும் தழுவி அவற்றைத் தன்னுள் உள்ளடக்கியதாகவும் உள்ளது. ஒரு அரசு மற்றொரு இறையாண்மையைச் சகித்துக் கொள்வது என்பது தற்கொலை செய்து கொள்வதற்குச் சமமாகும். தன்னளவில் ஆன்மீகமானதாக இருக்கும் ஒரு அரசின் மகத்தான அதிகார எல்லைக்குள் இருக்கும்போதுதான், ஆன்மீகரீதியான ஒவ்வொன்றும் சுதந்திரமானதாக இருக்க முடியும் *(பாசிசமும் பண்பாடும்)*. ஆன்மீகப் பாசிச சர்வாதிகாரம் தெய்வீக வழியில் பெற்ற அதிகாரமானது கொச்சைப்பொருள் முதல் நோக்கங்களுக்கு எப்படிப் பயன்பட்டது என்பதை பாசிசத்தின் நடைமுறை நமக்குக் காட்டுகிறது. இது பற்றி வேறொரு அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது.

மங்கிவரும் தங்கள் அதிகாரத்தை பாசிசச்சர்வாதிகாரம் என்ற கொடூரமான கருவியைக் கொண்டு பாதுகாத்துக் கொண்டுவரும் பூர்சுவாக்கள் மன்னர்கள் பெற்றிருந்த தெய்வீக உரிமைகளுக்கு தாங்கள்தான் வாரிசுகள் என்று உரிமை கொண்டாடுகிறார்கள். மன்னர்கள் கடந்த காலத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். ஆனால் தெய்வீக ஒப்புதல் என்ற சிறப்புரிமை ஒரு அரசுக்கு என்றுமே உண்டு என்ற மாயாவாத ஹெகலியல் கோட்பாட்டின் கருத்துப்படி பார்த்தால்–சட்டப்படி இல்லாவிட்டாலும் தர்க்கப்படி – அரசைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் வர்க்கம் மன்னர்களின் தெய்வீக உரிமைகளுக்குத் தான்தான் வாரிசு என உரிமை கொண்டாட முடியும். "அரசன தவறிழைக்க மாட்டான்" என்ற மத்திய கால முதுமொழியை பாசிசத் தத்துவாளர்கள் நீட்டித்து "அரசு தவறிழைக்காது" என்ற புதுமொழியாக்குகின்றனர்.

பூமியில் பூதேவர்கள் (பார்ப்பனர்கள்) வசமுள்ள அனைத்துச் சக்திகளும் கடவுளின் சக்திகளே என்ற கீதையின் தெய்வீகத் தத்துவத்தில் பாசிசத் தத்துவத்தின் வேர்களைக் காணலாம் என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இவ்வாறாகத் தத்துவ நோக்கில், பாசிசம் என்பது ஒரு புதிய நிகழ்வல்ல. பாசிசத்திற்கு ஒரு தத்துவம் இல்லை எனச் சொல்வதும் கூடத் தவறாகும். வாழ்க்கை குறித்த ஆன்மீகப் பார்வையின் தர்க்கரீதியான விளைவுதான் பாசிசத் தத்துவம் ஆகும். கீதை உபதேசிக்கும் கொள்கைக்கும், அரசு குறித்து பாசிச நவஹெகலிய கருத்துமுதல்வாதம் கொண்டுள்ள கருத்துக்கும் இடையே உள்ள தர்க்க இணைப்பை மிக எளிதாகப் புரிந்து கொள்ளலாம். உண்மையில் சொல்லப்போனால், புதிய மாயாவாதம், புதிய ஆன்மீகவாதம் ஆகிய சிந்தனைத் துறைகளிலிருந்து நேரடியாகப் பெறப்பட்டதுதான் பாசிசச் சர்வாதிகாரத்தின் தத்துவம் ஆகும். இந்த நவீனச் சிந்தனை முறைகள் வாழ்க்கை குறித்த அறிவியல் கண்ணோட்டத்திற்கு எதிரான எதிர்வினையைப் பிரதிநிதித்துவப்படுத்தின. ஷோபன் ஹேயர் முலமாக பாசிசத்தின் இந்திய மூதாதையரைக் கண்டு கொள்ள முடியும். ஷோபன் ஹேயரின் சீடரான நீட்சேதான் பாசிசத்தின் தந்தை ஆவார்.



படிப்பகம்

www.padippakam.com

பாசிசத்தின் மரபு வேர்களைக் கண்டு பிடிப்பதற்கு முன்னால், மட்டுமீறிய ஆன்மீகத்தின் கொடூரமான வெளிப்பாடுகளைச் சற்று நெருக்கமாகக் கவனித்து அறிய வேண்டும். "ஆழமான ஆன்மீக நோக்கங்களால் உந்தப்பட்ட ஒரு இயக்கம்தான் பாசிசம் ஆகும். பாசிசத்தின் கோட்பாடு அதன் செயல்பாடே ஆகும். அது மூடுண்ட கருத்தியல் அமைப்பல்ல. அது ஒரு புதிய வகைச் சிந்தனையும் புதியவகை வாழ்க்கையுமாகும். பாசிசத்தின் மத உணர்வுகளே அதன் பண்பு நலனாகும்." (ஜியோவானி – *பாசிசமும் பண்பாடும்*). பாசிசத் தத்துவவாதியின் கருத்துப்படி பாசிசத்தின் லட்சியம், அதன் செயல்பாட்டில் தெளிவாக வெளிப்படுகிறது. அதன்செயல்பாடே அதன் கோட்பாட்டைத் தொகுத்துக் கூறுகிறது.

பாசிச இயக்கமானது ஏமாற்றமடைந்த குட்டி முதலாளிகளை ஒரு வெறிகொண்ட படையாக ஒன்றிணைக்கிறது. தனது கவர்ச்சிப் பேச்சால் தங்களது சொந்த விலங்குகளைத் தாங்களே இறுக்கிக் கொள்ளும் ஒரு முரண்தன்மை(paradoxial) கொண்ட புனிதப்போருக்கு அவர்களை இட்டுச் செல்கிறது. பாசிச இயக்கமானது முதலாளியத்தின் அடிமைகள் (தொழிலாளர்கள்–மொர்) நடத்தும் கலகத்தை வன்முறை கொண்டு நசுக்குகிறது. இந்தக் கேடுகெட்ட செயலைச் செய்வதற்காக இது பிற்போக்கு பூர்சுவா வர்க்கத்தையும் தன்னுடன் கூட்டு சேர்த்துக்கொண்டது. பாசிசம் தன் சர்வாதிகாரத்தைப் பெறுவதற்கு உதவியதே அந்த வர்க்கம்தான். பாசிசத்தின் "ஆழ வேர் கொண்ட ஆன்மீக நோக்கங்கள்" பல ஆண்டுகளாக அது நடத்தி வரும் வன்செயல்களில் வெளிப்பட்டுள்ளது. முதலாளியத்தைக் காக்கும் 'புனித லட்சியத்'திற்காகவே இந்த வன்செயல்கள் அனைத்தும் நடத்தப்பட்டுள்ளன. முதலாளியம் என்பது நடைமுறையிலுள்ள கொச்சைப்பொருள்முதலியலாகும். எனவே இம்மாதிரியான செயல்கள், "ஆழ வேர் கொண்ட ஆன்மீக நோக்கங்களோடு" எப்படி பொருந்திப் போகும்? பாசிசத்தின் தத்துவவாதி பின்வருமாறு பதில் தருகிறார் :– பாசிசத்திற்குக் கொள்கை ஏதும் கிடையாது. கருத்தியலின் தர்க்கமுறைகளுக்கு அது கட்டுப்படுவதுமில்லை. ஆன்மீகம் எந்தப் பகுத்தறிவையும் அறியாது. தர்க்க முறைக்கும் இதில் இடமில்லை. பாசிசத்தின் தான்தோன்றித்தனத்தில் அதன் ஆன்மீகப் பண்பு வெளிப்படுகிறது. ஆன்மீகவாதத்தின் இந்த சீரழிந்த வெளிப்பாடு ஏற்றுக் கொள்கிற ஒரே சட்டம் முதலாளிய ஆதிக்கத்திற்கு அனுகூலமாக நடந்து கொள்வது என்பது மட்டுமே. உண்மையான தத்துவக் கோட்பாடுகள், பகுத்தறிவுக் கொள்கைகள் ஆகியவற்றின் சுமைகளை ஏற்றுக்கொள்ள இது என்றுமே விரும்பியதில்லை. முதலாளியப் பண்பாட்டின் கொச்சைப்பொருள்முதல் கொள்கையிலிருந்து சமூகத்தை விடுதலை செய்யும் சக்திகளுக்கு எதிராக ரத்தம் சிந்தும் புனிதப்போரில் எந்த ஒரு ஆயுதத்தையும் எடுத்துக்கொள்ள, தனக்குக் கட்டுப்பாடற்ற சுதந்திரம் இருப்பதையே பாசிசம் விரும்புகிறது. இவ்வுலக அதிகாரங்களை எந்தவிதக் கட்டுப்பாடுமில்லாமல் தான்தோன்றித்தனமாக பயன்படுத்துவதை. நியாயப்படுத்த வசதியாக தெய்வீகஆற்றல், மத அனுபவம், ஆன்மீக லட்சியம், மத உணர்வு , ஆகியவை



படிப்பகம்

www.padippakam.com

ஓடோடிவருகின்றன. எந்தச்சட்டங்களுக்கும் கட்டுப்படாததும் அதனாலேயே மனிதர்களால் உருவாக்கப்பட்ட சட்டங்களைப் பொருட்படுத்தாதுமான ஒரு தெய்வீக நோக்கத்தின் ஆணையின்படிதான் இவ்வதிகாரங்கள் செயல்படுத்தப்படுகின்றன எனச் சாதாரணமாக இது நியாயப்படுத்தும்.

இருப்பினும், ஜென்டிலேயின் கருத்துப்படி "அருவமான, பகுத்தறிவுப் பூர்வமான, மத—விரோதமான (irreligious)அனைத்துச் சிந்தனை வடிவங்களுக்கும் முறைகளுக்கும் வெளிப்படையான எதிரியே பாசிசமாகும். அது இயற்கைக்கு மாறான தாராளவாதத்திற்கும் எதிரியாகும். கணிசமான அளவில் பொருள்முதல்வாதச் சிந்தனை வெளிப்பாட்டிற்கும் அது எதிரியாகும்". ஆன்மீகவாதம் அதன் உண்மையான, அர்த்தத்தை வெளிப்படுத்தி இங்கு நிர்வாணமாக நிற்கிறது. பாசிசம் மதத்தன்மை கொண்டது. ஆகவேதான் அது பகுத்தறிவை அபாயம் என்றும் தாராளவாதத்தை இயற்கைக்கு மாறானது என்றும் அறிவிக்கிறது. பாசிசம் தத்துவார்த்தப்பொருள்முதலியலுக்கு எதிரானது. தத்துவார்த்தப் பொருள்முதலியலானது கொச்சைப் பொருள்முதலியலின் நடைமுறைக்கு நேர்முரணானதாகும். பாசிசம் மதத்திற்குக் காவலாக நிற்கிறது. காரணம் மதநம்பிக்கையானது அறியாமையை உயர்வாகப் போற்றுகிறது. அதனால் மக்களைச் சுரண்டுவது எளிதாகிறது.

❖



படிப்பகம்

www.padippakam.com

# பாசிசத் தத்துவத்தின் அடித்தளம்

புரட்சிகரப் பொருள்முதல் கருத்தியலை வலுப்படுத்திய அறிவியல் சிந்தனைக்கெதிராக நவீன மேற்கத்தியத் தத்துவம் நடத்திவரும் மூர்க்கமான போராட்டத்தின் காரணமாக அத்தத்துவம் மிக, மிகப் பிற்போக்கானதாய் மாறிக்கொண்டிருக்கிறது. தத்துவத்திற்கு முதலாளியப் பண்பாடு அளித்த மிகப்பெரும் பங்களிப்பு ஹெகலியத்தில் அதன் உச்சியைத் தொட்டது. ஹெகலியமானது முற்றமுழுக்கருத்தியல் (Absolute Idealism) என்ற மலை உச்சிக்கு நவீனச் செவ்வியல் தத்துவத்தை இட்டுச் சென்றது. பார்ப்பவர்களுக்கு நடுக்கத்தைத் தரும் அந்த உச்சியிலிருந்து அதனைக் கீழே இழுத்துக் கொண்டு வந்த அனைத்தையும் தகர்க்கும் இயங்கியல் முறைமையாகும். இயங்கியல் முறை மூலம் அதனை இடித்து வீழ்த்தவே அது இவ்வாறு செய்தது. வரலாற்று ரீதியாகவும் இயங்கியல் ரீதியாகவும், முதலாளியப் பண்பாட்டின் ஆக்கபூர்வமான தத்துவ விளைவாக இருப்பது பொருள்முதலியல் ஆகும். இதுதான் ஒரு உயர்ந்த பண்பாட்டு வடிவ மாற்றுக்கு ஒரு கருத்தியல் அடித்தளத்தைத் தந்தது. கருத்துமுதலியலிலிருந்து பொருள்முதலியலுக்கு நவீனத் தத்துவம் மாறியதை ஹெகல் பிரதிநிதிப்படுத்துகிறார்.

நிலக்கிழமைச் சமூகத்திற்கும், வரம்பற்ற மன்னராட்சிக்கும் மதம் ஒரு ஒப்புதலை வழங்கி வந்தது. ஆகவே, முதலாளிகள் வளர்ந்து வரும் வர்க்கம் என்ற முறையில் தங்கள் சொந்த நலனுக்காக மதத்தை எதிர்த்துப் போராட பொருள்முதலியல் என்ற புரட்சிகரக்கருவியைப் பயன்படுத்தினர்.

அனைத்து வகை ஆதிக்க வடிவங்களுக்கும் எதிரான போராட்டத்தில் செயல்திறனோடு பயன்படும் இந்தக் கருவியை முதலாளிகள் தங்கள் கையில் அதிகாரம் கிடைத்தவுடன் ஒதுக்கித் தள்ளிவிட்டனர். சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட, மனிதனை மனிதன் ஆதிக்கம் செலுத்தும் எந்த ஒரு சமூக அமைப்பிற்கும், மதமும், அதனோடு உறவு கொண்டுள்ள மாயாவாத / ஆன்மீகவாத வழிபாடுகளும் பயனுள்ளதாக இருக்க முடியும். ஆகவே, ஆளும் வர்க்கம் என்ற வகையில் முதலாளிகள் தாங்கள் ஒரு காலத்தில் கையிலெடுத்த புரட்சிகரத் தத்துவத்தைக் கைகழுவியதோடு, நவீன ஆன்மீகவாதம், "அறிவியல் வகையான மாயாவாதம்" ஆகியவற்றின் புரவலர்களாகி வரலாற்றுச் சக்கரத்தைப் பின் தள்ள முயற்சிக்கின்றனர். தங்கள் சொந்த வர்க்கத்தால் உருவாக்கப்பட்ட மாபெரும் தத்துவவாதிகள் போதித்த கோட்பாடுகளை ஏற்க மறுக்கின்றனர். ஹெகலின் சீடர்களுக்கு இருந்த ஆதரவு பறிக்கப்பட்டது. ஹெகலுக்கு அறிவுத்துறையில் இருந்து வந்த தகுதி கதம்பவாதம்– அனைத்திறைக்கொள்கை– மாயாவாதம் ஆகிய சிந்தனைகளைக் கொண்ட **ஷெல்லிங்கிற்குத்** தரப்பட்டிருக்கிறது. நவீனப் பகுத்தறிவுக் கருத்துமுதலியலின் ஆக்கபூர்வமான அம்சங்களை



படிப்பகம்

www.padippakam.com

ஃபயர்பாக்(Feuerbach) துணிச்சலோடு விரிவாக்கினார். அதன்மூலம் இயங்கியல் பொருள் முதலியலுக்குச் சாதகமாக அதை (நவீனப் பகுத்தறிவிக் கருத்துமுதலியல்) ஒழித்துக்கட்டினார். செவ்வியல் தத்துவத்தின் கடைசி வாரிசான ஃபயர்பாக் தன் வாழ்க்கையை வறுமையில் ஓட்டினார்

மேற்கத்திய முதலாளிய நாகரிகத்தின் தத்துவமானது, ஹெகலுக்குப் பின் பிற்போக்குப் பாதையில் நடைபோட்டது. நவீன அறிவியல் சிந்தனையை எதிர்கொள்ளக் கூடிய தத்துவ வலிமையுடைய ஒருவரைத் தேடிப்பிடிப்பதற்காக அது கான்ட்டை (Kant) நோக்கி பின்னோக்கித் திரும்பியது. நவ–கான்ட்டியவாதம் (Neo-Kantianism) கான்ட் தத்துவத்தின் புரட்சிகர அம்சங்களைத் தூர எறிந்து விட்டது. கேலிக்குரிய பொருட்கள் வைக்கப்பட்டிருந்த அலமாரியிலிருந்து புலனறிவுக்கு அப்பாற்பட்ட உண்மை என்ற எலும்புக்கூட்டை இந்த நவ–கான்ட்டியல் எடுத்து வந்திருக்கிறது. புலன்களால் அறியத்தக்க உலகுக்கு அப்பால் ஒரு உலகம் இருக்கிறது என்பதை பொருள்முதல்வாதத்தால் மறுதலிக்க முடியவில்லை என்று நவ–கான்ட்டியவாதம் கூறியது. புலன்களுக்கு அப்பாற்பட்ட உலகம் என்பது நம்பிக்கையைப் பொருத்த விசயம் என்றும், அறிவின் விதிகள் அதற்குப் பொருந்தாது என்றும் ஒப்புக் கொள்ளும் நிர்பந்தத்துக்கு ஆளானது.

கான்ட் தத்துவத்தின் பிற்போக்குக் கூறுகளுக்குத் தரப்பட்ட இந்தக் கொச்சையான விளக்கம், தன் சொந்த முரண்பாடுகளால் ஆட்டம் கண்ட முதலாளியச் சமூகத்திற்குப் போதுமான உத்திரவாதத்தைப் பெறத் தவறிவிட்டது. ஒரு தத்துவவாதி என்ற முறையில், அறிவியல் சிந்தனைத்தளத்தில் கான்ட் நின்றார். அவரின் தத்துவத்தை ஒன்று முழுமையாக ஏற்றுக் கொள்ள வேண்டும் அல்லது முழுமையாக மறுத்தொதுக்க வேண்டும். ஒரு சில பகுதிகளை ஒதுக்கியாக வேண்டும் என்ற அவசியம் ஏற்பட்டால், தத்துவ அடிப்படையற்ற புலனறிவுக்கு அப்பாற்பட்ட விசயங்களைப் பற்றிப் பேசும் பகுதியைத் தள்ளிவிட வேண்டும். ஏனெனில், இந்தப் பகுதிதான் கான்ட்டின் தத்துவ முறையில் முரண்பட்ட ஒரு பகுதியாக இருக்கிறது. எனவே ஹெகலியத்திற்கு பிந்திய தத்துவத்தின் பின்னோக்கிய நடை கான்ட்டோடு நின்று விட முடியாது. அதிகாரத்திலுள்ள பூர்சுவா வர்க்கத்தின் நலன்களுக்கு ஊழியம் புரிய மத்தியகாலத் "தூய்மையை" (Purity) நோக்கி அது திரும்பியாக வேண்டும். சமரசத்திற்கு இடமில்லாத வகையில் அது ஆன்மீகவாதமாக இருக்க வேண்டும். பகுத்தறிவின் இடத்தில் மாயாவாதம் அமர வேண்டும். வலுவான கருத்துமுதல்வாதம், மத மாயாவாதம் ஆகியவற்றை ஆயுதமாகக் கொண்டு புரட்சியின் கருத்தியலை எதிர்த்துப் போரிட வேண்டும். அறிவியல் சிந்தனையின் வேகமான வளர்ச்சியானது பகுத்தறிவு நோக்கிலும் தத்துவ நோக்கிலும் இம்மாதிரியான ஆன்மீக டாம்பீகங்களையும், மதப்பிற்போக்கையும் சாத்தியமில்லாமல் செய்துவிட்டது. இருப்பினும் கூட பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்பகுதியில் கல்வித்துறை சார்ந்த அனைத்து வகை மேற்குலகத் தத்துவ முறைகளும் வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ இந்தத் திசையில்தான் நடைபோட்டன. இவ்வாறாக, பின்னடைவை நோக்கிய இந்த வளர்ச்சிப் போக்கு இறுதியாக அனைத்துவகைப் பகுத்தறிவுப் பாசாங்குகளையும் கைவிட்டு விட்டு மதத்தோடு சமரசம் செய்து கொள்ள வேண்டியிருந்தது.


படிப்பகம்

www.padippakam.com

1876 வரை நிலைமைகள் இவ்வாறுதான் இருந்தன. " அரசியலில் நாடு இரண்டு முகாம்களாகப் பிரிந்து நின்றது போல அறிவியலிலும், இரண்டு பொதுவான முகாம்களாக- ஒருபுறம், அனுபூதியியல்வாதிகள்(meta-physicicians), மறுபுறம் இயற்பியல் வாதிகள்(Physicists) அல்லது பொருள்முதல்வாதிகள் எனப்பிரிந்து நின்றது. இந்த இரண்டிற்கும் இடைவழியில் நின்ற இயக்கப்போக்கினரும், ஆன்மீகவாதிகள்,புலனுணர்வுவாதிகள், எதார்த்தவாதிகள் என்ற பல்வேறு பெயர்களைக் கொண்ட சமரசவாதிகள் அனைவரும் தங்கள் சொந்த முகம் இழந்து நின்றனர். மதகுருமார்களுக்கு உதவி செய்ய, ஊக்கம் தர, அறிவியல் குருமார்கள் தோன்றினார்கள். இருமைவாதக் குழப்பமானது (அதாவது இவ்வுலகம் வேறு ஆன்மீக உலகம் வேறு எனக் கருதும் கோட்பாடு) அறிவியலில் ஏற்பட்டிருந்த இடைவெளிகளைக் கவனமாகப் பார்த்து அதில் தன் கருத்துக்களை விதைக்காமல் இருந்திருந்தால், தெளிவாகத் தெரிகின்ற மூடநம்பிக்கைகளை அழிப்பது எளிதான செயலாக இருந்திருக்கும். குறிப்பாக அறிவுத் தோற்றவியல் (Epistemology) தளத்தில் இம்மாதிரியான இடைவெளிகள் காணப்படுகின்றன. மக்களை அறியாமையிலேயே இருத்தி வைக்க படித்த சேவகர்கள் தங்கள் போலி- கருத்துமுதலியலைப் பயன்படுத்தினர். கடவுளுக்கு நேர் எதிரானதாக சாத்தான் இருப்பது போல பக்தியுள்ள பேராசிரியர் தனது நேர் எதிரியை பொருள்முதலியலில் காண்கிறார். (ஜோசப் டிட்ஜென் - *தத்துவக் கட்டுரைகள்*)

நவ-காண்ட்டியவாதிகளின் அறிவியல் நம்பிக்கையானது பொருள்முதலியல் என்னும் நோயின் வளர்ச்சியைத் தடுப்பதற்குப் போதுமான வலுவான மருந்தைத் தரத் தவறிவிட்டன. வெட்கக்கேடான பல்வேறு கருத்துமுதலியல் சிந்தனைகளும் இந்த நோக்கத்தைப் பூர்த்தி செய்யத் தவறின. ஆகவே, பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பத்தாண்டுகளின் போது, கல்விசார் அய்ரோப்பியத் தத்துவம் ஹெகலின் ஆவியை எழுப்பத் துவங்கியது. நவ-ஹெகலியம் புதுப்பாணித் தத்துவமானது. ஒரு போலி-அறிவியல் போர்வையின் கீழ் அனுபூதியியலையும் (meta physics)* மாயாவாதத்தையும் முன்னிலைப்படுத்த வேண்டும் என்ற அழுத்தமான நோக்கத்திற்காக இயங்கியலை உருத்திரித்து வக்கரித்துக் காட்டுவதுதான் நவ-ஹெகலியல் ஆகும். நவ-ஹெகலியத்தின் வக்கரித்த இயங்கியல், இறுதியில் கதம்பவாதமாக வளர்ச்சி பெற்றது. அது அனைத்து நெறிகளையும் கைகழுவிவிட்டு, சர்வாதிகாரத்திற்கு ஒரு தத்துவ ஒப்புதலைக் கண்டுபிடித்தது. இவ்வாறாகப் பாசிசத்தின் தத்துவ அடிப்படை முழுமை பெற்றது.

---

* இதை மீ-பௌதீகம், அப்பாலைத் தத்துவம், இயங்காவியல், அத்யாத்மீகம் என்ற பெயர்களிலும் குறிப்பிடுவர். கருத்துமுதல்வாதச் சிந்தனை முறைகளில் இதுவும் ஒன்று. அனுபவ உலகுக்கு அப்பாற்பட்டதை, புலனுணர்வுக்கு எட்டாததை அறிய முயற்சிக்கும் கோட்பாடு இது. பொருள்வகை உலகுக்கு (physics) அப்பாற்பட்ட விசயங்களைப் பற்றி அதாவது கடவுள், மனம், ஆன்மா, கருத்து முதலிய விசயங்களைப் பற்றி இது பேசுவதால், பொருள்வகை இயலுக்கு அப்பாற்பட்டது என்று அர்த்தம் தரும் கிரேக்கச் சொற்களிலிருந்து இப்பெயர் பிறந்தது. (மொர்)



படிப்பகம்

www.padippakam.com

மாயாவாதியான ஷோபன் ஹேயர் பாசிசத்தின் தாத்தா ஆவார். சிடுசிடுப்பான (cynical) பிற்போக்குவாதி நீட்சே பாசிசத்தின் அருட்போதகர் ஆவார். ஆனால், பாசிசத் தத்துவத்திற்கான அடிப்படைக் கோட்பாடுகளை நிர்மாணித்த பெருமை இருபதாம் நூற்றாண்டு அய்ரோப்பாவின் மிகப்பெரிய தத்துவவாதியான பெர்க்சனையே (Bergson) சாரும். "அறிவியல் எவற்றுக்கெல்லாம் உரிமை கொண்டாடுகிறதோ அவற்றுக்கெல்லாம் சவாலாகத் தத்துவத்தளத்தில் தோன்றிய அவர் உயரிய, மகத்தான் மத உண்மைகள், நம்பிக்கைகள், உள்ளுணர்வு, அருள் வெளிப்பாடு (revelation) ஆகிய பார்வைகளிலிருந்து அறிவியலை விமர்சனம் செய்தார். (**எச். பெர்க்சன் :** *ஆக்க பூர்வமான பரிணாமம்*) பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் "இயற்பியல் கோட்பாடுகளில் ஏற்பட்டிருந்த நெருக்கடி" இதற்கான துணிச்சலை பெர்க்சனுக்கு வழங்கியது. ஆனால், இவருக்கு முன்பே, மத குருமார்களாலும், பேராசிரியர்களாலும் வரவேற்கப்பட்ட அந்த நெருக்கடி வளர்ச்சிக்கான நெருக்கடியாக மாறிவிட்டது. சுதந்திரமான எந்தத் தத்துவவாதியும் தன் கோட்பாடுகளை இந்தக் கற்பனையான அடித்தளத்தின் மீது நிறுவ முடியாது. ஆகவே, பெர்க்சன் காலப்போக்கில், தன் தத்துவ ஆன்மீகவாதத்தை (philosophical spiritualism) அறிவியலின் அனுபவ உண்மைகளோடு சமரசப்படுத்துவதில் நாட்டம் கொண்டார்.

பொருண்மை உலகை ஒரு மாயை என்று சொல்லி மறுப்பது இனியும் சாத்தியமில்லை என்பதாலும், தன்னை இன்னமும் ஒரு அறிவியல் தத்துவவாதி என்று அழைத்துக் கொள்வதாலும், பெர்க்சன் அவ்வுலகை (தத்துவ ஆன்மீகம்) சட்டபூர்வமானதாக்க முயற்சி செய்தார் என்று கூறலாம். அதன்படி ஆன்மீக மதிப்பீடுகள் கொண்ட உன்னத உலகத்திற்கு கீழாகவே ஒருவர் பொருண்மை உலகு குறித்து அக்கறை கொள்ள முடியும். பண்டைய இந்தியாவில் பார்ப்பனச் சட்டமேதைகள் உருவாக்கித் தந்த சட்டத்தைப் போன்றதுதான் இதுவும். அதாவது இங்கு எவரும் நிலைநிறுத்தப்பட்ட மத சமூகச் சட்டங்களான தர்மத்திற்குக் கட்டுப்பட்டும், மோட்சம் என்கின்ற வெற்று லட்சியத்தை பேசிக் கொண்டும் பொருளையும் காமத்தையும் அனுபவிக்கலாம். முதலாளிகள் அதிகாரத்தைக் கைப்பற்றப் போராடியபோது, இவ்வுலக விடுதலை பற்றிய கோட்பாடுகளைப் போதித்தனர். பின் தங்கள் அதிகாரத்திற்கும், சிறப்புரிமைகளுக்கும் சவால் எழுந்தபோது இவ்வுலக வாழ்க்கை நிலைப்பாடுகளை கற்பனையாக ஆன்மீக லட்சியங்களுக்கும், அனுபூதியியல் மதிப்பீடுகளுக்கும் கீழ்ப்பட்டவையாகச் செய்தனர். பாசிசச் சர்வாதிகாரத்திற்கும், காட்டுமிராண்டித்தனமான அதன் சமூக–பொருளியல் கோட்பாடுகளுக்கும் இந்தப் பிற்போக்குத் தத்துவம் ஒப்புதல் வழங்குகிறது.

சுரண்டலுக்கான சக்தி வாய்ந்த கருவிகளை முதலாளியத்திற்கு அறிவியல் வழங்கியிருக்கிறது. ஆனால், அதே நேரத்தில், மக்களின் சிந்தனையில் இதே அறிவியல் புரட்சிகர மாற்றங்களையும் கொண்டு வந்திருக்கிறது. அறிவியல் அறிவுடன் பொருந்திப் போவது போலத் தோன்றும் வகையில் மீளாக்கம் செய்யப்பட்ட ஆன்மீகவாதம், முதலாளிகளுக்கு அறிவியல் முன்னேற்றத்திலிருந்து பொருளாயத



படிப்பகம்

www.padippakam.com

நலன்களைப் பெற்றுத் தரவும் அதே நேரத்தில் (மக்கள்) மனதை விடுதலை செய்யும் அறிவியலின் தாக்கத்தை கட்டுப்படுத்தி வைக்கவும் உதவும் என எதிர்பார்க்கப்பட்டது. இந்த நோக்கத்திற்காகத்தான் வாழ்க்கை இரு தனித்தனிப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. ஒரு பகுதி பொருண்மை உலகில் அக்கறை கொள்வது. மற்றொரு பகுதி ஆன்மீக உலகைக் கண்டறிவதற்காக அர்ப்பணிக்கப்படுகிறது. தன்னிச்சையான இந்தப் பிரிவினையால், அறிவியலோடு தான் நடத்தி வந்த பயனற்ற சண்டையிலிருந்து ஆன்மீகவாதம் விலகிக் கொள்கிறது. தனக்கென ஒரு அமைதியான இடத்தைக் கோருகிறது. இந்த இடத்திலிருந்து கொண்டே வாழ்க்கையின் முழுப் பகுதியையும் ஆதிக்கம் செலுத்தலாம் என அது நம்புகிறது. அறிவியல் தான் கண்டறிந்த உண்மைகளை வைத்துக் கொள்ளட்டும்; ஆனால் ஆன்மீக உண்மைகள், அறிவியலின் கைக்கு எட்டாதவை; இந்தப் புற உலகுக்கும் அதன் பொருண்மை வாழ்க்கைக்கும் அப்பால் உயரிய மெய்மைகள் இருக்கின்றன என்று பெர்க்சனிசம் கூறும்போது முதலாளியப் பிற்போக்குத்தனத்திற்கு ஒரு தெளிவான தத்துவத்தை உருவாக்க வேண்டிய முயற்சியில் பெர்க்சன், தான் எதைப் பாதுகாக்க வேண்டும் என்று விரும்பினாரோ அதைக் கைவிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். "நேர்க்காட்சி அறிவியலுக்கு எதிரான எதிர்வினையே மாயாவாதமாகும் எனப்பொருள்கொண்டால் இறுதியில் நான் பாதுகாக்கும் கோட்பாடு மாயாவாதத்திற்கு எதிரானதேயாகும்". (லிண்ட்சே- *பெர்க்சனின் தத்துவம்*)

அறிவியலின் வலிமையான தாக்குதல்களை மாயாவாதம் தனியாக எதிர்கொள்ள முடியாது என்பதை உணர்ந்து கொள்ளும் அளவிற்கு பெர்க்சன் ஒரு எதார்த்தவாதியாக இருந்தார். ஆகவே, அவர் அதனை (மாயாவாதத்தை) அக்களத்திலிருந்து அப்புறப்படுத்திப் பாதுகாப்பான ஒரு இடத்தில் வைத்தார். மாயாவாதம் அறிவியலுக்கு எதிரானதாக இருக்கக்கூடாது. அறிவிலுக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். ஆகவேதான் இந்தியத் தத்துவங்களும் கூட இங்கிருந்து தொடங்குவதாகக் கூறிக் கொள்கிறது. அங்கிருந்தே பாசிசத் தத்துவமும் தொடங்குகிறது. புலனறிவுக்கும் கற்பனைக்கும் அப்பால், பகுத்தறிவின் எல்லைக்கும் அப்பால், மனித சிந்தனைக்கும் எட்டாத தொலைவில் பறந்து, இவ்வுலக மெய்மைகளுக்கு அப்பாற்பட்ட உண்மைகள் என்ற தலைசுற்ற வைக்கும் முகடுகளைக் கண்டு, அவற்றையே முழு முற்றான உண்மையென ஏற்றுக் கொள்வதே மாயாவாதமாகும். ஏனைய அனைத்து முழுமுற்றான கருத்தாக்கங்களைப் போலவே, இந்த முழு முற்றான உண்மையும் ஒருபொய்த்தோற்றம்தான் என்றாலும் அது புரட்சிக்கு ஆதரவான சக்திகளை நசுக்கி, நிலை நின்றுள்ள சமூக-பொருளியல் அமைப்பைப் பாதுகாப்பதற்குத் தேவையான அனைத்தையும் செய்வதற்கு ஒரு வலுவான ஒப்புதலைப் பெறுகிறது.

பௌதீக வாழ்க்கையை ஒரு இரண்டாம் நிலைப்பட்ட யதார்த்தம் ( a reality of subsidiary category) என்று வரையறுத்ததன் மூலமும் அறிவியல் உண்மைகள் நடைமுறை நோக்கங்களுக்குப் பயன்படுவதை ஒப்புக்கொண்டதன் மூலமும் கட்டுப்பாடற்ற முதலாளியச் சுரண்டலுக்குத் தங்கு தடையில்லாத வழி



படிப்பகம்

www.padippakam.com

ஏற்படுத்தப்பட்டது. ஆனால், இந்தச் சரண்டலுக்குப் பலியானவர்களைப் பொறுத்தமட்டிலோ வாழ்க்கையின் உண்மையான இறுதி நோக்கம் ஆன்மாவைக் கண்டுணர்வதாகவே இருந்தது. அறிவியலின் இரண்டாம் நிலைப்பட்ட உண்மைகள் (பௌதீக நன்மைகள்– மொர்) அனைத்தையும் அனுபவித்துவந்த பௌதீக உலகின் உண்மையான எசமானர்களோ, உயரிய ஆன்மீக மதிப்பீடுகளைப் போதனை செய்ததன் மூலம் எதையும் இழக்கவில்லை. ஆனால் மக்கள் கூட்டமோ பௌதீக வாழ்வின் அற்ப விசயங்களையும் மாயைகளையும் தியாகம் செய்து விட்டு பொய்த் தோற்றங்களைத் துரத்திச் செல்ல வேண்டும்.

இந்தியப் பண்பாட்டிற்கே உரித்தான சிறப்பான மேதமை என உரிமை கொண்டாடப்படும் ஒரு பண்போடு பெர்க்சனின் (பாசிசத்) தத்துவம், வியக்கத்தகு ஒற்றுமை கொண்டிருக்கிறது. ஒன்றையொன்று எதிர்க்கின்ற முரண்பட்ட காரணிகளுக்கிடையே ஒரு மகிழ்ச்சியான கூட்டிணைவை (synthesis) ஏற்படுத்தும் திறமையே அந்த இந்தியப் பண்பாகும். இதில் பெர்க்சன் இந்திய அறிவாளிகள் செய்ததைக் காட்டிலும் அதிகமானத் "தத்துவார்த்த" தந்திரத்தைக் கையாண்டார். அவர் ஹெகலிய இயங்கியலை எடுத்துக் கொண்டு அந்தப் புரட்சிகர கருத்தியல் கருவியை, பிற்போக்குக்கான ஒரு கருவியாக மாற்றம் செய்வதில் நாட்டம் கொண்டார்.

ஹெகலால் விரிவுபடுத்தப்பட்டு தத்துவம், வரலாறு ஆகிய இரு துறைகளிலும் பயன்படுத்தப்பட்டபோதிலும், இயங்கியலானது தத்துவத்தைப் போலவே பழமையானதாகும். பழம் கிரேக்கத்தில் **ஹேராகிலிட்ஸ்**, "முரண்பாடே அனைத்து வளர்ச்சிகளுக்கும் உந்து சக்தியாக இருந்து வருகிறது என உறுதியாகச் சொல்லியிருந்தார். வளர்ச்சிப்போக்கு (process) குறித்த இயங்கியல்பார்வையானது பௌத்த தத்துவத்தின் (ஹீனாயனப்பிரிவு) ஒரு பகுதியாக இருந்திருக்கிறது. சமண மதத்தில் இது மிக முனைப்பாகப் பேசப்பட்டிருக்கிறது. பொருட்கள் குறித்த இயங்கியல் பார்வையின் மெய்மைத்தன்மை செய்முறை அறிவியலால் திட்டவட்டமாக நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது. சிந்தனைவளர்ச்சி உள்ளிட்ட இயற்கை நிகழ்ச்சிப் போக்குகளின் இருப்பின் அனைத்துக் கட்டங்களிலும், பழைய காரணிகளுக்கு எதிராகப் புதிய காரணிகள் தொடர்ந்து தோன்றிக் கொண்டேயிருக்கின்றன. அதன் விளைவாக, முன்னதை (பழைய காரணிகள்) பின்னது (புதிய காரணிகள்) அழித்து விடுகின்றன. அவ்வாறு அழிப்பதின் மூலம் அவை தங்களின் எதிர்மறைப் பண்பை இழக்கின்றன. எதிர்மறைப் பண்பை இழந்ததன் விளைவாக அவை புதிய நேர்மறைகளாக மாறுகின்றன. இதுவே எதார்த்தத்தில், ஆற்றலோடு இயங்கிக் கொண்டிருக்கும் வளர்ச்சிப்போக்கு குறித்த இயங்கியல் பார்வையாகும்.

ஆகவே, முரண்பட்ட காரணிகளுக்கு இடையே ஒரு சமரசத்தை ஏற்படுத்துவது என்பது ஒரு உண்மையான கூட்டிணைவு அல்ல. இதை வளர்ச்சி எனப் பொருள் கொள்ள முடியாது. மாறாக, பின்னடைவு எனப் பொருள் கொள்ள வேண்டும். ஏனெனில் எந்தவொரு சமரசமும் புதியதைப் பலிகொண்டு பழமைக்குச் சாதகமானதாகவே இருக்கும். எந்த ஒரு வளர்ச்சிப் போக்கிலும் பழையதை மறுப்பதற்கான சக்திகளின் வளர்ச்சி என்ற உண்மையே பழையது தன் இருப்பிற்கான



படிப்பகம்

www.padippakam.com

நியாயத்தை இழந்துவிட்டது என்பதை மெய்ப்பிக்கிறது. இயற்கை, மனிதன், சமூகம் அல்லது அரசியல் காரணியொன்று ஒரு புறவய மதிப்பைப் (Objective validity) பெற்றிருக்கும் காலம் வரையிலும், தானும் ஒரு பகுதியாக இருக்கும் ஒரு பொது ஒழுங்கில் நன்மையான செயல்பாடுகளை அது செயல்படுத்திவரும் வரையிலும் காரண–காரிய நிகழ்வு என்ற யாந்திரீக விதியானது அக்காரணியின் அழிவிற்கான சக்திகளின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்திவிடுகிறது. எந்தவொரு நிகழ்விற்கும் ஏதேனும் சில காரணங்கள் இருக்கும். தேவையில்லாமல் எந்தவொரு நிகழ்வும் ஏற்படாது. பழம் நிறுவனங்களை அழிப்பது, பழம் கருத்துக்களை ஒழித்து விடுவது அல்லது பழம் மதிப்பீடுகள் மறைந்து போவது ஆகிய அனைத்தும் தேவையின் அடிப்படையிலேயே உண்டாகின்றன. ஆகவே சமரசம் என்ற பொருளில் "கூட்டிணைவை" ஏற்படுத்துவது, அது சமூகம், அரசியல் அல்லது தத்துவம் ஆகிய எந்த ஒன்றிலிருந்தாலும் அழிவையே ஏற்படுத்தும். காரணியின் செயல்பாடு தானாகவோ அல்லது கட்டாயத்தினாலோ நசுக்கப்படுவதிலும் அதன் விளைவாகப் புறவய நியாயம் இழந்த சிலவற்றைப் பாதுகாப்பதிலும் அது முடியும். உண்மையான கூட்டிணைவு என்பது நேர்மறைக் கூறுகளுக்கும் (thesis) எதிர்மறைக் கூறுகளுக்கும் (anti-thesis) இடையே சமரசம் ஏற்படுத்துவதல்ல. மாறாக தேக்கமுற்ற நேர்மறைக் கூறுகளை ஆற்றல் வாய்ந்த எதிர்மறைக் கூறுகளைக் கொண்டு அழித்து விடுவது. பின் அதன் அழிவுப் பணி முடிந்தவுடன் எதிர்மறைக் கூறு தன் மறுப்புப் பண்பை இழந்து, நேர்மறைக் கூறாகத் தன்னை நிலைநிறுத்திக் கொள்வது என்பதுதான் உண்மையான கூட்டிணைவாகும். ஹெகல் விளக்கியதுபோல "மறுப்பின் மறுப்பே" உண்மையான கூட்டிணைவாகும்.

இது (மறுப்பின் மறுப்பே) சாதகமான அம்சம் கொண்ட ஒரு அபாயகரமான கருத்தாகும். காரணம், இருப்பின் ஒவ்வொரு கட்டத்திலும் புரட்சி உள்ளார்ந்திருப்பதை இது ஒப்புக் கொள்கிறது. இது புரட்சியை நியாயப்படுத்துகிறது. இதன் விளைவாக ஒரு கருத்துமுதல் தத்துவவாதியால் முழுமை பெற்ற இந்த வல்லமையான ஆயுதம் (இயங்கியல்–மொர்)இறுதியாக பொருள்முதலியலின் புரட்சிகரத் தத்துவத்தால் சுவீகரிக்கப்பட்டது.

நவ–கான்ட்டியத்திடமும், உருத்திரிக்கப்பட்ட பல்வேறு வகை கருத்துமுதல் சிந்தனைகளிடமும் அடைக்கலம் புகுந்தும்கூட, புரட்சிகர சமூகத் தத்துவத்தின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தத் தவறிய பிற்போக்கு முதலாளிகளின் அதிகாரப் பூர்வத் தத்துவமானது இயங்கியலை–அதன் வக்கரித்துப்போன, காயடிக்கப்பட்ட வடிவத்தில்– கைக்கொள்வதன் மூலம் தன்னை வலுப்படுத்திக் கொள்ள விரும்பியது. அந்தத் தத்துவமானது, பழமைக்கும், புதுமைக்கும் இடையேயான சமரசத்தையே கூட்டிணைவு என விளக்கப்படுத்துகிறது. எதிர்மறைக் கூறுகளின் மறுப்புச் செயல்முறைகளின் (negative function) முழுமையான மதிப்பை மறுப்பதன் மூலம் இயங்கியலே பொய்யாக்கப்படுகிறது.

நவ–ஹெகலியத்தின் கூற்றுப்படி, கூட்டிணைவு என்பது எதிர்மறைக் கூறை, நேர்மறைக் கூறாக நிலைநிறுத்துவதல்ல. மாறாக, எதிர்மறைக் கூறுகளின்



படிப்பகம்

www.padippakam.com

செயல்முறைகளின் மீது கட்டுப்பாடுகள் சுமத்தப்படுவதன் மூலம் நேர்மறைக் கூறுகளைப் பாதுகாப்பதாகும். ஒருவகையான சிகிச்சையின் மூலம் புதியதற்கு இரத்தத்தைச் செலுத்தும் சமயச் சடங்கைப்போல, அழிந்து கொண்டிருக்கும் பழமைக்கு உயிரூட்டும் முயற்சியாகும் இது.

வக்கரித்த இயங்கியலை உருவாக்கியதற்கான பெருமை உண்மையில் பெர்க்சனையே சாரும். பெரும்பாலான நவீன இந்திய அறிவாளிகள் தேவையான அறிவியல் சிந்தனையும், தத்துவக் கூரறிவுமின்றி இப்பணியில் ஈடுபட்டது போல இவரும் ஆன்மீகவாத அறிவியலோடு இணைக்கப்படுத்துகிறார். அறிவியலிடமிருந்து அதன் தத்துவ சுதந்திரத்தைப் பறிக்க வேண்டும் என்ற கருத்தை பெர்க்சன் முன்வைத்தார்.ஆனால் முதலாளிய அமைப்பைப் பாதுகாக்கும் பெருமையை அறிவியலுக்கு பெருந்தன்மையோடு வழங்குகிறார். அதே சமயம் மாயாவாதத்திற்கு ஒத்தூதுகிறார். தனக்குத் தரப்பட்டுள்ள இந்த இரண்டாம் நிலைத்தகுதியை அறிவியல் ஒத்துக் கொள்வதற்கு, ஊக்கம் தரும் வகையில் அது தனக்கு ஒதுக்கப்பட்ட இடத்தைச் சுதந்திரத்தோடு செயல்பட முழுஒப்புதல் தரப்படுகிறது. இதன் விளைவுதான் பயன்பாட்டுவாதம் (Pragmatism) ஆகும். "உடலின்பம் சார்ந்த தத்துவத்தின் (carnal stomach philosophy)இந்தக் கொச்சையான பயன்பாட்டு வாதம்", தான் ஆன்மீகவாதத்தைக் காப்பாற்றுகிறது. நடைமுறைப் பொருள்முதலியலில் மிகக் கொச்சையான வடிவத்தின், சட்டரீதியான கொள்ளையடிப்பின், மனிதனை மனிதன் தின்னும் நாகரிகமான அரக்கத்தனத்தின் பண்பட்ட கருத்தியலாக நம்பிக்கையையும் மதத்தையும் மீண்டும் நிறுவுகிறது. நடைமுறையில் உள்ள பயன்பாட்டுவாதமே பாசிசமாகும்.

மறுப்பு என்ற கருத்தாக்கத்திற்கு ஒரு நிரந்தரத் தன்மையைத் தந்ததன் மூலம் பெர்க்சன் ஹெகலிய இயங்கியலை உருத்திருத்தி விட்டார். ஒவ்வொரு பொருளிலும் நேர்மறைக்கூறும் எதிர்மறைக்கூறும் இடம் பெற்றுள்ளன என்பதுதான் இயங்கியலின் அடிப்படைக் கொள்கையாகும். மறுப்பு என்பது அதனளவில் ஒரு செயல்பாடல்ல. மறுப்பு என்ற நிகழ்வின் பணியே பழைய கூறு ஒன்றின் இடத்தில் புதிய ஒன்றை நிலைநிறுத்துவதுதான். ஆகவே, மறுப்பு என்ற நிகழ்ச்சிப் போக்கிற்குப் புரட்சிகர மதிப்பு ஒருபுறமிருந்தாலும் நிகழ்ச்சிப் போக்கு முழுவதற்கும் அடிப்படை என்பது நேர்மறைக்கூறுதான். எதிர்மறைக்கூறு என்பதற்கு எதிர்மறை முக்கியத்துவத்துடன் நேர்மறை (சார்புப் பொருளில்) முக்கியத்துவம் உள்ளது. எதிர்மறைக்கூறில் உறைந்துள்ள நேர்மறைக்கூறுகளைப் பொறுத்துத்தான் அதனுடைய முற்போக்கான முக்கியத்துவம் அடங்கியுள்ளது. மறுப்பு என்ற நிகழ்ச்சிப் போக்கு முடிந்தவுடன் இந்த எதிர்மறைக்கூறு தன்னை நேர்மறைக்கூறாக நிலைநிறுத்திக் கொள்ளும்.

பரிணாம வளர்ச்சியை, ஒரு சார்பான வளர்ச்சிப் போக்காக அதாவது மறுப்புகளின் ஒரு முடிவற்ற தொடர்ச்சியாக பெர்க்சன் காண்கிறார். மாற்றமென்பது முழுமுற்றான கருத்தாக்கமாக மாறிவிட்டது. இருப்பினும் அடிப்படை இயல்பு காரணமாக அக் கருத்தாக்கம்அழிவுக்குள்ளாக்கப்படுகிறது. மறுப்பினால் மட்டுமே



படிப்பகம்

www.padippakam.com

நேர்மறையானது உருவாவதில்லை. ஒரு மறுப்பு மற்றொன்றை மறுக்கிறது. இதைத் தொடர்ந்து வரும் மற்றொரு மறுப்பு தனக்கு முன்னதை மறுக்கிறது. இவ்வாறுதான் நிலையான மாற்றம் என்ற தன்னுணர்வற்ற வளர்ச்சிப்போக்கு ஆக்கபூர்வமாக எதையும் உருவாக்காமல் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும். பயன்பாட்டு வாதத்தின் அடிப்படைக் கொள்கையான இந்த உருத்திரிந்த இயங்கியல் பார்வையானது மிகச் சரியாகவே கீழ்க்கண்டவாறு கண்டனம் செய்யப்பட்டுள்ளது :

"பரிணாமம் என்ற வளர்ச்சிப்போக்கு பகுத்தறிவிற்கு பொருந்தாததாகவும் கட்டுப்பாட்டை மீறியதாகவும், முன்கூட்டியே பார்க்கவோ, அனுமானிக்க முடியாத ஒன்றாகவும் காட்சிப்படுத்தப்பட்டது.வரலாற்று விதிகள் எதையுமே இது அறியாததாலும், அவசியமான விளைவு என்ற கோட்பாட்டிலிருந்து விடுதலை பெற்றிருந்ததாலும், காரண – காரிய விதிகள் என்ற விதிகளை இது கடந்துவிட்டது. முதலாளியத்தின் வீழ்ச்சிக்கு இறுதித் தீர்ப்பு வழங்கிய வரலாற்று விதிகளிலிருந்து பெற்ற கற்பனையான விடுதலையே இது. இந்தக் கற்பனைச் சுதந்திரப் பரப்பிற்குள் தாண்டிக் குதித்து விட்டால் போதும் அப்புறம் எல்லாமே அற்புதந்தான். இந்தக் கற்பனைச் சுதந்திர நிலையில் எந்தவிதமான அற்புதம் வேண்டுமானாலும் நிகழலாம்" (*தத்துவத்தின் வரலாறு என்ற* **பிரான்ஸ்மெஹரிங்கின்** *நூலுக்கு* **தால்ஹெய்மர்** *வழங்கிய பின்னிணைப்பு*).

பாசிசத்தின் தத்துவமான பயன்பாட்டுவாதமானது எண்ணற்ற வழிமுறைகளின் ஒரு தத்துவமாகும். இருட்டில் தடுமாறுவது போலத்தான் வாழ்க்கை என்றும் இதற்கென எந்தக் கோட்பாடும் இல்லை, எந்த விதிகளும் இல்லை, தனிநபர் அனுபவம்தான் ஒரே வழிகாட்டி என்றும், ஒவ்வொரு நிகழ்வையும் ஒரு நோக்கம் தீர்மானிக்கிறது என்றும் அது கூறுகிறது. இந்த இடத்தில்தான், இயற்கை கடந்த, புலனறிவிற்கு அப்பாற்பட்ட ஆன்மீக வகையினங்கள் உள்நுழைந்து ஒரு தத்துவத்தின் மீது ஆதிக்கம் செலுத்துகின்றன. அத்தத்துவமானது, நடைமுறை நோக்கங்களுக்காகத் தன் சொந்தத் தர்க்கத்தின் கட்டாயத்தினால் கொச்சைப் பொருள்முதலியலைப் பின்பற்றும் நிலைக்கு–அதாவது சுயநலமே மனித இலட்சியம் என்ற கோட்பாட்டைப் பின்பற்றும் நிலைக்கு–சென்று விடுகிறது. இந்தக் கோட்பாடு எவ்வாறு மேல் தட்டு வர்க்கங்களுக்கு நன்மையளிக்கும் என்பதை விளக்கத் தேவையில்லை. அதிகாரத்திலிருப்பவர்கள் தங்களை மட்டும் கவனமாகக் கவனித்துக் கொள்வார்கள். அதற்கும் மேலாக மக்களின் துயரங்களின் மீது இவர்கள் தங்களை வளப்படுத்திக் கொள்வார்கள். அடிமைத்தனம், வறுமை, அறியாமை, துயரம், இழிவு ஆகிய நரகத்திற்குள் மக்களைத் தள்ளிவிடுவார்கள்.

நாகரீகமான அரக்கத்தனத்தின்(civilized cannibalism) தத்துவமான இந்த உடலின்பம் சார்ந்த தத்துவமானது, இதன் உடலின்ப இயல்பு காரணமாகவே, வீரியமான ஆன்மீகப் பண்பைப் பெற்றிருக்கிறது. தனி நபர் செயல்பாடுகளையே லட்சியமாகக் கொண்ட இந்தக் கோட்பாடு தவிர்க்க இயலாமல் பிரபஞ்சம் பற்றிய அப்பாலைக்கொள்கைக்கே (telelogical conception) இட்டுச்செல்லும். உண்மையில்



படிப்பகம்

www.padippakam.com

இந்த ஆன்மீகக் கருத்தாக்கம்தான் கொள்ளையடிப்பதை லட்சியமாகக் கொண்ட ஒரு கோட்பாட்டிற்கு தார்மீக ஒப்புதலை வழங்குகிறது. எல்லையில்லா அனுபவங்களையே வழிபாடாகக் கொண்டால் அது, உண்மையையும், ஒழுக்க விதிகள் குறித்த கருத்தாக்கங்களையும் உள்ளுணர்வின் வகையினங்களாக உறுதியாக மாற்றி விடும். தன் சொந்த அனுபவம் மட்டுமே ஒருவனுக்கு வழிகாட்டியாக இருக்கும்போது பேருண்மையும், இந்த வழிமுறையின் மூலமே வர முடியும். தன்னல நோக்கங்களால் உந்தப்படும் ஒருவர், வரலாறு, சமூகம் உள்ளிட்டு, வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்வையும் அகநிகழ்வுகளாகக் கருதும் ஒருவர் இந்த இயற்கை நிகழ்வுகளின் பின்னே ஒரு மேன்மையான நோக்கம், ஒரு தெய்வீக விருப்பம் இருப்பதாகவே கருதுவார். அகமையவாதிகள்(Ego Centrists) உண்மையில் புறத்தன்மையைப் பறித்து விட்டு, அதை (உண்மையை) ஒரு அக அனுபவப் பிரச்சினையாக மாற்றினர். இந்த நிலையில், ஆன்மீகவாதமானது கொச்சைப் பொருள் முதலியலின் எதிர்மறைக் கூறாக (anti-thesis) உண்மையில் இருக்க முடியாது. இவை இரண்டும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்களே. கொச்சைப் பொருள் முதலியலின் பண்புகளான அகவயவாதம் அகமையவாதம், தன்னலம், கொள்ளை நோக்கம் ஆகிய அனைத்தும்(இந்தப் பண்புகள் தத்துவார்த்தப் பொருள்முதலுக்கு அன்னியமானவை)... கிழக்கிலும் சரி, மேற்கிலும் சரி– ஆன்மீகவாதத்தின் ஆரவாரமான பகட்டுப் பேச்சினால் மறைக்கப்பட்டே இருக்கும். வாழ்க்கை குறித்த இந்த மாயவாத ஆன்மீகப் பார்வையின் உண்மையான இயல்பான உள்ளடக்கமானது பாசிசத்தின் நடைமுறைகளில் வெளிப்படுகிறது.

பெர்க்சனால் உருத்திரிக்கப்பட்ட இயங்கியல்தான், பயன்பாட்டுவாதத்திற்கு அடித்தளம் என்ற போதிலும், **வில்லியம் ஜேம்ஸ்** என்பவர்தான் இதை (பயன்பாட்டுவாதம்) கோட்பாட்டின் துணையின்றி வளர்த்தெடுத்தார். ஆகவே இத்தத்துவத்தின் வளர்ப்புத் தந்தை என இவருக்கே மரியாதை தர முடியும். இவர்தான் "மத அனுபவம்" என்ற கோட்பாட்டை உருவாக்கித் தந்தவர். பொருண்மை உலகின் அனுபவங்கள் அதாவது புலனறிவு (sense- perceptions)என்பது உண்மையின் "மறைமுக அனுபவங்கள்" ஆகும். இந்த உலகைப் பொறுத்தவரை, அவை செல்லுபடியாகும். ஆயினும், "மத அனுபவத்தின்" மூலம் மட்டுமே நேரடியாக உண்மையை அணுக முடியும். ஆத்ம – தரிசனம் ஒன்று மட்டுமே உண்மையை அறிவதற்கான ஒரே வழி என்ற தெய்வீக இந்துக்கோட்பாட்டை கொச்சைப்பொருள்முதலியலின் "உடலின்பம் சார்ந்த இந்தத்தத்துவம்" பிரச்சாரம் செய்வதை இவ்விடத்தில் நாம் கண்டுகொள்ளலாம். இந்த ஆத்ம – தரிசனத்தை அடைய நம்முன் பல்வேறு வழிமுறைகள் உள்ள போதிலும், அதி உன்னத – மனநிலையில் மட்டுமே அதை அதன் பண்டைய தூய்மையோடு உணர்ந்துகொள்ள முடியும்.

"புலனுணர்வு மூலம் நமது வாழ்வில் அறிந்து கொள்ளக்கூடிய உலகிலிருந்து முற்றிலும் வேறுபட்ட பரிமாணங்களில் நமது இருப்பின் உறுத் தொலைவான எல்லைகள் ஆழ்ந்திருக்கின்றன. அது இயற்கைக்



படிப்பகம்

www.padippakam.com

களமாயினும் சரி, மாயக்களமாயினும் சரி எதை நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டாலும் நமது லட்சியத் தூண்டுதல்கள் இந்தக் களத்திலிருந்து உருவாகிக் கொண்டிருக்கும் வரை (இவற்றில் பெரும்பாலானவை இந்தக் களத்திலிருந்துதான் உருவாகின்றன. தெளிவாக இனம் காண முடியாதபடி நம்மை ஆட்கொண்டும் விடுகின்றன). கண்ணுக்குப் புலப்படும் உலகத்துக்கு நாம் சொந்தமாக இருப்பதைவிட முன்சொன்னவற்றுக்கே நாம் மிக நெருக்கமாக இருப்பதாக உணர்வோம். ஏனெனில், நமது இலட்சியங்கள் எவ்விடத்துக்குச் சொந்தமானதாக இருக்கிறதோ, அவ்விடத்துக்கு நாம் மிக நெருக்கமாக இருப்பதாக உணர்வோம். இருப்பினும் கண்ணுக்குப் புலப்படாத கேள்விக்குரிய இந்தக் களம் லட்சியமாக மட்டும் வெறுமனே இருந்து விடுவதில்லை. இவ்வுலகிலும் அது பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.'' **(வில்லியம் ஜேம்ஸ் –** *மத அனுபவங்களின் வகைப்பாடுகள்***)**

எந்தத் தத்துவமுமே முழுக்க ஆன்மிகத் தன்மையுடையதாய் இருக்க முடியாது. புற உலகிலிருந்து தன்மையில் வேறுபட்ட ஒரு களத்திலிருந்துதான் கருத்துக்கள் உருவாகின்றன. காலம், இடம் போன்ற பரிமாணங்களின் அளவுகளுக்கு உட்படாத ஒரு களத்திலிருந்துதான் அவை உருவாகின்றன. ஆகவே, அவை காரண– காரிய விதியை (Law of Causality)கடந்ததாகத்தான் இருக்க முடியும். புற உலகைத்தாண்டிய (Transcendent) இம்மாதிரியான ஒரு களத்தை, இயற்கையாகவே மனித அறிவால் ஊடுருவிப் பார்க்க முடியாது. ஏனெனில், மனித அறிவு என்பது புற உலகின் நிகழ்வாகும். புற உலகு கடந்த, அதி – புலனறிவு உலகத்திலிருந்து உருவாகும் கருத்துக்கள் அதன் இயல்பிலேயே உடல் சாராததாக (immaterial)அதாவது ஆன்மீக வகைப்பட்டதாகவும், இந்தப் புறவுலகு நடைமுறைகளின் தாக்கத்திற்கு எந்த விதத்திலும் உட்படாததாகவும் இருக்கும். ஆனால், அவை தன்னிலிருந்து தன்மையில் வேறுபட்ட ஒரு உலகின் மீது ஒரு தவிர்க்கமுடியாதத் தாக்கத்தை மர்மமாகச் செயல்படுத்தும். அவை நம்மை எவ்வாறு ஆட்கொள்கின்றன என்பதை ''தெளிவாக இனம் காண முடியாது''.

வெளிப்படையாகச் சொல்வதானால் இத்தத்துவத்தின் கருத்துப்படி கருத்துக்கள் என்பது கடவுளின் குரலாகும். பொருண்மை கொண்ட மனித உயிரியிடம் ஏதேனும், ஒரு ஆன்மீகச்சாரம் இருக்க வேண்டும். தெய்வீகத் தூண்டுதல்களின் ஊடகமாக அச்சாரம் செயல்பட வேண்டும். ஆனால், ஜேம்ஸின் பயன்பாட்டியல் தத்துவமானது, ஆன்மீக வாதத்தின் ஒரு பண்பற்ற வடிவமாக இருந்ததால் மேற்சொன்ன தர்க்க ஒத்திசைவிற்கு அது மதிப்புத்தரவில்லை. பௌதீக – பரிமாணங்களுக்கும் புலனறிவுக்கும் அப்பால் இவர் கற்பனையான ''இலட்சிய உலகை'' வைத்தார். இருப்பினும், ''இது இவ்வுலகில் பாதிப்பை ஏற்படுத்தும்'' என்பதை உறுதிப்படுத்தினார். இந்த அற்புதம் எப்படி நிகழக்கூடும்? நம் இறை நம்பிக்கைகளில் மட்டும் தான் இந்த அற்புதம் (miracle) நிகழக்கூடும். காரணம், அற்புதங்கள் புறத்தில் என்றுமே நிகழாது. ஆனால், நம்பிக்கையின் அகஉலகில் மட்டுமே அவை நிகழ்கின்றன. பயன்பாட்டுவாதம் என்பது அனுபவத்தை பகுத்தறிவின்றி வழிபடுவது ஆகும். அது பைத்தியம் பிடித்த தனிநபர்வாதத்தின் கருத்தியலாகும். புற உலகு கடந்த, அதிபுலனறிவு சார்ந்த



படிப்பகம்

www.padippakam.com

இந்த இலட்சியம் குறித்த அறிவை நம்மால் பெற முடியும் என்றும், இந்த இலட்சியம் அதன் இயல்பிலேயே அனுபவம் கடந்ததாகும் என்றும் இது உறுதியாகக் கூறுகிறது.

"மத அனுபவம்" என்ற உன்னத வடிவம் கொண்ட ஒரு அனுபவத்தை முன்னிறுத்தியதன் மூலம் இந்த இடர்ப்பாடு வெற்றி கொள்ளப்பட்டது. மத அனுபவம் என்பது வாழ்வின் மிக உயரிய தளத்தில் வைக்கப்பட்டது. ஒப்புயர்வற்ற முழு உண்மையைக் கண்டடைவதற்கான ஒரே வழி இறைநம்பிக்கையே(faith) என அறிவிப்பதானது அனைத்துப்பகுத்தறிவுச் சிந்தனைகளையும் கைவிடுவதற்கு ஒப்பாகும். இதற்கும், இந்தியத்தத்துவத்திற்கும் இடையிலான ஒற்றுமைகளை எளிதாகப் புரிந்து கொள்ளலாம். அனுபவம் பற்றிய தனது தத்துவத்தை, பண்டைய இறை வழிபாட்டோடு இணக்கப்படுத்தி ஜேம்ஸ் ஒளிவுமறைவின்றிப் பேசினார். "விசுவாசமான மனநிலையிலும் வழிபாட்டு மனநிலையிலும், சக்தி ஊறுகிறது என்பதைத் தவிர தெய்வீக உண்மைகள் குறித்த பண்புகளை என்னால் விவரிக்க இயலாது. ஆனால் அவை இருக்கின்றன என்ற அந்த நம்பிக்கையின் மீது என் துணிகரச் செயல்களைச் செய்யத் தயாராய் இருக்கிறேன்." **(வில்லியம் ஜேம்ஸ் –** *மத அனுபவங்களின் வகைப்பாடுகள்***)**

இந்தத் தத்துவத்திற்கு எந்த விளக்கமும் தேவையில்லை. இது ஒரு தத்துவமே அல்ல. இது ஒரு மதம்,மிக வறட்டுக்கோட்பாட்டு வடிவம் கொண்ட ஆன்மீகவாதம் ஆகும். புற உண்மை என்ற ஒன்று கிடையாது. உண்மையை மதிப்பிடுவதற்காக ஒரே அளவுகோல் தனிநபரே. உண்மையை அடைவதற்கான ஒரே வழி ஒருவரது சொந்த அனுபவமே. "நேரடி அனுபவத்தின் பலனாய் கிடைப்பது புறஉலகு கடந்த முழு உண்மையாகும். புற இருப்பைக் கடந்ததும் அதே வேளை அதைக் கட்டுப்படுத்தி வருவதுமான, இந்த ஒப்புயர்வற்ற வகைப்பாட்டைப் பொறுத்தவரை அனுபவம் என்பது மதிப்பீடு என்ற இடையூறிலிருந்து விடுதலை பெற்று விட்டது. அதிர்ஷ்டக்கார உன்னத மனிதனை அவன் சொல்வதிலிருந்தே முடிவு செய்ய வேண்டும். மாயக்காட்சியில் உழல்பவர்கள் அல்லது ஏமாற்றுப் பேர்வழிகள். மனிதனின் ஆன்மீக வழிகாட்டிகளாக இப்படித்தான் உருவாகிறார்கள். தாங்கள் முழு உண்மை பற்றிய அறிவை எட்டிவிட்டோம் என அவர்கள் சொல்லிக் கொள்வதை யாரும் கேள்வி கேட்க முடியாது. இது (முழு உண்மை) "அனுபவ ரீதியாக" "நேரடி அனுபவத்திலிருந்து" கிடைப்பதாகும். மாயக்காட்சிகளில் தன்னையிழந்தவர்கள் அல்லது எளியோரை ஏமாற்ற ஆசை கொண்டவர்கள் யாராக இருந்தாலும் இந்த "அனுபவத்தை" பெற்றுக் கொள்ள முடியும். இன்றைய உலகம் இவ்வகையான வெறியர்களால் அல்லது வஞ்சகர்களால்தான் ஆளப்பட்டு வருகிறது. இவர்கள் அனைவரும் தங்களை அதிமனிதர் என்றோ அல்லது தெய்வீக உந்துதல் பெற்றவர் என்றோ உரிமை கோருகிறார்கள். அதிமனித வழிபாடுதான் பாசிசமாகும். ஆன்மீக வறட்டுக்கோட்பாடு வடிவமே இதன் அடித்தளமாக இருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

இம்மாதிரியான நபர்களின் கைகளில் தத்துவம் என்பது பூசாரி வேலையாக மாறிவி்டது. சமூகத்தை ஆளும் அதிகாரம் பெற்றவர்களுக்கு மட்டுமே அல்லது ஆளும் வர்க்க அதிகாரத்தின் ஆதரவைப் பெற்றவர்களுக்கு மட்டுமே உண்மை தரிசனம் தரும். ஏனெனில் அவர்கள் மட்டுமே தங்கள் உரிமையைச் செயல்படுத்தும் நிலைமையில் உள்ளனர். அழுகிப்போன முதலாளியச் சமூகத்தின் உயரிய மதுகுருமார்களே இந்த நவ–ஆன்மிகவாதத் தத்துவத்தின் போதகர்கள் ஆவர். ஒழுக்கத்தைப் பிரச்சாரம் செய்துவந்த அகந்தை கொண்ட போதகர்களும், கிறித்துவ அறிஞர்களும் தங்கள் மேலாதிக்கத்தை நிலைப்படுத்த இதில் இணைந்து கொண்டனர். எப்படியிருப்பினும் இந்தப் புதிய புனித ஒழுங்கின் மூலம் வெளிப்படும் உண்மைக்கு ஒப்புதல் தரும் உண்மையான அதிகாரம் அரசாங்கத்துக்கே உண்டு. கொச்சைப்பொருள்முதலியலின் வெறுக்கத்தக்க அடித்தளத்தின் மீது ஆன்மீகவாதம் அம்மணமாக நிற்கிறது. பண்டைய இந்தியாவில் ஞானத்தை அடைவதற்கான அதிகாரத்தைப் பார்ப்பனர்கள் தங்களிடம் மட்டுமே வைத்துக் கொண்டார்கள். அய்ரோப்பாவில், கிறித்துவ ஆலயங்களுக்கும், நிலக்கிழமை அரச மரபினருக்கும் இடையே இருந்த உறவைப்போல இந்தியாவிலும் மத்தியகாலப் பகுதியில் ஏறத்தாழ சத்திரியர்களுக்கும் பார்ப்பனர்களுக்கும் இடையே உறவு இருந்து வந்தது. தற்போது இப்பணியை நவீன சாமியார்களும், சமயம் – சாராத ஆன்மிகவாதிகளும் (lay-spirituals) தங்கள் வசம் எடுத்துக் கொண்டனர். காலனியச் சுரண்டலின் அவசரத் தேவைகளுக்காக உயிர் ஊட்டப்பட்டுள்ள காலாவாதியாகிப் போன நிலக்கிழமை ஆணாதிக்க உறவுமுறையின் விலங்குகளுக்கு எதிராக முதலாளிய உற்பத்தி முறை போராடி வரும் ஒரு கலப்புச்சமூக அமைப்பின் கருத்தியல் ஆதரவாளர்களாக இவர்கள் இருந்து வருகிறார்கள். ஒரு சிலர் உணர்ந்துள்ளதைக் காட்டிலும், கருத்தியல் நோக்கில் இந்தியா பாசிசத்திற்கு மிக அருகில் நிற்கிறது. நவீன இந்தியாவின் எண்ணற்ற அறிவாளித் தலைவர்கள் போதித்து வரும் வறட்டு ஆன்மீகவாதம் என்பது பாசிசத்தின் தத்துவமே ஆகும்.

பாசிசச் சர்வாதிகாரத்துக்குத் தத்துவரீதியானதொரு நியாயப்பாட்டை வழங்கும், நவீன புதிய – ஆன்மீகவாதத்தின் ஒரு பகுதியானது ஹெகலின் உருத்திரிக்கப்பட்ட இயங்கியலிலிருந்து உருவானதாகும். ஆகவே அறிவைப் பெறுவதற்காக நேரடி வழி எனச் சொல்லப்படும் வழிமுறை குறித்து ஹெகல் என்ன சொன்னார் என்பதைக் கவனிப்பது சுவையானதாக இருக்கும். ''உண்மையை மதிப்பிடுவதற்கான ஒரே வழி நேரடியாக அறிவை அடைவதே என்ற கோட்பாட்டின் பின்விளைவுகள் அனைத்து வகை மூட நம்பிக்கைகளையும், உருவ வழிபாடுகளையும் உண்மையென அறிவிப்பதாகவும் தீமைகளையும், ஒழுக்கக்கேடான ஆசைகளையும் நியாயப்படுத்துவதாகவும் இருக்கும்.'' (*தத்துவ அறிவியல்களின்கலைக்களஞ்சியம்*) இது தொடர்பாக ஹெகல் மேலும் கூறுகிறார். நேரடி அறிவுக் கோட்பாட்டின்படி, நம்பிக்கையே உண்மையின் அளவுகோலாகும். புராதன மக்கள் உயிரற்ற பொருட்களையும், கற்களையும், விலங்குகளையும், மருத்துவர்களையும் அல்லது மதகுருக்களையும் பகுத்தறிவினால் தூண்டப்பட்டு வழிபாடு செய்யவில்லை. அவர்கள் வெறுமனே தாங்கள் வழிபடும் பொருள்களின் மீது நம்பிக்கை மட்டுமே



படிப்பகம்

www.padippakam.com

கொண்டிருந்தனர். புனிதம் என்பது ஒரு புறவியல் பொருளல்ல. அது (புனிதம்) உண்மையில் வழிபடும் பொருளில் இல்லை. புனிதம் என்பது இறைநம்பிக்கையிலிருந்து வெளிவருவது–அதாவது வழிபடுவோரின் மூடநம்பிக்கையிலிருந்து வருவது– ஆகும். இல்லாத இடத்தில் தெய்வீகம் இருப்பதாக ஏற்றிக் கூறும் இந்த வழக்கம் (புராதன மக்களிடம் இது காணப்பட்டது) அல்லது தந்திரம் (மிக நவீனப்பண்பாட்டில் இது நடைபெறுகிறது) என்பது "தீமைகளையும், ஒழுக்கக்கேடான ஆசைகளையும்" நியாயப்படுத்தும் நோக்கத்திற்கே பயன்படும். இதையே பின் வருமாறும் சொல்லலாம். கொச்சை பொருள்முதலின் முக்காடே ஆன்மீகவாதமாகும். தத்துவார்த்த ஆன்மீகவாதத்தின் மாபெரும் நவீன வெளிப்பாட்டாளரான ஹெகலின் வாக்கு மூலமே இவை. இவரின் முற்றமுழுக் கருத்தியலையும் வேதாந்தத் தத்துவத்தையும் வேறுபடுத்தி பார்க்க முடியாது.

புறவய உண்மையை மறுப்பது, மெய்யான உண்மையைக் காண்பதற்கான ஒரே வழி அகவய உள்முகத் தேடல் ஒன்றே எனச்சொல்லி அதை மேன்மைப்படுத்துவது ஆகிய இவைதான் முதலாளியத்தின் அழுகிய காலகட்டத்தில் அதன் பயன்பாட்டுத் தத்துவமாக எழுந்த பயன்பாட்டுவாதத்தின் தொகுப்பும் சாரமும் ஆகும்.இதற்கும் இந்துத் தத்துவத்திற்கும் இடையிலான ஒற்றுமையை எளிதில் உணர்ந்து கொள்ளலாம். உண்மையின் அளவுகோல் புறத்தில், மனித சிந்தனைக்கு அப்பால் சுதந்திரமாக நிலவிவரும் பொருட்கள் அல்ல. முதலாளியச் சமூகத்தில் உண்மையின் அளவுகோல் என்பது வாழ்க்கையின் சுயநலத்திற்கேற்பப் பொருள் தரக்கூடியது. நடப்பில் நிலவும் பொருட்களோடு பரிச்சயத்தை ஏற்படுத்திக் கொண்டு அவற்றை ஊடுருவி, விரிவுபடுத்தி , சீரமைக்கும் நமது மூளையின் முடிவற்ற நிகழ்ச்சிப் போக்கின் விளைவாக உண்மையான அறிவு கிடைத்து விடுவதில்லை. மாறாக, நமது மூளை உணர்ந்து கொள்கிறதோ இல்லையோ நமது சுயம்(ego) சுய–ஒருமிப்பில்(self-concentration) இருக்கும்போது உருவாகும் மர்மமான உருப்பொருளே உண்மையான அறிவு ஆகும். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், உண்மை என்பது நமது ஆசையின் விளைவாகும். ஒரு "விசுவாசமான மனநிலையில்", "வழிபாட்டு மனநிலையில்", "மத அனுபவத்தின் மூலம்" மட்டுமே இது கிடைக்கும். காந்தி புதிதாக ஒன்றும் சொல்லவில்லை. நடைமுறை நோக்கங்களுக்காக சுயநலக்கோட்பாட்டை உருவாக்கி அதை உண்மையையும், ஒழுக்கத்தையும் மதிப்பிடுவதற்கான அளவுகோலாக முன் வைத்தபோதிலும் இந்த வகைப்பட்ட ஆன்மீகவாதமானது அறிவியல் அறிவின் நம்பத்தன்மையை விவாதத்திற்கு உள்ளாக்குகிறது.

**ஜான் துவேயின்** பயன்பாட்டுவாதத்தில் தான் ஆசையை ஆன்மீக மயமாக்கம் திருப்புமுனை தன் உச்சத்தை எட்டுகிறது. "அன்பு செலுத்தப்படும், வணங்கப்படும், போற்றப்படும் பொருட்கள் அனைத்தும் – பரம்பொருளின் பண்புகள் இவையென ஆன்மீகத் தத்துவங்களால் கருதப்பட்ட பொருட்கள் அனைத்தும் – இயற்கையின் உண்மையான மூலப்பொருட்களாகும்".(*நிச்சயத்தைத் தேடும்*



படிப்பகம்

www.padippakam.com

*தாகத்தில்)* புறத்தில் நிலவிவரும் பௌதீக நிகழ்வுகள் அனைத்தும் இயற்கையின் உண்மையான மூலப்பொருட்கள் அல்ல. அவற்றை மாயத் தோற்றங்கள் என்றே ஊகிக்க வேண்டும். இயற்கையின் உண்மையான மூலப்பொருட்கள் நமது அக உணர்வைத் தவிர உண்மையில் வேறெங்கும் நிலவவில்லை. நமது தன்னிலையைத் திருப்திப்படுத்தவே அவ்வாறு முன்வைக்கப்பட்டு நமது நோக்கங்களுக்குப் பொருத்தமாக இயற்கையின் மீது கற்பித்துச் சொல்லப்படுகிறது. இயற்கையோடு நமக்குப் பரிச்சயத்தை ஏற்படுத்தித்தர அறிவியலால் முடியாது. இந்த நோக்கத்திற்காக நாம் ஆன்மீகத் தத்துவங்களைப் பின்பற்ற வேண்டும். இந்த வழிகாட்டுதலின்படி பௌதீக இயற்கைக்கு ஒரு புறஉயிர்ப்பு இல்லை. பரம்பொருளின்(ultimate being) பண்புகளை பௌதீகப் பொருட்களின் அளவுகோலால் உணர்ந்து கொள்ள முடியாது. அவை ஆன்மீக வகைப்பட்டவையாகும். இதை இவ்வாறு சொல்லலாம்: பரம்பொருள் என்பது ஆன்மீகமாக உள்ளது. ஆகவே, அதை ஆன்மீகம் மூலமாகத்தான் உணர வேண்டும்.

பாசிசக் கருத்தியலின் சமகாலப் பிரச்சாரர்களில் ஒரு சிலரைப் பார்க்கலாம். நவீன செவ்வியல் தத்துவத்திற்குச் சவக்குழி தோண்டிய புகழ் பெற்ற ஒரு சிலரின் பொய்யான ஆசியின் கீழ் இவர்கள் அதி தீவிர – ஆன்மீவாதத் தத்துவத்தை போதித்து வருகிறார்கள். பெர்லின் பல்கலைக்கழகத்தில், தத்துவம் கற்பித்துத்தரும் பேராசிரியர் **ஆல்பர்ட் லிபெர்ட்** ஒரு நவ – ஹெகலியவாதி ஆவார். அவர் ஒரு துணிவான அனுபூதியியல்வாதியும் கூட. ஆகவேதான் இவர், நவீன விமர்சனத் தத்துவம் முழுவதையும் எதிர்க்கிறார் – அதாவது தெக்காதேயிலிருந்து ஹெகல் வரையிலும் வளர்ந்து வந்த வலுவான சிந்தனை ஓட்டத்தை – இவர் எதிர்க்கிறார். தத்துவ வரலாற்றில் ஒழித்துக்கட்டியவர்கள் பட்டியலில் **பேகன், ஹாப்ஸ், லாக், காண்டிலாக்,** பிரெஞ்சு கலைக்களஞ்சியத்தின் தொகுப்பாளர்கள், **க்யூம்** மற்றும் அவர் போன்றோர், ஏன் கான்ட் கூடத்தான் இடம் பெறுகிறார். ஆனால், லிபர்ட் இதற்கு நேர்மாறாக ''அனைத்தையும் சிதறடிக்கும் கான்ட்டின் விமர்சனம் அனுபூதியியலில் புதிய சகாப்தத்தை, நவ–அனுபூதியியல் சகாப்தத்தை முன்னறிவிக்கிறது'' என கருத்து தெரிவிக்கிறார். (''*விமர்சனத் தத்துவம் எப்படி சாத்தியமாயிற்று?*'') கான்ட்டிலிருந்து ஒரு அனுபூதியியல்வாதியை உருவாக்குவதற்காக இந்த நவ–ஹெகலியப் பேராசிரியர் பின்வரும் விதத்தில் புதிய அனுபூதியியலை ஆதரித்துப் பேசுகிறார்.

''செயலில் குறியாயிருக்கும் அல்லது செயல்படும் அனுபூதியியலை விமர்சனரீதியில் புறக்கணித்துவிட முடியாது. காரணம், பகுத்தறிவு விதிகளிலிருந்து விடுவிக்கப்பட்ட அல்லது விடுவிக்கப்படும் சாத்தியப்பாடுள்ள ஒரு உயிரை அது (அனுபூதியியலை) தனக்கு அடித்தளமாகக் கொள்ளவில்லை. அது அடித்தளமாக எடுத்துக்கொண்ட ஒரு பொருள் பகுத்தறிவு கொண்ட ஒரு உயிராகும்''. *(அதே நூல்)* அனுபூதியியலை பகுத்தறிவுப்பூர்வமானதாக மாற்றத்தான் ''செயலில் குறியாயிருக்கும்'' ''செயல்படும்'' என்பது போன்ற மதிப்பீடுகளை மாயாவாதச் சிந்தனை ஒரு வேளை உருவாக்கியிருக்கலாம்.



படிப்பகம்

www.padippakam.com

ஒரு சமூக அவசியம் காரணமாகத்தான் பகுத்தறிவானது பொருண்மைப்பண்பு அற்றதாக(immaterialised) மாற்றப்பட்டிருக்க வேண்டும். அனுபூதியியல் சிந்தனை வகையினங்கள் (metaphysical categories) தங்கள் சொந்த இயல்போடு இருக்க வேண்டுமானால் அவை கருத்து வகைப்பட்டதாக அதாவது ஆன்மீக வகையினதாக இருக்க வேண்டும். அனுபூதியியல் சிந்தனை வகைப்பாட்டின் அடிப்படையாகப் பகுத்தறிவு மாற்றப்பட்டபோது, அது தர்க்க ரீதியாக பொருண்மைப்பண்பு அற்றதாகவே கருதப்பட்டது. மனித ஆன்மாவில் தோன்றும் ஒரு தெய்வீக ஒளியாக இது(பகுத்தறிவு) மாற்றம் பெற்றது. விபொட் வாதப்படி, நவீனத் தத்துவத்தின் மிக உயரிய அக்கறை மனிதனின் தெய்வீக சாரம் ஆகும். சமூக நீதி குறித்த அனைத்துக் கோட்பாடுகளையும், ஒழுக்க விதிகளையும் புறக்கணித்துவிட்டு, அதி மனிதன்(Super man) இந்த உலகை ஆள வேண்டும். இந்தப் புதிய 'ஹெகலியப் பேராசிரியர் ஒரு பாசிசத் தத்துவவாதியாவார். ஆகவேதான் அவர் இன்று வரை இட்லரின் ஜெர்மனியில் "தத்துவம்" போதித்து வருகிறார்.

இந்தப் புதிய அனுபூதியியலின் தர்க்க முடிவு பின்வரும் தத்துவம்தான் : "முதல் பொருள் என்பது முற்றிலும் சிந்தனையற்ற ஒரு பொருளல்ல. மாறாக, அப்பொருளின் கருத்து (அல்லது சிந்தனை) தான் முதல் பொருளாகும்". *(அதேநூல்)* (ஒரு இறந்த உடலைத் தலைகீழாகப் பிடித்தல் என்ற எளிய செயலின் மூலம் அது உயிர் பெற்றுவிடும் என்ற நம்பிக்கை இந்தப் படித்த பேராசிரியருக்கு இருப்பதாகத் தெரிகிறது, இறையியல், அனைத்திறைக் கோட்பாடு(pantheism), மாயாவாதம் ஆகியவற்றிற்கு இடம் தந்ததால் கருத்து முதலியலின் அடிப்படைக் கோட்பாடு கொச்சைப்படுத்தப்பட்டது. சூனியத்திலிருந்து படைப்பு உருவானது – அதாவது உருவமற்ற ஒரு பொருளின் மாயச்சக்தியால் உருவானது – அந்தப்பொருள் இவ்வுலக விதிகள் எதற்கும் கட்டுபடாது – என்ற புகழ்பெற்ற பழங்கோட்பாட்டோடு இது இயல்பிலேயே ஒத்துப்போனது. முற்ற முழு சூனியத்தின் (Absolute nothing) முதல் நிலையில் தோன்றிய உணர்வின் எழுச்சியே இந்தப் பிரபஞ்சம் ஆகும். அதாவது, நிர்விகாரில் (Nivikar) தோன்றிய அம்கார் (Ahamkar) அதாவது பிரம்மாவின் நிர்விகல்பா (Nirvikalpa) மனநிலையே இந்தப் பௌதீக இயற்கையின் மூலாதாரமாகும். ஷெல்லிங்கின் வார்த்தைகளில் சொல்வதானால், "கடவுளின் சுய – தியானமே" இந்தப் பிரபஞ்சம் ஆகும். கடவுளின் சிந்தனையைத் தவிர இப்பிரபஞ்சத்திற்கு வேறு இருப்பு ஒன்றுமில்லையாததால், தனது அனைத்து பன்முகத் தோற்றங்களின் மூலம் – அதாவது, உயிரற்ற பொருளிலிருந்து, உயிருள்ள பொருள் வரையிலான எண்ணற்ற தோற்றங்கள் மூலம் – இது கடவுளிடம் இருப்புக் கொண்டிருக்கிறது. பிரபஞ்சத்தில் இருப்பதெல்லாம் கடவுளைத்தவிர வேறொன்றுமில்லை.

உலகம் குறித்த ஒரு விளக்கத்தை முன் வைக்க இயலாத நிலையில் மாயாவாதத்தத்துவம் இருக்கிறது. இந்த இயலாமையிலிருந்துதான் அது உலகம் குறித்த ஒரு விளக்கத்தை முன்வைக்கிறது. அவ்விளக்கம் பகுத்தறிவு விளக்கத்திற்கு சவால் விடும் ஒரு புதிராக இருக்கிறது. "எல்லாம்வல்ல இறைவனின்றி அல்லது அவனின் லீலையின்றி ஒன்றும் சாத்தியமில்லை" என அது கூறுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

ஒரு தெய்வீக மந்திரவாதியால் உருவாக்கப்பட்ட நிலையான அற்புதமே உலகம் என்றும், அல்லது உலகம் ஒரு மாயக்காட்சி, ஒரு கெட்ட கனவு என்றும் இருவிதமாக காட்சிப்படுத்தப்படுகிறது. இது ஒரு நிலையான அற்புதம் என்றால், இங்கு எந்த நேரத்திலும் என்ன அற்புதம் வேண்டுமானாலும் நிகழலாம். எல்லாம்வல்ல மந்திரவாதியின் விருப்பத்தைத்தவிர (whim) வேறு எந்த விதிக்கும் (Law) இங்கு இடமில்லை. பூவுலகில் உள்ள சர்வாதிகாரிகளின் தன்னிச்சையான செயல்பாடுகளின் மூலம் பிரபஞ்சம் தன் விருப்பத்தை வெளிப்படுத்துகிறது. முதலாளியச் சமூகத்தின் பெருங்குழப்பம் (chaos) இவ்வாறு மிகச்சாதாரணமாக நியாயப்படுத்தப்படுகிறது. மறுபுறம், இயல்பிலேயே பாசிசமாக உள்ள இந்தியாவின் தத்துவம் சொல்லிவருவது போல, இந்த உலகத்தை ஒரு மாயை என்று மறுத்து ஒதுக்கினால், இவ்வுலக உயிர்கள் அனுபவித்து வரும், துன்பங்களும், துயரங்களும், இன்னல்களும் மாயை என்றும் – மனிதனின் தெய்வீகச் சாரத்தைப் பாதிக்கும் திறனற்றவை என்றும் – விளக்கப்படலாம். இந்த வழியின் மூலமாகவும் இவ்வுலக வாழ்க்கைக்குரிய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். ஆன்மீகவாதமானது மக்களை அவரவர்க்குரிய இடங்களில் பேணி வருகிறது. இதன் மூலம் வர்க்க ஆதிக்க சமூக அமைப்பின் பாதுகாப்பை உறுதி செய்து கொள்கிறது.

பிரான்சைச் சேர்ந்த **எமிலிலஸ்பக்ஸ்** என்பவர்தான் நவீன–ஹெகலிய மாயாவாதத்தின் மற்றொரு தேவதூதர் ஆவார். ஹெகலின் இயங்கியல் முரண்பாட்டை பகைமைச் சக்திகளின் சமரசம் குறித்த வழிபாடாக இவர் மாற்றினார். இந்தச் சமரசத்தில்தான் வாழ்க்கையின் சாரம் இருப்பதைக் கண்டார். இந்தச் சமரசத்தை "அன்பு" என அழகுபடுத்திக் கூறினார். வாழ்க்கையில் என்ன பொதிந்து இருக்கிறது? வாழ்வு – இறப்பு என்ற இருபெரும் எதிர்க்கோட்பாடுகளின் சமரசமே வாழ்க்கையாகும். ஆனால், இந்தச் சமரசத்தைக் கொண்டு வரும் சக்தி எது? அன்பு தான். அன்பின் மூலமாகத்தான், நாம் உயிரின் இறுதி மர்மத்தை ஊடுருவுகிறோம். இயங்கியலின் இறுதிக் குறிக்கோளைப் பார்ப்பதற்கு அன்புதான் நம்மை சாத்தியப்படுத்துகிறது. (**எமிலிலஸ்பக்ஸ்**–*பிரபஞ்சத்தின் இயங்கியலும், ஒத்திசைவும்)* மகாத்மா காந்தியோ அல்லது ரவீந்திரநாத் தாகூரோ இந்தப் பாசிசத் தத்துவத்தில் எந்தக்குறையும் காணவில்லை. ஒரு துறவியின் அல்லது ஒரு கவிஞனின் தனிப்பட்ட கருத்தல்ல இது; பிரான்சு நாட்டிலேயே புகழ்பெற்ற பல்கலைக்கழகமான கிளர்மன்ட் பல்கலைக்ழகத்தின் பிரபலமான ஆசிரியரான லஸ்பக்ஸின் கூற்று இது. குழப்பத்திற்கும் தார்மீகச் சீரழிவிற்கும் உள்ளாகியிருந்த மேற்கு அய்ரோப்பிய முதலாளிய அறிவு ஜீவிகள் மத்தியில் துயிலூட்டும் மாயாவாதமும் உணர்ச்சிகரமான அன்பு வழிபாடுமே நிலவி வந்தது.

எதிரெதிர் கோட்பாடுகளின் கூட்டிணைவே வாழ்க்கையின் சாரம் என்பதை நிலை நிறுத்தியபின் லஸ்பக்ஸ் "பகுத்தறிவிற்கும் நம்பிக்கைக்கும் இடையே சமரசத்தை ஏற்படுத்துவதே" தத்துவத்தின் பணி என ஒரு விளக்கத்தைத் தருகிறார். இந்தப்பணிதான் மேற்கு, கிழக்கு உலகங்களின் ஞானிகளையும்



படிப்பகம்

www.padippakam.com

மத குருமார்களையும், பேராசிரியர்களையும் காலங்காலமாக திணறடித்து வந்தது.இயற்கைத் தோற்றத்தின் முழு வெளிப்பாடுகளும் (வாழ்க்கை, சமூகம், வரலாறு உள்ளிட்டு அனைத்தையும்) தெய்விக விருப்பத்தின் மாயச் செயலென மிகச்சாதாரணமாக தன்னிச்சையாக இப்போது குறுக்கப்பட்டுவிட்டது. விருப்பத்தின் மாயச் செயலுக்கு ஒரு "பகுத்தறிவு" தோற்றத்தைத் தருவதற்காக மனிதப்பண்பு ஏற்றப்பட்ட ஒரு நவீன மதமாகத் தத்துவம் மாற்றப்பட்டது. லஸ்பக்ஸ் பௌதீகப் பிரபஞ்சத்தின் புறவய எதார்த்தத்தை மறுக்கிறார். அதற்கும் மேலாகச் சென்று இயற்கைப்பிறப்பு என்ற பழம்பாணி மாயாவியலின் சூத்திரத்தைக்கூட மறுத்து ஒதுக்குகிறார். அவர் அடிப்படைவாத மதக்கருத்தையே உறுதியாக ஆதரிக்கிறார். (அது பின்வருமாறு) "சூன்யத்திலிருந்தே உலகம் பிறந்தது. படைப்பு பற்றிய கருத்தோடு இணைந்த ஒரு வளர்ச்சிப் போக்குதான் உலகம்".*(அதே நூல்).*

தத்துவம் குறித்த இந்த நவீனப்பேராசிரியர் இந்தக் கருத்திலிருந்து பொருட்களின் தோற்றம் குறித்த தர்க்க முடிவுக்கு வரத் தயக்கம் காட்டவில்லை. மனிதப்பண்பு கொண்ட கடவுள் ஒன்றையும் அவர் முன்வைக்கிறார். "மூன்று தொடர்ச்சியான கட்டங்களின் கூட்டிணைவால் ஏற்பட்ட ஒரு உயிர்ப்பொருளே(Organism) பரம்பொருள் ஆகும். ஒவ்வொரு பொருளையும் – கடவுளையே கூட – இயங்கியல் பார்வையில் பார்க்கும் இந்தக் கேலிக்கூத்தான முயற்சி, ஹெகலின் பாதையைப் பின்பற்றியதல்ல. இம்முயற்சி, ஹெகலை அவமானப்படுத்துவதாகும். சத்–சி–ஆனந்தம் என்ற கருத்தாக்கத்தோடு– பரம்பொருள் குறித்த இந்துத்துவக் கருத்தோடு–இது மிகச் சரியாகப் பொருந்துகிறது. புதிய ஹெகலியத்தின் சுத்தமான ஆன்மீகவாதமானது முதலாளியத்தின் தத்துவமாகும்.அதுவும் முதலாளியத்தின் தற்போதைய கொடூரமான காலகட்டத்தில் அதன் தத்துவமாக உள்ளது.

லஸ்பக்ஸ் கருத்துப்படி "தெய்வீக வளி மண்டலமே (Divine Atmosphere) அனைத்துக்குமான தோற்றுவாய் ஆகும்." வாழ்க்கை குறித்த இந்த உணர்ச்சிகரமான ஆன்மீகக் கருத்தின் குறிப்பான பொருள் என்ன? அன்பு, நல்லது உண்மை, நீதி இன்ன பிறவற்றின் பண்புருவமாகக் கடவுள் இருப்பதால் ஏற்றத்தாழ்வுகள், குரூரங்கள், பொய்மைகள், இன்னும் இச்சமூக அமைப்பின் மிச்சமிதித் தீமைகள் அனைத்தையும் தெய்விகப்பண்புகளின் வேறுபட்ட வடிவங்களாகவே காண வேண்டும். முதலாளியச் சமூகத்தில் குறிப்பாக அதன் தற்போதைய அழுகிய காலகட்டத்தில் உச்சநிலை அடைந்துள்ள சுரண்டல் முறையானது தவிர்க்க இயலாமல் வர்க்கப்பகைமையை உருவாக்கிவிட்டது. தன் இருப்பிற்கான கடினமான போராட்டத்தின் பொருட்டு உழைக்கும் பெரும்பான்மையினர், சுரண்டும் சிறுபான்மையை எதிர்த்துக் கலகம் செய்யும் ஒரு கட்டாயத்திற்கு உள்ளாகியுள்ளனர். இது இச்சமூக அமைப்பின் நிலைநிற்பிற்கே அச்சுறுத்தலாக இருக்கிறது. இம்மாதிரியான ஒரு சூழலில், அன்புவழிபாட்டின் கொடூரமான பாதிப்பை ஒருவர் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது.



படிப்பகம்

www.padippakam.com

மேல்தட்டு வர்க்கங்களின் நலன்களைப் பாதுகாக்கவே அன்பு வழிபாடு, சமரசக்கோட்பாடு, கூட்டிணைவு போன்ற குரூரமான கருத்தியல் ஆயுதங்கள் வடிவமைக்கப்படுகின்றன. அடிமைத்தனம், இழிவு, துயரம் ஆகியவற்றிலேயே மக்களை அமைதியாக இருத்திவைக்கவும் அதன் மூலம் மாயக்கடவுளின் நல்லிணக்கம் எந்த இடையூறுக்கும் ஆளாகாமல் பார்த்துக் கொள்ளவுமே இவ்வகையான கருத்தியல்ஆயுதங்கள் உருவாக்கப்படுகின்றன.

"சுத்தமான பொருளாதாரப்பொருள்முதலியலிற்கு எதிராக"– இவர் சொற்களிலேயே சொல்வதானால் "சோசலிச,கம்யூனிச மாயாவாதத்திற்கு" எதிராக–இவர் முழக்கமிடும்போதுதான் நவ– மாயாவாதத்தின் பிரச்சாரகரான இந்த லஸ்பக்ஸ் தன் அன்புத் தத்துவத்திலிருந்து தர்க்கரீதியான முடிவுக்கு வந்துவிடுகிறார். நிலைநிறுத்தப்பட்டுள்ள அரசியல் நிறுவனங்களை குப்புறக் கவிழ்க்கும் ஒரு அச்சுறுத்தலைக் கொண்டுள்ள இந்த வெறுப்பூட்டும் பேயுடன்(கம்யூனிசம்–மொர்) வெறித்தனமாகச் சண்டையிடுகிறார். லஸ்பக்ஸ் வெளிப்படையானவர், கறாரான தர்க்கவாதி. சமரசத்தத்துவம், "இயங்கியல்" மாயாவாதம் ஆகிய தனது தத்துவத்திலிருந்து இவர் உருவாக்கிக் கொண்ட நடைமுறை ஊகங்கள் உயரிய அறிவுரைகளாக உள்ளன. உணர்வுப்பூர்வமான பிற்போக்காளர்கள் பிரச்சாரம் செய்ததுபோல இந்த வழிபாட்டைப் பிரச்சாரம் செய்யாத இந்திய அறிவுஜீவிகளின் ஆன்மிக மூளைநோயை இவரது அறிவுரைகள் குணப்படுத்தும். லஸ்பக்ஸ் கருத்துப்படி, சமரசம் என்ற தெய்வீகக் கோட்பாடு – அதாவது அன்பானது –இயற்கை அதி இயற்கை ஆகிய அதிகாரங்களின் கூட்டிணைவு என்ற முறையில்–அரசு தேவாலயம் ஆகியவற்றின் அய்க்கியத்தைக் கோருகிறது. **(எமில் லஸ்பக்ஸ்–** ***மனிதச்சமூகம்*****)** மதகுரு, மதம், அனுபூதியியல், தார்மீக ஒழுக்கம் சுருக்கமாகச் சொன்னால் ஆன்மீகவாதத்தின் அனைத்துப் பரிவாரங்களும்–இராணுவம், கடற்படை,காவல்துறை போலவே–அரசாங்கத்தின் கைகளில் வர்க்க ஆதிக்கத்திற்கு ஊழியம் புரிந்து வருகின்றன.

பாசிசத்தின் இந்த நவ–ஹெகலியத் தத்துவவாதி இத்தோடு நின்றுவிடவில்லை. இவர் கருத்துப்படி, தெய்வீகப் பிரபஞ்சத்தின் இம்மண்ணுலக வெளிப்பாட்டின் இசைலயம் (rhytham) "இயங்கியல்" ஆகும். இந்த இசைலயம் "முடியாட்சியிலிருந்து – குடியரசு வரைக்கும், பின் அதிலிருந்து பேரரசு வரைக்கும் ஒலித்து வருகிறது." *(அதே நூல்)* இங்கே, ஆன்மீகவாதமானது ஏகாதிபத்தியத்தின் தத்துவமாகத் தன்னை முன்னிறுத்திக் கொள்கிறது. தத்துவம் என்பது பொருளற்ற வக்கணை வாசகமோ அல்லது கருத்தைக் கவரும் சுலோகமோ அல்ல. அதற்கென்று சமூக–வரலாற்றுப் பின்புலமும், நடைமுறை மதிப்பும் உண்டு. ஒரே மாதிரியான வழிகளில் கருத்துக்கள் ஊற்றெடுக்கும்போது அவற்றின் நடைமுறை விளவுகளும் அவசியமாக அதுபோலத்தான் இருக்கும்.

பாசிசத்தின் முன்னறிவிப்பான ஆன்மீகவாதத்தை பிரச்சாரம் செய்யும் மேற்குலகத் தத்துவத்தின் சமகாலப் பண்டிதர்களின் இந்த முழக்கங்களைப் பரிசீலிப்பது சலிப்பூட்டுவதுடன் தேவையற்ற பணியாகும். சீரழிந்துபோன



படிப்பகம்

www.padippakam.com

மேற்குலக முதலாளியப் பண்பாட்டின் அறிவுலக வாழ்க்கையையும் அதன் அதிகாரப்பூர்வ கருத்துக்களையும் மேலோட்டமாகப் பார்க்கும் இந்தியர்கள், அந்தப் பொருள்முதல்வாத பக்தர்கள் முக்தியைத் தேடி தமது ஆன்மீக வீட்டிற்கு ஓடிவருவதைப் பார்த்து ஒரு மலினமான மனநிறைவிற்கு உள்ளாகலாம். ஆனால் இந்த ஆன்மீக மீட்புவாதம் குறித்த ஒரு விமர்சன ரீதியான புரிதலின் மூலம் ஒரு விசயத்தைத் தெரிந்து கொள்ளலாம். கடைந்தெடுத்த பிற்போக்காளர்களைத் தவிர மற்றவர்களுக்கு இது (இந்திய ஆன்மீகவாதம்) பெருமை சேர்க்கும் விசயமல்ல என்பதே அது. இம்மாதிரியான ஒரு ஆன்மீகவாதம் ஒரு பெருமைக்குரிய ஒரு விசயமல்ல. அழுகிப்போன முதலாளியப் பண்பாட்டை மீட்க வேண்டுமென்ற அடக்கமுடியாத அக்கறையோடு மேற்குலகம் ஒரு தீர்விற்காக இந்தியாவிற்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறது என்பது உண்மையானால்–நல்லது–அம்மாதிரியான ஒரு வேண்டுகோள் இந்தியக் கலாச்சாரத்திற்குப் பெருமை சேர்க்கும் ஒரு விசயமல்ல. இதற்கு மாறாக, இந்திய ஆன்மீக மேதைகள் குறித்த ஒரு அவமரியாதையான மதிப்பிழந்த பார்வையையே இது பிரதிபலிக்கிறது என்றே கருதப்பட வேண்டும். முதலாளியச் சமூகத்தை அழித்து அதன் மூலம் அனைத்துத் துறைகளிலும் மனிதகுலம் உயரிய முன்னேற்றம் அடைவதை சாத்தியப்படுத்தும் ஒரு புரட்சிகர அலையைத் தடுத்து நிறுத்தக்கூடிய ஒரே காப்பரண் என்ற அங்கீகாரம் நமக்குக் கிடைப்பது ஒரு பெருமைக்குரிய விசயமல்ல.

விடுதலைக்குக் காந்தியம் கண்டுபிடித்த பாதை புரட்சியல்ல. மாறாக, சுதந்திரம், முன்னேற்றம் ஆகிய லட்சியங்களை அடைவதற்கான வழி என பௌதீக சக்திக்குப் பதிலாக ஆன்மீகச் சக்தியை அது முன்வைக்கிறது. காந்தியத்தின் புதுமை எனச் சொல்லப்படுகிறதே அது இதில்தான் அடங்கியிருக்கிறது.

காந்தியத்தின் இந்தப் பாசாங்குத்தனத்தை விமர்சனம் செய்வது நமது தற்போதைய நோக்கமல்ல. ஆனால், தற்செயலாக இது பாசிசத் தத்துவத்துடன் கொண்டுள்ள ரத்த உறவு அம்பலப்படுத்தப்படுகிறது. இது மரபு வழி ரத்த உறவாகும். கட்டம் கட்டமாகத் தோன்றும் புரட்சிகர மாற்றத்தின் அடிப்படையில் சுதந்திரமும், முன்னேற்றமும் நிகழ வேண்டிய அவசியமில்லை என்ற கோட்பாடே மேற்கத்திய ஆளும் வர்க்கத் தத்துவத்தின் ஒரு முக்கியப் பகுதியாக இருந்து வருகிறது. முதலாளிகள் தங்களை அதிகாரத்தில் அமர்த்திக் கொண்ட நாளிலிருந்து இது இருந்து வருகிறது. பின்னாட்களில், புரட்சி இல்லாமலே சுதந்திரமும், முன்னேற்றமும் கிடைக்கும் என்ற கோட்பாட்டை உருவாக்குவதற்காக "புரட்சியின் கணிதம்" – ஹெகலியத்தின் இயங்கியல்தான் இப்பொருத்தமான பெயரை வரையறுத்துத் தந்தது – தவறாகத் திரிக்கப்பட்டது. வலியில்லாத சமூக–அரசியல் மருத்துவம் என்னும் அற்புத உலகை மகாத்மா காந்தி முன் வைப்பதற்கு மிக நீண்ட நாட்களுக்கு முன்பே, இன்று காந்தியம் முன்வைத்த அதே விசயத்தை ரசிய–சுவிஸ் தத்துவவாதியான டேவிட் கொய்ஜென் பிரச்சாரம் செய்து வந்தார்.



படிப்பகம்

www.padippakam.com

''கொய்ஜென் 'மறுமலர்ச்சி மனிதனை' கொண்டு 'புரட்சி மனிதனை' எதிர்த்து நின்றார். இவனிடம் (மறுமலர்ச்சி மனிதன்) வாழ்க்கையின் நேர்மறை அடிப்படை எதிர்மறை அடிப்படை மீது ஆதிக்கம் செலுத்தி வந்தது. சிந்தனையிலும் உணர்ச்சியிலும் அவன் புரட்சிகர உணர்ச்சி என்ற நோயிலிருந்து விடுதலை பெற்றிருந்தான். இவனுள்ளே அனைத்து சக்திகளும், செயல்முயற்சிகளும் நல்லிணக்கத்தோடு இணைந்து இன்னிசையான ஒரு பல்லவியை எழுப்புகின்றன. இவர்களைப் பொறுத்த அளவில், இவர்களின் சொந்த வாழ்க்கையே ஒழுக்கவியலாகும். நற்பண்புகளை முன்வைத்து இவர்கள் சிந்திக்க வேண்டிய அவசியமில்லை. காரணம் இவர்கள் நற்பண்புகளின் மனித உருவங்களாகவே இருக்கிறார்கள்''.(பிரெஞ்ஜ் மெகரிங்- *தத்துவத்தின் வரலாறு பற்றி)*

அழகான அரசியல் வடிவங்களில் பிற்போக்குச் சிந்தனைகளை வெளிப்படுத்துவதில் இந்தியாவிற்கு இணையான திறன் மேற்கத்தியப் பண்பாட்டிற்கும் இருக்கிறது என்பதற்கு இது ஒரு மிகச்சரியான எடுத்துக்காட்டாகும். அதி மனித வழிபாடு அங்கு வேறுவிதமாக முன்வைக்கப்பட்டுள்ளது. இன்னலுக்குள்ளாகியுள்ள முதலாளியத்தின் சூழலுக்கேற்ப நடந்து கொள்ள வேண்டிய நிலையிலிருந்த பாசிசச் சர்வாதிகாரிகள் எந்தத் தார்மீக ஒழுக்கங்களுக்கும் கட்டுப்பட வேண்டிய அவசியமில்லாமல் இருந்தார்கள். அவர்களுக்கென்று சொந்தமாக ஒரு ஒழுக்கவியல் இருந்தது. நவ–ஆன்மீகவாதத்தின் இம்மாதிரியான போதனைகளும் அதன் மாயாவாதக் கருத்துக்களும், நடைமுறையில், முதலாளிய ஆதிக்கத்தின் வன்முறை வடிவமான பாசிசத்திற்கே பயன்பட்டுவருகிறது. பாராளுமன்ற சனநாயகம் என்ற மோசடியான நிறுவனத்தின் மூலம் முதலாளிகள் ஆட்சி செலுத்த வாய்ப்பிருக்கும் காலம் வரையிலும், அவர்களின் தத்துவத்தின் ஆன்மீகச் சாரம், வெளிப்படையான அறிவியல், பகுத்தறிவு வடிவங்கள் மூலம் மறைக்கப்பட்டிருக்கும். அவர்களின் அதிகாரம் அப்படியே ஏற்றுக் கொண்டிருக்கும் காலம் வரையிலும், அவர்கள் நிலக்கிழமை முடியாட்சியிலிருந்து மரபு வழியாகப் பெற்ற தெய்வீக ஆணை என்ற கையிருப்பைப் பயன்படுத்த வேண்டிய அவசியமிருக்காது. இன்று முதலாளிய அதிகாரத்திற்கு சவால் விடும் புரட்சிகரச் சக்திகளின் திரட்சி , முதலாளியத்தின் உள் முரண்பாடுகளால் பாராளுமன்ற சனநாயகம் நொறுங்கிப்போனது ஆகிய காரணங்களின் நெருக்கடிகளால் முதலாளிகள் தொடர்ச்சியாக ஒவ்வொரு நாடாக பாராளுமன்றம் என்ற முகமூடியை வீசிவிட்டு வெளிப்படையாகவே சர்வாதிகாரத்தைக் கையிலெடுத்துக் கொண்டனர். பாசிச இயக்கம் தனது சர்வாதிகாரத்திற்கான பாதையை தேர்ந்தெடுத்துக் கொண்டது. பாசிச அரசுதான் அதன் கருவி. அதி தீவிர ஆன்மீகவாதம் நவ–அனுபூதியியலில், பெர்க்சனின் ''பகுத்தறிவு'' மாயாவாதம், பயன்பாட்டுவாதம், நவ – ஹெகலியத் தத்துவக்குழு ஆகிய அனைத்தும் கொடூரமான சர்வாதிகாரத்திற்கு கருத்தியல் அடித்தளம் இடுகின்றன. அதை நியாயப்படுத்துகின்றன.

❖



படிப்பகம்

www.padippakam.com

# அதி மனித வழிபாடு

பாசிசத் தத்துவத்தின் மிக முனைப்பான பண்புக்கூறு அதி மனித வழிபாடாகும். "உபநிடதத் தத்துவங்களில் ஆறுதல் பெற்ற" ஷோபன்ஹேயரின் சீடர் நீட்சே தான் இந்த வழிபாட்டின் தந்தையாவார். ஆகவே, கொச்சைப் பொருள்முதலியலின் மொத்த வெளிப்பாட்டிற்கும், வைதீக இந்தியத்தேசிய ஆன்மீகக் கருத்துக்களுக்கும் இடையே ஒரு நெருங்கிய இரத்த உறவு இருக்கிறது. மீட்புவாதக் கருத்துக்களால் ஊக்கம் பெற்ற தேசியமே பாசிசம் எனப்படும். மீட்புவாதம் எங்கே இட்டுச் செல்லும் என்பதை பாசிசத்தின் நடைமுறை காட்டுகிறது. சமூகப் பிற்போக்கின் ஆன்மாவே மீட்புவாதம் என்பதை அதன் கருத்தியல் பின்னணி வெளிப்படுத்துகிறது. புரட்சியை முன்னெடுக்கும் முற்போக்குக் கொள்கைகளை எதிர்ப்பதற்கானக் கருத்தியல் கருவியே பாசிசம் ஆகும்.

பாசிசத்தின் பாட்டனாரான ஷோபன்ஹேயர் ஒரு அவநம்பிக்கைவாதி ஆவார். "தெய்வீகத் தத்துவங்களான" உபநிடதங்களின் ஆர்வலரான இவர் ஹெகலியத் தத்துவத்தின் புரட்சிகரச் சாரத்திற்கு எதிராக ஒரு நீண்ட நெடிய போராட்டத்தை முன்னெடுத்தவர் ஆவார். இருப்பினும் தத்துவார்த்த நோக்கில் ஹெகலின் தத்துவத்தை எதிர்ப்பது இவரின் அறிவாற்றலுக்குச் சாத்தியமில்லாத ஒரு விசயமாகும். ஆகவே, இந்த பிற்போக்காளரின் ஆண்மையற்ற சீற்றம் அவதூறாக வெளிப்பட்டது. 1848 புரட்சியில் தோற்ற ஜெர்மன் முதலாளிகளின் கருத்தியலே இவர் தத்துவமாகும். தோல்வி அவநம்பிக்கையை உருவாக்கியது. இந்த அவநம்பிக்கை குரூரமான வாழ்க்கை எதார்த்தத்திலிருந்து தப்பிச் செல்லும் ஆர்வமாக வெளிப்பட்டது.

ஷோபன் ஹேயர் கருத்துப்படி இயற்கையின் மாற்ற முடியாத, நிலையான விதிகள் மனிதனுக்கு இவ்வுலகில் மோசமான வாழ்க்கையையே விதித்திருக்கின்றன. வாழ்க்கையின் சகிக்கமுடியாச் சூழ்நிலைகளை மாற்ற முடியாது என்பதால் இச்சூழ்நிலைகளிலிருந்து தப்பி ஓடிவிட வேண்டும் என்ற விருப்பத்தையும் தடுக்க முடியாது. தோற்றுப்போன, மனத்தளர்ச்சி அடைந்த ஜெர்மன் முதலாளிகளின் மனித உருவகமான ஷோபன் ஹேயரின் வேதனை கொண்ட ஆன்மாவானது இயல்பிலேயே உபநிடதத் தத்துவங்களில் ஆறுதல்பெற்றது. இந்த உபநிடதத் தத்துவங்கள் தான் இந்திய மக்கள் தாங்கள் எதிர் கொண்ட வாழ்க்கை எதார்த்தங்களைத் தீரத்தோடு மாற்றி அமைத்துக்கொள்வதை காலங்காலமாக தடுத்து வந்திருக்கின்றன. ஷோபன் ஹேயரின் தத்துவச்சாரம் மனித விருப்பத்தை இழிவுபடுத்துகிறது. மனித விருப்பம் "முழுக்கவே கேடானது இழிவானது" என இவர் அறிவிக்கிறார். இத்தத்துவம் முற்போக்குக் கொள்கைகள் அனைத்திற்கும் எதிரான



படிப்பகம்

www.padippakam.com

அணுகுமுறையையே கொண்டிருக்கிறது. முற்போக்கு கொள்கைகளின் புறவயச் சக்திகள் தங்கள் அகவெளிப்பாடுகளை மனித விருப்பத்தின் மூலமாக வெளிப்படுத்துவதால் இந்தத் தத்துவத்தின் விளைவுகள் முற்போக்கு கொள்கைகள் அனைத்திற்கும் எதிரான மனப்போக்கையே கொண்டிருந்தன. உண்மையான அறிவின் தோற்றுவாயான சுயதரிசனத்திற்கு ஆசைகள் தடையாக இருக்கின்றன எனச் சொல்லும் இந்துத் தத்துவத்தின் அதே தளத்தில் தான் ஷோபன்ஹேயரின் இந்தக் கோட்பாடும் நின்று கொண்டிருந்தது. இவர் தத்துவம் முழுக்க முழுக்க முரண்பாடுகளைக் கொண்டிருந்தது. ஆகவேதான் தத்துவம் குறித்த வரலாற்று விமர்சகர் ஒருவர் பின்வரும் சீற்றமிக்க மதிப்பீட்டை முன்வைக்கிறார். "இந்த உலகில் நல்லதே இல்லை என்றால் இவ்வுலகில் ஒரு பகுதியான ஒரு தத்துவவாதியின் சிந்தனைகளும் நல்லதாக இருக்காது". (பிரான்ஸ் மெகரிங்– *தத்துவத்தின் வரலாறு பற்றி*). ஆனால் ஒரு தத்துவவாதி தன் காலத்தின் தேவைக்கு ஏற்பவும் தான் வாழும் வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்பவுமே சிந்திக்கிறார். இவர் ஒரு பிற்போக்குத் தத்துவவாதி. ஆகவே, இதைத்தவிர வேறு வழியில் இவரால் சிந்திக்க முடியாது. இவரது தத்துவம் முழுக்க முழுக்கப் பிற்போக்கானது. யூத – எதிர்ப்பு (anti-semitism) என்ற வெறுப்புக் கொள்கையிலும், பெண்கள் விசயத்தில் பாசிசவாதிதகள் கொண்டிருந்த மத்தியகால அணுகுமுறையிலும் இவரின் பங்களிப்பைக் கண்டு கொள்ள முடியும்.

நீட்சே தம் குருவின் கொள்கைகளை மேலே வளர்த்திச் சென்றார். மனித விருப்பம் என்பது இயல்பிலேயே "கேடானதாகவும் இழிவானதாகவும்" இருப்பதற்கு நாம் வெட்கப்படத் தேவையில்லை என நீட்சே முழங்குகிறார். மனித விருப்பம் இழிவானது, கேடானது என்பதால் அது வெளிப்படையாக அவ்வாறே இருந்தவிட்டுப் போகட்டும்! அது பற்றிப் பெருமை கொள்வோமாக! வாழ்க்கையை ஒரு குற்றமென ஷோபன்ஹேயர் அழைத்தார். "ஆதிக்க உணர்வு, கடுமை, குரூரம் ஆகிய வழிமுறைகள் மூலம் பலவீனமானவர்களையும், அந்நியர்களையும் ஒடுக்குவதற்கும் சுரண்டுவதற்கும் ஆன ஆசையே வாழ்க்கை" என நீட்சே வரையறுத்தார். இங்கு தான் பாசிசத்தின் அடிப்படை அம்சங்களே இருக்கின்றன. தன் குருவின் அவநம்பிக்கை வாதத்திலிருந்து இம்மாதிரியான ஒரு கோபம் கொண்ட நம்பிக்கைவாதியாக மாற நீட்சேவுக்கு எப்படி சாத்தியப்பட்டது? ஜெர்மன் நாட்டின் சமூக அரசியல் வாழ்க்கையில் – அதன் முதலாளிகளின் நிலையில் – ஏற்பட்ட மாறுதலின் விளைவே இந்தப் பிற்போக்குத் தத்துவத்தின் மறுவடிவாக்கமாகும்.

ஷோபன்ஹேயர் தன் அவநம்பிக்கை வாதத்தைப் பிரச்சாரம் செய்ததற்குப் பின்னால், ஜெர்மனியில் ஏற்பட்டிருந்த மாற்றங்கள் அம்முதலாளிகளை வலுவடையச்செய்திருந்தது. அம்முதலாளிகள் தங்கள் உணர்ச்சிகளை வேறொரு மொழியில் வெளிப்படுத்தக் கற்றுக்கொண்டார்கள். அவநம்பிக்கைவாதத்திற்கு பதிலாக வெறுப்புவாதம் (Cynicism)வந்துவிட்டது. அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் ஜெர்மன் முதலாளிகள் தோற்றுப்போயிருந்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

1848 புரட்சி தோல்வியடைந்தது. காரணம் முதலாளிகளின் துரோகமாகும். இருப்பினும் அந்தப்புரட்சி ஒரு வரலாற்றுத் தேவையாக இருந்தது. அது நடந்தே தீர வேண்டும்.புரட்சியைக் கொண்டுவர முதலாளிகள் தவறிவிட்டதால் அது மேலிருந்து திணிக்கப்பட்டது. கோழைத்தனமான ஒழுக்கங்கெட்ட முதலாளிகளை பிஸ்மார்க் அதிகாரத்திலிருந்து உதைத்துத் தள்ளினார் பிரஷ்ய அரச உயர்குடிகளோடு (Prussian junkerdom) அதிகாரத்தைப் பங்கிட்டுக் கொள்ளும் கீழான நிலைக்கு முதலாளிகளைப் பின்தள்ளினார். முதலாளிகளின் சமூகத் தகுதியில் ஏற்பட்ட இந்த மாற்றம் அவர்கள் தத்துவத்திலும் தன் முத்திரையைப் பதித்திருந்தது.

முதலாளிய வளர்ச்சிக்கானப் பாதையில் இனி தடைகள் ஏதுமில்லை. அவநம்பிக்கை வாதத்திற்கான காரணம் மறைந்துவிட்டது. ஆனால், வெற்றியைத் தரும் சுய–நம்பிக்கையின் விளைபொருளான ஆரோக்கியமான நம்பிக்கை வாதத்தால் இந்த அவநம்பிக்கை வாதம் மாற்றப்படவில்லை. ஜெர்மன் முதலாளிகளின் வாழ்க்கை இன்னமும் கூட சலுகை பெற்ற இராணுவ வர்க்கத்தாலும் உயர்குடி நிலக்கிழார்களாலும் ஆதிக்கம் செலுத்தப்பட்டு வந்தது. ஆகவே, அம்முதலாளிகளின் நிலை இன்னும் கூட, ''இழிவானதும், கேடானதுமான'' இருந்தது. ஆகவே, ஜெர்மன் முதலாளிகள் மோசமான பேரத்திலிருந்து முடிந்த அளவு நன்மையைப் பெறத் தீர்மானித்தனர். இம்மாதிரிதான் இவர்களின் வெறுப்புக்கோட்பாடு நீட்சேயின் தத்துவத்தின் மூலம் வெளிப்பட்டது.

வாழ்க்கை என்பது நிலையற்ற ஒன்று. ஆகவே, நாம் அதை முடிந்த வரை அனுபவித்துக் கொள்ள வேண்டும். வாழ்க்கை குறித்த வெறுப்புக் கோட்பாட்டின் இந்தப் பார்வையானது வாழ்க்கையை ஒரு குடைராட்டினமாகவும் அதில் ஒவ்வொரு வரும் தங்கள் சுயநலத்திற்காகவே இருப்பதாகவும் சொல்கிறது. சுயநலமே வாழ்க்கையின் லட்சியம் என அறிவிக்கிறது. இந்தப்பார்வைப்படி நாம் இந்துத்துவ அளவுகோலைப் பயன்படுத்தினால் அது ஒரு ஆன்மீகத்திரிபுநிலைக்கு இட்டுச் செல்லும். வாழ்க்கை என்னை ஆதிக்கம் செலுத்தவில்லை. நான் தான் வாழ்க்கையின் எஜமானன் ஆவேன். நவீன இந்திய அறிவாளிகளின் ஆன்மீக வழிகாட்டியான விவேகானந்தரின் பின்வரும் ஆரவாரப்பேச்சு நீட்சேயின் கருத்துக்களை எதிரொலிக்கிறது. ''நான் ஒயினைக் குடிக்கும்போது ஒயின் என்னைக் குடிக்காமல் பார்த்துக் கொள்கிறேன்''. ஒரு அய்ரோப்பியப் பிற்போக்குவாதியிடம் இருந்து விவேகானந்தர் இதைக் கற்றிருக்க முடியாது. காரணம் இவரின் புனித குருதான் இவருக்குக் கற்றுத்தந்திருக்கிறார். இவரின் குருவான இராமகிருஷ்ணர் தன் கனிவான குரலில் பின்வருமாறு போதிக்கிறார். ''பன்றி இறைச்சியைச் சாப்பிடும் ஒருவன் தன் மனதில் கடவுளைப் பற்றிச் சிந்திக்க முடியும். அதே சமயம் துறவி வாழ்க்கை வாழும் ஒருவர் காமினி கஞ்சனின் அடிமையாகவும் இருக்கக்கூடும்''.இதையே வேறு விதமாகவும் சொல்லலாம். ஆன்மீக முன்முடிவுகளோடு அல்லது போலித்தனத்தோடு இருக்கும் ஒருவர் கொச்சைப் பொருள்முதல் வாழ்க்கையையே வாழ முடியும். இருபதாம் நூற்றாண்டின் அவதாரமான இவரது அறிவுரைகளுக்கும், நீட்சேயின் வெறுப்புக் கோட்பாடுகளுக்கும்



படிப்பகம்

www.padippakam.com

இடையே வேறுபாடு ஏதுமில்லை.உண்மையில் சொல்லப்போனால், விவேகானந்தரால் தொகுக்கப்பட்ட ராமகிருஷ்ணரின் அருளுரைகள் முழுக்கவும் இந்தப்போக்கையே பிரதிபலிக்கிறது. அது முழுக்கவும் இந்துத் தத்துவத்தின் ஆர்வ எழுச்சியையே பிரதிபலிக்கிறது. கலியுகத்தில் சுத்த ஆன்மீகவாதத்தின் உன்னத லட்சியங்களை அடைய முடியாது. இன்று மக்கள் ஒரு சம்சாரியைப்போல வாழ வேண்டும். இவ்வாழ்க்கையை பற்றற்றும், பக்தியோடும், வழிபாட்டு மனநிலையிலும் பின்பற்றும் வரை அதற்கென ஒரு நியாயப்பாடு இருக்கும். ஆனால், நடைமுறையில் ஆன்மீக லட்சியங்கள் கைவிடப்பட்டே வந்திருக்கின்றன. இந்த இலட்சியங்கள் ஒரு எதார்த்தமாக என்றைக்குமே இருக்கவில்லை. இறுதியாக, காலத்தால் மதிப்பிழந்த மாயை அகற்றப்படவில்லை. மாறாக, போலித்தனமான ஆரவாரமே இம்மாயையின் இடத்தில் அமர்ந்திருக்கிறது. கொச்சைப் பொருள்முதலியலாளனது கடவுளின் ஆசியைப் பெற்றுள்ளது. ஆனால், பொருள்முதல்வாதத் தத்துவமோ இன்னமும் கூட விலக்கி வைக்கப்பட்டே இருக்கிறது. மதத்தின் சமூகப்பயன்பாடு முடிந்து நீண்ட காலம் சென்ற பின்பும், அது (மதம்) நீடித்து வருவதால் வாழ்க்கை குறித்த அதன் பார்வையில் வஞ்சனையும், நாணயமின்மையும் கலந்திருக்க வாய்ப்புண்டு.

நீட்சேயின் முதலாளியத் தத்துவம் இந்தியப் பாதையையே பின்பற்றியது. வாழ்க்கை ஒரு குற்றம் என்ற ஆன்மீகப் பார்வையை நீங்கள் கொண்டிருக்கும் வரையிலும், மனித விருப்பம் கேடானது, இழிவானது என்ற கருத்தை நீங்கள் கொண்டிருக்கும் வரையிலும் , உங்கள் ஆன்மாவை மாசுபடுத்தாமலேயே நீங்கள் மனம் போனபடி இந்த (வாழ்க்கை) குற்றத்தில் ஈடுபடலாம். உங்கள் விருப்பத்திற்கு நீங்கள் எசமானனாக இருக்கும் காலம் வரை அதன் கேடும் இழிவும் உங்கள் சாரத்தை கரைப்படுத்தாது. வாழ்க்கையின் ஆதிக்க உணர்வுகளுக்கும், எளியோரை ஒடுக்கவும், துன்புறுத்தவும் விழையும் உங்கள் விருப்பங்களுக்கும் எந்தத்தடையும் விதிக்க வேண்டிய தேவையில்லை. உங்கள் விருப்பப்படி எதுவும் செய்யலாம். தார்மீக நோக்கில் தூய்மையான மனசாட்சியோடு இப்பணிகள் அனைத்தையும் நீங்கள் செய்யலாம். காரணம், இயல்பிலேயே இந்த உலகம் மிக மோசமானது என்பதால் உங்களால் அதற்குமேல் மோசமானது எதையும் செய்துவிட முடியாது. ஷோபன் ஹேயரின் உபநிடதத் தத்துவங்களில் இருந்து தர்க்க ரீதியாக மேற்சொன்ன முடிவுகளுக்கு நீட்சே வந்து சேர்ந்தார். இதுவரை வாழ்க்கையை மறுத்து வந்த விருப்பத்திலிருந்து இப்பொழுது ஆதிக்கம் செலுத்தும் விருப்பம் உருப்பெற்றது. வாழ்க்கையின் துயரங்களின் மீதும், வேதனைகளின் மீதும் கொண்டிருந்த அனுதாபம், இப்பொழுது அவற்றின் மீதான வெறுப்பாக மாற்றம் பெற்றது. இவ்வாறாக, அதி மனிதவழிபாடு வளர்ச்சி பெற்றது. வளர்ந்து வந்த தொழில் வள நாடுகள் இந்த உன்னத மனிதனை ஏற்றுக் கொண்டன.

அதி மனிதர்கள் "சுதந்திரமான ஆன்மாக்கள்" ஆவர். "நல்ல அய்ரோப்பியர்கள்" ஆவர். உலகைக் காப்பாற்றும் டியூட்டானிக் (Teutonic) மரபினரும் இவர்களே. ஆன்மீக ஆரியக் கலாச்சாரத்தைப் பாதுகாக்கும் பெருமைமிகு காவலர்களும் இவர்கள்தான்.



படிப்பகம்

www.padippakam.com

"வெள்ளை மனிதர்களின் சுமை"* என்ற பிரிட்டனின் பண்பாடு கற்றுத் தரும் லட்சியத்தில் இவர்களும் பங்கு கொண்டனர். நீட்சே தத்துவத்தின் உடனடி அரசியல் வெளிப்பாடு சூரிய கிரகத்தில் தனக்கொரு இடம் வேண்டும்– அதாவது காலனிய விரிவாக்கத்தில் ஜெர்மன் ஏகாதிபத்தியத்துக்கும் ஒரு பங்கு வேண்டும் –என்பதே. ஆதிக்கம், கொள்ளை என்ற தத்துவத்தின் முழுமையான வெளிப்பாடுதான் பாசிசம் என்பது. பாசிசத் தத்துவத்தின் அடிப்படைக் கோட்பாடான நீட்சேயின் அதி மனித வழிபாடானது, "பெரு முதலாளிகளை வெளிப்படையாகப் பெருமைப்படுத்தும் தத்துவம் ஆகும். அந்தக் கண்ணோட்டத்திலிருந்துதான் அது பொதுமக்களுக்கு அறைகூவல் விடுகிறது", என மிகச் சரியாக இதன் பண்பு வரையறை செய்யப்பட்டுள்ளது. (மெகரிங்– *தத்துவத்தின் வரலாறு பற்றி*).

மேன்மையான உபநிடதத் தத்துவத்திலிருந்து ஜெர்மன் ஏகாதிபத்தியத்திற்கான ஒரு கருத்தியலும் அதைத் தொடர்ந்து பாசிசத்திற்கான ஒரு கருத்தியலும் கட்டமைக்கப்பட்டது இப்படித்தான். இவ்வாறு சொல்வது கொச்சைப்படுத்துவதாகவோ அல்லது அவதூறு பொழிவதாகவோ ஆகிவிடாது. எந்த ஒரு சட்டத்திற்கும் கட்டுப்படாமல் இவ்வுலகு சாராத ஒரு பரம்பொருள் இருக்கிறது என்ற ஊகத்தின் தர்க்க ரீதியான விளைவே, பூமியில் நடைபெறும் கட்டுப்பாடற்ற அதிகாரத்தை நியாயப்படுத்துவதில் முடிவடைகிறது. இந்த ஊகம்தான் இந்தியத் தத்துவத்தின் அடிப்படையாகும். வர்க்க உறவுகளில் மறு சீரமைப்பு ஏற்பட்டு அதன் மூலம் அடக்குமுறைக் கருவிகள் முதலாளிகளின் கைகளுக்குக் கிடைத்தவுடன் மேற்சொன்ன இந்தியத் தத்துவமானது கொச்சைப் பொருள்முதலின் கருத்தியலாக மாற்றம் பெற்றது. தன் பழம் வடிவத்தையும், மொழியையும் துறந்த ஆன்மீகப் பண்பாடு, புதிய சமூகப் பொருளாதாரச் சூழலுக்கேற்பத் தன்னைப் பொருத்திக் கொண்டதை இங்கே நீங்கள் கண்டு கொள்ளலாம். உண்மையில் சொல்லப்போனால் நல்லாசி பெற்ற நமது ஆன்மீகத்தத்துவமானது மேல்தட்டு வர்க்கங்களுக்கு ஊழியம் புரிந்ததைத்தவிர வேறொன்றும் செய்யவில்லை. ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஏற்படும் ஆளும்வர்க்கச் சமூக அணிசேர்க்கைக்கு ஏற்ப இந்தத் தத்துவம் தன் வடிவத்தையும் மொழியையும் மாற்றிக் கொள்ளும். இன்றைக்கும்கூட சமூக மனக்குறை கொண்ட சக்திகளையும், அரசியல் கலகச்சக்திகளையும் தடுக்கவே "சத்தியம், அகிம்சை" போன்ற தெய்வீகக் கோட்பாடுகள் ஊழியம் புரிந்து வருகின்றன. ஏகாதிபத்தியத்தின் அருளாசியின் கீழ், ஆன்மீகச் சிந்தனை கொண்ட நம் தேசியவாதிகளுக்கு கிடைத்துள்ள மிகச் சிறிய அதிகாரச்சுவையேகூட அவர்களைப் பாசிச நடைமுறைகளை நோக்கித் தள்ளிச் செல்கிறது. பாசிசக் கருத்தியலின் முன்னோடிகளை ஊக்கப்படுத்திய ஒரு தத்துவத்தின் தாயகத்தில் இதைத்தானே எதிர்பார்க்க முடியும்.

---

* வெள்ளை மனிதர்களின் சுமை :– வெள்ளையர்கள் வேற்று நாட்டின் மீதான தங்கள் சுரண்டலையும் ஒடுக்குமுறையையும் நியாயப்படுத்த, அம்மக்களுக்கு பண்பாட்டையும், நாகரிகத்தையும் கற்றுத்தர வேண்டிய பணி– அதாவது சுமை – தங்களுக்கு இருக்கிறது எனக் கூறிக்கொண்டனர். (மொர்)



படிப்பகம்

www.padippakam.com

நீட்சேயின் "சுதந்திர – ஆன்மாக்கள்" கடவுளின் வாரிசுகளான "பூதேவர்கள்" (பார்ப்பனர்கள்) வசம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதனால்தான் இயல்பிலேயே அவர்கள் "ஆட்சியாளர்களாகவும் அடக்குமுறையாளர்களாகவும்" இருந்தனர். ஏதுமற்ற நிலையில் வைக்கப்பட்டதும் அநியாயமான முறையில் கையாளப்பட்டதுமான, "மனித மந்தைகளை ஆட்சி செலுத்தவும், அடிமைப்படுத்தவும்" இவர்கள் இயல்பாகவே உரிமை கொண்டவர்களாக இருக்கிறார்கள். மனிதஉறவுகள் குறித்த இந்தக் கொதிப்பூட்டும் கருத்தானது, மனிதனின் தவிர்க்க முடியாத இழிநிலையையும், கேடு கெட்ட நிலையையும் பற்றிய ஷோபன் ஹேயர் கோட்பாட்டின் தர்க்க ரீதியான விளைவாகும். இந்தக் கருத்துதான் நீட்சேயை ஒரு வெறி பிடித்த சோசலிச – விரோதியாக மாற்றிவிட்டது. மார்க்சியத்திற்கு எதிராக பாசிசம் தொடுத்த போரில் அதன் உடனடிக் கருத்தியல் தூதராக நீட்சே வரலாற்றில் இவ்வாறுதான் இடம் பெற்றார்.

வாழ்க்கையின் அனைத்துத் துயரங்களையும் வேதனைகளையும் மகிழ்ச்சியோடு சகித்துக் கொள்ள வேண்டும் என்பது இந்தோ– ஆரிய ஆன்மீகக் கருத்தியலின் மிக முக்கியமான ஒரு கோட்பாடாகும். நீட்சே இந்தக் கோட்பாட்டில் உறுதியான, நம்பிக்கை கொண்டவர். ஆகவேதான், வேதனைகளை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ள வேண்டுமெனத் தொழிலாளர்களுக்குப் போதிப்பதன் மூலம் அவர்களின் சூழ்நிலைகளில் முன்னேற்றத்தைக் கொண்டுவரலாம் என அறிவித்தார். நீட்சேயின் சோசலிச– எதிர்ப்புப் பிரச்சாரத்தில் காந்தியத்தின் நிழல் தெரிவதை ஒருவர் எளிதாகப் பார்க்க முடியும். காந்தியம் ஒரு மத – இனக் கோட்பாடாக – பண்டைய இந்தியப் பண்பாட்டின் சாரமாகக் – கருதப்படுமானால், இக்கோட்பாட்டின் நவீன அரசியல் வெளிப்பாட்டை உலகம் ஏற்கனவே அனுபவித்து விட்டது எனச் சொல்லலாம். ஒரு தத்துவார்த்த மரபு என்ற முறையில் காந்தியம் இட்லரியத்தை நோக்கித்தான் செல்லும். இந்தியத் தேசியவாதிகள் இக்கருத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்வார்களாக! ஜெர்மனியைக் காட்டிலும், இந்தியாவை வரலாற்றின் தர்க்கம் அதிகமாகவே கட்டுப்படுத்தும்.

செல்வந்தர்களால் சகித்துக் கொள்ள முடியாத விசயங்களை ஏழைகளால் சகித்துக் கொள்ள முடியும். ஆகவேதான் வேதனைகளைச் சகித்துக் கொள்ளும் பண்புகளைப் பின்பற்றுங்கள் எனத் தொழிலாளர்களுக்கு மிக எளிதாகக் கற்றுக் கொடுக்க முடியும் என பாசிசத்தின் ஆன்மீகத் தந்தை உறுதியாகக் கூறுகிறார். காந்தியத்தின் கருத்துப்படி, முதலாளிகளும், தொழிலாளிகளும் கடவுளின் குழந்தைகளாவர். ஆகவே, பணக்காரச் சகோதரர்களைப் பார்த்து ஏழைகள் பொறாமைப்படக்கூடாது. தியாகத்தையும்,வேதனைகளையும் பெரும் பண்புகளெனக் காந்தியம் பெருமைப்படுத்துகிறது. இந்தக் கோட்பாட்டை ஒப்புக்கொண்டால், இதை நடைமுறைப்படுத்த எடுக்கப்படும் கட்டாய நடைமுறைகள் அனைத்தையும் தார்மீக நோக்கிலும், தர்க்க நோக்கிலும் நியாயமானவை எனக் கருத வேண்டி வரும். ஒரு லட்சியத்தை அடைய ஒருவர் எதையும் தியாகம் செய்ய அணியமாக இல்லையென்றால், அவர் லட்சியவாதியாக இருந்து என்ன பயன்?



படிப்பகம்

www.padippakam.com

ஏகாதிபத்திய அரசாங்க நிர்வாகத்தின் மீது நம்பிக்கை கொண்டிருந்த காந்தியவாதிகள்,தேவைப்பட்டால் மேற்சொல்லியுள்ள நற்பண்புகளை நடைமுறைப்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் தாங்கள் எடுக்கத் தயார் என்பதைக் காட்டினார்கள். அவர்களின் வக்கரித்த தத்துவப்படி, இப்பண்புகள் மூலம் இந்தியர்களை நல்ல மனிதர்களாக அவர்கள் உருவாக்குகிறார்களாம்.

முழுமையான வர்க்க ஆதிக்கத்தை நியாயப்படுத்தும் நீட்சேயின் தத்துவம் இந்துத்தத்துவத்தின் கர்மக்கோட்பாட்டுடன் முனைப்பான ஒற்றுமையைக் கொண்டிருக்கிறது. உண்மையில் சொல்லப்போனால், இந்தக் கர்மக்கோட்பாடு கடவுளே முன்மொழிந்த கோட்பாடாகும். "தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ப என்னால் உருவாக்கப்பட்டதுதான் இந்த நான்கு சாதிகளாகும்" (*கீதை*). சாதிமுறையானது ஒவ்வொரு மக்கள் பிரிவையும் சமூகத்தில் வெவ்வேறு இடத்தில் அமர்த்தியுள்ளது. இந்தச் சாதிய அமைப்பானது கடவுளின் கட்டளையானதால், இவ்வமைப்பின் அடித்தட்டில் வைக்கப்பட்டுள்ள மக்கள் தங்கள் நிலைமையோடு என்றென்றும் இணங்கிப் போகவேண்டும். இவ்வாறாகத் தெய்வசித்தம் என்ற அதிகாரத்தைக் கொண்டு சமூக ஏற்றத்தாழ்வுகள் தொடரப்பட்டு வருகின்றன. ஒரு அடிமை எக்காலத்திலும் அடிமையாகவே இருக்க வேண்டும்; ஆளும் வர்க்கம் தன் அதிகாரத்தையும் சிறப்புச் சலுகைகளையும் கடவுளின் நன்கொடைகள் என அனுபவித்து வருகிறது. இதை யாராவது பறிக்கத் துணிந்தால் அது பாவமாகும். பூமியிலுள்ள அனைத்து அதிகாரங்களும், தன் அதிகாரத்தின் வெளிப்பாடே எனக் கடவுள் கீதையில் சொல்லியுள்ளார். கடவுளின் அதிகாரம் என்ற பெயரால் பார்ப்பனர்கள் புரோகிதச் சலுகைகளை அனுபவித்து வந்தனர். அது மட்டுமா! கடவுளின் அவதாரங்கள் என்ற பெயரால் அரசர்களும் பேரரசர்களும் ஆட்சி செலுத்தி வந்தனர். அது மட்டுமா! இன்றைக்கும் கூட புல்லுருவி நிலக்கிழார்கள் எந்த மக்களைச் சுரண்டுகிறார்களோ அந்த மக்களுக்குத் தாங்களே "இயல்பான தலைவர்கள்" என உரிமை கோரி வருகின்றனர். ஆங்கிலேயரின் நேரடி ஆட்சிக்குட்பட்ட மாநிலங்களில் பிரதிநிதித்துவ அரசாங்கம் தேவை என ஆர்ப்பரித்து வந்த வைதீக தேசியவாதிகள் மன்னராட்சிப்பகுதிகளில் சமஸ்தான மன்னர்களின் சர்வாதிகாரச் செயல்களுக்கு மறைமுக ஆதரவு தந்து வந்தனர்.

"மனித மந்தைகள்" அடிமைகளாக, ஆள்வதற்குத் தகுதியற்றவர்களாகவே இருக்கும்படி விதிக்கப்பட்டுள்ளனர் என நீட்சே முடிவு செய்தபின் அவர்கள் மீது கருணை கொள்ள அவரால் முடிந்திருக்காது. அவரது வியப்பு பின்வருமாறு : "அமைப்புகளை மாற்றுவதன் மூலம் இவ்வுலகில் மகிழ்ச்சியை அதிகரிப்பது என்பது என்றுமே முடியாது. மனச்சோர்வும் பலவீனமும் முணுமுணுப்பும்கொண்ட மனப்பாங்கு மறைவதன் மூலமே மகிழ்ச்சியைப் பெற முடியும்". இந்தியாவின் ஆன்மீகக் குரலையே இந்தப் பாசிசத்தத்துவம் மீண்டும் ஒரு முறை எதிரொலிக்கிறது. புறப்பொருட்களால் மனிதனுக்கு உண்மையான மகிழ்ச்சியைத் தரமுடியாது. மகிழ்ச்சி என்பது ஒரு மனநிலை.அது புறஉலகத்திலிருந்து சுதந்திரமாக விலகி நிற்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

இது முற்றிலும் மனஉணர்வுகளோடு தொடர்புடைய ஒரு பிரச்சினையாகும். மகிழ்ச்சியாக இருப்பதாக ஒருவர் எளிதாகக் கற்பனை செய்து கொள்வதன் மூலமே மகிழ்ச்சியாக இருக்க முடியும்.

இந்திய மக்களின் கவனம் அவர்கள் அனுபவித்து வந்த சமூக ஏற்றத்தாழ்வுகளின் மீதும், கொடுமைகளின் மீதும் திரும்பும்போதெல்லாம் ஆன்மீகப் பண்பாடு அவர்களைப் பார்த்து ஒரே கையிலுள்ள அய்ந்து விரல்கள் எவ்வளவு வேறுபாடுடையதாய் இருக்கின்றன என்று சுட்டிக்காட்டியது. திறமைக்கேற்ற தகுதிதான் தங்களுக்குத் தரப்பட்டிருக்கிறது என்பதை அவர்களே ஏற்றுக் கொள்ளுமளவிற்கு அவர்களுக்குக் கற்பித்துத் தரப்பட்டுள்ளது. தாங்கள் அனுபவித்து வரும் இன்னல்களோடு இணங்கிப்போக வேண்டும் என கற்றுத்தரப் பட்டது மட்டுமல்ல, நிலைநிறுத்தப்பட்டுள்ள இந்தச் சமூக அமைப்பை தெய்வச்செயலின் வெளிப்பாடு எனக் கருதிக் கொள்ளுமளவிற்கு அவர்களுக்குக் கற்றுத்தரப்பட்டுள்ளது. கடினமான, கரடுமுரடான ஒரு பணியைச் செய்ய வேண்டுமானால், இதற்கென சில நபர்களைக் கீழான நிலையில், இப்பணியைச் செய்யப் பொருத்தமான சூழலில் வைத்திருக்க வேண்டும்' என நீட்சே வாதிட்டார். இந்தியாவின் தனிச்சிறப்பான நுண்ணறிவால் உருவாக்கப்பட்ட சாதிய அமைப்பு முழுவதும் இந்தக் கோட்பாட்டின் மீதே அடித்தளம் கொண்டிருந்தது. ''அநாகரீக உலகம் , நாகரீக உலகத்திற்கு நிலையாக ஊழியத்தைச் செய்து கொண்டிருக்க வேண்டுமானால் வேண்டுமானால் ஆசிய, ஆப்பிரிக்கக் காட்டுமிராண்டி மக்கள் இறக்குமதி செய்யப்பட வேண்டும்'' என நீட்சே கருத்துரைக்கும்போது, அவர் ஆரியரின் சாதிய உணர்விலிருந்தே தனக்கான உற்சாகத்தைப் பெற்றிருக்க வேண்டும். ஏன் அப்படி இருக்கக்கூடாது? ஆரியப் பார்ப்பனர்கள் சத்திரியர்களின் துணையோடு பெரும் எண்ணிக்கை கொண்ட இந்தியப் பழங்குடியினரை சூத்திரர்கள் என்ற நிரந்தர அடிமைத்தனத்தில் வைத்திருக்கவில்லையா? நாம் செய்ததைத்தான் பிறர் நமக்குத் திருப்பிச் செய்கிறார்கள். ஆகவே, அதைக் கண்டிப்பது தீய பண்பாகும். ஊழியம் புரிவதை தெய்வச் செயலென வழிபடுவது இந்திய ஆன்மீகப் பண்பாட்டின் ஒரு அம்சமாகும். இது காந்தியத்தின் ஒருகோட்பாடாகும். வைதீகத் தேசியத்தின் கருத்தியலே காந்தியமாகும். ஊழியம் செய்வதினால் வேறொரு உலகில் நன்மைகள் கிடைக்கும் என ஏற்றிச் சொல்வதைப் பொறுத்து அடிமைத்தனம் என்பது ஒரு மனித கௌரவம் என்ற நிலைக்கு உயர்த்தப்படுகிறது. இந்தத் தளத்தின் மீது தர்க்க நோக்கில் எந்தத் தடையும் விதிக்க முடியாது. நற்பேறு பெற்ற தன் வெள்ளையின வாரிசுகள் மூலமாகச் செயல்பட்டு வரும் கடவுளின் கருணையினால் நீ ஆசீர்வதிக்கப்படும் வரையிலும் ஊழியம் செய்து கொண்டேயிருக்க வேண்டும்.

நல்லது, தீயது என்ற நன்னடத்தைக் கருத்துக்களுக்கு மேலாக ''சுதந்திர ஆன்மாக்களை'' நீட்சே முன்வைத்தார். கிறித்துவத்தின் தொடக்க காலத்தில் இருந்தே ''சுதந்திர ஆன்மாக்களுக்கு'' எதிரான கலகத்தில் இந்த நன்னடத்தைக் கருத்துகளே ''மனித மந்தையின்'' ஆயுதமாக இருந்து வந்திருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

உன்னத மனிதனின் ஒழுக்கம் குறித்த இவரது எழுத்துக்கள் பாசிசத்தின் பைபிளாக மாறிவிட்டன. அவரது எழுத்துக்களிலிருந்து சில முக்கியப் பகுதிகள் பின்வருமாறு:

"வலிமையான, சுதந்திரமான ஒருவரின் கைகளில், ஆளுவதற்கு என்றே உருவாக்கப்பட்ட, விதிக்கப்பட்ட ஒருவரின் கைகளில், மதம் ஒரு கருவியாக இருக்கும். அவர் மூலமாகத்தான் அறிவும், கலையும் இணைந்து ஒரு ஆளும் இனத்தை உருவாக்கும். இவர்களைப் பொறுத்தமட்டில் ஆட்சிக்கு எதிரான எதிர்ப்புகளை முறியடிக்க மதம் ஒரு கருவியாகப் பயன்படும். ஆட்சியாளர்களிடம் அடிமைகள் கட்டுண்டு இருக்கும்படி மதம் பார்த்துக் கொள்கிறது. ஆட்சியாளர்களுக்கு எதிரான செயல்களைத் தூண்டும் அடிமைகளின் மனசாட்சியை மதம் நெரித்து விடுகிறது". "இறையாண்மை கொண்ட அதிகாரத்தை நாடும்போது – பலவழிகளில் இதுவும் ஒன்றாக இல்லாமல், இதுவே எல்லாமுமாக இருக்க முயற்சிக்கும்போது– தத்துவவாதிகளின் கைகளில் வளர்க்கப்படும் ஒரு பொருளாக அது இருக்கும்போது" – மதம் மோசமான விளைவுகளை ஏற்படுத்துகிறது. தன் சொந்த நலனுக்காகத்தான் மனிதச் சூழலுக்கும் கீழான நிலையில், அடிமையின் நிலையில், உழைப்பதற்கான வெறும் கருவியென்ற நிலையில் வைத்து மக்கள் ஒடுக்கப்படுகிறார்கள் என்பதைச் சுத்தமான மனச்சாட்சியோடு ஒப்புக்கொள்வதுதான் ஒரு நல்ல ஆரோக்கியமான ஆட்சியாளரின் அடிப்படைத் தகுதியாகும். தன்னகங்காரம் என்பது அதிஆன்மாக்களின் இயல்பாகும். நம்மைப் போன்ற உயிர்களின் நலன்களுக்காகத்தான் மக்களை அடிமையாக்குகிறோம் என்பதிலும், அதற்காகத்தான் அவர்கள் தியாகம் செய்கிறார்கள் என்பதிலும் உறுதியாக நம்பிக்கை கொள்வதைத்தான் தன்னகங்காரம் என நான் பொருள் கொள்கிறேன். இந்த வகையான தன்னகங்காரம் அதிஆன்மாக்களுக்கு மட்டுமே உரித்தானது. கடுமை, வன்முறை அல்லது தன்னிச்சைப்போக்கு போன்ற உணர்வுகள் அந்த ஆன்மாக்களிடம் இருக்காது. இவை எல்லாம் அடிப்படைப் பண்புகள் என்பதாக மட்டுமே இருக்கும். இதற்கு ஒரு பெயர் நான் சூட்ட வேண்டுமானால் அதை நான் நேர்மை என்ற பெயரிட்டே அழைக்கிறேன்". (*நல்லதிற்கும் தீயதிற்கும் அப்பால்*).

இவ்வாறாக, பாசிசத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை நீட்சே தெளிவாக விளக்கியபின், இந்த இரத்த வெறி கொண்ட இயக்கத்தின் கருத்தியல்வாதி என்ற முறையில் அவரைப் பின்பற்றியவர்கள் பெர்க்சனின் சீடர்களானார்கள் அல்லது இவரின் சீடரான ஜார்ஜ்ஸ்சோரலின் சீடர்களானார்கள்.புறவய எதார்த்தத்திற்கு ஒரு இரண்டாம் நிலைத் தகுதியை (subsidiary category) தந்த பின்பு தான் பெர்க்சன் அதை புலனுலகுக்குத் தொடர்பற்ற தன் மாயாவாதக் கோட்பாட்டுடன் சமரசப் படுத்த நாட்டம் கொண்டார் என்பதை நினைவுபடுத்திக் கொண்டால் இந்த ஆன்மீக மரபின் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ள முடியும். இவர் பொருள்முதல் தத்துவத்தை மறுத்தொதுக்கினார். ஆனால், கொச்சைப்பொருள்முதலியலின் நடைமுறைக்கு ஆன்மீகப் பாதுகாப்புக் கொடுத்தார். ஆன்மீக இறையாண்மையின் கீழ் பொருளுக்கும் ஆன்மாவுக்கும் இடையிலே ஒரு கூட்டிணைவை ஏற்படுத்த பெர்க்சன்



படிப்பகம்

www.padippakam.com

முயற்சி செய்தார். இம்முயற்சியால் மீண்டும் இருமைவாதம் என்ற நச்சு வட்டத்திற்குள் தத்துவம் கொண்டு செல்லப்பட்டது. கடந்த காலங்களில், இருமைவாதத் தத்துவத்தின் அரசியல் வெளிப்பாடு, நிலக்கிழமை மன்னர்களின் எதேச்சதிகார ஆட்சியை ஆதரிப்பதாக இருந்தது. இன்றோ அதன் வெளிப்பாடு பாராளுமன்ற சனநாயகத்தை ஒழித்து, பாசிசச் சர்வாதிகாரத்தை நிலை நிறுத்துவதாக உள்ளது. இருமைவாத தத்துவமானது மத அடிப்படைவாதத்தை –அதாவது மனித உருக் கொண்ட கடவுள் அவரால் உருவாக்கப்பட்ட உலகம் என்ற பண்டைய கருத்தாக்கத்தை – மீண்டும் உயிர்ப்பிக்கிறது. இப்பண்டைய கருத்தாக்கமானது பூமியில் கட்டுப்பாடற்ற அதிகாரம் கோரும் கருத்தியலின் பிரதிபலிப்பாகவே இருக்கிறது. நமது காலத்தில் அது பாசிச சர்வாதிகாரமாக – அதாவது முதலாளிகளின் சர்வாதிகாரமாக – வடிவம் எடுத்துள்ளது. ஒரு காலத்தில் புரட்சிகர வர்க்கம் என்ற முறையில் முதலாளிகள் மன்னர்களின் தெய்வீக உரிமை என்ற கோட்பாட்டைக் கேள்விக்குள்ளாக்கினர். ஆனால், இன்றோ ஒரு பிற்போக்கான வர்க்கம் என்ற முறையில், தங்கள் அதிகாரத்தை நிலை நிறுத்திக் கொள்ள அதே பழம் பொய்மைக் கோட்பாட்டில் இவர்களே அடைக்கலம் தேடினர். சமூக காட்டுமிராண்டித்தனம், பொருளாதார அழிவுவாதம், குடிமக்களை நசுக்குவது, அரசியல் எதேச்சதிகாரம் போன்ற அனைத்து வழிகளிலும் தங்களை நிலை நிறுத்திக் கொள்ள முதலாளிகள் முயல்கிறார்கள். ஆனால், கடந்த காலங்களில் இதே வழிமுறைகளை இவர்கள் எதிர்த்து வந்திருக்கின்றனர்.

தன்னிச்சையான அதிகாரத்திற்கும், கட்டுப்பாடுகளே இல்லாத ஆற்றலுக்கும் கிடைத்த தத்துவார்த்த தார்மீக ஒப்புதலே அதிமனித வழிபாட்டிற்கு அடித்தளமாக இருக்கிறது. கொடூரம், வன்முறை, கட்டாயம், ஒடுக்குமுறை ஆகியவற்றை இந்த வழிபாடு அவசியமாக வளர்த்துகிறது. அதி மனித வழிபாட்டின் தனிநபர் வடிவமே முசோலினி அல்லது இட்லர் ஆகும்.ஆன்மீகச் சக்தியைப் அதி மனிதன் பிரதிநிதித்துவம் செய்வதால் சுதந்திரம், உரிமை, நீதி, ஒழுக்கவியல் போன்ற மனிதக் கருத்தாக்கங்கள் இவரைக் கட்டுப்படுத்தாது. ஆகவேதான், அந்த "இரட்சகர்" அல்லது "அவதார புருசர்" ஆணவத்தோடு பின்வருமாறு உலகத்திற்கு அறிவிக்கிறார் : "சுதந்திரம் என்பது குடிமக்களின் அடிப்படை உரிமையாய் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. முழுமுதல் அதிகாரத்தில் அதாவது அரசின் கட்டுப்பாடற்ற அதிகாரத்தில், குடிமகன் தன் உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்கலாம்". ஆக்டோபஸ்ஸின் மனித உருவகமே அதி மனிதன் ஆவான். முதலாளிகளுக்கு ஊழியம் புரியும் இந்த நவீனச்சர்வாதிகாரியும் கடந்த கால நிலக்கிழமை கொடுங்கோல் மன்னர்களைப் போலவே, "நானே அரசன், நானே கடவுள்" என அறிவித்துக் கொண்டார். தெய்வீக உரிமை தனக்கு மட்டுமே உண்டு என உரிமையும் கொண்டாடுகிறார். பிரஷ்யாவின் பிரதமராக (Premiership) கோயரிங் பதவியேற்றபோது, "உச்ச மதகுருமார்களான பிரஷ்ய மன்னர்களின் நேரடி வாரிசு" என தன்னை அறிவித்துக் கொண்டார். நிலக்கிழமை மன்னர்கள் "தெய்வீக உரிமை"யுடன் ஆட்சி நடத்தினார்கள். அவர்களின் நேரடி வாரிசு என்ற முறையில் பாசிசச் சர்வாதிகாரிக்கும் அதே உரிமை மரபுச் சொத்தாக வந்திருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

இட்லரின் கருத்துப்படி அனைத்தும் அரசாங்கமே. அரசின் கீழ் ஒரு சூதாட்டக்காயாக இருப்பதைத் தவிர தனிநபருக்கு வேறு உரிமை ஏதுமில்லை. அரசாங்கம் தனக்குத் தேவைப்படும்போது அவரது வாழ்வைச் சூதாடிவிடும். முழுஅதிகாரம் என்ற இந்த மத்தியக்கால ஆன்மீக அரசியல் தத்துவமானது தர்க்கரீதியாக பாசிசவாதிகளின் பொறுப்பற்ற போர்ப்பிரச்சாரத்திற்கே இட்டுச்சென்றது. எந்த நேரத்திலும் தங்களை கடவுளின் ரத்த பலிபீடத்தில்* தியாகம் செய்துகொள்ள மக்கள் அணியமாக இருக்க வேண்டுமென சர்வாதிகாரியின் இந்தப் பகட்டு ஆரவாரம் அல்லது சிந்தனைக்கோளாறு அறைகூவலிட்டது. தங்களின் உயிர்த்தியாகம் நாட்டுக்கு நல்லதா அல்லது தீயதா என்ற கேள்விகளைக் கேட்காமல் அவர்கள் அரசாங்கத்திடம் காட்டும் விசுவாசத்திற்காக அல்லது தேசபக்தக் கடமையாக இத்தியாகத்தைச் செய்ய வேண்டும். இட்லரை ஆட்சியிலமர்த்த வேண்டும் என ஜெர்மன் முதலாளிகளை இணக்கப்படுத்திய வான்பாப்பன் (VonPapen) என்பவர் பாசிச அரசியல் தத்துவத்தின் நடைமுறை வெளிப்பாட்டைக் கொடூரமாகவும் வெளிப்படையாகவும் முன்வைத்துள்ளார். அது பின்வருமாறு : "இராணுவவீரர்களாக இருக்கத்தக்க குழந்தைகளைப் பெற்றுத் தருவதே பெண்களின் பணியாகும். போர்க்களத்தில் சாவதைவிட மிகப்பெரிய இலட்சியம் வாழ்வில் வேறு ஏதும் இருக்கமுடியாது". இந்த இரத்த வெறிபிடித்த வழிபாடானது தாய்மையை இழிவுபடுத்துகிறது. ஆகவேதான் பொருள்முதல்தத்துவத்தைப் பின்பற்றியவர்கள் கோபமுற்று இதை எதிர்த்தனர். பகட்டு ஆரவாரம் காட்டி குடும்ப அமைப்பிற்கு இது இடையூறு செய்கிறது எனக் குற்றம் சாட்டினார்கள். ஆனால், வைதீக இந்திய தேசியவாதிக்கோ, இது ஏற்கனவே பழகிப்போன ஒன்று. அதாவது சத்திரியப்பண்பு என்ற முழக்கத்தின் கவர்ச்சிகரமான எதிரொலியே இது.

இட்லரின் "தேசியசோசலிசமானது" மத்தியகால பிரஷ்யனிசத்தின் குரூரமான பேய்வடிவமாகும். சத்திரியப்பண்பு என இந்தியாவில் புகழ்பாடப்படும் ஒரு பண்பையே பிரஷ்யனிசம் பிரதிநிதிப்படுத்துகிறது. அடிமைநிலையில் மக்கள் வசித்து வந்தபோது அவர்களிடம் இந்தப் பண்பு போதிக்கப்பட்டது. இந்தியனோ அல்லது பிரஷ்யனோ ஒரு நிலக்கிழாரின் உடைமைப்பொருள் என்ற முறையில் அவரது அடிமைகள் (அவரது விருப்பத்திற்கேற்ப) கலப்பையை விட்டுவிட்டு வாளைக் கையிலேந்த வேண்டும். தங்களின் சொந்த விருப்பப்படி இவர்கள் தொழிலை மாற்றிக் கொள்ள முடியாது. மாறாக, நிலக்கிழார்களின் நலன்களுக்காகவே அவ்வாறு மாற்றிக் கொள்ளவேண்டும். (அக்காலங்களில் நிலத்தில் அமைதியாக உழைத்து வாழ்வதைக் காட்டிலும் கொள்ளையடிப்பது ஆதாயமானதாக இருந்தது) மக்கள் மனதில் சத்திரியப்பண்பு ஆழப்பதிய வைக்கப்பட்டது. போர்க்களத்தில் இறக்கும் இலட்சியச் சாவு குறித்து காவியங்கள் மேன்மைப்படுத்திப் பேசின. தொன்மப் புராணக் கதைகள் மூலமாக அது போதிக்கப்பட்டு வந்தது.உண்மையில் சொல்லப்போனால் மக்களிடம் வீரவழிபாட்டுணர்வை வளர்த்தவே காவியங்கள் எழுதப்பட்டன. பிரஷ்ய தேசியவாதத்தைப் போலவே சத்திரியத் தனிநபர் வழிபாட்டின் நடைமுறை நோக்கமும் நிலக்கிழாரின் நலன்களைப் பெருக்குவதே ஆகும்.

*Bloody Shrine of moloch : குழந்தைகள் பலியிடப்பட்ட யூதக்கடவுளின் சிலை.



படிப்பகம்

www.padippakam.com

சில நேரங்களில் நிலக்கிழாருக்கு அதனால் கேடான பலனும் கிட்டும். நல்லது! விளையாட்டில் அதுவும் இருந்தது. ஊகங்களும் சாகசங்களும் இன்னல்களையும் அதேவேளையில் நன்மைகளையும் கொண்டிருந்தன.

நமது கல்லறையில் பின்வரும் வாசகங்கள் எழுதி வைப்போமாக : " நாம் கடுமையானவர்களாக இருந்திருக்கலாம். நாம் கொடியவர்களாக இருந்திருக்கலாம். ஆனால், நாம் நல்ல ஜெர்மானியர்களாக இருந்திருக்கிறோம்". (இட்லர்) அதி மனிதவழிபாடு இட்லரியத்தின் மற்றொரு கதாநாயகனை வெறுப்போடு கத்த ஊக்கப்படுத்துகிறது. "அரசாங்கம் தனது சொந்தச் சட்டங்களை உடைப்பதற்குத் துணிவு பெற்றாக இருக்கவேண்டும்" (கோயபல்ஸ்). போவித்தத்துவக் கருத்தாக்கமான இயற்கை/ இயற்கை கடந்த அதி ஆன்மீக சக்தியிடமிருந்தே –பரம்பொருளின் தெய்வீக ஆற்றலிலிருந்தே தடைகள் இல்லாத கட்டுப்பாடற்ற அதிகாரத்திற்கான தார்மீக ஒப்புதலைப் பெற முடியும். இந்தத் தெய்வீக விருப்பத்தை இயற்கை விதிகள் கட்டுப்படுத்தாது. ஆனால், இந்த இறையாண்மைக்கோட்பாடு அல்லது அதிகாரம் மனிதனின் தலைவிதியைக் கட்டுப்படுத்துவதாகும். இதுதான் பாசிசத்தின் தத்துவமாகும். அதிமனித வழிபாட்டின் செறிவான சாரமும் இதுதான். இந்திய வேதாந்த ஆன்மீகவாதத்திற்கும் பாசிசத் தத்துவத்திற்குமிடையே முனைப்பான ஒற்றுமை காணப்படுகிறது. அதேபோல, உலகத்தைக் கடவுளின் லீலை என காட்சிப்படுத்தும் இருமைவாதத் தத்துவத்திற்கும் இதற்குமிடையே முனைப்பான ஒற்றுமை காணப்படுகிறது. இந்த இரத்த உறவின் வலிமையினால்தான் ஸ்பெங்லர், ஸ்பான், கெய்ஸர்லிங்க் போன்ற ஜெர்மன் பாசிசவாதிகள் கிழக்குலகின் ஆன்மீகச் செய்திகள் மேற்குலகை இரட்சிக்க வல்லவை எனப் போற்றுகின்றனர்.

பாசிசத்தின் தத்துவம் சாராம்சத்தில் இந்திய ஆன்மீகவாதத்தோடு ஒற்றுமை கொண்டது. முதலாளியப்பண்பாடு என்றென்றும், பாசிசத்தால் காப்பாற்றப்பட முடியுமானால் இந்தியாவின் ஆன்மீகக் கருத்தும் அம்மாதிரியான ஒரு புகழுக்கு உரிமை கோரலாம். ஆனால் இது இப்பொருண்மை உலகின் சிக்கல்களைத் தீர்க்காது. மாறாக, மனித இனத்தின் மீதான ஆதிக்கத்தை உயர்த்திப் பிடிப்பதற்குக் கொச்சைப்பொருள்முதலுக்கு ஒரு வேளை உதவக்கூடும்.

இம்மாதிரியான ஒரு புகழை நமக்குச் சேர்த்த ஒரு தத்துவம் குறித்து நாம் பெருமைப்படமுடியுமா? இத்தனை ஆண்டுகாலம் ஒரு தவறான இலட்சியத்தை ஏற்றுக் கொண்டிருந்தோம் என்ற அவமானத்தை அல்லவா அந்தப் பெருமை நமக்குத் தந்திருக்கிறது? தவறான முன்முடிவுகளைக் கொண்டிருக்காத அல்லது உணர்வுப்பூர்வமான பிற்போக்காளர்களாக – அதாவது உள்ளார்ந்த பாசிஸ்டுகளாக இல்லாத – இந்தியத் தேசியவாதிகள் மிகத் தீவிரமாகச் சிந்திக்க வேண்டிய பொருத்தமான முக்கியப் பிரச்சினை இது.

❖



படிப்பகம்

www.padippakam.com

# சுவஸ்திக் சின்னத்தின் கீழ்

அதிகாரம் குறித்த நீட்சேயின் வெறுப்புத் தத்துவத்தைப் பின்புலமாகக் கொண்டு கெய்சர்லிங், ஸ்பெங்ஜலர், ஸ்பாக், சம்பார்ட் போன்றவர்கள் உருவானார்கள். சுவஸ்திக் என்ற புனிதச்சின்னத்தை மையமாக வைத்து வளர்த்தப்பட்ட "தேசியசோசலிச" இயக்கத்தின் கருத்தியலை வடிவமைப்பதில் இவர்கள் நேரடியாகப் பங்கெடுத்திருந்தனர். இவர்கள் அனைவருமே தத்துவார்த்தப்பொருள்முதலியலுக்குக் கடுமையான எதிரிகளாக இருந்தார்கள். மேற்குலகப் பண்பாட்டின் ஆன்மீகப் புத்துயிர்ப்பிற்கு ஆதரவாக வாதிட்டு வந்தார்கள். இவர்களில் சிலர் கிழக்குலகிலிருந்து வரும் ஒரு அற்புத நற்செய்திக்காக காத்திருந்தார்கள். அதிகாரத்தையும், வன்முறையையும் வழிபட்ட ஒரு மரபு கிழக்குலகில் இருந்து வந்திருக்கிறது என்பதற்கு சுவஸ்திக் சின்னம் ஒரு வலுவான சான்றாக இருக்கிறது. கிழக்குலகத்தின் இந்த "ஆன்மீகச்" செய்தியைப் பரப்பும் மதப்பிரச்சாரகர்களாக இட்லரும் அவரது ரத்த வெறி கொண்ட கும்பலும் இருந்து வந்தன. இந்த நவீன மதப்பிரச்சாரகர்களிடம் பணிவு என்ற பண்பு காணக்கிடைக்காத ஒன்று. அதிகார போதையால் தலைகிறுகிறுத்த இட்லர் உலகத்தின் முன்னால் ஒரு ஆரவாரமான ஆர்ப்பரிப்பை முன்வைத்தார். அது பின்வருமாறு :-

"மனித குல வரலாற்றில் இது ஒரு முக்கிய நேரம் என அவர்களிடம் சொல்லுங்கள். இந்த நேரத்திற்குப் பொருத்தமான மனிதன் அடால்ப் இட்லர்தான் என அவர்களிடம் சொல்லுங்கள். அதிபர் பதவியில் அமர்த்தப்பட்டதால் நான் இப்படிச் சொல்லவில்லை. மாறாக, என்னைத் தவிர வேறு யாரையும் அதிபராக அமர்த்தியிருக்கமுடியாது என்பதால் இப்படிச் சொல்கிறேன்". (*ரெட்டிக்* என்ற அமெரிக்கப் பத்திரிகையில், கார்வீனியஸ் பேண்டர்பில்ட் என்பவருக்கு இட்லர் அளித்த சிறப்பு நேர்முகம் 1933)

சுவஸ்திக்கின் மீது ரத்த வெறி கொண்ட வழிபாட்டைக் கொண்டிருந்த இந்த மதப்பிரச்சாரகர்களைத் தன் ஆன்மீகப் பரம்பரையாக எண்ணி புனித அன்னை இந்தியா பெருமை கொள்ள முடியாது இந்திய வைதீகத் தேசியத்திற்கும், இவர்களுக்குமிடையே முனைப்பான ஒற்றுமை காணப்பட்ட போதிலும் வரலாற்றுவழியில் பாசிசவாதிகள் மேற்கத்திய ஆன்மீகவாதத்தையே மரபாகக் கொண்டிருந்தார்கள். மேற்கத்திய ஆன்மீகவாதத்திற்கும் அதன் இந்தியப் பங்காளிக்குமிடையே எந்த வேறுபாடும் இல்லை என்பதால் இந்தியப் பாசிசவாதிகள் எப்போதாவது ஆட்சிக்கு வந்தால் அவர்களும் தங்களின் கோரப்பல்லை வெளிக்காட்டவே செய்வார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

பழைய பிரஷ்ய அரச பரம்பரையின் இளவரசரான கெய்சர்லிங் இந்தியமாயாவாதத்தின் ஆர்வலராக இருந்தார். 1918 புரட்சியானது நிலக்கிழார்களும் ராணுவமும் ஆதிக்கம் கொண்டிருந்த பழைய சமூக–பொருளாதார அரசியல்அமைப்பைத் தூக்கியெறிந்து விட்டது. ஆகவே இது "மேற்கத்தியக் கலாச்சாரத்தின் வீழ்ச்சியாக" அவருக்குத் தோன்றியது. தனது வர்க்கத்தின் கைகளில் கட்டுப்பாடற்ற அதிகாரமும், செல்வமும் இருந்து வந்ததைத்தான் இவர் மேற்குக்கலாச்சாரம் என அடையாளப்படுத்துகிறார். இயல்பாகவே இவருக்கு எதிர்காலம் இருண்டதாகவே தோன்றியது. மன்னர்களின் தனிச்சலுகைகளையும் ராணுவத்தின் அதிகாரத்தையும் அழித்து விடுவதாக சனநாயக சோசலிச "முட்டாள்கள்" அச்சுறுத்திக் கொண்டிருந்தனர். ஆகவே அய்ரோப்பியக் கலாச்சாரம் என தான் கருதி வரும் தூண்களை மாயாவாதம் காப்பாற்றும் என ஆவலோடு கெய்சர்லிங் நம்பினார். "கிழக்குலகின் மாயாவாதப் பண்பாட்டை" மேன்மைப்படுத்தத் தொடங்கினார். "நியாயமான சமூக நிறுவனங்களையும் மாற்றமுடியாத மனித மதிப்பீடுகளையும்" இது பாதுகாக்கும் என்ற எளிய–ஆனாலும் குறிப்பிட்ட – நோக்கத்திற்காகவே இதனை ஆதரித்தார். அவர் பின்வருமாறு எழுதியுள்ளார் : "விசுவாசத்திலும் அறிவிலும் இந்தியப் பக்கிரிகள் லட்சிய முன்மாதிரிகளாக இருக்கிறார்கள். மனிதன் தன் வளமான சாரத்தில் ஒரு ஆன்மா ஆவான். இதை அவன் அதிக அளவில் உணர, உணர அதிக அளவில் அதில் உறுதியாக நம்பிக்கை கொள்ளக்கொள்ள மிக விரைவில் அவனது விலங்குகள் உடையும். ஆகவே, இந்துத் தொன்மக் கதைகளில் நாம் கண்டுள்ளது போல, முழுஅறிவு மரணத்தை வெற்றி கொள்ளும். மனிதனின் உள்ளார்ந்த உணர்வுகளின் வடிவில் பரம்பொருள் அனைத்து இடங்களிலும் தன்னைத்தானே மனிதனுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறது".(**கவுன்ட் வான் கெய்சர்லிங்**– *ஒரு தத்துவவாதியின் பயணக்குறிப்பு*).

மரணத்தை வெல்ல முடியும் என்ற நம்பிக்கையை இந்துத் தொன்மக் கதைகள் முன்வைத்ததால் இயல்பாகவே, மரணத்தின் பிடியில் இருந்த ஒரு வர்க்கம் அந்தக்கருத்தில் உயரிய உண்மை இருப்பதாகக் கண்டது. தன் சீடர்களுக்கு அந்த மாயாவாதத்தை வழியாகக் காட்டியது. உங்களிடம் "உள்ளார்ந்து கிடக்கும் உணர்வுகளைப்" பற்றிப்பிடியுங்கள், ஒரு அற்புதத் தெய்வீகத் தலையீட்டின் மூலம் வரவிருக்கும் பேரழிவைத் தவிர்க்கலாம். இட்லரின் எழுச்சி எதிர்பார்க்கப்பட்ட ஒரு அற்புதம் ஆகும். தங்களின் சமூகப்பயன்பாடு மறைந்ததினால், தன்னம்பிக்கையை முழுமையாக இழந்த எவருமே மந்திரம், மாயம், இயற்கை கடந்த சக்தி, கடவுள் போன்றவற்றின் மீதுதான் தங்களின் நம்பிக்கைகளைக் குவிக்க முடியும். தாங்கள் வாழ்ந்தாக வேண்டும் என்ற பிடிவாதமான ஆசையானது இந்தத் திசையில்தான் தன் ஆறுதலைத் தேடும். ஆதிக்க நிலையிலிருந்த முதலாளியச் சுரண்டலோடு அரச மரபினரின் சிறப்புச் சலுகைகளையும், இராணுவ அதிகாரத்தையும் அடித்தளமாகக் கொண்டிருந்த அய்ரோப்பியப் பண்பாட்டின் இரட்சகராக – மந்திரச் செய்தியை கொண்டதாக – பாசிசம் தோற்றமளித்தது. சுவஸ்திக் என்ற புனிதச்சின்னத்தின்



படிப்பகம்

www.padippakam.com

கீழ் செயல்பட்ட பாசிசச் சர்வாதிகாரம் அழுகிப்போன நிலையில் இருந்த முதலாளியச் சுரண்டல் அமைப்பை உறுதிப்படுத்தியதோடு சுரண்டும் வர்க்கமான பிரஷ்ய நிலக்கிழார்களின் (Junkderdom) துயரத்திற்கும் ஆறுதல் அளித்துவந்தது.

"ஒரு முற்போக்கான மிதவாத நிலக்கிழாரின்" கருத்தை, எல்லின் விரன்ச் என்ற ஆங்கிலக் கனவான் ஒருவர் பதிவு செய்துள்ளார். அது பின்வருமாறு : "ஒரு தேசியத் தலைவருக்கான தகுதி இட்லருக்கு இருக்கிறதா என்ற அய்யப்பாடு என்னிடம் இருந்தது. ஜெர்மன் தேசத்திற்கு மறு உயிர்ப்புத்தரும் கடமையை இவர் செய்து முடித்துவிட்டார். மீண்டும் வாழ்வதாக நாங்கள் உணர்கிறோம். மீண்டும் ஒரு முறை நாங்கள் தலை நிமிர்ந்து நிற்கிறோம்" (*ஸ்பெக்டேட்டர், லண்டன்*) சோசலிசம் குறித்த இட்லரின் ஆரவாரப் பேச்சு, நிலக்கிழார்களான அரச மரபினருக்கு தொடக்கத்தில் அச்சத்தையே தந்துவந்தது. இட்லரின் அதிகார முயற்சிக்கு வான் பேபன் அமைச்சரவை மூலமாக நிலக்கிழார்கள் இறுதி எதிர்ப்பை காட்டினார்கள். ஆனாலும், பெரு முதலாளிகளின் கட்டாயம் காரணமாக நிலக்கிழார்கள் பணிந்துபோக வேண்டியிருக்கிறது. அதிகாரத்தில் அமர்ந்தவுடன் இட்லர், நிலக்கிழார்களின் ஆதாரமற்ற அச்சத்தைப் பிசுபிசுக்கச் செய்தார். இட்லர் ஆட்சிக்கு வந்ததால் 1918 புரட்சியின் நல்ல பயன்கள் அழிந்து போயின. ஆகவேதான் இது "ஜெர்மன் தேசத்தின் மறுபிறப்பு" எனக் கொண்டாடப்பட்டது. அதிகாரத்தில் அமரும் ஒவ்வொரு வர்க்கமும், தன்னை மட்டுமே முழு தேசமாக அடையாளப்படுத்தும். சனநாயக வெய்மர் (Weimer) அரசியல் அமைப்பின் தீயநிழலின் கீழ் இனிமேலும் அரச மரபினர் வாழ வேண்டிய தேவையில்லை. இயல்பாகவே அவர்கள் (இட்லரின் ஆட்சியின் கீழ்) தாங்கள் மீண்டும் உயிர்வாழ்வதாகவும் தாங்கள் தலைநிமிர்ந்து நிற்பதாகவும் உணர்ந்தார்கள். இவ்வர்க்கத்தின் கருத்தியல்வாதியான கெய்சர்லிங் கிழக்குலக மாயாவாதத்தின் சின்னமான சுவஸ்திக்கின் வருகையை வாழ்த்தி வரவேற்றதில் வியப்படைய ஏதுமில்லை.

பாசிசச்சர்வாதிகாரத்தின் இன்னொரு கருத்தியல்வாதியான பால்எர்னஸ்ட்(Paul Earnest) அவர்கள் "ஜெர்மன் கருத்துமுதலியல் அழிந்து போனதற்காக" அழுது புலம்பினார். இவர் கருத்துப்படி, முதலாளியச் சமூகத்தின் படிப்படியான அழிவைத் தடுப்பதிலும், அமைதியைக் குலைக்கும் சக்திகளின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்துவதிலும் ஏற்பட்ட தோல்விகள் கருத்துமுதலியலின் அழிவை வெளிக்காட்டுகின்றன. மேற்குலக கருத்துமுதல் சிந்தனையை உயிர்ப்பிக்க வேண்டுமானால் அதில் கிழக்குலக மாயாவாதச் சிந்தனையை தங்குதடையற்று உட்புகுத்த வேண்டும் என்ற கருத்தை இவர் முன்வைத்தார். சமூகப்புரட்சிகரச் சக்திகளின் வல்லமையைத் தடுத்து நிறுத்தும் இறுதிக்கட்ட மூர்க்கத்தனமான முயற்சி என்ற வகையில் இந்த எதிர்ப்புரட்சிக் கடமையை நிறைவேற்ற வேண்டுமானால் கருத்துமுதல்தத்துவம் தன் பகுத்தறிவுச் சுமைகளையும் போலி – அறிவியல் வேடத்தையும் கைவிட வேண்டியிருக்கும். நம்பிக்கையும், உள்ளுணர்வும் என்ற பழஞ்சிறப்பு மிக்க கருவிகளைக் கைபிலேந்தி இது களத்தில் இறங்கியாக வேண்டும். ஆகவே, இப்பணிக்காக இயல்பாகவே இது இந்தியாவை நோக்கி புனிதயாத்திரை



படிப்பகம்

www.padippakam.com

புறப்பட வேண்டியதாயிற்று. ஏனெனில் இங்குதான் அந்தப் புனிதக்கருவிகள் காலம்காலமாகப் பாதுகாக்கப்பட்டு வந்திருக்கின்றன.

"நமது அனுபூதியியல் சிந்தனையின் உயரிய வளர்ச்சிக்காக, நாம் இந்தியக் காடுகளில் நிர்வாணமாக வாழும் மனிதர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். இம்மனிதர்கள் அவர்களின் சீடர்கள் பெற்று வரும் பிச்சை உணவு மூலம் உயிர் வாழ்ந்து வருகிறார்கள்". (பால்எர்னஸ்ட் – *ஜெர்மன் கருத்துமுதலியலின் அழிவு*).

மக்கள் அளவுக்கதிகமாகவே "பொருண்மைப் பண்பு" கொண்டவர்களாக வளர்ந்து வருகிறார்கள். தங்கள் உழைப்பின் முழு மதிப்பையும் தங்களுக்கே வேண்டும் எனக் கோரி வருகிறார்கள். இந்தக் கோரிக்கை நடைமுறைப்படுத்தப்பட்டால் அது செல்வத்தோடு சோம்பி வாழும் ஒரு சிறு பகுதி மக்களை அழித்துவிடும் என்பதே இதன் பொருளாகும். இச்சிறு பகுதி மக்கள்தான் ஆன்மிக மதிப்பீடுகளைப் பாராட்டவும், அதை மேலும் வளர்த்தவும் திறமை பெற்றவர்கள் என நம்பப்பட்டு வந்தது. மக்களை அவர்களுக்கு உரிய இடத்திலேயே இருத்திவைக்க வேண்டுமானால் அவர்களுக்கு "எளிமையான வாழ்க்கை, ஆன்மிகச்சிந்தனை" என்ற பண்புகளைப் போதிக்க வேண்டும். இந்த உன்னத லட்சியத்துக்கு, பண்டைய இந்தியாவின் நிர்வாண முனிவர்களைத் தவிர சிறந்த முன்மாதிரி வேறு யார் இருக்க முடியும்? கோவணம் கட்டிய ஒரு நவீன தலைவர் இப்பணிக்குப் பொருத்தமானவராக இருப்பார்.

இந்திய வைதீகத்தேசியவாதிகளைப் போலவே, பாசிசக் கருத்தியல்வாதிகளும், முதலாளியத்தைக் கண்டனம் செய்கிறார்கள். முதலாளியம் என்பது மனிதனை மனிதன் சுரண்டும் ஒரு அமைப்பு. அது தன் வரலாற்றுப் பணியை செய்து முடித்துவிட்டது. எனவே இனிமேலும் அது நீடிக்க வேண்டிய அவசியமில்லை என்ற பொருளில் இவர்கள் முதலாளியத்தை கண்டனம் செய்யவில்லை. மாறாக, "மனிதனின் தனித்தன்மையை (Individuality) நசுக்குகிறது" என்ற ஒரே தவறைத்தான் இவர்கள் முதலாளிய அமைப்பில் கண்டார்கள். பொருளாதார மீட்புவாதத்தின் "இந்தியத் திருத்தூதர்கள்" இயந்திரம் மனிதனையும் ஒரு இயந்திரமாக்குகிறது என்ற காரணத்தைச் சொல்லிப் "இயந்திரப்பண்பாட்டிற்கு எதிராக" அவதூறு பொழிந்ததைப் போலத்தான் இதுவும். இயந்திரத்தை உருவாக்குபவனே மனிதன்தான். தன் படைப்பின் எசமானன் என்ற முறையில் அதன் தவறுகளைத் தடுத்து நிறுத்தும் சாத்தியத்தையும் பெற்றிருக்கிறான் என்ற அம்சத்தை இவர்கள் காணத்தவறிவிட்டனர். மனிதனின் தனித்தன்மையை இயந்திரம் நசுக்குகிறது என்ற காரணத்திற்காக இந்த அமைப்பை ஒழிக்க வேண்டும் என்ற முடிவை இந்தப் பாசிசக்கருத்தியல்வாதி முன்வைக்கவில்லை. மாறாக, இந்த (முதலாளிய) அமைப்பை ஆன்மிகமயமாக்க வேண்டும் என்ற ஆலோசனையையே அவர் முன்வைத்தார். "ஒரு குறிப்பிட்ட அமைப்பின் நன்மை அல்லது தீமை என்பது அந்த அமைப்பிற்குள் இல்லை. மாறாக, அவ்வமைப்பு உருவாக்கும் மனப்பான்மையின் விளைவில்தான் அது உள்ளது" என இவர் கருத்துத் தெரிவித்தார். (*அதே நூல்*)



படிப்பகம்

www.padippakam.com

ஆகவே இவர் முன்வைத்த ஆலோசனையின் சாரம் இதுதான். முதலாளியத்தின் மனப்பான்மையை மாற்ற வேண்டும். (கடவுள் அல்லதுநாடு என்ற அருவமான கருத்துக்கு அது ஊழியம் புரியட்டும்). அதுதான் "நல்லது". இது காந்தியத்தின் எதிரொலிதான். சரியாகச் சொல்வதானால் இதன் எதிரொலிதான் காந்தியம் ஆகும். காரணம், எர்னஸ்ட் 1921 லேயே இக்கருத்தை முன்வைத்துவிட்டார். இக்கருத்தின் பல்வேறு வெளிப்பாடுகளுக்கிடையில் காணப்படும் காலவரிசைப்பாட்டு உறவுகள் எதுவாக இருந்தாலும் கோட்பாடு ஒன்றுதான். இது ஒரு சிறந்த கற்பனை. எதார்த்தத்தில் இது ஒரு மோசடியாகும்.

ஒரு அமைப்பு எந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டதோ அதைத்தாண்டி அவ்வமைப்பிற்கு ஒரு இருப்பு இருக்கமுடியாது. முதலாளியத்தின் நோக்கம் உண்மையில் சொல்லப்போனால் அதன் அடிப்படைச் செயல்பாடே லாபத்தை உற்பத்தி செய்வதுதான். தொழிலாளிகள் தங்கள் உழைப்பின் முழு மதிப்பையும் தாங்களே பெற்றுக் கொண்டால் முதலாளியத்தின் செயல்பாடு முடங்கிப்போகும். உழைக்கும் மக்களைச் சுரண்டுவதுதான் முதலாளியத்தின் அல்லது வர்க்கங்களாகப் பிளவுண்ட எந்த ஒரு அமைப்பின் அடிப்படை உணர்வாக இருந்து வருகிறது. இந்த (சுரண்டல்) நோக்கத்திற்காகத்தான் அந்த அமைப்பே உருவாக்கப்பட்டது. ஆகவே இந்த நோக்கத்தைக் கைவிட அது தீர்மானித்தால் அவ்வமைப்பும் மறைந்துவிடும். இந்த முட்டாள்தனமான கற்பனையை எந்த ஒரு தத்துவவாதியும் அல்லது தீர்க்கதரிசியும் தீவிரப்பற்றோடு செயல்படுத்தமுடியாது. காரணம், எந்த அமைப்பின் தீமைகளைக் களைய கருத்துக்கள் முன்வைக்கப்பட்டதோ அவ்வமைப்பு குறித்த ஒரு அடிமட்ட அறியாமையின் மீதுதான் இந்தக் கற்பனை கட்டப்பட்டிருக்கிறது. ஆகவே மற்றொரு தரப்பிற்கு இம்மருந்து பரிந்துரைக்கப்படுகிறது. வெளிப்படையாகச் சொல்வதானால் முதலாளியம் குறித்த நம் மனப்பான்மையை மாற்றிக் கொள்ள வேண்டும். நிச்சயமாக இந்த ஆலோசனையும் கூட கருத்துமுதல்தத்துவத்தின் எல்லைக்குள்ளாகவே உருவாக்கப்பட்டு கையாளப்படக்கூடியதுதான். ஒரு மோசடியான திட்டம் ஆன்மீக ஒப்புதலைப் பெறுகிறது. முதலாளியம் தன்னளவில் நல்லதோ அல்லது தீயதோ அல்ல. நாம் எப்படிச் சிந்திக்கிறோமோ அப்படி அது காட்சியளிக்கிறது. முதலாளியம் தீமையானது என்ற பாவகரமான (பொருள்முதல்வாத) கருத்தைக் கைவிட்டால் அதன் தீமை மறைந்துவிடும். முதலாளியம் தொழிலாளர்களைச் சுரண்டுவதில்லை. தொழிலாளர்களின் துயரங்களுக்கு அவர்களின் மனநிலைதான் காரணம். முதலாளியம் பற்றி அவர்கள் கொண்டுள்ள மனப்பான்மையே காரணம். தங்கள் மனப்பான்மையை மாற்றிக்கொள்ளும்படி அவர்களைத் தூண்டுங்கள். துயரங்களுக்கு இடையில் மகிழ்ச்சியோடு இருப்பதாகவும், அடிமைச்சங்கிலியோடு சுதந்திரமாக இருப்பதாகவும் கற்பனை செய்துகொள்ளும்படி அவர்களைத் தூண்டுங்கள். உடனே முதலாளியம் தீமையானது என்பது மறைந்து விடும். கடவுளுக்கு ஊழியம் புரிவதாகத் தங்கள் தொழிலை அவர்கள் (தொழிலாளர்கள்) கருதிக்கொண்டால் அடிமை முறைக்குப் பலியானவர்கள் என்பது உடனே மறைந்துவிடும். தங்கள் இழிநிலையிலும் அவர்கள் மேன்மையாக இருப்பதாக உணர்வார்கள். "கடமையைச் செய் ! பலனை எதிர்பார்க்காதே" என்று கீதையில் கடவுளே சொல்லவில்லையா? கீதையின் தெய்வீகக் கோட்பாட்டில் உற்சாகம் பெற்ற



படிப்பகம்

www.padippakam.com

ஒரு நவீன ஆன்மீக இந்தியத் தீர்க்கதரிசியான பிபின்சந்திரபால் முதலாளியத்தால் பாதிக்கப்பட்டவர்களைப் பார்த்துப் பின்வருமாறு போதித்தார் : "தொழில் செய்ய வேண்டும் என்பதற்காக தொழில் செய்யுங்கள். ஊதியம் என்பதெல்லாம் ஒரு துணைப்பலன்தான்".

ஆரவாரமான இந்த முதலாளியப் பிரச்சாரம் கருத்துமுதல் தத்துவத்தின் வண்ண ஒளியில் ஆன்மீகத் தோற்றம் எடுக்கிறது. இந்தக் கருத்துமுதல் தத்துவம் புற உண்மையை அங்கீகரிக்கவேயில்லை. உண்மையை வழிபடுங்கள் என்று சொன்ன தீர்க்கதரிசிகளோ, நடைமுறையில் பொய்யுடன்தான் தங்கள் சோதனையை நடத்தி வந்தனர். ஏனைய அனைத்து இயற்கை, சமூக நிகழ்வுகளைப் போலவே முதலாளியத்தின் தீமைகளுக்கு – அதுவும் அதன் அழுகிய காலகட்டத்தில் முற்றிலும் முற்றிப்போன அதன் தீமைகளுக்கு – ஒரு புறவய எதார்த்தம் இல்லை. முதலாளியத்தால் பாதிக்கப்பட்டோரின் உணர்வுகளில் அது (தீமைகள்) தங்கியுள்ளது. தொழிலாளிகள் உண்மையில் சுரண்டப்படவில்லை. அநீதி குறித்த அவர்கள் உணர்வு அவர்கள் தரப்பில் ஏற்பட்ட ஒரு வக்கிரமான கற்பனையே ஆகும். புறவய இருப்பு என்பது ஒரு மாயையே. அதாவது ஆன்மா அழிவற்றது. உணவு இல்லை என்பதற்காக அது வாடாது என்ற உணர்வுக்கு அவர்களால் வர முடிந்தால், பசியின் வலியை உணரமாட்டார்கள். மாயாவாதத்துடன் ஒருங்கிணைந்தோ அல்லது இணையாமலோ வேதாந்தம் இதைத்தான் போதிக்கிறது. முதலாளிய அமைப்பு பரம்பொருளின் (Supreme being) ஒருங்கிணைந்த ஒரு பகுதியே என வேதாந்தக் கோட்பாடு விளக்கமளிக்க வேண்டியிருக்கிறது. இவ்வாறாக, பாசிசத்தின் இன்னொரு தத்துவாளரான இவரும் "பொருண்மையான" மேற்கத்தியப் பண்பாட்டைப் பாதுகாக்கும் ஒரு வழிமுறையாக சுத்தமான வேதாந்தத்தைப் பிரச்சாரம் செய்கிறார்.

பொருள்முதலியலுக்கு எதிரான தீவிர இறைத்தூதரும், புதிய மாயாவாதத்தின் உணர்ச்சிகரமான தீர்க்கதரிசியும், இட்லரியத்தின் கட்டியங்காரனுமான இந்த பால் எர்னஸ்ட் அவர்கள் டால்ஸ்டாயிசவாதி என்றும் அழைக்கப்படுகிறார். ஆனால், 1920லேயே சோசலிசத்திற்கு எதிராக ஒரு அறப்போராளியாக இவர் களம் இறங்கிவிட்டார். மாயாவாதத்தின் மீட்பரான இந்த முக்கியப் பிற்போக்குவாதியோடு ஒப்பிடும்போது சமீபத்தில் புரட்சிக்குத் துரோகம் இழைத்த சமூக சனநாயகக் கட்சியும் கூட மிகப் புரட்சிகரமானது எனச் சொல்லிவிடலாம். சோசலிசத்துக்கு எதிராக மட்டுமல்ல, சனநாயக அபாயத்துக்கு எதிராகவும் கூட, ஒரு பாதுகாப்பிற்காக சர்வாதிகாரி அவசியம் என இவர் வாதிட்டார். அகிம்சையை விரும்பிய இந்த டால்ட்டாயிசவாதி கொடூரமான முறையில் பின்வருமாறு அறிவித்தார் :

"நமது நகரத் தெருக்களில் ஆயிரக்கணக்கான போக்கிரிகளைத் தூக்கிலிட்டால் தான் சுதந்திரத்தை மறுநிர்மாணம் செய்ய முடியும்" (பால் எர்னஸ்ட் – *விழித்தெழுந்த ஆன்மா!*) இந்தப் போக்கிரிகள் வேறு யாருமல்ல, சோசலிஸ்ட்களும் கம்யூனிஸ்ட்களும்தான். முதலாளியச் சுரண்டலிலிருந்து தொழிலாளி வர்க்கத்தை விடுதலை செய்யப்போராடியதுதான் இவர்கள் செய்த பாவம்.



படிப்பகம்

www.padippakam.com

கிழக்குலக நற்செய்தியைப் பிரச்சாரம் செய்யும் இந்த மாயாவாத ஆன்மீகவாதி இவ்வுலக அதிகாரங்கள் குறித்தும், சிறப்புச் சலுகைகள் குறித்தும் பேச வரும்போது தான் தன் அமைதிக் கோட்பாட்டையும், அகிம்சை மீதான தன் அன்பையும் மறந்து விட்டு இந்தச் சமூக அமைப்பைக் காக்கும், இரத்த வெறி கொண்ட ஆதரவாளராக மாறி விடுகிறார். ஆன்மீக மயமான விடுதலை என்ற இவர் கருத்தாக்கத்தின் பொருள் மக்கள் அடிமை நிலையிலேயே இருப்பது என்பதாகும். கொலை வெறி கொண்ட மாயாவாத வழிபாட்டினால் ஊக்கம் பெற்ற பாசிசம் ஜெர்மனியில் எழுச்சி பெற்றது. அழுகிப்போன வர்க்க ஆதிக்க அமைப்பிற்கு எதிராகக் கலகம் செய்த மக்களை நசுக்கவே இப்பாசிசம் அங்கு தோற்றம் பெற்றது.

"மேற்குலகின் வீழ்ச்சி" என்ற புகழ்பெற்ற தன் புத்தகத்தில் ஸ்பெங்ஜலர் மிக நோய்க்கூற்றான அவநம்பிக்கை மாயாவாதத்தைப் பிரச்சாரம் செய்திருக்கிறார். பகுத்தறிவையும் அறிவியல் முறைகளையும் இவர் வன்மத்தோடு தாக்குகிறார். மனிதனின் "உள்ளுணர்வையும், ஆன்மீகப் பண்புகளையும்" நிலையான மதிப்பீடுகளாக உயர்த்திப் பிடிக்கிறார். பின்னர் தான் எழுதிய ஒரு புத்தகத்தில், தன் மாயாவாதத் தத்துவத்தை விரிவாக்கியிருந்தார். வேறுபட்ட மனித இனங்களின் ஆன்மாக்களில்தான் பண்பாட்டு வேறுபாடுகள் வேர் கொண்டுள்ளன என்ற அறிவியல் ரீதியில் வலிமையற்ற கோட்பாட்டை நிலைநிறுத்தவே அவர் இவ்வாறு செய்தார். இதற்கு உடனிணையாக அவரது தேசிய இனவெறி நம்ப முடியாத எல்லையை எட்டியது. வேற்றின மக்களின் அத்துமீறிய நுழைவுதான் ஜெர்மனியில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருமளவில் காரணமென இவர் வாதிடுகிறார். ஆர்வமூட்டும் மாயக் காரணங்களை முன்னிட்டு ரசியர்களையும் இந்த வகைப்பாட்டிற்குள் இவர் உள்ளடக்குகிறார். இன வழிபாட்டின் உண்மையான இயல்பு இங்கே தோலுரிந்து நிற்கிறது. மாயாவாதமானது ஏகாதிபத்தியத்தின் தத்துவமாக மாறிவிட்டது. அத்தோடு இது நின்று விடவில்லை. பாசிசவாதிகளால் வெறுக்கப்பட்ட தாராளவாதம், மனிதாபிமானம், சர்வதேசியவாதம் போன்ற கொள்கைகளுக்கு எதிராக தொடர்ச்சியாக அவதூறுகளைப் பொழிந்ததன் மூலம் ஸ்பெங்ஜலரின் மாயாவாதமானது உயிர்த் துடிப்போடு இருந்து வந்தது.

இந்த மாயாவாதப் பாசிசத் தத்துவவாதியின் கருத்துப்படி, இத்தருணத்தின் உயரிய கடமை வேற்று நிற மக்களின் ஆபத்தையும், "சலுகை பெற்ற வெள்ளைத் தொழிலாளியின்" ஆபத்தையும் முறியடிப்பதாகும். மனித இனத்தின் மீது முழு வெறுப்பைக் கொண்டிருந்த இரத்த வெறிபிடித்த இந்த மனிதர்களின் பணி, சட்டம் ஒழுங்கையும், மரியாதையையும், நிலை நிறுத்துவதுதான். பண்பாட்டின் இந்தப் பாதுகாவலர்கள் – நீட்சேயின் கருத்தில் சொல்வதானால், "பிற உயிர்களைக் கொன்று தின்று தங்களை வளர்த்திக் கொள்ளும் இந்த உயர்ந்த விலங்குகள்" – மனிதச் சமத்துவம் என்ற உணர்ச்சிகரமான கருத்திற்குச் சற்றும் சம்பந்தமில்லாத சில இறுக்கமான ஒழுக்கங்களுக்காகப் போரிடவும், அதற்காக இறக்கவும் இவர்கள் அணியமாய் இருந்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின் தீவிரக் கருத்தியல்வாதிகளான டிரைட்ஸ்சே, நீட்சே, சேம்பர்லின் போன்றோரை வழிகாட்டியாகக் கொண்ட இந்த மாயாவாத ஆன்மீகவாதி மேற்குலகத்தின் வீழ்ச்சியைக் கண்டு துக்கம் கொண்டு அதற்காக பத்தொன்பதாம் நூற்றாண்டு சனநாயக முற்போக்குச் சக்திகள் மீது போர்ப்பிரகடனம் செய்தார். ''இந்தக் கிரகத்தைக் கைப்பற்றுவதற்கான போராட்டம் துவங்கி விட்டது. நாம் இவ்வுலகில் வாழ வேண்டுமானால், தாராளவாதிகளின் அமைதிக் கோட்பாடுகளை (Pacifism) வெற்றி கொள்ள வேண்டும்'' என இவர் சொல்கிறார். புதிய – ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின் கருத்தியல் இதுதான். காலனிய விரிவாக்கத்தில் ஜெர்மனிக்கு உரிய பங்கு கிடைக்கவில்லை என்றால் உலகத்தையே பேரழிவில் ஆழ்த்துவதாக இது அச்சுறுத்தியது. கிழக்குலகின் நற்செய்தியை உலகுக்குக்கூறிய ஸ்பெங்ஜலர் போன்ற இனவெறியர்களின் எதிரொலியாகத்தான் இந்தப் பாசிசவாதியும் காலனி நாடுகள் தேவை என்ற கோரிக்கையை எழுப்பினார். ஆனால், நடைமுறை என்று வரும்போது இவர் ஒளிவுமறைவின்றி வெளிப்படையாகப் பேசினார். மேற்குலகை அழிவிலிருந்து காப்பாற்றப்போவது இந்தியாவின் நற்செய்தியல்ல. மாறாக, பிரஷ்ய இராணுவவாதத்தின் மறு உயிர்ப்பே என இவர் கூறினார். இவர் வாழ்த்தி வரவேற்றது சுதந்திரம் என்ற நற்செய்தியை அல்ல. மாறாக, அதிலா (Athila) போன்ற கட்டுமிராண்டிக் கும்பல்களின் நடவடிக்கைகளுக்கே இவர் வரவேற்புத் தந்தார். பாசிசவாதிகளைக் கவர்ந்த கிழக்குலகின் ஆன்மீகக் கருத்து இதுதான். பாசிசவாதிகளின் இரத்த வெறி கொண்ட காட்டுமிராண்டித்தனமான செயல்பாடுகளுக்கு இக்கருத்துக்களே ஊக்கம் தந்துவந்தன.

''150 ஆண்டுகளுக்கு முன் துவங்கிய உலகப் புரட்சி'' யின் ஆவி ஸ்பெங்ஜலரை இம்மாதிரியான ஒரு மன நோய்க்கு ஆளாக்கிவிட்டது. பாசிசத் ''தேசியப்புரட்சி'' யின் தத்துவவாதியான இவர் பிரெஞ்ச் புரட்சியைக் குறிப்பிட்டு ''மேற்குலகின் மிகப்பெரிய துரதிருஷ்டம்'' என புலம்பினார். காரணம் இவர் கருத்துப்படி இது மேற்குலகின் வீழ்ச்சியைக் குறிக்கிறது. இக்கருத்து அய்ரோப்பிய வரலாறு குறித்த ஒரு வித்தியாசமான கருத்தாகும். நவீன மேற்குப் பண்பாட்டின் தோற்றத்திற்கு அடையாளம் தந்ததே மாபெரும் பிரெஞ்சுப் புரட்சிதான் என்ற விசயம் பள்ளிமாணவனுக்குக்கூட தெரியும். இன்று அந்தப் பண்பாடு வீழ்ச்சி திசையில் இருக்கிறது. ஆனால், 150 ஆண்டுகளில் உருவாக்கப்பட்டிருந்த சாதகமான விழுமியங்கள் வீழ்ச்சியடையவில்லை. மாறாக, முதலாளியச் சுரண்டல் அமைப்பே வீழ்ச்சித் திசையில் நிற்கிறது. ஒரு நல்லிணக்கமான சமூக அமைப்பிற்கு இம்முதலாளிய அமைப்பு வழிவிட்டாக வேண்டும். ஆனால், சர்வாதிகார ஆட்சிக்கு மறுஉயிர்ப்பு தரக்கூடிய ஒரு கருத்தியலை உருவாக்குவதே ஸ்பெங்ஜலரின் பணியாக இருந்தது. அதற்காக, 150 ஆண்டுகால அரசியல் சுதந்திரமும், சமூக முன்னேற்றமும் ஒரு கெட்ட கனவாக மறக்கப்பட வேண்டும். ''சமத்துவ சனநாயகக் கோட்பாடுகள் அரசின் அடித்தளத்தை ஆட்டம் காணச் செய்துவிடும்'', என இவர் அறிவித்தார். ஏனெனில் இவை நிலக்கிழமை வர்க்க உறவுகளை நிலைகுலையச் செய்துவிடும்.



படிப்பகம்

www.padippakam.com

"தாராளவாதமும், பகுத்தறிவும் அதிகாரம் குறித்தக் கருத்தியலைத் தகர்த்து விடுகின்றன. இதன் விளைவே, தற்போது நிலவும் குழப்பமான சூழல். இம்மாதிரியான சூழலிலிருந்துதான் கம்யூனிசம் என்ற பிசாசு உருவாகிறது." ஸ்பெங்ஜலரின் பைத்தியகாரத்தனத்தில் ஒரு கருத்து ஒழுங்கு இருக்கத்தான் செய்கிறது. முதலாளியப்புரட்சியைத் தொடர்ந்து அவசியமாக பாட்டாளி வர்க்கப்புரட்சி உருவாகிறது. ஆகவேதான் சுதந்திரத்தையும், சனநாயகத்தையும் வெறுக்கும் இந்த மாய ஆன்மீகவாதி, புரட்சி அபாயத்தை முறியடிக்கக்கூடிய கருத்தியல் கருவியைத் தேடி மத்தியகால நிலக்கிழமை காலத்திற்கே பின் சென்றுவிட்டார். சிந்தனையை அகற்றிவிட்டு ,அவ்விடத்தில் விசுவாசம் அமர்த்தப்பட வேண்டும். மாயாவாதத்தைக் கொண்டு பகுத்தறிவு வாதத்தை முறியடிக்க வேண்டும். அப்பொழுதுதான் வரலாற்றுச் சக்கரத்தைப் பின்னுக்குத் தள்ளும் இந்த மூர்க்கத்தனமான முயற்சி பண்பாட்டைப் பாதுகாப்பதற்கான வழி என வாழ்த்தி வரவேற்கப்படும். மனநோயின் வெறிக்கூச்சல்களும், இரத்தவெறி பிடித்த கோட்பாடுகளும், ஸ்பெங்ஜலரிடம் இடம் பெற்றிருந்தபோதும் அவர் ஒரு கண்டிப்பான தர்க்கவாதி ஆவார். கொச்சைப்பொருள்முதலியலின் மோசமான கருத்தியல் வடிவம்தான் இந்தப் புதிய மாயாவாதப் பாசிசத்தத்துவம் என்பதை இவரைத் தவிர வேறு யாரும் மிகத் தெளிவாக மெய்ப்பிக்கவில்லை.

வெப்பர், சம்பார்ட், ஸ்பான் ஆகிய இந்தப் பாசிசத்தத்துவவாதிகள் அனைவரும் பொருள்முதல்கருத்திற்கு வெறிபிடித்த எதிரிகளாகவும் ஆதிக்கப்பண்பு கொண்ட ஆன்மீகவாதத்தை உயிர்ப்பிக்கும் ஆதரவாளர்களாகவும் இருந்தனர். தத்துவார்த்த ஆன்மீகத்தின் மரபுக் கோட்பாட்டை மறு அறிவிப்பு செய்ததன் மூலம் புனிதப்போர் துவங்கிவிட்டது. "இயற்கையைப் புலனறிவது இயலாத செயல்" (ஓட்டோ ஸ்பான்–*அரசியல் பொருளாதாரத்தின் பாடங்கள்*) நாம் நம் சொந்தப் புலனுணர்வுகளைத்தான் புலனறிகிறோம் என்ற பழம் பெர்க்ளியச் சூத்திரத்தின் மறுபதிப்புதான் இது. இவையனைத்தும் மாயக்காட்சிகள்தான். ஸ்பான் அவர்கள் ஒரு புனிதப்போராளிக்கே உரித்தான பற்றார்வத்தோடு பழமையும் அவநம்பிக்கையும் கொண்ட இந்த ஆயுதத்தைக் கையிலெடுத்துக் கொண்டு அனைத்துத் தீமைகளையும் வேரோடு வெட்டி எறிவதற்காகச் சுழற்றி வீசுகிறார். அதாவது இயற்கை அறிவியல்களைத் தூக்கி வீசிவிட்டு படிப்படியாக, தத்துவத்திலிருந்து ஆன்மீகவாதத்தைத் துரத்திவிடுவதே இவர் நோக்கம். இயற்கையை அறிந்து கொள்வது இயலாத செயல் என்பதாலும், இயற்கை குறித்த நம்பத்தகுந்த அறிவை நமது புலனறிவால் தர முடியாது என்பதாலும், இயற்கை அறிவியல்கள் அனைத்தும் பயனற்றவையாகும். முடியாத ஒரு செயலைப் பின்பற்றுவதைக் கைவிட்டுவிட வேண்டும். கடவுள் மீது நம்பிக்கை வைப்பதுதான் நம் வாழ்க்கையின் ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும். "கடவுள் துணையின்றி அறிவைப் பெற முடியும் என்றும், நற்பண்புகளின் துணையின்றி அறிவைப் பெற முடியும் என்றும் உரிமை கோரும் ஒரு கருத்தை (தத்துவார்த்தப் பொருள்முதலியல்) வழிபடுவதை ஒழித்தால்தான் பண்பாட்டைக் காப்பாற்ற முடியும்" (*அதே நூல்*).



படிப்பகம்

www.padippakam.com

இங்கே கண்மூடிப்பழக்கம் அதன் உச்சத்தை எட்டிவிட்டது. நிச்சயமாக பொருள்முதல் தத்துவம் என்பது "கடவுளின் துணையில்லாத அறிவு"தான். இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று முற்றிலும் தொடர்பில்லாதவை என்பது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் பொருள்முதலியல் என்பது மலட்டு நாத்திகத்தைவிட மேலானதாகும். (நாத்திகத்தைப்போல –மொர்) இல்லாத கடவுளைப் பதவியிறக்கும் ஒரு முட்டாள்தனமான முயற்சியில் (Quixotic Venture) பொருள்முதல்வாதம் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாது. அறியாமையே கடவுளின் திருவிடம் என எளிமையாக இது எடுத்து விளக்கும். அறிவு அத்திருவிடத்தைத் தகர்த்துவிடும். அறிவின் ஆய்வொளி கடவுள் என்ற கற்பனை உருவத்தின் மீது பட்டவுடன் இறுதியாகக் கடவுள் மறைந்து விடுகிறார். கடவுளும் அறிவும் இணைந்து செல்லமுடியாது. ஏனெனில், கடவுள் அறிவின் பாதையைத் தடுத்து விடுகிறார். ஸ்பானின் இரண்டாவது முடிவு முழுக்கவே தவறானது. அது ஒரு இழிவான அவதூறாகும். அறிவு என்றைக்குமே நற்பண்புகளைக் கைவிடாது. ஆன்மீக உலகில், ஆன்மீகத் தன்முனைப்பின் (Ego) மன நிறைவிற்காக, நற்பண்பு தன்னைத்தானே விபச்சாரத்திற்கு உள்ளாக்கிக் கொள்கிறது. நற்பண்பு என்பதே லட்சியமாகிவிடாது. ஆனால் அது லட்சியத்தை அடைவதற்கான ஒரு வழிமுறையாகும். நற்பண்புக்குப் பொருள்முதலியல் மரியாதை தருகிறது. விபச்சாரம் என்ற இழிநிலையிலிருந்து அதை மீட்டு அதற்குச் சுதந்திரத்தன்னிலை ( Independent self)என்ற பெருமையை இது பெற்றுத் தருகிறது. பொருள்முதல்வாதி நற்பண்பாளனாக இருப்பது அச்சத்தினால் அல்ல; கட்டாயத்தினால் அல்ல, பேராசையினாலும் அல்ல; மாறாக, இதைத் தவிர அவரால் வேறு மாதிரி இருக்கமுடியாது. நற்பண்பை அதன் மகிழ்ச்சிக்காக மட்டுமே பின்பற்றும்படி பொருள்முதல்வாதிக்கு உரிமை தருவது அறிவே. ஆன்மீகவாதியால் அம்மாதிரியான ஒரு சிறந்த ஆன்மாவைப் பாராட்ட முடியாது. ஆன்மீகவாதி ஒரு தன்னகங்காரப் பண்பு கொண்டவன். இதன் மறுபக்கம் அடிமைக்குணமாகும். இம்மாதிரியான நற்பண்பும், குணமும்தான் முதலாளியச் சமூகத்தின் உடைப்புகளை ஒட்டவைக்கத் தேவைப்படுகிறது. அறியாமை, மூடநம்பிக்கை ஆகியவற்றோடுதான் இந்தப் பண்பும் குணமும் உறவு கொண்டிருக்கின்றன. அறிவியலின் அறிவியலான பொருள்முதல்தத்துவமானது இந்தப் பழம் தெய்வங்களைக் கோயில்களின் இருட்டிலிருந்து விரட்டியடிக்கிறது. ஆகவேதான் இது (பொருள்முதலியல்) அழிக்கப்பட வேண்டும். வெறிபிடித்த இந்தப் புனிதப்போராளி பின்வருமாறு வியக்கிறார். "பொருள்முதல்வாதத்தின் அனைத்துவகைகளையும் முழுமையாக ஒழிப்பதை லட்சியமாகக் கொண்ட ஒரு போர் நடத்தப்பட்ட வேண்டும். அறிவொளிக் காலத்திலிருந்து, பண்பாட்டை மீட்பதற்கான மிக அவசியக் கடமை இதைத் தவிர வேறொன்றுமில்லை" (*அதே நூல்*).

அனைத்துவகைப் பொருள்முதலியல் வகைகளுக்கும் எதிராகத் தாக்குதல் தொடுக்கப்படவேண்டும். அதே நேரத்தில் இயற்கை அறிவியல்களுக்கு எதிரான தாக்குதல்களும் தொடரப்பட வேண்டும். அறியொணாவாதிகளுக்குக்கூட(agnostics)



படிப்பகம்

www.padippakam.com

ஒரு இடம் தரப்படக்கூடாது. பாசிசத்தின் இந்த வளர்ச்சி அசலானதொரு சாகச நடனம் ஆகும். ஆனால், இது எதை அழிப்பதற்கு? மேற்குலகப் பண்பாட்டின் "பொருள்முதலியலை" யா இது அழிக்கிறது, இல்லவே இல்லை. பொருள்முதல்வாதத் தத்துவத்தின் அபாயத்திலிருந்து முதலாளியப் பண்பாட்டைப் பாதுகாப்பதற்கான புனிதப்போரா இது? அதுவும் இல்லை. அறிவியல் கருத்துக்களால் கறைப்படுத்தப்பட்ட, குழப்பத்திற்குள்ளான ஆன்மிகத்தின் சாரத்தை மறுஉறுதி செய்வதுதான் இந்த முக்திச் செயலின் (salvation) நோக்கமாகும். மேற்குப் பண்பாட்டின் மரபில் பொருள்முதலியல் இடம் பெற்றிருக்கவில்லை. அப்பண்பாட்டின் ஆன்மிக மரபிற்கு இது அன்னியமானது. மேற்குலகப்பண்பாட்டின் கொடிய எதிரியாகப் பொருள்முதலியல் கருதப்படுகிறது. முதலாளியப் பண்பாட்டின் தத்துவ வரலாறு முழுக்கவும் தத்துவார்த்தப்பொருள்முதலியலுக்கு எதிரான போராட்டமாகவே இருக்கிறது. இறுதியில் இந்தப் போர் ஒரு முக்கியக் கட்டத்தை எட்டிவிட்டது. முதலாளியத்தை மீட்பதற்கு, பொருள்முதல் தத்துவத்தின் அழிவு ஒரு முன்நிபந்தனை ஆகிவிட்டது. வாழ்வா சாவா என்ற இறுதிக்கட்டப் போராட்டத்தில் சிக்குண்ட முதலாளியம் தன் பாதுகாப்பிற்காக அடிப்படைவாத மதத்தின் மறு உயிர்ப்பை நாடுகிறது. அறியாமை, மூடநம்பிக்கை, விசுவாசம், மாயாவாதம் போன்ற இருண்ட சக்திகளைத் தன் கருவியாக எடுத்துக் கொள்கிறது. புதிய ஆன்மீகவாதத்தின் தத்துவத்தைக் கறாராக எதிர்க்க வேண்டும். பண்டைய தூய்மையோடும மத்தியகாலக் காட்டுமிராண்டித்தனத்தின் பேரொளியோடும் இத்தத்துவம் தோற்றம் தருவதால் தன் சீடர்களை வெறியேற்றி விடலாம் என்ற நம்பிக்கை இதற்கு இருக்கிறது. இதன் போலி–அறிவியல் ஆடையைக் கழற்றி வீசிவிட்டால் இது இந்தியர்களின் கருத்தோடு அதாவது தங்கள் இனத்திற்கே உரித்தான சிறப்பு நுண்ணறிவு என உரிமை கொண்டாடிக் கொள்ளும் ஒரு கருத்தோடு இது ஒத்துப்போகிறது. அருவமான வடிவில் இந்த மாயாவாத மரபும், தொன்மை மரபும் செம்மாந்த சிறப்புடையதாகத் தோன்றும். ஆனால் இதன் நடைமுறை மதிப்பு நிச்சயம் இதன் சிறப்பு குறித்த கனவைத் தகர்த்து விடும். பாசிசத்தின் கொச்சைப்பொருள்முதல் செயற்பாடுகளும், இட்லரியத்தின் கொடூரமான காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளும் இதைத்தான் காட்டுகின்றன.

முற்போக்குச் சக்திகள் செயலற்று பலவீனமாக, விழிப்பற்ற நிலையில் இருக்கும்போது அல்லது அவை அழிக்கப்பட்ட நிலையில், பிற்போக்காளர்களின் கருத்தியல் கருவியாக ஆன்மீகவாதம் மாறிவிடுகிறது. இந்தியாவைப் பொறுத்த அளவில் இது மிகமிக முக்கியத்துவம் வாய்ந்தது. முற்போக்குச் சக்திகள் விழிப்போடும், வன்மத்தோடும் அச்சுறுத்தும் நிலையில் இருக்கும்போது எதிர்ப்புரட்சியின் பதாகையாக ஆன்மீகவாதம் மாறிவிடுகிறது. "சமூக மனக்குறைகளால் உண்டாகும் தீமைகளை" முறியடிக்கும் லட்சியத்தோடு இது களம் இறங்குகிறது. இந்த நோக்கத்திற்காகத்தான் இது இன்று மேற்குலகில் கடமையாற்றி வருகிறது. இந்தியாவிலும் நாளை இதே கடமையை இது செய்யக்கூடும். அதற்கான தீய சகுனங்கள் கண்களில் தென்படுகிறது. இந்த இரு இடங்களிலுமே இதன் எதிரி முற்போக்குச் சக்திகள்தான்.



படிப்பகம்

www.padippakam.com

கொடுங்கோன்மைக்கும், வன்முறைக்கும் அனுபூதியியலின் ஒப்புதலைப்பெற்ற தீவிரமான ஆன்மீகவாதமே பாசிசத்தின் தத்துவமாகும். இது ஒரு மாயப்புதிராகும். இது மதவெறி கொண்டதாகும். ''ஆரியக் கலாச்சாரத்தின் புத்துயிர்ப்பு மூலமாக ஜெர்மன் இனத்திற்கு ஆன்மீகப் புத்தாக்கம் தருவதுதான்'' இட்லரியத்தின் அறிவிக்கப்பட்ட மேன்மையான லட்சியமாகும். ''நவீனப்பண்பாட்டின் பொருள்முதலியலுக்கு'' எதிராகவும் இது தன் சீற்றத்தை வெளிப்படுத்தி வந்தது. அத்தீமையைச் சரிசெய்ய தான் உறுதி பூண்டிருப்பதாக அறிவித்துக் கொண்டது. ஜெர்மன் இனத்தை அதன் பண்டைய தூய்மையை நோக்கியும், மத்தியகால எளிமையை நோக்கியும் திருப்பி அழைத்துச் செல்வதே இதன் திட்டமாகும். இவ்வாறு புத்துயிர் அளிக்கப்பட்ட ஜெர்மன் மக்கள் கடவுளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாகச் செயல்பட்டு உலகம் முழுதும் தங்கள் ஆட்சியை நிலைநிறுத்துவார்கள். இந்திய வைதீகத்தேசியத்தின் சமய நம்பிக்கையையே இது பெருமளவு ஒத்திருக்கிறது.

பாசிசத்தின் மாயாவாதக் கருத்தியலானது சுவஸ்திக் சின்னத்தின் வாயிலாக பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது. இதனை ஏற்றுக் கொண்ட வெறிக்கும்பலுக்கு கேள்வி கேட்காமல் அடிபணியக் கற்றுத்தரப்பட்டது. அறியாமையைப் பெருமைப்படுத்துவதுதான் மாயாவாதமாகும். அறியாமை என்ற நேர்மையற்ற சொத்திலிருந்துதான் இது ஆன்மீகம் என்ற ஆதாயத்தை எடுத்துக் கொண்டது. மக்களை மாயாவாத மயக்கத்தில் ஆழ்த்தாதவரை, அம்மக்கள் தம் அடிமைத்தனத்தில் மகிழ்ச்சியோடு இருந்து வருவார்கள் என எதிர்பார்க்கமுடியாது. இந்த நிலையில், அறியாமையை மகிழ்ச்சியாகக் கருதாத தன் சொந்தச் சகோதரர்களின் இரத்தத்தைக் கொண்டு, துருப்பிடித்துக் கிடக்கும் தங்கள் அடிமைச் சங்கிலிகளை இம்மக்கள் புதுப்பித்துக் கொள்வார்கள் என எதிர்பார்ப்பது நடக்கமுடியாத ஒரு செயலாகும். கடந்தகாலம் பற்றிய ஒரு லட்சியக் கனவு மக்களின் இன்றைய குரூரமான எதார்த்தங்களை மறக்கச் செய்துவிடுகிறது. எதிர்காலத்தில் ஒரு நல்ல வாழ்க்கை குறித்த கனவைத் தடுத்துவிடுகிறது. பொற்காலத்தின் மாயதெய்வங்களை வழிபடும் தீவிரவெறியில் தங்களின் தற்போதைய வாழ்க்கைத் துன்பங்களுக்குக் காரணமான கொடியவர்களை அழிக்க வேண்டிய வரலாற்றுக் கடமையிலிருந்து மக்கள் மிக எளிதாக வழிதவறி விடுகிறார்கள். தற்போதைய அவலங்களால் ஆதாயம் பெறும் நபர்களின் நலன்களுக்குத்தான் கடந்தகாலம் குறித்த இலட்சியக்கனவு ஊழியம் புரிகிறது. கடந்தகால ஆன்மீகப்பண்பாட்டிற்கு மறுஉயிர்ப்புத் தர ஆர்வம் காட்டுவது இன்றைய கொச்சைப்பொருள்முதல் நடைமுறைகளைப் தொடருவதற்கே பயன்படும்.

பாசிசம் கொக்கி போன்ற சிலுவையை (ஸ்வஸ்திக் சின்னம்) உயர்த்திப் பிடிப்பது, முதலாளியத்தின் எதிரிகளைச் சிலுவையில் அறையத்தான். இந்தக் கேடுகெட்டபோர் (unholy war) மதவெறியோடு நடத்தப்படுகிறது. காட்டுமிராண்டித்தனமான செயல்முறைகள் மூலம் நவீனப்பண்பாட்டை முறியடிக்கவே ஆரியப்பண்பாட்டின் புத்துயிர்ப்பு முன்வைக்கப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

வெறிகொண்ட மதச் செயல்பாடுகள் மூலமாக மாயக்கடவுள்கள் கட்டியெழுப்பப்படுகிறார்கள். வடபகுதிக் காட்டுமிராண்டிகளின் கடவுள்களான தார்(Thor), வோட்டன் (Wotan) குறித்த வழிபாடுகள் மறுநிர்மாணம் செய்யப்பட்டன. பாசிச ஜெர்மனியின் மூதாதையர்களான ஆரியர்கள் மத்திய ஆசியப் பகுதியிலிருந்து வந்தவர்கள் அல்ல. அவர்கள் ஸ்காண்டிநேவியப் (Nortic) பகுதியைச் சேர்ந்த சுத்தமான உயர்குடியினராவர்.

ஆரியப்பண்பாடு என்ற லட்சியத்தைப் பொதுவாக வழிபாட்டு வந்தவர்களிடையே பகைமை தோன்றுவதற்கான காரணம் இங்குதான் இருக்கிறது. நவீன மானுடவியல் ஆய்வாளர்கள் ஆரியஇனம் என்ற கோட்பாட்டை உடைத்தெறிந்து விட்டார்கள். தனித்தன்மையான ஆரியப்பண்பாடு என்பது ஒரு தொன்மக்கருத்தே(myth). பாசிச இயக்கம் ஆரியமயமாவதைக் கண்டு சொக்கிப்போன இந்தியத் தேசியவாதிகள் ஒரு விசயத்தைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். பாசிச ஆரியமயம் என்பது வெள்ளையின மேலாண்மையை வழிபடுவது ஆகும். இருவருமே வெள்ளையினத்தின் மேலாண்மையைத்தான் (பிற இன மக்களுக்குப் பண்பாடு கற்றுக் கொடுக்க வேண்டிய வெள்ளை மனிதனின் சுமையைத்தான்) பேசிவருகிறார்கள். இந்த நிலையில் ஆங்கில ஏகாதிபத்தியத்திற்குப் பதிலாக இட்லரோ அல்லது முசோலினியையோ ஏன் தேர்ந்தெடுக்க வேண்டும்? இந்த அவல நகைச்சுவை ஆரியவழிபாட்டின் புராணப்பண்பையே–அவர்கள் பாசிசவாதிகளாய் இருந்தாலும் சரி அல்லது இந்திய ஆன்மீக ஏகாதிபத்தியவாதிகளாய் இருந்தாலும் சரி–வெளிப்படுத்துகிறது. ஜெர்மன் பண்பாட்டைக் காட்டிலும், இந்தியப்பண்பாட்டில்தான் ஆரிய இன ஆன்மீக மேதைகளின் முத்திரை பொதிந்திருப்பதாக இனிமேல் சொல்லமுடியாது. இந்த இரு இடங்களிலுமே ஆரியவழிபாடு என்பது பிற்போக்குச் சக்திகளின் கருவியாய் இருந்து வருகிறது. அறிவியல் வரலாற்று அடிப்படை ஏதுமில்லாமல் அறியாமை என்ற அடித்தளத்தின் மீது நின்று ஜெர்மனியில் தொழில் அதிபர்கள், வங்கியாளர்கள் போன்ற மேல்தட்டு வர்க்கங்களின் பொருளாயத நலன்களுக்கும் இந்தியாவில் புரோகிதர்கள், நிலக்கிழார்கள் போன்ற மேல்தட்டு வர்க்கங்களின் பொருளாயத நலன்களுக்கும் இது ஊழியம் புரிந்து வருகின்றது.

தார், வோட்டன் போன்ற உருவ வழிபாடுகள் மத ஆரவாரம் என்பதற்கு மேல் வேறு ஒன்றிற்கும் பயன்தராது. தன் மக்களில் மிகப்பிற்படுத்தப்பட்ட நிலையில் உள்ள ஒரு பிரிவினர் காட்டுமிராண்டித்தனத்தில் வீழ்வதை ஜெர்மனியின் உயரிய பண்பாடு நிச்சயம் அனுமதிக்காது. பாசிசச் சொற்பொழிவுகளால் வரலாற்றுச் சக்கரத்தை–தற்காலிகமாகவேனும்–தொலைதூரத்திற்குப் பின்னுக்குத் தள்ளிவிட முடியாது. பாசிசக்கருத்தியலானது கிறித்துவ அடிப்படைவாதத்தோடு காட்டுமிராண்டிக்கால மாயாவாதத்தை இணைத்துக் கொண்டது.

பாசிச ஜெர்மன் கிறித்துவ இயக்கத்தின் தலைவரான லூட்விக் மொலார் "தந்தை நாட்டைப் பாதுகாக்க கடவுள் அடால்ப் இட்லரை அனுப்பியிருக்கிறார்" என அறிவித்தார். சொர்க்கத்திலிருந்து பூமிக்குப் புறப்பட்ட கல்கி அவதாரம் பாதை மாறி



படிப்பகம்

www.padippakam.com

இந்தியாவிற்குப் பதிலாக ஜெர்மனியில் அவதரித்துவிட்டாரோ என எண்ணத் தோன்றுகிறது. ஆனால் அந்த அவதாரம் சனாதனதர்மத்தை மறுநிர்மாணம் செய்யும் தன் பணியில் ஈடுபட்டிருக்கும் வரை அது எங்கு அவதரித்தது போன்ற விசயங்கள் அவ்வளவு முக்கியமானதாக இருக்காது. அடால்ப் இட்லர் தன் தெய்வீகப்பணியில் நம்பிக்கை கொண்டிருந்தார். “ஜெர்மன் கிறித்துவத் தேவாலயத்தின்” உயரிய அருட்தந்தையான இட்லர் பின்வருமாறு வியக்கிறார் : “ ஒவ்வொரு விசயமும் கடவுளின் அற்புதங்களில் ஒன்றாகவே தெரிகிறது”. நிச்சயமாக இது ஒரு அற்புதம்தான். இல்லையெனில் எப்படிப் படிப்பறிவில்லாத ஒரு கவர்ச்சிப் பேச்சாளன் ஜெர்மனியின் மீட்பராக(Messiah) மாறியிருக்க முடியும்? எல்லையற்ற அதிகாரங்கள் கொண்ட பதவிக்கு, தான் உயர்ந்த விசயம் ஒரு அற்புத நிகழ்வாக இட்லருக்கு நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். ஏனெனில், அப்பதவிக்கான தகுதி ஏதும் அவரிடம் இல்லை. நவீனப்பண்பாட்டை ஏற்றுக்கொண்ட அனைத்து மதிப்பீடுகளையும் நிறுவனங்களையும் நசுக்கிய இரண்டாண்டு அனுபவத்திற்குப் பிறகு செப்டம்பர் 1934 இல் இட்லர் பின்வருமாறு அறிவிக்கிறார் : “ நாம் நாத்திகத்திற்கு எதிராகவும், நல்லொழுக்கத்தின் வீழ்ச்சிக்கு எதிராகவும் போரிட்டு வருகிறோம் என்பதை அனைவரும் அறிவீர்கள். நமது பணிகளைக் கடவுள் ஆசீர்வதிக்கிறார் என்பது உறுதி”. ஒரு ஆண்டுக்குப் பிறகு தனது கொடூரமான செயல்பாடுகளின் வெற்றியால் போதையேறிய இவர் பின்வருமாறு அறிவிக்கிறார் :“பதினைந்து ஆண்டுகளுக்கு முன் நம்பிக்கை, மனஉறுதி தவிர என்னிடம் வேறொன்றுமில்லை. இன்றோ, ஜெர்மன் குடியரசு (Reich) என் கையில் உள்ளது. எல்லாம்வல்ல இறைவனின் ஆசியின்றி இது நடந்திருக்க முடியுமா? நாம் எதற்கு எதிராக இல்லாமல் இருக்கிறோமோ அதுவாகவே நாம் இருக்கிறோம். ஆனால் அதுவும் கூட கடவுளின் சித்தம்தான்”. மலைச்சிகரத்தை எட்டிப்பிடித்த படிப்பறிவில்லாத ஒரு துணிச்சல்காரரின் நம்பிக்கை மட்டுமல்ல இது. தான் தேர்ந்தெடுத்த மனிதனின் வெற்றியைக் கொண்டாடும் ஆளும் வர்க்கத்தின் மனவிருப்பமும் கூடத்தான்.

மனித இனத்தின் மீது பாசிஸ்டுகள் நடத்திய கொடூரக் குற்றங்களை எந்த ஒரு மனிதவாதத்தைக் கொண்டும் நியாயப்படுத்திவிட முடியாது. ஆகவேதான் அதற்கு தெய்வத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது. நியாயமும் பண்பாடும் கொண்ட செயல்முறைகளை நியாயப்படுத்த, வஞ்சகர்களின் அய்யத்துக்கிடமான அதிகாரத்தின் தேவை அவசியமில்லை. தன் சொந்தத் தகுதிகள் மீது அச்செயல்முறைகள் நிற்க வேண்டும். இட்லரின் தெய்வம் சொர்க்கத்தில் வாழ்ந்திருக்க முடியாது. இந்த நிலையற்ற பூமியில்தான் வாழ்ந்திருக்க வேண்டும். இரத்தம் சிந்தும் வாளோடு அவர் ஜெர்மனியில் தோன்றியிருந்தார். கடவுளின் தூதுவனாக அவர் தோன்றவில்லை. மாறாக, பணத் தெய்வத்தின் தூதுவனாகவே அவர் தோன்றியிருந்தார்.

பாசிசவாதிகளின் மதவெறியும் மாயாவாதமும் வஞ்சகமானதோடு மூடநம்பிக்கையும் கொண்டதாகும். ஜெர்மானிய (ஜெர்மன் கத்தோலிக்கக் கட்சியின்)



படிப்பகம்

www.padippakam.com

பத்திரிக்கையில் வெளியான ஒரு பத்தி இட்லரியத்தின் மதவெறி குறித்து ஒரு முக்கியமான மதிப்புரையைத் தருகிறது. அது பின்வருமாறு :"கிறித்துவ மதம் தோன்றுவதற்கு முன்பிருந்த காட்டுமிராண்டித்தனம்(heathenism) குறைந்தபட்சம் தங்கள் குலதெய்வங்களுக்காவது மரியாதை தந்து வந்தது. அந்த அளவில் அது பக்திப்பண்பு கொண்டதாக இருந்தது. ஆனால் மத–விரோதம் கொண்ட இந்த நவ–காட்டுமிராண்டித்தனமோ (neo-heathenism) அதைக்காட்டிலும் தரம் தாழ்ந்ததாக இருக்கிறது". இதைவிட ஒரு மோசமான மதிப்புரையைக் கிறித்துவ உலகின் ஆன்மீகத்தலைவர் தருகிறார். ஜெர்மனியில் உள்ள கத்தோலிக்கத் தேவாலயத்தை நாஜிகள் தாக்கியதால் சினமுற்ற போப் பிப்ரவரி 1934 இல் பின்வரும் அறிவிப்பை வெளியிட்டார் : "மாபெரும் உன்னத ஜெர்மன் மக்கள் வரலாற்றில் ஒரு அவலமான காலகட்டத்தில் நின்று கொண்டிருக்கிறார்கள். கிறித்துவம் அல்லது மனிதகுலம் சம்பந்தப்படாத கருத்துக்களை மேன்மைப்படுத்தும் ஒரு இயக்கம் மனிதாபிமான உணர்வுகளைக் கூட முடிந்த அளவு அகற்றிவிட்ட பின்பு இம்மாதிரியான பெருமித வாழ்க்கையைத்தான் முனவைக்கும்".

பாசிசப்பயங்கரவாதம் அரசியல் களத்தோடு நின்றுவிடவில்லை. மக்களின் மத வாழ்க்கையைக் கூட இது விட்டுவைக்கவில்லை. சகிப்புத்தன்மை என்பது பாசிசத்தத்துவம் அறியாத ஒரு விசயம். இட்லர் பதவிக்கு வந்த நேரத்தில் ஜெர்மன் புராட்டஸ்டன்ட் தேவாலயத்தின் தலைவராக மிகப்பிரபலமான ஒருவர் இருந்தார். அவர் பெயர் பிசப் பட்டில் சுவிங். இவர் முற்போக்கு எண்ணம் கொண்ட ஒரு நவீனமதகுருவாக இருந்தார். அவர் பாசிசத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. உண்மையான கிறித்துவப் பக்தியாலும், அருட்குணத்தாலும் உறுதி செய்யப்பட்ட இவரின் சனநாயக உறுதிப்பாடு "ஏழைகளின் பிசப்" என்ற பெயரை இவருக்குப் பெற்றுத் தந்தது. அனைத்து ஆன்மீகத் தகுதிகளையும் கொண்ட இம்மாதிரியான ஒரு மனிதன் ஜெர்மன் கலாச்சாரத்தை "ஆரியமயப்படுத்துவதை" ஆதரிக்க முடியாது. மத அமைப்பில் உயர் பதவிக்கு நடந்த தேர்தலில் இவரைத் தோற்கடிக்க இட்லரின் ஆட்களால் முடியவில்லை. மீண்டும் இவர் அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதற்குப் பின்னால், பாசிசவாதிகள் தங்களின் கேவலமான தேர்தல் நாடகத்தை அரங்கேற்றினர். பாசிசவாதிகள் இப்பொழுது முழுதாக அதிகாரத்தில் அமர்ந்திருந்ததால் பயங்கரவாதம், அடக்குமுறை, அவதூறு போன்ற வழிமுறைகளை மிகத்திறமையாகப் பயன்படுத்தினார்கள். ஜெர்மன் மக்கள் தொகையில் மிகப் பெரும்பான்மையினராக இருந்த தொழிலாளிவர்க்கம், இது ஒரு மதத்தேர்தல் என்பதால் அலட்சியம் காட்டினர். ஆகவே பாசிசவாதிகள் நிறுத்திய வேட்பாளர் வெற்றிபெறுவது உறுதியாகிவிட்டது. பிரபலமான, உண்மையான, கிறித்துவ மதகுருவை அகற்றி, அவ்விடத்தில் இட்லரின் அடிவருடியை அமர்த்துவதற்குத் தேர்தலில் இவர்கள் வைத்த முழக்கம் "நாங்கள் யேசு கிறித்துவின் புயல்படையினர்" என்பதே. இட்லரின் ரௌடிகள் போலித்தனமான மதஆர்வத்தோடு மக்களை அவர்கள் விருப்பத்திற்கு மாறாக



படிப்பகம்

www.padippakam.com

வாக்களிக்கும்படி கட்டாயப்படுத்தினர். இவ்வாறாகத் தொழில்பிரபலங்கள், வங்கிப் புள்ளிகள், உயர்குடி நிலக்கிழார்கள்(Junker) ஆகியோரின் இவ்வுலக நலன்களைப் பாதுகாப்பதற்காக வன்முறை, அவதூறு ஆகிய அடித்தளத்தின் மீது "ஜெர்மன் கிறித்துவம்" நிறுவப்பட்டது. தேர்தல் பிரச்சாரத்தின்போது இட்லர் "தேவாலயத்தைக் காப்பாற்றாத ஒரு அரசாங்கம் பயனற்றது", என முழங்கியதன் மூலம், பாசிசச் சர்வாதிகாரியின் ஆன்மீக உணர்வை வெளிப்படுத்திக் காட்டினார். தேவாலயம் மட்டுமே அரசாங்கத்திற்கு ஊழியம் புரிய வேண்டும். மதிப்பு வாய்ந்த கத்தோலிக்கத் தேவாலயத்திற்கோ அல்லது பிரபலமான இவான்ஜலிகல் (Evangelical) தேவாலயத்திற்கோ பாசிச அரசு பாதுகாப்புத் தரவில்லை. பாசிசக் காட்டுமிராண்டித்தனங்களுக்கு தெய்வீக ஒப்புதலைப் பெற ஒரு புதிய தேவாலயம் உருவாக்கப்பட்டது. சகலவல்லமையும் பெற்ற அரசின் ஆன்மீக ஆயுதம் இது என்று அறிவிக்கப்பட்டது. பண்டைய ஆரிய உணர்வோடு, தர்மத்தைப் பாதுகாப்பது பாசிச அரசின் கடமைகளில் ஒன்றாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. வர்க்க ஆதிக்கத்தின் ஆன்மீகக் கருத்தியலே அந்தத் தர்மம் ஆகும். பயங்கரவாதம், வன்முறை, அவதூறு போன்றவற்றின் மூலம் பிரபல கிறித்துவத் தலைவருக்கு எதிராகப் பெற்ற வெற்றியை இட்லரின் அடிவருடிகள் "கடவுள் செய்த அற்புதம்" என அறிவித்தனர். பூமியில் உள்ள பாசிச அரசின் சொர்க்கத்தில் ஒவ்வொரு செயலுமே அற்புதம்தான். ஒவ்வொரு வன்முறைக்கும் காட்டுமிராண்டித்தனத்திற்கும் பின்னே கடவுளின் ஆசி இருப்பதாகக் கருதப்பட்டது. பிரபலமான ரிச்ஸ்டாக் தீவைப்பு விசாரணையின்போது கோரிங்(Goering) பின்வருமாறு முழக்கமிட்டான் : "தீ வைக்கப்பட்ட அன்று இரவு இட்லர் இதை சொர்க்கத்திலிருந்த வந்த நல்ல சகுனம் என அறிவித்தார்". கடவுளின் திருப்பணியில் கலகக்காரர்கள் தெய்வபக்தியோடு பேசுகிறார்கள்.

பாசிச நடைமுறை மிகவும் வெறுக்கத்தக்க அளவு வளர,வளர அதற்குத் ஏற்றாற்போல "அதன்தலைவரை" கடவுளாக்கும் பணியும் மிக அழுத்தமாக வளர்ந்தது. இன்று, இட்லர் மாயத்திரிசூலத்தில் ஒருவராகிவிட்டார். ஜெர்மன்கடவுள், ஜெர்மன் மக்கள், இட்லர் என்ற திரிசூலம் உருவாகிவிட்டது. ஜெர்மன் இவான்ஜலிகல் தேவாலயப் பலிபீடத்தில் இவர் படம் இடம் பெறுவது இன்று வாடிக்கையான பிரபலமான காட்சியாகும்.

ஜெர்மன் கிறித்துவத்தின் தேவதூதரான ஆல்பிரட் ரோஸன்பெர்க்கின் *இருபதாம் நூற்றாண்டின் தொன்மம்* என்ற புத்தகம் தேசியச்சோசலிசத்தின் (இட்லரின் கட்சி–மொர்) பைபிளாக மாறிவிட்டது. மரபான கிறித்துவத்தின் நற்பண்புகளை இவர் "எதிர்மறையானது" எனக்கூறி புறக்கணிக்கிறார் ."நேர்மறைக் கிறித்துவம்" என இவர் அழைக்கும் நற்பண்புகளை முன்வைத்து அதை எதிர்க்கிறார். இந்தப் புதியநம்பிக்கை ஏசுவின் அறிவுரைகளுக்கு மிகமிக விரோதமாகவே இருந்தது. கிறித்துவத்தை இப்படிக் கொச்சைப்படுத்தப்படுவதை எதிர்த்து இவான்ஜலிகல் தேவாலயத்தின் வைதீக மதகுருமார்கள் ஒரு அறிக்கைவிட வேண்டியதாயிற்று. இந்த அறிக்கை தலைவருக்கு (இட்லர்) மட்டுமே



படிப்பகம்

www.padippakam.com

அனுப்பப்பட்டது என்ற போதிலும், அவரை எதிர்த்த இம்மதகுருமார்கள் அவருக்கு முறையான மரியாதை தந்திருந்தபோதிலும் ''அச்சத்தையும், கவலையையும்'' மட்டுமே அந்த அறிக்கை வெளிப்படுத்தியது என்ற போதிலும், அது திட்டமிட்டுக் காவல்துறையால் நசுக்கப்பட்டது.

அந்த வரலாற்றுப் புகழ்பெற்ற அறிக்கை பின்வருமாறு முடிகிறது : ''மிகப்பெரிய இலட்சியம் கடவுளின் விருப்பத்திற்கு எதிராக முன்வைக்கப்படுமானால் இறுதியில் மக்களுக்கு அது அழிவையே தரும். தேசியமதகுரு என்ற மதிப்பு இட்லருக்கு இருக்கிறது. கடவுளுக்கும், மக்களுக்கும் இடையில் நிற்கும் தூதர் என்ற மதிப்பு கூட அவருக்கு இருக்கிறது''. கோயபல்சின் பின்வரும் அறிக்கை தேவாலய வைதீக மதகுருமார்களின் அச்சமும் கவலையும் நியாயமானதே என்பதை மெய்ப்பித்தது. ''தலைவர் மக்களுக்கு இறுதி வேண்டுகோள் விட்டால் நாடு முழுக்கவும் ஒரு ஆழமான எழுச்சி நடைபெறுகிறது என்பதே அதன் பொருள். கடவுளின் ஒரே வீடாக ஜெர்மன் மாறிவிட்டது என்றே ஒருவர் உணரக்கூடும். கடவுளின் சிம்மாசனத்தின்முன் அதன் தூதர் நிற்கிறார் என்பதே அதற்கு சாட்சி. சுதந்திரமும், அமைதியும் வேண்டி மக்களின் சொர்க்கத்திற்கு வேண்டுகோள் விடுவது கேட்கப்படாமலேயே போய்விடாது. ஒரு நாடு தன் பிரதிநிதி மூலம் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறது. முழு நம்பிக்கையோடு அவர் (இட்லர்) கைகளில் தன் தலைவிதியையும் வாழ்க்கையையும் கையளித்துள்ளது''.

புதிய இறைத்தூதருக்குப் பிந்திய கிறித்துவம் பற்றி ரோஸன்பெர்க் ஒரு சித்திரத்தைத் தருகிறார். பைபிள் முன்வைத்த யேசு ஒரு ஏமாற்றுச் சித்திரம் என இவர் அதை மறுத்தொதுக்குகிறார். ''மேத்யூ போன்ற யூத வெறியர்களும், பால்(Paul) போன்ற பொருள்முதல் கருத்துக் கொண்ட யூத மதகுருக்களும் டெர்ட்டுலியன்(Tertullian) போன்ற ஆப்பிரிக்க சட்ட அறிஞர்களும், அகஸ்டின் போன்ற இழிபிறப்பு நாய்களும் முன்வைத்த சித்திரமே அது'' என அவற்றை ஒதுக்குகிறார். இவர் முன்வைக்கும் ''நேர்மறைகிறித்துவத்தின்'' ஏசு டியூடானிக் பெற்றோர்களுக்குப் பிறந்தவர்; ஒரு தீவிரமான புரட்சிக்காரராக இவ்வுலகில் தோன்றியவர்; அமைதியை நிலைநாட்ட அவர் தோன்றவில்லை; மாறாக, இட்லரைப்போல, கையில் வாளோடுதான் அவர் தோன்றினார் என்ற ஒரு சித்திரத்தை அவர் முன்வைக்கிறார். ரோஸன்பெர்க் கண்டுபிடித்த யேசுவின் இலட்சியம் புரட்சியை நசுக்குவதே ஆகும். கிறித்துவத் தேவாலயங்கள் தனது தேவதூதரின் அறிவுரைகளை மறந்துவிட்டன என்று இவர் குற்றம் காட்டினார். கிறித்துவத்தை நிறுவிய தேவதூதனின் எதிர்ப்புரட்சி லட்சியத்தை நிறைவேற்றவே இட்லர் வந்திருக்கிறார் என இவர் அறிவிக்கிறார். கிறித்துவத்தின் தோற்றம் குறித்த உண்மைகளை நன்கு அறிந்த ஒருவர், கோழைத்தனமாகப் பணிந்து செல்வது பற்றிய கோட்பாடுகளை யேசு பிரச்சாரம் செய்யாமல் இருந்திருந்தால், அவர் எதிர்ப்புரட்சியின் கதாநாயகனாக தோன்றியிருக்கமுடியாது என்பதை அறிந்திருப்பார். இதற்கு மாறாக, ரோமப்பேரரசின் ஒடுக்குமுறைக்கு எதிரான யூத மக்களின் கலகத்தலைவனே வரலாற்று யேசு ஆவார்.



படிப்பகம்

www.padippakam.com

உண்மையான கிறித்துவம், புரட்சிகர இயக்கத்தின் கருத்தியலாகும். ரோஸன்பெர்க்கின் நேர்மறைக்கிறித்துவம் இரத்தவெறி கொண்ட எதிர்ப்புரட்சி வழிபாடாகும். உண்மையில் சொல்லப்போனால், பிற்போக்கு வைதீகக் கிறித்துவத் தேவாலயத்திற்கு எதிராக இவர் உண்மையான கிறித்துவத்தை மறு உயிர்ப்பு செய்யமுன்வரவில்லை.

"வோடன், சிக்ப்ரிடு போன்ற புராணவீரர்களை வழிபடும் மதங்களையும் ரோம்,லிட்டன்பர்க், ஜெனிவா போன்ற இடங்களைச் சேர்ந்த மதங்களையும் ரோஸன்பெர்க் எதிர்த்தார். சூரியக் கடவுளின் சின்னமான தீமைதரும் சுவஸ்திக் சின்னத்தையும், துயரார்ந்த கிறித்துவச் சின்னமான சிலுவைச் சின்னத்தையும் எதிர்த்தார். இனத்தூய்மையையும், இரத்தத்தூய்மையையும் கொண்ட வாழ்ந்து கொண்டிருக்கும் மதத்தையும், அறமதிப்பீடுகளையும், தேசிய எல்லைகளைக் கடந்த மதமான பிரபஞ்ச ஆன்மாவையும், மானுடச் சகோதரத்துவத்தையும் எதிர்த்தார். அதிமனிதனின் மதத்தையும் நலிவடைந்த கீழான மனிதனின் மதத்தையும் எதிர்த்தார். அடிப்படையான ஜெர்மானிய நற்பண்புகளான நேர்மையையும், சுதந்திரத்தையும் எதிர்த்தார். (வெள்ளை இனத்தவர் வாழும்) அய்ரோப்பிய நார்டிக் பகுதியின் ஆன்மாவிற்கு தீமையானது என்றும் நிரந்தரமான அச்சுறுத்தல் என்றும் ஒவ்வொரு நேர்மையான ஜெர்மானியனும் உணர்ந்திருந்த தளர்ச்சியூட்டும் கிறித்துவ நற்பண்புகளான இரக்கத்தையும், கருணையையும் எதிர்த்தார்". (சார்லஸ் சரோலியா, *ஜெர்மானிய எதிர்–கிறித்துவ தற்கால வரலாறு, நியூயார்க், சூன் 1935*).

ஸ்பென்ஜலர், ரோஸன்பெர்க் போன்றவர்களைத் தன் வழிகாட்டியாகக் கொண்ட இவர், மேற்குலகின் வீழ்ச்சிக்காகப் புலம்பினார். இவர் கருத்துப்படி அய்ரோப்பிய மக்கள் "ஜெர்மானிய உண்மையை" மறந்ததே இந்த அவலத்திற்குக் காரணமாகும். நானூறு ஆண்டுகளுக்கு முன்பே அதாவது மறுமலர்ச்சிக் காலத்தில் இருந்தே அத்தவறு தொடங்கிவிட்டது. அன்றைய தினத்திலிருந்து, முன்னேற்றம் என்ற பெயரால் நடந்த ஒவ்வொரு நிகழ்ச்சியுமே அய்ரோப்பாவின் பின்னடைவையும் சிதைவையுமே வெளிப்படுத்துகின்றன. பாராளுமன்ற அரசாங்கம் நிறுவப்பட்டது. சனநாயகத்தின் எழுச்சி, மனிதாபிமானத்தின் வெற்றி, சர்வதேசியம், உலகப்பொது உணர்வு போன்றவற்றின் நச்சுத்தனமான பாதிப்பு, தாராளவாதம், அமைதிவாதம் பெண்ணியம் ஆகியவற்றின் பரவல் ஆகிய இவையனைத்தும், அய்ரோப்பியப் பின்னடைவின் நாசகரமான வளர்ச்சிப்போக்குகளாகும்.

"இட்லரியத்தை ஆதரிக்கும் இந்த உச்ச மதகுருவின் கருத்துப்படி" "வாழும் ஒவ்வொரு மதமும், தேசிய உணர்வால் ஊக்கம் பெற வேண்டும். தேசங்கள் கடவுளின் எண்ணங்களே ஆகும்". நிச்சயமாக, கடவுள் ஜெர்மன் மக்களைத்தான் (ஆள) தேர்ந்தெடுத்திருக்கிறார். கடவுளின் உன்னதக் கருத்துத்தான் ஜெர்மனி எனத் துணிந்து சொல்லலாம். ஆகவேதான், "ஒரு புனித இலட்சியத்தை நிறைவேற்றும் பொருட்டு அவை (ஜெர்மனி நாடும், மக்களும்–மொர்) தனிச்சிறப்பான இடத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் தெய்வ லட்சியத்துக்குப் பணிபுரிவதற்காக



படிப்பகம்

www.padippakam.com

குடிமக்களை அணிதிரட்டி, அய்க்கியப்படுத்துவதே ஜெர்மன் தேசிய தேவாலயத்தின் கருதத்தக்க பணியாக இருக்கும்". நீட்சேயின் ஒரு சீடர் என்ற முறையில் ரோஸன்பெர்க் "போலியான ஒழுக்க மதிப்புகளைக் கொண்ட மலைப் பிரசங்கத்தை" வெறுப்போடு ஒதுக்கி வைத்தார். நன்மை, தீமை என்ற கருத்தாக்கங்களை மீறி எழுச்சி கொள்ளுமாறு ஜெர்மானிய மக்களுக்கு இவர் அழைப்பு விடுத்தார். இந்தத் தெய்வீக உச்சநிலையை அடைவது என்பது (கடவுளால்) ஆசீர்வதிக்கப்பட்ட ஜெர்மனி இன மக்களுக்குக் கூட நிச்சயம் சாத்தியமில்லாத ஒரு செயலாகும். சுவஸ்திக் சின்னத்தின் கீழ் நின்று, இந்த உலகத்தைக் கைப்பற்ற உறுதி பூண்டிருக்கும் உன்னத மனிதர்களுக்கு மட்டுமே உரித்தான சிறப்புச் சலுகையாகும். "ஜெர்மானிக் கிறித்துவம்" பைபிளைக் கைவிட்டுவிட்டு அய்ஸ்லாந்தின் வீர காவியங்களையும், நிபுலேகன் (Nibulegan) புராணங்களையும் ஷோபன்ஹேயர், நீட்சே ஆகியோரின் எழுத்துக்களையும், சேம்பர்லெயிலின் அகண்ட ஜெர்மானியக் கோட்பாடுகளையும் (Pan-German doctrines) கைக்கொள்ளுமாறு பாசிசவாதிக்ளின் புதியமதம் கேட்டுக்கொண்டது. புத்தெழுச்சி பெற்ற ஜெர்மானியர்கள் ஓடின் (Odin), சிக்பிரைடு (Sigfried) போன்ற புராணவீரர்களையும் அடிலா (Attila) தியோடிரிக் (Theodoric) போன்ற காட்டுமிராண்டி வெற்றியாளர்களையும், மகாபிரடெரிக் போன்ற நிலக்கிழமை மன்னர்களையும் பிஸ்மார்க் போன்ற இராணுவத் தலைவர்களையும் இத்தகைய தெய்வங்களுக்கெல்லாம் தலைமைத் தெய்வமான இட்லர் என்ற புதிய அவதாரத்தையும் வழிபடவேண்டும். இத்தெய்வங்களை வழிபடுவோர் ஸ்காண்டிநேவியப் பகுதியைச் சேர்ந்த நார்டிக் தொன்மங்களிலிருந்தும் வீரகாவியங்களிலிருந்தும், நீதிக்கதைகளிலிருந்தும் தங்களுக்கான ஊக்கத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் இவைமட்டும்தான் ஜெர்மனின் எழுச்சிகளையும், இலட்சியங்களையும் வெளிப்படுத்துகின்றன. ஜெர்மனியின் அறமதிப்பீடுகளையும் (moral values) இவை பிரதிநிதித்துவம் செய்கின்றன. மனிதகுலத்தின் இந்தப் புதிய பாதுகாவலர்களின் ஆன்மீகத் தொகுப்பை இதைத் தவிர வேறொன்றும் ஆற்றலோடு வெளிப்படுத்தாது.

"மதிப்பும் வீரமும் கொண்ட நாயக மதத்தை – இன உணர்வு கொண்ட ஆன்மீகமதத்தை – ஆட்சிக்கட்டிலில் ஏற்றுவதே", புதிய ஜெர்மன் தேவாலயத்தின் லட்சியமாகும் என அதன் நிறுவனர் கூறுகிறார். இந்த ஆன்மீக லட்சியம் அதாவது ஆன்மிகமயமாக்கும் லட்சியம் வெற்றிபெற்றால், மறுபிறப்பு பெற்ற இனத்தின் உன்னதமனிதன், தனது புராதன மூதாதையரின் "ஆக்கிரமிப்பு நாயகத்தன்மையை" முன்மாதிரியாகக் கொண்டு, "முழு உலகத்தின்மீதும் தன் விருப்பத்தைத் திணிக்கும்", ஆற்றலைப் பெற்றுக் கொள்வார். கிறித்துவத்தின் அருட்பண்பும் மனிதாபிமானக் கருணையும் "கேடு விளைவிக்கும் கிழக்குலக நஞ்சு" எனக் கண்டனம் செய்யப்பட்டது. புதிய தேசியசோசலிச ஜெர்மனியானது "தீவிரமான மதத்தின்" மூலமும், "ஆன்மீகப் புரட்சி" மூலமும் இந்த நஞ்சை அகற்றிச் சுத்தப்படுத்திவிட்டது.



படிப்பகம்

www.padippakam.com

''பொருள்முதல்வாத மேற்குலகினால்'' ஆதரிக்கப்பட்ட ''கிழக்குலக ஆன்மீக நற்செய்தியின்'' நடைமுறைப்பயன்பாடு இதுதான். புதிய–சமய உணர்வு தந்த வெறியின் காரணமாக மதநம்பிக்கையைக் காப்பாற்றிக் கொண்ட இவர் மதக்கலாச்சாரத்தின் உன்னதமான, முற்போக்கான அடிப்படைக் கொள்கைகளைக் கைகழுவிவிட்டு,விசுவாசம், மூடநம்பிக்கை ஆகியவற்றைத் தன் எதிர்ப்புரட்சி நோக்கங்களுக்கான கருவியாக அமைத்துக் கொண்டார். ''மனித ஆன்மாவைப் பற்றி அக்கறைப்படாமல் பொருளாதாரத்தை மட்டுமே முக்கியமானதாகக் கருதிய ஒரு அரசியல் நடைமுறைக்கு எதிராக நாஜி இயக்கம் நடைமுறையில் ஒரு வலுவான எதிர்வினையைத் தந்தது''. **(ஆல்வல்டு காரிசன் வில்லார்டு:–** *உயிர்த்தெழுந்த ஜெர்மனி*) வன்முறை, கொடூரம், பொய், இழிவு, காட்டுமிராண்டித்தனம் ஆகிய பண்புகளைக் கொண்டிருந்த பாசிச இயக்கம் போன்ற இயக்கங்களைத் தங்களின் பாதுகாவலர்களாகக் கொண்டிருந்த இவர்கள், ஆன்மா குறித்த கோட்பாடுகளுக்கும், பொதுவாக ஆன்மீகத் தத்துவத்திற்கும் ஈடுசெய்யமுடியாத இழப்பை ஏற்படுத்தி விட்டார்கள்.

ஏதேனும் ஒரு தகுதியில் எழுத்தாளர்களாக கருதப்படும் ஒரு சில ஜெர்மன் எழுத்தாளர்களில் **ஹேன்ஸ் ஹேயின்ஸ்** ஈவர்ஸ் ஒருவராவார். இவர் இட்லரியத்திற்கு ஆதரவாளராக இருந்தார். இவ்வியக்கத்தின் முக்கிய அதிகாரப்பூர்வ கருத்தியல் பிரச்சாரகராய் இருந்தார். இவருடைய அண்மையப் புத்தகம் பாசிசக் கருத்தியல் குறித்து பின்வரும் ஒரு உயிரோட்டமான விளக்கத்தைத் தருகிறது. ''சுவஸ்திக்கின் தத்துவமானது பகுத்தறிவின் துடுக்குத்தனத்திற்கு எதிராக, மனதின் உள்ளுணர்வுகளைப் பாதுகாக்கிறது.'' **(கெச்கெச் ஈவர் :** *இரவுச் சவாரிக்காரன்*) வாக்னரின் மாயாவாதமும், வருத்தத்தையும் துன்பத்தையும் வழிபடுதல் என்ற நீட்சேயின் போதனைகளும் அறிவுக்குப் பொருந்தாத பலவண்ண உணர்ச்சி வயப்பட்ட உந்துதல்களும் அதாவது உளவியல் காரணிகளும் ஒன்று சேர்ந்த கலவையே பாசிசம் என்பதாக ஈவர் ஒரு விளக்கத்தை முன்வைக்கிறார். இந்த உளவியல் காரணிகளில் அறிவுக்குப் பொருந்தாத அம்சங்கள் காணப்பட்டதால் அவை ஆன்மீகச் சக்திகள் எனத் துல்லியமாகப் பெயரிட்டு அழைக்கப்பட்டன. இந்த ஆன்மீகச் சக்திகள் பொருண்மை வாழ்க்கையின்(material life) எல்லைகளுக்கோ, சட்டங்களுக்கோ கட்டுப்படாது. மனித வாழ்க்கையின் ''உண்மையான நலனுக்காக அதனைப் பாதுகாத்து வரும் ஒரு மாயச்சக்தி மீது நம்பிக்கை கொள்வதானது முதலாளியத்திற்குப் பலியானோரின் துன்பங்கள் துயரங்கள் குறித்த புனிதத்தை அறிந்து கொள்ள உதவியாயிருக்கும். ஈவரின் புத்தகம் குறித்து ஒரு பொருத்தமான விமர்சனம் பின்வருமாறு : ''பசிக்கும் வெறுப்புக்கும் உள்ளாகியிருந்த ஆன்மாக்களுக்கு, மிகுந்த கவர்ச்சியைத் தந்த அதே உலகத்தைத்தான் அதாவது மூடநம்பிக்கை புராணம் என்ற உலகத்தைத்தான் சுவஸ்திக்கின் தத்துவம் முன்வைத்தது''.(*புதிய குடியரசு, நியூயார்க் மே 10 1933*) உணவு கிடைக்காத மக்கள் கூட்டத்தின் முன் ரோமன் சர்வாதிகாரிகள் வித்தையை (circus) நடத்தி மகிழ்வூட்டினார்கள். பாசிசச் சர்வாதிகாரிகளோ இதே பணியையே



படிப்பகம்

www.padippakam.com

சிறப்பாகச் செய்து காட்டுகிறார்கள். அழுகிப்போன முதலாளியத்தினால் பாதிக்கப்பட்டோர் முன் ஆன்மீகவித்தையை (spiritual circus) நடத்தி அவர்களுக்கு மகிழ்வூட்டினார்கள். பசிக்கும் விரக்திக்கும் உள்ளாகியிருந்த மக்களுக்கு ஆன்மீகவாதமும், மாயாவாதமும் உணவாக இருந்தன. சராசரி மனித உயிர்களுக்கு –அவர்கள் முன்னால் உள்ள பொருண்மை வளர்ச்சிக்கும் அதன் மூலம் அடையும் அறிவு, ஒழுக்க வளர்ச்சிக்கும்–இந்த கற்பனை ஆரோக்கிய அமுதம் எந்தவிதத்திலும் பயன்தராது. மாயாவாதக் கேளிக்கையும், ஆன்மீக மிகுவிருப்பமும் முதலாளியப்பண்பாட்டின் கொச்சைப்பொருள்முதலியலின் அழுகிப்போன அழிவின்மீது வளர்ந்த நோய்க்கூறான கருத்தியல் வளர்ச்சிகளாகும். முதலாளியத்தினால் மிக மோசமான பொருளாதாரத் துன்பங்களுக்கு ஆளாகியிருந்த நடுத்தர வர்க்கத்தைத் தாழ்விற்கு உள்ளாக்கி அதன் ஒழுக்கத்தைச் சீர்குலைத்ததோடு இதன் எல்லை முடிந்துபோனது. இருப்பினும், அழுகிக் கொண்டிருக்கும் ஒரு பண்பாட்டின் மரபுகளோடு கொண்டிருந்த பற்றுதலை அவைகளால் விட்டுவிட முடியவில்லை. ஆளும் வர்க்கங்கள் இந்த வளர்ச்சியை வெறுப்போடும், ஏளனத்தோடும் பார்த்தன. பகட்டு ஆரவாரத்துடன் தூண்டியும் விட்டன.

சாரத்தில் ஆன்மீகப் பண்பு கொண்டிருந்த நவீன அய்ரோப்பியத் தத்துவம் மாயாவாதமாகவும், மதஅடிப்படைவாதமாகவும் சீரழிந்ததற்கு, முதலாளியச் சமூகத்தின் இன்றைய தீர்க்கமுடியாத நெருக்கடிகளே காரணமாகும்.இந்தியக் கலாச்சாரத்தின் ஆன்மீகவாதமும் இதைப்போலத்தான். இந்தியாவின் கடந்த காலங்களில் ஏற்பட்ட வெல்லப்படமுடியாத சமூக நெருக்கடிகளின் விளைவே இந்த இந்திய ஆன்மீகவாதம் ஆகும். இது ஒரு நீடித்த நோயாகும். காலம்காலமாக இது இந்திய சமூகத்தின் உயிரணுக்களைத் தின்று கொண்டிருக்கிறது. நமது மக்களின் நீண்ட, நெடிய அடிமைத்தனத்திற்கு இது காரணமாக இருந்து வருகிறது. இந்த நோய் மற்றவர்களையும் தாக்குகிறது என்ற யதார்த்தத்தைக் காட்டி இந்த நோயின் அபாயத்தைக் குறைத்து மதிப்பிட்டுவிடமுடியாது. ஆரோக்கியமான உயிர்களையே இந்நோய் தாக்குகிறது என்ற உண்மை இந்த நோயின் கடுமையையே நமக்கு மெய்ப்பிக்கிறது. இந்த நோயின் மிக அசிங்கமான அறிகுறிகள் உலகின் மற்ற பகுதிகளிலும் நச்சுத்தன்மையோடு வெளிப்படுவதைப் பார்க்கும்போது நம் பாதுகாப்பை வலுப்படுத்தி இந்த நோய்க்கு ஒரு மருந்தைக் கண்டு பிடிக்கும் அவசியத்திற்கு நம்மைத் தூண்டுகின்றன. இன்றளவும் இந்திய அறிவுஜீவிகள் பெருமையோடு சொந்தம் கொண்டாடும் ஒரு தத்துவத்தின் கொடூரமான வெளிப்பாடுதான் பாசிசமாகும். பாசிசத்தின் நடைமுறை இவர்கள் சிந்தனைக்கு விருந்து தருகிறது.

ஒவ்வொன்றுக்கும் பின்னால் கடவுளின் கரம் இருப்பதாகச் சொல்லியவர்கள் அல்லது நடக்கும் அனைத்து நிகழ்ச்சிகளுமே ஒரு மாய தெய்வீக நோக்கத்தின்படியே நடக்கிறது என்று நம்புபவர்கள் இந்த உலகை நியாயப்படுத்துபவர்களாகத்தான் இருக்க வேண்டும். உலகத்தின் போக்கில்



படிப்பகம்

www.padippakam.com

மனக்குறை கொண்டால் அது மத– விரோதமாகும். இந்த உலகை மாற்ற விரும்பினால் அது தெய்வப்பழி. இந்த உலகை மறு உருவாக்கம் செய்ய முயற்சித்தால் அது வெளிப்படையான மத – விரோதச்செயல். அது கடவுளின் கட்டளைக்கு எதிரான கலகம். ஆகவே, இம்மாதிரியான எதிர்ப்புகளை மதத்தின் பெயரால் ஆன்மீக மதிப்பீடுகளின் பெயரால் அனைத்து வழிகளிலும் நசுக்கி எறிய வேண்டும். மத வெறியர்கள் தங்கள் மூடத்தனமான கருத்துக்களையும், நம்பிக்கைகளையும் உண்மையாகச் செயல்படுத்தும்போது ஒழுக்கக்கேடாகவும் வன்முறையோடும் நடந்துகொண்டனர். அனைத்து இழப்புகளையும் தாங்கி ஒரு லட்சியத்திற்கு முன்னிற்க அணியமாய் இல்லையெனில் ஒரு நம்பிக்கையின் அல்லது தத்துவத்தின் பயன்தான் என்ன? மதமும், ஆன்மீகக் கருத்தியலும் நடைமுறை நிகழ்வுகளை நியாயப்படுத்தும் கருத்தியல்கள் ஆகும். இவை முழுக்க, முழுக்க முற்போக்குச் சக்திகளுக்குப் பகைமையானது ஆகும்.

❖



படிப்பகம்

www.padippakam.com

# தேசிய சோசலிசம்

ஜெர்மனியில் தேசியசோசலிசம் என்ற வஞ்சகமான, கிளர்ச்சியூட்டும் ஒரு பெயரைப் பாசிசம் தனக்குச் சூட்டிக்கொண்டது. நடைமுறையில் இது சோசலிசமாகவும் இல்லை. தேசியமாகவும் இல்லை. அரசியல் நோக்கில் சொல்வதானால் முதலாளியச் சமூகத்தின் –அதன் அழுகிய காலகட்டத்தின்– நிர்வாகமே பாசிசமாகும். இத்தாலியில் பாசிசம் வெற்றியடைந்ததற்குப் பின்னால், முதலாளியத்தின் அழுகல் நிலை மேலும் அதிகரித்துவிட்டது. அதனால் அதன் பாதுகாவலர்கள் ஒரு ஆத்திர வெறிநிலைக்கு ஆட்பட்டுப் போயினர். ஆகவேதான் இத்தாலியைக் காட்டிலும் ஜெர்மனியில் பாசிசச்சர்வாதிகாரமானது பெரும்வன்முறைகளையும் கொடூரங்களையும் கட்டவிழ்த்துவிட்டது.

பாராளுமன்ற சனநாயகம் என்ற பொய்முகமூடியை உதறிவிட்ட முதலாளியச்சர்வாதிகாரத்தின் கருவியே பாசிச அரசாகும். முதலாளியச் சமூக அமைப்பின் அழிவின் மீது ஒரு உயர்ந்த பண்பாட்டைக் கட்டியமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளி வர்க்கத்தையும், அதன் தோழமைச் சக்திகளையும் இரத்தவெறி கொண்ட வன்முறையின் மூலம் கொடூரமாக நசுக்குவதே பாசிச இயக்கத்தின்–அதன் அரசின்–ஒரே பணியாகும். முதலாளிய அமைப்பினால் நொடிந்து போயிருந்த அடித்தட்டு நடுத்தர வர்க்கத்தினர் பெரும்பாலானோரை ஒரு இயக்கம் என்ற முறையில் பாசிசம் தன் உறுப்பினராகக் கொண்டிருக்கிறது. அவ்வியக்கத்தின் அவலமே இதுதான். முதலாளியத்தின் பேராசை வெறிக்குப் பலியானவர்களே தங்கள் சொந்த அழிவிற்குக் காரணமான முதலாளியத்தைப் பாதுகாக்கும் ஒரு நன்றிகெட்ட பணியில் வெறியோடும் கோபத்தோடும் ஈடுபட்டிருப்பது ஒரு முரண்சுவையான நிகழ்ச்சிதான். இம்மாதிரியான ஒரு இயக்கத்தில் உண்மை, மதிப்பு, நேர்மை, ஆகியவற்றிற்கு இயல்பிலேயே இடமிருக்காது. பொய், வஞ்சம், ஏமாற்று போன்றவை அவசியமாக இதன் அடிப்படையாக இருக்கும். இட்லரின் சுயவரலாற்றுப் புத்தகமானது 140 ஆயிரம் சொற்களையும் 139 ஆயிரம் தவறுகளையும் கொண்டிருக்கிறது என விமர்சிக்கப்பட்டது. (லியான் பட்ச்வேன்ஜார்) இந்த ஜெர்மன் எழுத்தாளரின் புத்தகங்களில் ஜெர்மனிக்கு விரோதமான கருத்துக்கள் காணப்படுவதாகக் கூறி அவை எரிக்கப்பட்டன. அதனால் அவர் இட்லரின் ஜெர்மனியை விட்டு வெளியேற நேர்ந்தது. உண்மையில் சொல்லப்போனால், கவர்ச்சிப்பேச்சு (Demogogey) தான் பாசிசத்தின் முக்கியக் கருவியாகும்.

முதலாளியத்திற்கு எதிராக நடத்தப்பட்ட பொய்யான கிளர்ச்சிகள் மூலம் மிகவும் பின்னடைந்த நிலையிலிருந்த அதனாலேயே முதலாளியத்தின் பேராசைக் கொள்ளைக்கு அதிகளவு பலியான மக்கள் பகுதியினர் பாசிச இயக்கத்தில்



படிப்பகம்

www.padippakam.com

அணிதிரட்டப்பட்டனர். நெருக்கடியில் சிக்குண்ட முதலாளியத்தைப் பாதுகாக்க போலி–சோசலிசம் என்ற பதாகையின் கீழ் அவர்கள் புயல்படையாக நடைபோட்டனர். கணக்கற்ற துணிச்சலான பொய்யுரைகள், வெட்கங்கெட்ட ஏமாற்று வேலைகள் கவர்ச்சிகரமான பேச்சு ஆகியவற்றின் துணையில்லாமல் இம்மாதிரியான ஒரு அற்புதம் நிகழ்ந்திருக்கவே முடியாது. முதலாளியம் ஒரு முற்போக்கான சமூகச் சக்தியாக இருந்தபோது முதலாளியச் சனநாயகம் என்ற அரசியல் அமைப்பை நிலைநிறுத்தியிருந்தது. அரசியல் விடுதலை, குடிமை உரிமை விடுதலை பண்பாட்டு விடுதலை, ஆகியவை வரலாற்றுவழியில் இந்த முதலாளியச் சனநாயகத்தின் இணைந்த ஒரு பகுதியாகும். ஆனால் முதலாளியத்திற்கு எதிராக நடத்தப்பட்ட பொய்யான கிளர்ச்சிகள் உண்மையில், அரசியல் விடுதலை, குடிமை உரிமை விடுதலை, பண்பாட்டுவிடுதலை, ஆகியவற்றிற்கு எதிரானதாகவே இருந்தன. பாராளுமன்ற சனநாயகமானது முதலாளியத்தோடு அடையாளப்படுத்தப்பட்டது. முதலாளியச் சமூகத்தின் அனைத்துத் தீமைகளுக்குமான ஒரே நிவாரணம் பாராளுமன்ற சனநாயகத்தை ஒழிப்பதே எனப் பரிந்துரை செய்யப்பட்டது. பாராளுமன்ற சனநாயகத்தைப் பாசிசம் அழித்தது. ஆனால், முதலாளியம் முன்னைக் காட்டிலும் வலுவாகத் தொடர்ந்து நீடித்து வந்தததோடு தொழிலாளி வர்க்கத்தை மிகக்கொடூரமாகச் சுரண்டியும் வந்தது. உண்மையைச் சொல்வதானால், புரட்சிகர எழுச்சிமிக்க இக்காலகட்டத்தில், பாராளுமன்ற சனநாயகத்தை ஒழிப்பதானது முதலாளிய ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கான ஒரு கூடுதல் உத்திரவாதத்தையே தருகிறது.

பாராளுமன்ற ஆட்சியால் கிடைத்த சார்பு அளவிலான சுதந்திரம், தொழிலாளி வர்க்கம் தன்னை அமைப்பாக்கிக் கொள்ளவும், முதலாளியத்தைத் தூக்கியெறிந்து விட்டு சோசலிசத்தை அமைப்பதற்கான போராட்டத்திற்கு தன்னை அணியமாக்கிக் கொள்ளவும் உதவியது. முதலாளிகள் தங்கள் அதிகாரத்தையும் சலுகைகளையும் காப்பாற்றிக் கொள்வதற்கானப் போராட்டத்தில் தங்கள் வெற்றியால் கிடைத்த பயன்களை (முதலாளிய சனநாயகம்– மொர்) தாங்களே ஒழிப்பது அவசியமாய் இருந்தது. முதலாளிகள் சார்பாக இந்த அசிங்கமானபணியைச் செய்யவே, பாசிச இயக்கம் உருவாக்கப்பட்டது. முதலாளியத் தத்துவவாதிகள், இவ்வியக்கத்திற்கான கருத்தியல் அடிப்படையைத் தந்தார்கள். நிதி, தொழிற்துறைப் புள்ளிகள் இவ்வியக்கத்திற்குத் தாராளமாக நிதி உதவி புரிந்தார்கள். இவ்வியக்கம் தன் தொடக்க காலத்தில் இப்பெரும் புள்ளிகளுக்கு எதிராகவே அவதூறு பேசி வந்தது. முதலாளிய – சனநாயகஅரசை ஒழிக்கும்படி வெளிப்படையாகவே அழைப்புவிட்ட இவ்வியக்கத்திற்கு உண்மையில் அவ்வரசு கமுக்கமாக (இரகசியமாக) உதவிவந்ததோடு, அதனைத் தூண்டியும் வந்தது. முதலாளிய–சனநாயக அரசின் காவல்துறை, இராணுவப் படைகள், இந்த அரசாங்கத்தைத் தூக்கியெறியப் பாசிச இயக்கத்தோடு கமுக்கமான ஒரு கூட்டணியை ஏற்படுத்தியிருந்தன. பொருளாதார ரீதியாக அழிவிற்கும், அறிவுரீதியாக திவாலுக்கும் உள்ளாகியிருந்த கீழ்த்தட்டு நடுத்தர வர்க்கத்தினர் உளவியல் வசியம் செய்யப்பட்டனர். கைதேர்ந்த கவர்ச்சிப் பேச்சு, மலினமான உணர்ச்சிகளைக் கிளறுவது, நிறைவேற்ற வேண்டும் என்ற



படிப்பகம்

www.padippakam.com

எண்ணமே இல்லாத அளவிற்கதிகமான வாக்குறுதிகள், தன்னை எதிர்ப்பவர்களுக்கு எதிராக பழிபாவத்திற்கு அஞ்சாத அவதூறுகள் குறுந்தேசியவாதத்தைத் தூண்டுவது, இனவெறுப்பை விசிறி விடுவது போன்ற இந்த அனைத்து வழிமுறைகளும் இதைப்போன்ற ஏனைய வழிமுறைகளும் (மக்களை) உளவியல் வசியம் செய்யப் பயன்படுத்தப்பட்டன. சனநாயகத்திற்கு எதிராகப் பொதுமக்கள் அணிதிரட்டப்பட்டனர். இத்தாலியைப்போல நாடகபாணி அதிரடி கவிழ்ப்பின் மூலமாக அல்லது ஜெர்மனியில் நிறுவப்பட்டதைப்போல அரசியல் சட்ட ரீதியில், "இரத்தம் சிந்தாமல்" பாசிசச் சர்வாதிகாரம் நிறுவப்பட்டது.

நொடிந்து போயிருந்த குட்டிமுதலாளிகளைக் குறுந்தேசியவாதத்தை நோக்கித் தூண்டிவிடச் செய்யப்பட்ட கிளர்ச்சிகளுக்கு நிதியுதவி வழங்கி வந்த அதே நிதி, தொழிற்துறைப் புள்ளிகள்தான் (முதல் உலகப் போரில்) ஜெர்மனி அடைந்த தோல்வியிலிருந்தும் அவமரியாதைகளிலிருந்தும் அளவற்ற இலாபத்தைச் சுருட்டியிருந்தனர். 1923-24 இல் குடியரசு அரசாங்கத்தைப் பணவீக்கத்தின் எல்லைக்கே செல்லும்படி கட்டாயப்படுத்தினர். அதன் மூலம், போரின்போது ஒப்பந்தம் மூலம் பெற்ற பெரும் உள்நாட்டுக் கடன்களைத் தள்ளுபடி செய்து கொண்டனர். தேசபக்தியானது குட்டிமுதலாளிகளை மிக மோசமாக ஓட்டாண்டி நிலைக்கு உள்ளாக்கிவிட்டது.

இம்மாதிரியான மோசடியான வழிமுறை மூலம் உள்நாட்டுக் கடன்கள் தள்ளுபடி செய்யப்படாமல் இருந்திருந்தால், அதிக வருமானக்காரர்கள் மீது அதிகமான வரி போட வேண்டிய கட்டாயம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கும். போர்க்காலத்தில் இலாபம் ஈட்டிய நபர்களை வரி விதிப்பிலிருந்து காப்பாற்றுவதற்காக கடினமாக உழைத்துச் சம்பாதித்த பணத்தைத் தேசபக்திக் கடமை என நினைத்துப் போர்ப்பத்திரங்களில் முதலீடு செய்திருந்த கீழ்த்தட்டு நடுத்தர வர்க்கத்தினரின் சேமிப்புகள் பறிமுதல் செய்யப்பட்டன. இந்தப் பறிமுதல் நடவடிக்கையினால் குட்டிமுதலாளிகள் நொடிந்து போயினர். இதன் மூலம் தேசிய சோசலிச இயக்கத்திற்கு ஒரு சமூக அடிப்படையும் இடப்பட்டது. இறுதியாக, நொடிந்து போன நடுத்தர வர்க்கத்தின் வாரிசுகள் ஸ்வஸ்திக் சின்னம் கொண்ட பழுப்புநிறச் சட்டையை அணிந்து கொண்டு, தங்கள் வர்க்கத்தைக் கொள்ளையடித்த திவாலாக்கிய அதே வர்க்கத்திற்கு ஊழியம் புரியத் தங்களை ஒப்படைத்துக் கொண்டனர்.

கொழுத்துப்போயிருந்த முதலாளிகள் போர்-இலாபத்தின் மூலமாக மேலும் கொழுத்ததோடு குடியரசு அரசாங்கத்தின் நேரடி, மறைமுக உதவிகளால் வரிஏய்ப்பு செய்து வந்ததால் வெர்செயில்ஸ் உடன்பாட்டின் முழுப் பொருளாதாரச் சுமையும் உழைக்கும் மக்களின் தலையில் விழுந்தது. இதன் விளைவு, மக்கள் தொகையின் பெரும்பகுதி மென்மேலும் ஓட்டாண்டியாக, மிகச்சிறிய மேல்தட்டினரோ மென்மேலும் செல்வந்தராயினர். வறுமையின் காரணமாக, மக்களின் வரிகட்டும் ஆற்றல் வீழ்ச்சியுற்றது. அரசின் நிதிநிலை முழுக்கவும் நெருக்கடிக்குள்ளாகி நிலைகுலைந்திருந்தது. ஆண்டுக்கணக்கில் ஜெர்மன் அரசாங்கம் திவால் நிலையில்



படிப்பகம்

www.padippakam.com

கிடந்தது. சிதறுண்டு கிடக்கும், ஊனமுற்ற ராணுவவீரர்களுக்கு அளித்து வந்த ஓய்வூதியத்தையும், சமூகச்சேவைகளையும் நிறுத்தினால் தான் நடப்புச் செலவினங்களைக் குறைக்க முடியும் என்ற ஒரு நிலை ஏற்பட்டது. ஆனால் போர் நட்டஈடுத் தொகையைக் கொடுத்தே தீர வேண்டிய ஒரு நிலை இருந்தது. (முதல்உலகப்போரில்) வெற்றிபெற்ற நாடுகளின் நிபந்தனையை நிறைவேற்ற வேண்டுமானால் போரின் மூலம் இலாபத்தை ஈட்டியவர்களின் (பெருமுதலாளிகள்–மொர்) சட்டைப்பையில் கை வைக்க வேண்டும். ஆனால் நட்டஈட்டுக்கான தொகையை இவர்கள் கீழ்த்தட்டு நடுத்தர வர்க்கத்தினரிடமிருந்து பறித்தெடுத்துக் கொண்டதன் மூலம் தோல்விக்கான பொறுப்பைத் தவிர்த்துக் கொண்டனர். இம்மாதிரியான ஒர சூழலில்தான் செல்வந்தர்களால் நிதியுதவி செய்யப்பட்டு வந்த தேசியச்சோசலிச இயக்கமானது வெர்செயில்ஸ் உடன்படிக்கை ஜெர்மனியை நாசம் செய்கிறது என்ற முழக்கத்தை முன்வைத்தது. அதற்குப் பெருத்த ஆதரவும் கிட்டியது. குடியரசுஅரசாங்கம் தான் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்தது. ஆகவே, அந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளை நிறைவேற்ற அது முயற்சித்து வந்தது. ஆகவே, இந்த அரசாங்கம் ஜெர்மன் மக்களின் எதிரியாகும். இது தூக்கியெறியப்பட வேண்டும். இவ்வாறாக ஒரு எதிர்ப்புரட்சிச் செயலோடு "தேசியப் புரட்சி" தொடக்கம் பெற்றது.

தொழிலாளி வர்க்கம், கீழ்த்தட்டு நடுத்தர வர்க்கம் ஆகியவற்றின் பொருளாதார நசிவு ஜெர்மனியில் ஒரு கூர்மையான புரட்சிகரச் சூழலை உருவாக்கியிருந்தது. மக்கள் மேன்மேலும் சுமைகளைச் சகித்துக் கொள்ளத் தயாரில்லை. ஆனால் மேல்தட்டு வர்க்கத்தினரோ தவறான வழியில் தாங்கள் ஈட்டியிருந்த செல்வத்தை மீண்டும் திருப்பித்தர விருப்பமற்று இருந்தனர். உள்நாட்டில் புரட்சி அபாயத்திற்கும் வெளியே இராணுவ ஆக்கிரமிப்பு அச்சுறுத்தலுக்கும் இடையே ஜெர்மனி சிக்கிக் கொண்டது. இந்த இரு அபாயங்களுக்கும் எதிரான பாதுகாப்புக்கவசமாக ஆளும் வர்க்கங்களால் உருவாக்கப்பட்டதுதான் தேசியசோசலிச இயக்கமாகும். ஒரு புறம் சோசலிசம் குறித்த ஏமாற்றுப் பேச்சுக்கள் மூலம் வர்க்க உணர்வு குன்றியிருந்த தொழிலாளவர்க்கப் பிரிவினரை ஏமாற்றி வந்தது. மறுபுறம், குறுந்தேசியவாதம் என்ற பிரச்சாரத்தின் மூலம் வெர்செயில்ஸ் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எதிராக ஒரு திறனான எதிர்ப்பைத் திரட்டிக் கொண்டது.

ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் தேசியசோசலிசவாதிகளின் இலக்காக முதலாளியம் இருந்தது. ஆனால், சனநாயக அரசைக் கவிழ்த்ததின் மூலம் அவர்கள் ஆட்சிக்கு வந்த பின் முதலாளியத்திற்கு எந்தவொரு இடையூறும் செய்யவில்லை. தொழிலாளி வர்க்கத்தின் கட்சிகளை நசுக்கியதே நாஜி அரசின் முதல் செயல்பாடாக இருந்தது. இதன் மூலம் சிறிது காலத்திற்குப் புரட்சி அபாயத்திற்கு எதிரான உத்திரவாதத்தை உருவாக்கிக் கொண்டது. இதைச் செய்து முடித்ததற்குப் பின்னால் குறுந்தேசியவாதத்தைத் துணிச்சலாக முன்னெடுத்துச் சென்றது. ஜெர்மன் மக்களைக் காப்பாற்றுவதற்காக அது இப்பணியைச் செய்யவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

மாறாக, வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் கடமைப் பொறுப்பிலிருந்து தொழிற்புள்ளிகளை விடுவிக்கவே இப்பணியை அது செய்தது. வெற்றியடைந்த நாடுகள் (ஜெர்மனியிடமிருந்து) நட்ட ஈட்டுத் தொகையை வசூலிக்க வேண்டுமானால் அதைச் செலுத்தத் தகுதியுள்ளவர்களிடமிருந்துதான் அதை வசூலிக்கமுடியும். ஜெர்மன் மக்களோ, தங்கள் கடைசி சொட்டு இரத்தத்தையும் சிந்திவிட்டனர். "வெர்செயில்சின் அதிகார ஆணையிலிருந்து" விடுதலை பெற வேண்டுமானால் இராணுவ எதிர்ப்பைக் காட்டுவதுதான் சாத்தியமான ஒரே வழியாகும். இது ஒரு பைத்தியக்காரத்தனமான முயற்சியாகத் தோன்றலாம்.இருப்பினும் இவ்வழிமுறைதான் வெற்றிகரமானது என மெய்ப்பிக்கப்பட்டது. ஏனெனில், இராணுவ ஆக்கிரமிப்பு ஒரு ஆதாயமான வழிமுறையல்ல என்பதை நேச சக்திகள் (அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு முதலான நாடுகள்–மொர்) அனுபவத்தின் மூலம் உணர்ந்திருந்தன. ஜெர்மனியில் நிலவும் புரட்சி அபாயத்தைக் கண்டு அவர்களும் அஞ்சி வந்தனர். இதன் விளைவாக நாஜிசத்தின் குறுந்தேசியவாதப் பாதையில் தடைகளுக்கே இடமில்லாமல் போனது. தேசியச்சோசலிச இயக்கத்தின் குறுந்தேசியவாதமானது முதலாளிகளுக்கு எந்த இடையூறும் செய்யவில்லை. மாறாக, பொருளாதார நெருக்கடியிலிருந்து அவர்களை மீட்க உதவியது. தேசிய மரியாதையை மெய்ப்பிக்க ஜெர்மனியை மீண்டும் ஆயுதபாணியாக்குவது என்ற திட்டத்தினால் ஒரு தொழில் மலர்ச்சி ஏற்பட்டது. ஆனால், இதன் இலாபம் முதலாளிகளையே சென்றடைந்தது. அற்புதங்களை விற்று வணிகம் நடத்தும் தேவதூதன்கூட காலியான கருவூலத்தை வைத்துக்கொண்டு மறு ஆயுதமயமாக்கும் திட்டத்தின் செலவினங்களை ஈடு செய்வது சாத்தியமில்லாத செயலாக இருந்திருக்கும். ஆயுதங்களையும் தளவாடங்களையும் உற்பத்தி செய்வதற்கான பணியாணைகளுக்காக (ஆர்டர்) புதிய அரசாங்கத்திற்குத் தொழிலதிபர்களும் நிதி அரசர்களும் கடன் வழங்கினர். இவ்வாறாக, தேசியசோசலிச அரசு அவர்களிடம் அடகுவைக்கப்பட்டது. இம்மாதிரியான ஒரு சூழலில் சோசலிசம் குறித்த எந்தவொரு பேச்சும் அனுமதிக்கப்பட முடியாது. தனது தொடக்ககாலப் போலிச்சோசலிசப் பாசாங்கை இட்லரியம் உதறித் தள்ளியது. அதன் தேசியமோ, புதிய ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின் ஒரு கருவியாகவே உருமாறியது.

தேசியசோசலிசம் என்பது ஒரு தவறான, அதே சமயத்தில் தன்னுள் முரண்பட்ட ஒரு சொல்லாகும். சோசலிசத்திற்கு எல்லைகள் கிடையாது. தேசியத்தோடு அது ஒத்துப்போகாது. பாசிசவாதிகளின் தேசியத்தோடும் குறுந்தேசியவாதத்தோடும் ஏகாதிபத்தியத்தோடும் அது முற்றிலும் ஒத்துப்போகாது. கடுமையான சோசலிச–எதிர்ப்பும், தொழிலாளி வர்க்க – எதிர்ப்பும் கொண்ட இயக்கத்துக்கு வைக்கப்பட்ட ஒரு மோசடியான முத்திரையே தேசிய சோசலிசம் என்ற பெயராகும். மார்க்சியத்தை ஒழிப்பதே பாசிச இயக்கத்தின் அறிவிக்கப்பட்ட கொள்கையாகும். கார்ல்மார்க்சின் தத்துவ, சமூக, அரசியல் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு சோசலிச இயக்கம்தான் – அதாவது முதலாளியத்தின் சுரண்டலிலிருந்து சமூகத்தை விடுவிக்கும் இயக்கம்தான்– உண்மையான சோசலிச இயக்கமாகும். இக்கோட்பாட்டை அடிப்படையாகக்



படிப்பகம்

www.padippakam.com

கொள்ளாத ஒரு சோசலிச இயக்கம் இருக்கவே முடியாது என்பது இன்று பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு விசயமாகும். ''நிச்சயமாக மார்க்சின் சோசலிசத்தைப்போல பாதுகாப்பான சோசலிசம் வேறில்லை. ராஜதந்திரிகள் (Statesman) நம் காலத்தில் இதைக் கணக்கில் கொள்ள வேண்டியது அவசியமாகும்''. ஹைரோல்டு லஸ்கி போன்ற முற்போக்கு பேராசிரியர்கள் மட்டுமல்ல. பழமைவாதச் சக்திகளும் கூட இக்கருத்தை வெளிப்படையாக ஒப்புக்கொள்கின்றனர். எடுத்துக்காட்டாக, புகழ்பெற்ற ஜெர்மன் சமுகவியல் பேராசிரியரான மில்லர்–லியர் பின்வருமாறு எழுதுகிறார் :– ''பொருளாதார நிர்ணயவாதம் என்ற மார்க்சியக்கோட்பாடு சமூக–அறிவியல்களின் அச்சாணியாக மாறிவிட்டது''. மார்க்சியத்தைத் தன் பெரும் எதிரியாக அறிவித்த ஒரு இயக்கம் ஒரு மென்மையான சமூகச் சீர்திருத்தத்திற்குக்கூட வெகுதூரம் விலகிநிற்பதையும், எந்த ஒரு சமூக முன்னேற்றத்தையும் எதிர்த்து வருவதையும் இதிலிருந்து தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

மார்க்சியத்தை வெறித்தனமாக வெறுக்கும் ஒரு அம்சமே, பாசிசத்தின் சோசலிசப்பணியைப் பொய்யாக்கப் போதுமானது. அதிகாரத்திற்கு வருவதற்கு முன்பிருந்தே அனைத்து வகையான வன்முறைகள் மூலம் தொழிலாளி வர்க்கத்தை அச்சுறுத்துவதையே பாசிசம் தன் முக்கியப் பணியாகக் கொண்டிருந்தது. சோசலிசத்தைக் கண்டு மிக அச்சப்பட வேண்டிய நிலையிலிருந்தவர்கள் இந்தப் பயங்கர நடவடிக்கைகள் அனைத்திற்கும் நிதியுதவி அளித்து வந்தனர். அதிகாரத்தில் அமர்ந்தவுடன் பாசிசம் எடுத்த முதன்மையான முக்கியமான நடவடிக்கை கம்யூனிஸ்டுக் கட்சிகளை இரத்த வெறியோடு கொடூரமாக நசுக்கியது மட்டுமல்ல, புரட்சிக்கு எதிரான சோசலிசக்கட்சிகளையும், சனநாயகக் கட்சிகளையும் சீர்திருத்த வயப்பட்ட தொழிற்சங்கங்களையும் நசுக்கியது. தொழிலாளி வர்க்கத்தை ஆதரித்த, அதை அனுதாபத்தோடு பார்த்த முற்போக்கு அறிவுஜீவிகளைக் கூட இதன் கருணையற்ற இரும்புக்கரம் விட்டுவைக்கவில்லை.

முதலாளியத்தை ஆன்மீகப்படுத்துவது என்பது தேசியசோசலிசத் திட்டத்தின் மிக மோசமான மோசடிகளில் ஒன்று. ஆதரவற்று நின்ற கீழ்த்தட்டு நடுத்தர வர்க்கத்தின் கவனத்தையும், வர்க்க உணர்வு குன்றியிருந்த தொழிலாளிவர்க்கத்தின் கவனத்தையும் கவர தேசியசோசலிச இயக்கமானது முதலாளிய–எதிர்ப்பு என்னும் கவர்ச்சிப் பேச்சில் இறங்கியது. நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ முதலாளியத்திற்குப் பகைமையாக இருந்த அனைத்துச் சக்திகளையும் நசுக்கியெறிந்த பின் நாஜிகள் கூறினார்கள் : தேசியப்புரட்சி முற்றுப்பெற்று விட்டது.

நாஜிகளின் சர்வாதிகாரத்தின் கீழ் அரசியல் அதிகாரம் செயல்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் முதலாளியத்தின் சலுகைகள் மீது சாதாரண அத்துமீறல்கள் கூட இடம் பெறக்கூடாது. ஏமாற்றப்பட்ட மக்களுக்குத் தாங்கள் செய்த வெட்கங்கெட்ட துரோகத்தை நியாயப்படுத்த பாசிசவாதிகளின் கோட்பாட்டாளர்கள் இருவகையான முதலாளியத்தை–சுரண்டுவது ஆக்கபூர்வமானது–கண்டுபிடித்தார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

சுரண்டும் முதலாளியம் நசுக்கப்பட வேண்டும். ஆக்கபூர்வமான முதலாளியம் பாதுகாக்கப்பட வேண்டும். ஊக்கப்படுத்தப்பட வேண்டும். இது பொருளாதாரக் கோட்பாடுகளை வெட்கம் கெட்ட முறையில் தவறாகத் திரிப்பதாகும். பொருளாதார அறிவியல் குறித்த மிக அடிப்படையான அறிவே சுரண்டல் இல்லாத முதலாளியம் இல்லை என்பதைச் சொல்லும்.

தொழிலாளி வர்க்கத்தின் உழைப்பில் கிடைக்கும் மதிப்பில் ஒரு பகுதிதான் முதலாளியத்தின் "ஆக்கபூர்வமான" வெற்றிகளுக்கு அடித்தளமாக இருக்கின்றன. ஆன்மீகச் சோசலிசக் குடியரசில் (நாஜிகள் ஆட்சியில்) முதலாளியம் வளம் கொழிக்கும் என்று சொல்லுமளவிற்குப் பொருளாதாரக் கோட்பாடு விபச்சாரத்திற்குள்ளாக்கப்பட்டது. **கிரப்வான் போலென்** (மிகப் பெரிய போர்க்கருவித் தொழிற்சாலைகளின் உரிமையாளர்) தய்சன் (இரும்பு உருக்குத் தொழில் உரிமையாளர்) வாக்னர் (நிலக்கரி சமஸ்தானத்தின் உரிமையாளர்) ஆகிய இந்த முதலாளியச் சுரண்டலின் கதாநாயகர்கள் "ஆக்கபூர்வமான முதலாளியத்தின்" பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டார்கள். அந்த வகையில் ஆன்மீகப்பாசிச அரசின் வலுவான தூண்களாகவும் கருதப்பட்டார்கள். உண்மையைச் சொல்வதானால், பெருந்தொழில்களின் பொருளாதார நலன்கள் சர்வாதிகார அரசின் கட்டுப்பாட்டிற்கும் மேலானதாக வைக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆக்டோபசின் இரத்த வெறி கொண்ட கால்கள் ஜெர்மனி தேசிய வாழ்வின் அனைத்துப் பகுதிகளிலும் விரவி நிற்கிறது. கிரப்வான் போலெனைத் தலைவராகவும், பெரும் தொழில் புள்ளிகளை உறுப்பினராகவும் கொண்ட தேசியப் பொருளாதாரக்குழு, மேனிலை அரசாகச் செயல்பட்டு வந்தது. இந்த நவீனசோசலிசத்தின் கீழ் "குடிமகனுக்கு சுதந்திரம் ஒரு முன் தேவையல்ல; விடுதலை அவனுக்கு அவசியமானதுமல்ல" நவீன ஜராதுஷ்டரான* இட்லர்தான் இவ்வாறு பேசுகிறார். தேசியசோசலிசக் கட்சி ஜெர்மன் முதலாளிகளின் தனிக்கட்சியாக மாறியது. நாஜி அரசாங்கம் ஜெர்மன் முதலாளிகளின் நம்பிக்கைக்குப் பாத்திரமான பாதுகாவலனாக இருந்தது. குடியரசாக ஜெர்மனி உருவான காலத்திலிருந்து பெருந்தொழிற்துறையினரின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி வந்த ஜெர்மன் மக்கள் கட்சியானது, இட்லர் ஆட்சிக்கு வந்தவுடன், தனது கட்சியைக் கலைத்து விட்டுத் தனது உறுப்பினர்களைத் தேசிய சோசலிசக் கட்சியில் சேரும்படி அறிவுரை கூறியது. முடியரசு ஆதரவாளர்கள் கூட தங்கள் பிற்போக்குக் கொள்கைகளையும் தேசியசோசலிசத்தையும் ஒன்றாகவே இணைத்துப் பார்த்தனர். தங்களது சக்தி வாய்ந்த அரை – இராணுவ அமைப்பான உருக்குத்தலை கவசத்தை நாஜிகளின் புயல்படையினருடன் ஒன்றாய் இணைத்துவிட்டனர்.

1933 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இட்லரின் பாராளுமன்றம், மகா பிரடரிக் கல்லறையில் ஒன்றுகூடி குடியரசு ஆட்சியைச் சவக்குழியில் மூடி விட்டுப் பிற்போக்கு நிலக்கிழமை – இராணுவ ஆட்சியின் ஆவியை மறு உயிர்ப்பு செய்தன. அப்போதே

* ஜராதுஷ்டர் என்பவர் இயேசு கிறித்துவுக்கு ஆறு நூற்றாண்டுகள் முன்பு வாழ்ந்த பாரசீக நாட்டு சமயப்பிரச்சாரகர். (மொர்)



படிப்பகம்

www.padippakam.com

தேசியசோசலிசத்தின் சமூக நிறமும், அரசியல் நலன்களும், அதுவரை அது அணிந்திருந்த கவர்ச்சிப்பேச்சு, வஞ்சகப்புகழ்ச்சி ஆகிய முகமூடிகளும் கழற்றி வீசப்பட்டன. பாட்ஸ்டன் பகுதியில் நிலவிய முடியாட்சிச் சூழலினாலும், தீவிரப்பிற்போக்குப்பரிவாரம் தன்னைச் சூழ்ந்து நின்றதாலும், இட்லர் தன்னால் ஏமாற்றத்திற்கு உள்ளானவர்களை – ஓட்டாண்டியாகிப்போன நடுத்தர வர்க்கத்தையும், வர்க்க உணர்வு குன்றிய தொழிலாளர்களையும் – மறந்தே போய்விட்டார். சர்வாதிகார அதிகாரம் கோரி நாஜிப்பாராளுமன்றத்தில் அவர் உரையாற்றிய போது ஹோகென் ஜுலர்ன் அரசகுலத்தின் நற்பண்புகளை நாநயத்தோடு மிகைப்படுத்திப் பேசினார்.நலிவடைந்த நிலையிலிருந்த அந்த அரச குல வாரிசுகளும் அந்த விழாவில் பங்கெடுத்திருந்தனர். சுவஸ்திக் சின்னத்தைத் தாங்கள் அணிந்துகொண்டிருப்பது வீண் போகவில்லை என்பதை அவர்கள் உணர்ந்தார்கள்.

இட்லர் சர்வாதிகார அதிகாரத்தைக் கையிலெடுத்தது "ஜெர்மன் மக்களைப் பாதுகாக்க அல்ல" மாறாக, நூற்றாண்டு காலமாக மக்களைச் சுரண்டியும், ஒடுக்கியும் வந்த சக்திகள் அனைத்திற்குமான கருவியாகத்தான் அவர் சர்வாதிகாரத்தைக் கையிலெடுத்தார்.

மறுபுறம் கம்யூனிஸ்ட் கட்சியைக் கொடூரமாக நசுக்கி ஒழித்ததற்குப் பின்னால் எந்த இடையூறும் செய்யாத சமூக–சனநாயகக் கட்சியையும் நாஜிகள் கலைத்துவிட்டார்கள். சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்களைக் கூட நாஜிகள் விட்டுவைக்கவில்லை. அவையும் அழிக்கப்பட்டன. அதன் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் கைவசம் இருந்த கட்சி நிதி பறிமுதல் செய்யப்பட்டது. யதார்த்தத்தில், தொழிலாளர் இயக்கத்தின் அனைத்துத் தலைவர்களும், முன்னோடி உறுப்பினர்களும் – வெளிநாடுகளுக்குத் தப்பிச்சென்றவர் தவிர–கைது செய்யப்பட்டு எவ்வித விசாரணையுமின்றி சிறையிலடைக்கப்பட்டனர். எண்ணற்றோர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டனர். ஏறத்தாழ அனைவருமே மனிதாபிமானமற்ற முறையில் சிறையில் நடத்தப்பட்டனர். "தொழிலாளிகளே! மூன்றுமாத காலத் தேசியசோசலிச அரசானது, இட்லர் உங்கள் நண்பன் என்பதை மெய்ப்பித்திருக்கிறது. உங்கள் விடுதலை குறித்த பிரச்சினைகளோடுதான் இட்லர் போராடி வருகிறார். இட்லர் உங்களுக்கு வேலையையும், உணவையும் கொடுத்து வருகிறார்". இப்படிப்பட்ட ஒரு அதிகாரப்பூர்வமான செய்தி வெளியிட்டதற்குப் பின்புதான் தொழிலாளி வர்க்கத்தின் மீது கொடூரத்தாக்குதல் தொடங்கப்பட்டது.

ஜெர்மனியில் பாசிசமானது, மக்களை ஏமாற்றவும், மயக்கவும், கவர்ச்சிகரமான வாக்குறுதிகளை அளித்துக் கொண்டிருந்த இதே நேரத்தில் இத்தாலியில், அது பதவிக்கு வந்த பன்னிரெண்டு ஆண்டுகளுக்குப் பின்னால் முற்றிலும் வேறொரு மொழியில் பேசி வந்தது. 1934 ஆம் ஆண்டு இறுதியில் பாசிசக்கட்சியின் பொதுச்செயலரான **அக்கில்ஸ் ஸ்ட்ராஸ்** வேலையில்லாத் தொழிலாளிகள் பெரும்பாலானோர் பங்கெடுத்திருந்த ஒரு கூட்டத்தில்



படிப்பகம்

www.padippakam.com

பின்வருமாறு பேசினார் : ''நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். பாசிசம் உங்களுக்கு மரியாதையை அல்லது வேலையை அல்லது இலாபத்தைத் தருவதாக வாக்குறுதி அளிக்கவில்லை. மாறாக, கடமையையும், போர்ப்பயிற்சியையும்தான் தந்திருக்கிறது''. இதற்கு சில மணி நேரத்திற்கு முன்பு மிலான் என்னுமிடத்தில் தொழிலாளர் கூட்டத்தில் இதே தலைவர்தான் பேசியிருந்தார். அக்கூட்டத்தில், அவர் பாசிசப் பொருளாதாரத்தின் கோட்பாடுகள் என்று சொல்லப்படுகின்ற ஒன்றைப் பற்றி உரையாற்றியிருந்தார். அது பின்வருமாறு : ''தனி முதலாளிகளின் இலாபத்தில் அக்கறை கொண்டிருந்த பொருளாதாரத்தின் இடத்தில் இப்பொழுது, கூட்டுநலன்கள் பாதுகாக்கப்படுவதை இலட்சியமாகக் கொண்ட ஒரு பொருளாதாரம் வைக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளிகள் முன்னைக் காட்டிலும் இப்போது உற்பத்திச் செயல்போக்கில் நெருக்கமாகப் பங்கெடுக்க வேண்டும். அதன் அவசிய ஒழுங்கில் பங்கெடுக்க வேண்டும். கடந்த நூற்றாண்டு முதலாளியத்தின் நூற்றாண்டு என்றால், தற்போதைய நூற்றாண்டு தொழிலாளிகளின் அதிகாரத்திற்கும், பெருமைக்குமான நூற்றாண்டு ஆகும்''. ஒரே நாளில் இருவேறுபட்ட மொழிகளில், ஒரு அமைப்பின் அதிகாரப்பூர்வப் பேச்சாளர் பேசுகிறார் என்றால் அதன் கொள்கை பொய்மையும், வெறுப்பும்தான் என்பதைத் தவிர வேறெதுவுமாக இருக்க முடியாது. தொழிலாளிகளின் அனைத்து சுயேச்சையான அமைப்புகளையும் கொடூரமாக அழித்துவிட்டு, அதன்பின் வேலைநிறுத்த உரிமையையும் ஒழித்துவிட்டு, தேசியத் தேவை என்ற அறைகூவலைக் காட்டி ஊதியங்களை வெட்டிக்குறைத்துவிட்டு தொழிலாளிகளின் அதிகாரத்தைப் பற்றியும், பெருமையைப் பற்றியும் முசோலினி வீண்பெருமை பேசுகிறார்.

பெருமுதலாளிகளின் துணையோடு ஆட்சிக்கு வந்ததாலும், கம்யூனிசம் சிண்டிகலிசம்* ஆகியவற்றைக் கண்டு அஞ்சி நடுங்கியதாலும் தொழிலாளர்களின் நலன் என்ற தன்கடமையில் முசோலினி என்றும் நேர்மையோடு இருந்திருக்கமுடியாது. சிண்டிகலிசம், குறுந்தேசியவாதம் ஆகியவற்றின் விந்தையான கலவைதான் பாசிசக்கட்சியின் உண்மையான திட்டமாகும். ஆனால் இதற்கு நீண்டகாலத்திற்கு முன்பே புரட்சியின் எழுச்சி அலைக்கு எதிராக முதலாளியத்தைப் பாதுகாப்பதுதான் அதன் திட்டமாக இருந்து வந்தது. தேசிய ஒருமைப்பாடு என்ற அறைகூவலைக் காட்டி இது (பாசிசம்) போலி–இடதுசாரிக் கொள்கைகளிலிருந்து நேரெதிரான வலதுசாரிக் கொள்கைக்குத் தாவியது.

முசோலினியின் கருஞ்சட்டைப்படையில் நடுத்தரவர்க்கப் போக்கிரிகளே பெரும்பாலும் அணி திரட்டப்பட்டனர். பெருந்தொழிலதிபர்களின் நிதியுதவி இதற்குத் தாராளமாகக் கிடைத்தது. முசோலினி ஆட்சிக்கு வருவதற்கு முன்பே, அவரின் கூலிப்படை சோசலிசவாதிகளுக்கும் தொழிலாளிவர்க்க அமைப்புகளுக்கும் எதிரான வன்முறையில் ஈடுபட்டிருந்தது. இவர் ஆட்சிக்கு வந்த பின்னால் தொழிற்சங்க அலுவலகங்கள் சோதனையிடப்பட்டன. தொழிலாளிவர்க்க இயக்கத்தின்

* சிண்டிக்கலிசம்:– தொழிற்சங்க ஆட்சி இயக்கம், வேலைநிறுத்தம் முதலிய நடைமுறைகள் மூலம் தொழிலாளர்களே உற்பத்தியுரிமையைத் தங்கள்வசம் மாற்றிக் கொள்ளும் நோக்கமுடைய இயக்கம்.



படிப்பகம்

www.padippakam.com

முன்னோடிகள் ஏறத்தாழ இருபதாயிரம் பேர் கொல்லப்பட்டனர் அல்லது சிறைபிடிக்கப்பட்டனர் அல்லது நாடு கடத்தப்பட்டனர்.

பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலான பாசிச ஆட்சியில் இத்தாலியில், தொழிலாளிவர்க்கத்தின் சூழ்நிலைபற்றிய ஒரு உண்மையான சித்திரத்தைப் பாசிசப் பொருளாதாரவாதி ஒருவர் எழுதிய புத்தகத்தில் காணலாம். மகாயுத்தத்தின் (முதல்உலகப்போர்–மொர்) போது இத்தாலியத் தொழிலாளர்களின் உண்மையான ஊதியம் பாதியாகக் குறைக்கப்பட்டிருந்தது. 1919–21 ஆம் ஆண்டுகளில், ஊதியம் போருக்கு முந்திய அளவை மீண்டும் எட்டியது. தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரச் செயல்பாடுகளே இந்த உயர்வுக்குக் காரணமாக இருந்தது. இதற்கு எதிராகத்தான் முதலாளியத்தின் இரத்தவெறி கொண்ட கருவியாகப் பாசிசம் தோன்றியது. இன்றோ உண்மையான ஊதியம் போர்க்கால நிலைமைக்குச் சுருங்கிவிட்டது. (பாலா அர்க் அரி – *ஊதியங்களும், வாழ்க்கைச் செலவுகளும்*) தொழிலாளிவர்க்கத்தின் மீதான அதிகரித்த சுரண்டல் ஒருபுறமிருக்க, மறுபுறம் பாசிசமானது செல்வந்தர் மீதான வரிச்சுமையைப் படிப்படியாகக் குறைத்து வந்தது. சொத்து வரிகள் பெருமளவு குறைக்கப்பட்டன. அதே நேரத்தில் மறைமுக வரிக்கான தளம் விரிவுபடுத்தப்பட்டது. அரசு வருமானத்தில் அறுபது விழுக்காடு உழைக்கும மக்கள் செலுத்தும் வரியிலிருந்து பெறப்பட்டது.

பாசிசஅரசு பெருநிலக்கிழார்களுடன் நட்பான அணுகுமுறையே கொண்டிருந்தது. வறிய உழவர்களுக்குச் சாதகமாக நிலத்தை மறுவிநியோகம் செய்ய வேண்டும் என வாதாடிய கத்தோலிக்க மக்கள் கட்சி கொடூரமாக நசுக்கப்பட்டது. இன்றும்கூட விவசாய நிலத்தில் ஏறத்தாழ நாற்பது விழுக்காடு விவசாயத்தில் ஈடுபட்டிருப்போரின் தொகையில் அரை விழுக்காட்டினர்களுக்கே சொந்தமாக இருக்கிறது. மீதி நிலங்கள் அய்ந்து மில்லியன் மக்களுக்குப் பங்கிடப்பட்டுள்ளது. அதில் இரண்டு மில்லியன் மக்கள் குத்தகைதாரர்கள். ஒரு விவசாயக்குடும்பம் பெற்றிருக்கும் நிலத்தின் சராசரி அளவு இரண்டு ஏக்கருக்கும் சற்று அதிகம். விவசாய உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கை நிலக்கிழார்கள் நிலவாடகையாக வசூலித்துக் கொள்கிறார்கள். நேரடி, மறைமுக வரிகளில் பெரும் பகுதியை அரசாங்கம் எடுத்துக் கொள்கிறது.

ஜெர்மனியில், “தேசியசோசலிசம்” என்ற பொய்யான வண்ணத்தின் கீழ் பயணத்தை மேற்கொண்ட பாசிசமானது, தன் பங்காக இதே மாதிரியான கொடிய சாதனைகளைத்தான் விட்டுச்சென்றது. சுயதேவை என்ற அதீத தேசியக் கொள்கை வாழ்க்கைச் செலவுகளை மேலும்மேலும் அதிகரிக்கச் செய்தது. மறுபுறம் ஏற்றுமதி–வாணிகத்தைச் செயற்கையாக அதிகரிக்க, உற்பத்திச் செலவைக் குறைக்க வேண்டியிருந்தது. அதனால் ஊதியம் வெட்டப்பட்டது. ஊதியத்தின் அளவு குறைக்கப்பட்டதும், வேலையில்லாத் தொழிலாளிகள் கேடுகெட்ட உழைப்பாளர்கள் முகாமிற்குக் (labour camp) கட்டாயமாக அனுப்பப்பட்டு நடைமுறையில் அங்கு ஊதியம் கொடுக்கப்படாத தொழிலாளிகளாகவே வேலைபார்த்து வந்ததும் வேலையில்லாத் திண்டாட்டம் என்ற பிரச்சினைக்குப் பாசிசம் முன்வைத்த மிகப்பிரபலப்படுத்தப்பட்ட தீர்வுகளாக இருந்தன. “குறைந்த ஊதியம், பகுதிநேர வேலைவாய்ப்பு, உயர்ந்த வாழ்க்கைச் செலவினம்” ஆகிய சுமைகளினால்



படிப்பகம்

www.padippakam.com

ஜெர்மன் மக்கள் தள்ளாடினர். தொழிலாளர்களின் போராட்டங்களை ஒழித்து முதலாளிகளையும் தொழிலாளர்களையும் நட்பு அணிக்குக் கொண்டு வந்த நாஜிகளின் தொழிலாளர்முன்னணியானது படுவேகமான வீழ்ச்சியைச் சந்தித்தது. (*புதிய இராஜதந்திரியும் நாடும், லண்டன், செப்.8, 1934*). இக்கருத்தை வெளியிட்டதற்குப் பின்னால், தொழிலாளர் முன்னணி கலைந்து வருவதைத்தடுக்க அது தொழிலாளர்களின் அடிமை அமைப்பாக மாற்றப்பட்டது. தேசிய நலனிற்காக வர்க்க சமரசம் கொண்டிருந்த இவ்வமைப்பில் தொழிலாளர்களின் பங்கு கட்டுப்பாடும், தியாகமும்தான்.

இம்மாதிரியான ஒரு சூழலின் நடுவில்தான் தேசியசோசலிசக் கட்சியின் நிறுவன ஆண்டுவிழா கொண்டாடப்பட்டது. அங்கு கூடியிருந்த உள்ளூர் தலைவர்களிடையே– இவர்கள்தான் "புரட்சியின்" உண்மையான வெற்றியாளர்கள்– தலைவர் பின்வருமாறு முழங்கினார் : "தேசியசோசலிசப் புரட்சியானது "ஜெர்மனியில் ஒரு ஆயிரம் ஆண்டுகளுக்கான சமூக அமைப்பை நிர்மாணித்திருக்கிறது". ஆகவே, தற்போது மக்கள் அனுபவித்து வரும் வாழ்க்கை நிலையைத் தீவிர மறுசீரமைப்புக் காலத்தில் ஏற்படும் ஒரு தற்காலிக மாறுதலின் விளைவாகக் கருதாமல் குறைந்தபட்சம் ஆயிரம் ஆண்டுகளுக்கு நிரந்தரமாக நீடிக்கும் ஒன்றாகக் கருதப்பட்டது . புரட்சி குறித்து மக்கள் மிக அதிகமாகக் கேள்வி எழுப்பாமலிருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். சாத்தியத்திற்கும் சாத்தியமின்மைக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை உணர்ந்து கொள்ள வேண்டும்" என இட்லர் நயமாக எச்சரித்தார். நாஜிகளின் திட்டத்தில் இடம் பெற்றிருந்த "இரண்டாம் புரட்சி" என்ற கருத்தை ஒரேயடியாகப் புதைத்து விடுவதுதான் இம்மாதிரியான வியப்பான அறிக்கைகளின் நோக்கமாக இருந்தது. "முகாம்கள், சவுக்கடி, சுதந்திரத்தை ஒழித்தது, பொதுமக்கள் மனநிலையில் சரிவு, உடற்பயிற்சி, இராணுவம், காட்டுமிராண்டிக் காலத்திற்குத் திரும்பியது ஆகிய இவைதான் பாசிசத்தின் சாத்தியமான, உண்மையான வெற்றிகள்". (*அதே நூல்*)

தனது சொந்தத்திட்டத்தில் இடம் பெற்றிருந்த போலி–சோசலிச அம்சங்களைக்கூட இட்லர் வெளிப்படையாகவே நிராகரித்ததைப் பார்த்து ஊக்கம் அடைந்த அப்போதையப் பொருளாதார வழிகாட்டி டாக்டர் ஸ்கச்ட் தேசியசோசலிசத்தின் பொருளாதாரக் கோட்பாடுகளை எதிர்த்து ஒரு பாரிய தாக்குதல் நடத்தினார். தேசியசோசலிசத்தின் பொருளாதாரக் கோட்பாடுகளைப் பழித்துரைத்த இவர் "கடந்த காலங்களில் நாம் சேகரித்த அனுபவங்களைப் பிற்போக்கானவை எனச் சொல்லிவிட முடியாது" என்கிறார். "தேசியசோசலிச ஜெர்மனியின் பொருளாதார வாழ்க்கையை முதலாளியம் ஆதிக்கம் செலுத்தி வந்தது. கடந்த கால அனுபவங்களை நியாயப்படுத்துபவர் என்ற முறையில் டாக்டர் ஸ்கச்ட், "இம்மாதிரியான காலங்களில் கோட்பாட்டு ரீதியான பொருளாதார மாளிகையைக் கட்டுவது பொருத்தமற்றது. தேசியசோசலிசம் செயல்களைத்தான் ஏற்றுக் கொள்கிறது. வெறும் திட்டங்களையல்ல; தெளிவற்ற கோட்பாடுகள் நம்மை வழிநடத்திச் செல்வதை நாம் அனுமதிக்கக் கூடாது" என வாதிட்டார்.



படிப்பகம்

www.padippakam.com

இச்சமயத்தில்தான் தேசியசோசலிசக் கட்சியின் பொருளாதார ஆய்வாளரான காட்பிரைட் பீடர் தான் எழுதிய கட்டுரையொன்றில் கட்சித் திட்டத்தின் பொருளாதார விதிகளை மீள நினைவுபடுத்தியிருந்தார். ஆட்சிக்கு வருவதற்கு முன் கட்சியின் அடிப்படைக் கோரிக்கைகளில் ஒன்று "வட்டி அடிமைத்தனத்தை ஒழிப்பது". பீடர் முட்டாள்தனமாக அக்கோரிக்கையை நினைவூட்டினார். அத்தோடு, வங்கியின் வட்டி அளவைக் குறைக்கச் சொல்லியும் தேசியசோசலிச அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுத்தார். "முன்னெப்போதைக் காட்டிலும் இப்போது ஜெர்மனியின் பொருளாதாரம் பெரும் நிதி நிறுவன அதிபர்களின் ஆதிக்கத்தில் இருக்கிறது. இவர்கள் நடுத்தர வணிகர்களையும், கைவினைஞர்களையும் வட்டி அடிமைத்தனம் என்ற ஒரு சூழலில் கட்டிவைத்திருக்கின்றனர். தற்போதைய சூழலில் ஒரு நடுத்தர வணிகர் தன் வட்டிப் பொறுப்பை ஈடுசெய்யும் ஒரு அவலப் பணியிலேயே தன் முழுக்கவனத்தையும் செலுத்த வேண்டியிருக்கிறது" என இவர் குறிப்பிட்டுப் பேசினார். இம்மாதிரியான பலவீனமான போலி–சோசலிசக் குரல்கள்தான் டாக்டர் ஸ்கச்ட்டின் தாக்குதலைத் தூண்டிவிட்டன எனச் சொல்லலாம். பெரும் நிதிநிறுவன அதிபர்களினால் ஆட்சிக் கட்டிலேறிய இட்லர், நடுத்தர வணிகர்கள், கைவினைஞர்கள் கவலைகளைப் பொருட்படுத்த வேண்டிய தேவை இனி இல்லை.

"வட்டிஅடிமைத்தனம்"தான் ஜெர்மனி மக்களின் அனைத்துத் துயரங்களுக்கும் காரணம் என்பது தேசியசோசலிசப் பொருளாதாரத்தின் அடிப்படைக் கோட்பாடாகும். நாஜிகளின் சமூகத்திட்டத்தின் அடிப்படைக் கொள்கையே வட்டியை ஒழிப்பது, அரசே கடன் வழங்குவது ஆகியனதான். இக்கொள்கையின் தந்தை காட்பிரைட் பீடர் தான். "தேசியப்புரட்சியின் அவசியத்திலிருந்து நான் ஒவ்வொன்றையும் கற்றுக் கொண்டேன்" என்ற விசயத்தை இட்லருக்குக் கற்றுக் கொடுத்தது இவர்தான்.(*இட்லரின் சுய–வரலாறு*) ஆனால் இட்லர் பதவிக்கு வந்த கையோடு தேசியசோசலிச அரசின் அனைத்துப் பதவிகளிலிருந்தும் தன் பொருளாதாரக் குருவைப் பின் தள்ளிவிட்டார். பெரும் நிதி அதிபர்களின் பேச்சாளனான டார்டர் ஸ்கச்ட் இவரின் பொருளாதார வழிகாட்டியாக மாறினார். 1934 ஆம் ஆண்டின் இறுதியில் வட்டி அடிமைத்தனத்திற்கு ஒரு வலியில்லாத மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. கோக்லர் என்ற புதிய மருத்துவர்தான் இந்த மருந்தைப் பரிந்துரை செய்தவர். இவர் கட்சியின் பொருளாதார ஆய்வுக்குழுவின் தலைவர். "உங்கள் கடன் தொகைகளை முழுவதும் கட்டிவிடுங்கள். புதிய கடன் உண்டாக்கிக் கொள்ளாதீர்கள். கடன் இல்லையென்றால் வட்டியும் இல்லை. அடிமைத்தனமும் இல்லை". இட்லர் ஆட்சிக்கு வந்து இரண்டு ஆண்டுகள் ஆன பின்பும் கூட உழவர்களுக்குக் கட்சித்திட்டம் அளித்த வாக்குறுதியான நிலவிநியோகத்தை இவர் தொடர்ந்து நினைவூட்டி வந்தார். இது தேசியசோசலிச அரசுக்கு எதிரான தீவிரமான தாக்குதலாகும். ஆனால், டேரி மிகச்சாதாரணமான ஒரு விசயத்திற்காக விவசாய அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். விவசயப் பொருட்களின் விலையை உயர்த்துவதற்காக மார்க் கின் (ஜெர்மன் நாணயம்–மொர்) மதிப்பைக் குறைக்க வேண்டுமென இவர் வாதிட்டார்.



படிப்பகம்

www.padippakam.com

தொழிற்துறை முதலாளிகளுக்கு ஊறுவிளைவிக்கும் இம்மாதிரியான நிதிக் கொள்கைக்காக ரிச்சர்ட் டெரியின் தலையை ஸ்கச்ட் தண்டனையாகக் கேட்டார். இட்லர் மிகச்சரியாக அப்பணியைச் செய்து முடித்தார்.

1934 ஆம் ஆண்டு இறுதியில் இட்லர் கொண்டிருந்த நிலையைப் பின்வரும் பத்தி தெளிவாகக் காட்டுகிறது : "இந்தத் தலைவன் வரம்பற்ற அதிகாரம் கொண்டவனாக இருக்கலாம். ஆனால் நிச்சயமாக அவர் ஒரு கடவுளல்ல; இவரும் கூட ஒரு சிலரின் நலன்களைச் சாந்தப்படுத்த வேண்டியிருக்கிறது. உள்ளுணர்வுகளின் போக்குகளை நன்கு அறிந்து செயல்பட வேண்டியிருந்தது. ஏனெனில் அப்பொழுதுதான் மக்களின் பொதுக்கருத்து என்ற முரட்டுக்குதிரையின் மீது அமர்ந்து சவாரி செய்ய முடியும். மக்களின் உணர்வுகள் இவரைப்பற்றி இன்னும் அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. பிரச்சாரத்தின் மூலமும், பகட்டு ஆரவாரத்தின் மூலமும் இவர்களைத் திசைதிருப்பி தொடர்ந்து சமாளிக்க முடியும் என்றும் பழுப்புச்சட்டைப் படைகளிலிருந்த, அரைகுறை நம்பிக்கை கொண்ட ஆட்களை நசுக்கியது போல கடைசி முயற்சியாக இதையும் அச்சுறுத்தி நசுக்கிவிடலாம் என்றும் நம்பினார். தனக்கு நிதிதந்த பெருந்தொழில்முதலாளிகளுக்கு மிகுந்த மரியாதை காட்டினார். போலி-புரட்சிகர இடதுசாரி சீடனாக நடிக்கும்படி இவருக்குச் சொல்லித் தந்ததே அவர்கள்தான்.தன் சொந்த அதிகாரத்தைத்தான் நிலைநாட்டி வருகிறோம் என இவர் தனக்குத்தானே கருதிக்கொண்டு அவர்களிடம் பணிந்து போனார். அவர் தொடர்ந்து அவர்களுக்குப் பணிந்து போய்க் கொண்டுதான் இருக்க வேண்டும்". (*புதிய இராஜதந்திரியும் தேசமும்– ஆகஸ்ட் 11, 1934*)

ஜெர்மனியில் தேசியசோசலிசம் பெற்ற வெற்றியினால் போல்ஷ்விசத்திலிருந்து அய்ரோப்பா காப்பாற்றப்பட்டது என இட்லரும் , அவரது கட்சியின் முன்னணி உறுப்பினர்களும் வாய்ப்புக்கிடைக்கும் போதெல்லாம் பெருமை பேசி வந்தனர். "நாஜிகள் வெற்றி பெறாமல் இருந்திருந்தால், ஜெர்மனியை மட்டுமல்ல. அய்ரோப்பா முழுவதையும் போல்ஷ்விசம் கைப்பற்றியிருக்கும். முழு போல்ஷ்விக் காட்டு மிராண்டித்தனத்திலிருந்து நம்மைக் காப்பாற்றியது நாஜிகளின் வெற்றியே ஆகும்." உண்மையைச் சொல்லப்போனால் ஜெர்மன் பாசிசவாதிகள் தொடக்க காலத்திலிருந்தே தங்களை சோசலிசவாதிகளாகப் பாசாங்கு செய்து கொள்ளவில்லை. புரட்சிகர நாட்களான 1919–1920 களிலும் கூட "சிவப்பு அபாயத்திற்கு எதிராகப் போரிடுவதுதான்" தங்கள் லட்சியம் என அறிவித்திருந்தனர். 1922இன் தொடக்கத்திலேயே, தன் கட்சியானது தொழிலாளர்–விரோதக் கொள்கைகளில் உறுதியோடு இருப்பதை எடுத்துக் காட்டி முதலாளிகள் சங்கத்திடம் இட்லர் நிதியுதவி கோரியிருந்தார். "தான் பதவிக்கு வந்த பின்புதான் தொழிலாளர்களுக்குத் துரோகம் செய்தார் என்பதில்லை. தொடக்கத்திலிருந்தே இட்லர் அவர்களுக்கு எதிராகவே இருந்து வந்தார்". (கன்ரட் ஹய்டன்–*தேசியசோசலிசத்தின் வரலாறு*) 1926 ஆம் ஆண்டின் போதுதான் இட்லரின் சீடர்கள் முதலாளிய – எதிர்ப்புக் கிளர்ச்சி செய்தனர். கட்சித் திட்டத்தில் இடம் பெற்றிருந்த போலி – சோசலிச சட்ட விதிகள், இட்லரின் முன் முயற்சியின் பேரில் அறிமுகப்படுத்தப்படவில்லை. மாறாக, இட்லரின் எதிர்ப்பையும்



படிப்பகம்

மீறி ஸ்ட்ரேஸெர் சகோதரர்களால் அவை இடம் பெறச் செய்யப்பட்டன. கட்சி ஆட்சிக்கு வந்தவுடன் இரு சகோதரர்களும் கட்சித் தலைமையிலிருந்து அகற்றப்பட்டனர். கடைசியாக ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொருவர் நாடு கடத்தப்பட்டார்.

இட்லர் ஆட்சியின் இரண்டாம் ஆண்டின்போது கட்சியில் இடம் பெற்றிருந்த இடதுசாரிகள் ஆளும் வர்க்கத்தின் பிற்போக்கு கொள்கைகளின் மீது வெளிப்படையாகவே மனக்குறையைக்காட்டி வந்தார்கள். கட்சியில் பெருமளவிற்கு தொழிலாளி வர்க்க சக்திகள் அங்கம் வகித்து வந்தனர். பழுப்புச்சட்டைப்படை தொண்டர்களில் பெரும்பாலோர் தொழிலாளிகளாக இருந்தனர். வேலையில்லாத இளம் தொழிலாளர்களும் இதில் சேர்க்கப் பெற்றிருந்தனர். ஊதாரித்தனமானப் பொருளாதார வாக்குறுதிகளில் ஒரு சிலவற்றையாவது நிறைவேற்ற வேண்டும் என எதிர்பார்த்தனர். "இரண்டாம் புரட்சி" க்கான முழக்கம் அதிகரித்து வந்தது. இட்லரின் சிம்மாசனத்திற்குப் பின்னால் இருந்தவர்கள் இம்முழக்கத்தைக் கண்டு கலவரமும் அதே சமயத்தில் எரிச்சலும் அடைந்தார்கள். நிலக்கிழார்கள், இராணுவத் தலைவர்கள் ஆகியோர் சார்பாக வான்பாப்பன் ஒரு அச்சுறுத்தும் பேச்சை நிகழ்த்தினார். இவரைக் கருவியாகக் கொண்டுதான் இட்லர் ஜெர்மனியின் அதிபரானார். புரவலர்களின் விருப்பப்படி கைப்பாவை நடக்கவில்லை என்றால் எவ்வளவு எளிதாக கைப்பாவை ஆட்சிக் கட்டிலில் ஏற்றப்பட்டதோ அவ்வளவு எளிதாக ஆட்சியிலிருந்து இறக்கியும் விடப்படும் என்ற விசயத்தை உணர்த்தத்தான் அவர் அவ்வாறு பேசினார். பொருளாதார ஆலோசனைக் குழுவின் தலைவர் பொறுப்பிலிருந்து விலகுவதாக கிரப்வான் போக்லன் அச்சுறுத்தினார். இட்லர் ஆட்சிக்குப் பெருந் தொழிலதிபர்களின் ஆதரவு வாபஸ் பெறப்படுகிறது என்பதே இந்த அச்சுறுத்தலின் பொருள். ஆணையிடப்பட்டதும் இட்லர் அடி பணிய நேர்ந்தது. "இரண்டாம் புரட்சியின் அபாயத்தை" அழிப்பதற்காக அவர் 1934 ஜூன் 30 அன்று தன் கட்சிக்கு அவப்பெயர் தந்த இரத்தத்தூய்மை நடவடிக்கையை நிறைவேற்றினார்.(கோயரிங்)

இவ்வாறாக நிலக்கிழார்கள், இராணுவத்தலைவர்கள், முதலாளிகள் ஆகியோரின் கட்டளைகளின் கீழ் இட்லர் செயல்பட்டு வந்த அதே வேளையில் பின் வருமாறு அறிவிப்பு செய்திருந்தார் : "நமது திட்டம் உடனடியானதல்ல சகாப்தத்திற்கானது; நூற்றாண்டுக்காலமாக நாம் பணி செய்து வருகிறோம். பொறுமையைக் கைக்கொள்ளுங்கள், காத்திருங்கள்". ஏமாற்றத்திற்குள்ளான இவரின் தொண்டர்கள் தொழிற்சாலைகளைச் சமூகத்திற்குச் சொந்தமாக்க வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பியபோது, அது அபாயகரமான சோதனை முயற்சி என அதற்கு எதிர்ப்பு தெரிவித்தார். ஏனெனில், அது தொழில்துறை வளர்ச்சிப்போக்கின் ஆக்கபூர்வமான , அடிப்படையான தனிநபர் ஆளுமை என்ற சக்தியை அறவே ஒழித்து விடும் என்றார். இவர் கட்சியின் உண்மையான திட்டத்தின் ஒரு பகுதி பெருந்தோட்ட தொழில்களை (எஸ்டேட்ஸ்) பறிமுதல் செய்வது என்பது. ஆனால், ஆட்சியில் அமர்ந்தவுடன் திறமையான உற்பத்திக்காக பெருந்தோட்ட தொழில்களை அப்படியே விட்டுவைக்க வேண்டியிருக்கிறது என்ற கருத்தை அவர் வெளியிட்டார்.

www.padippakam.com

''புதிய ஜெர்மனியின் சூத்திரக் கயிறை ஆட்டி வைத்தவர்கள் பெருந்தொழிலதிபர்கள், பெரு நிலக்கிழார்கள், ஜங்கர் நிலக்கிழார்கள் ஆகியோரே இவர்களின் கட்டளைக்கு அடிபணிந்தே இட்லர் தேசிய புரட்சித் திட்டத்திலிருந்த போலி– சோசலிச வேடத்தை அகற்றினார். முதலாளியம் தனது பாதுகாவலனிடம் இலாபத்திற்கு எதிரான இடையூறுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கக் கட்டளையிட்டது இட்லர் அதற்கு அடி பணிந்தார். புரட்சி முற்றுப் பெற்றது ''(எர்னஸ்ட் ஹென்றி : *அய்ரோப்பாவின் மீது இட்லர்*) இட்லரின் ஆட்சியின் கீழிருந்த ஜெர்மனியின் நிலை குறித்து இது ஒரு சரியான மதிப்பீடாகும். பாசிசவாதிகளின் சோசலிசப் பிரச்சாரம் ஒரு வஞ்சக வேடமாகும். ஆளும் வர்க்கத்தின் உதவியால் பதவிக்கு வந்த நாஜிகள் தங்கள் எசமானர்களின் பேராசையை நிறைவுபடுத்த ஜெர்மனியை நாசப்படுத்தினர்.

பாசிசவாதத்தின் சோசலிசப் பிரச்சாரத்தைப் போலவே அவர்கள் முன்வைத்த தேசியவாதமும் ஒரு மோசடியாகும். தொழிற்துறையில் முன்னேறிய ஜெர்மனியைப் போன்ற நாடுகளில் தொழிலாளி வர்க்கத்தின் நிலையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தாமல் உண்மையான தேசிய நலனை உயர்த்த முடியாது. ஏனெனில் மக்கள் தொகையில் பெரும்பகுதி தொழிலாளி வர்க்கத்தினரே. ஆகவே பெரும்பான்மையினரின் நலன்களை முன்வைத்துத்தான் தேசிய நலன் நிர்ணயம் செய்யப்படவேண்டும். தொழிலாளி வர்க்கத்தின் நலன்கள் தேசிய நலனுக்கு விரோதமாக இருக்க முடியாது. ஆகவே, தொழிலாளி வர்க்கத்திற்கு எதிராக பாசிசவாதிகள் கொண்டுள்ள கடுமையான பகைமையும் தேசிய நலனில் அவர்கள் கொண்டுள்ள அக்கறையும் முரண்பட்டு நிற்கிறது.

வெர்செய்ஸ் உடன்பாட்டிற்கு எதிராக இட்லரிசவாதிகள் போட்ட கூக்குரல் அவர்களுக்கு நொடிந்துபோன நடுத்தரவர்க்கத்தின் ஆதரவைப் பெற்றுத்தந்தது.தேசிய மரியாதையை நிலைநாட்ட பாசிசவாதிகள் விரும்பினார்கள்.ஜெர்மன் மக்கள் மீது அவமானகரமான உடன்படிக்கையைத் திணித்த சக்திகளைப் பழிவாங்க வேண்டும் என்பது பாசிசவாதிகளின் முழக்கமாக இருந்தது. ஆனால், ஆட்சிக்கு வந்து ஓராண்டு முடிவதற்குமுன் இட்லர் பின்வருமாறு அறிவித்தார் :– ''நமது மக்களின் மரியாதையை போர்க்களத்தில் மறுநிர்மாண்ம் செய்ய வேண்டிய தேவை நமக்கில்லை. நமது மரியாதையை யாரும் எடுத்துச் சென்று விடவில்லை. ஒரே ஒரு அவமரியாதைதான் நமக்கு நேரிட்டிருக்கிறது. அது மேற்கிலும் இல்லை; கிழக்கிலும் இல்லை. மாறாக நமது நாட்டிற்குள்தான் நேரிட்டிருக்கிறது.இந்த அவமரியாதையை, நாம் நல்லபடியாக மாற்றிக் கொண்டோம்'' (*நூரம்பர்க் திருவிழாவில் பேசிய உரை – செப்டம்பர் 1933*). புரட்சிதான் இங்கு அவமரியாதை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. புரட்சி வெற்றி பெற்றிருந்தால் அது ஜெர்மன் தேசத்தின் உண்மையான நலனிற்குப் பாதுகாப்புத் தந்திருக்கும்.

சோவியத்ஒன்றியத்தைத் தவிர மற்ற நாடுகளுக்கு எதிரான பாசிசவாதிகளின் முழக்கம் ஒரு கவர்ச்சிகரமான வாய்ப் பந்தலாகவும் வெற்றுவேட்டாகவும் இருந்தது. வெர்செய்ல்ஸ் உடன் படிக்கையின் இராணுவ விதிகளை இட்லர் நிராகரித்தது.நேசநாடுகளின் (அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு முதலிய நாடுகள்– மொர்)



படிப்பகம்

www.padippakam.com

மறைமுக சம்மதம் இல்லாமல் சாத்தியப்பட்டிருக்க முடியாது.இன்று ஜெர்மனி மீண்டும் ஒரு வல்லமை வாய்ந்த இராணுவத்தைக் கட்டியமைத்திருக்கிறது. ஆனால், நான்கு ஆண்டுகளுக்கு முன்பு பாசிச அரசாங்கம் வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையைக் கிழித்தெறிவதிலும் ஜெர்மனியை மறுஆயுதமயப்படுத்துவதிலும் தனக்குள்ள உறுதியை அறிவித்தபோது, அய்ரோப்பிய நாடுகளின் அரசியல் அணிசேர்க்கையும், கூட்டு இராணுவ வலிமையும் நேச நாடுகள் விருப்பப்பட்டால் பாசிச அரசின் வாய்ச்சடவாலை திரும்பப் பெற வைக்கும் அளவிற்கு வலுவானதாக இருந்தது. பிரான்சில் பெரும்பாலோர் கோரியபடி ஒரு "தடுப்புப்போர்" (Preventive war) நடத்தப்பட்டிருந்தால் எதிர்ப்புக் காட்டிய ஜெர்மனி புறமுதுகுகாட்டியிருக்கும். ஜெர்மன் மண்ணில் போர் தொடங்கியிருக்கும். இருவாரங்களுக்குள் பிரான்சு –போலந்து கூட்டணிப்படை பெர்லினைக் கைப்பற்றியிருக்கும். இம்மாதிரியான ஒரு போரில் ஜெர்மனியில் மேற்குப்பகுதியில் உள்ள தொழில் மையங்களை பிரான்சு சரியான தருணத்தில் கைப்பற்றியிருக்க வேண்டும். ஆனால், நாஜிகளின் புரவலர்கள்(*நேசநாடுகள்–மொர்*) இயல்பாகவே இம்மாதிரியான ஒரு போரை விரும்பவில்லை. இந்தப் புரவலர்கள் இட்லரியவாதிகளின் இராணுவ வலிமையை நாடகபாணியில் வெளிக்காட்டச் செய்ததன் நோக்கம் வளமான ஆயுதவாணிகத்தின் மூலம் பணம் சம்பாதிப்பதே ஆகும். போரை நாடும் இடர் மிக்க விளையாட்டுக்குப் பாசிசவாதிகள் துணியக்காரணம் இன்னொரு முறை போரில் ஈடுபட பிரான்சுக்கு இருந்த தயக்கத்தை அவர்கள் அறிந்திருந்ததுதான்.

ஆகவே, தனது தோல்வியில் இருந்து மீண்டெழுந்த ஜெர்மனி தன்னை முழு ஆயுதபாணியாக்கிக் கொண்டதும், காலனிய விரிவாக்கத்தில் தனது இடத்தை மீண்டும் கோரியதும் ஆகிய இந்த வெற்றிகள் பாசிசத்தத்துவத்தால் தூண்டப்பட்ட "வெல்லப்படமுடியாத ஜெர்மானிய ஆண்மையின்" செயலூக்கத்திற்கு உரித்தானதல்ல. புரட்சி குறித்து நேசநாடுகள் கொண்டிருந்த அச்சத்தினால் விளைந்த நேர்மைக்கேடான கள்ளக்குழந்தைதான் புதிய ஜெர்மனி ஏகாதிபத்தியம் ஆகும். ஜெர்மனியில் புரட்சிகரச் சக்திகளை அடக்கியொடுக்கியதன் மூலம், நாஜிகள் சர்வதேசிய முதலாளியத்திற்கு ஒரு பாராட்டுக்குரிய பணியைச் செய்திருக்கிறார்கள். இம்மாதிரியான ஒரு பணியில் அவர்களும் நாஜிகளுக்கு உதவி செய்தாக வேண்டும். வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையை சுக்குநூறாகக் கிழித்தெறிந்த புகழின் காரணமாக இட்லர் நடுத்தர வர்க்கத்தின் விமர்சனமற்ற ஆதரவைப் பெற்றுக் கொண்டார். இவ்வர்க்கத்தின் உதவியால்தான் குறைந்தபட்சம் சிறிதுகாலத்திற்காவது புரட்சி அலையை இவரால் கட்டுப்படுத்த முடிந்தது.

ஜெர்மனி தன் இராணுவ ஆற்றலை அற்புதமான முறையில் மீளவும் திரும்பப் பெற்றதைப் பார்த்து அதிசயப்படுபவர்கள், இந்த வளர்ச்சிப்போக்கு எப்படி ஏற்பட்டது என்பதை அறியாதவர்களாகவே இருப்பார்கள். ஜெர்மனியில் புரட்சி வெடித்துவிடுமோ என்று அச்சப்பட்ட நேசநாடுகளின் உதவியும் சம்மதமும்தான் இதற்குக் காரணமாகும். ஜெர்மனியின் தேசியமரியாதை மீட்டுத்தரப்படும் என்ற லட்சியத்தோடு இட்லர் அரசியல் அரங்கில் தோன்றுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னமே



படிப்பகம்

www.padippakam.com

வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையில் இடம் பெற்றிருந்த இராணுவவிதிகள் **லக்கர்னோ ஒப்பந்தத்தின்** மூலம் நீக்கப்பட்டுவிட்டன. இந்த ஒப்பந்தத்தின்படி ஆக்கிரமிப்பிற்குள்ளான பகுதிகள் வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையில் கண்டுள்ள காலத்திற்கும் முன்னரே காலி செய்யப்பட்டன. இந்த ஒப்பந்தத்தின் மூலம் ஜெர்மனியை நேசநாடுகளுக்கு விற்றுவிட்டதாகக் குடியரசு அரசாங்கத்தின் மீது நாஜிகள் குற்றம் சாட்டினர். இந்த லக்கர்னோ ஒப்பந்தத்தின் மூலம்கிடைத்த மற்றொரு சலுகை நேசநாடுகளின் கட்டுப்பாட்டு ஆய்வுக்குழு திரும்பப்பெறப்பட்டதாகும். இந்தக் கட்டுப்பாட்டு ஆய்வுக்குழுதான் ஜெர்மனி ஆயுதபாணி ஆகாமலிருப்பதையும், குறிப்பாக ரைன் பகுதியின் இடதுகரையில் ஆயுதமயமாக்கம் நடைபெறாமல் இருப்பதையும் கண்காணித்து வந்தது. சோவியத்–எதிர்ப்பு முன்னணியை உருவாக்குவது குறித்த சேம்பர்லின்னின் கருத்தில் மிக்கவனமாக இருந்த பிரிட்டன், பிரான்சு நாடுகள் ஜெர்மனிக்கு இந்தச் சலுகைககளை அளித்தன. நடைமுறையில் மறு–இராணுவமயமாக்கத்தை அனுமதித்தன. ஜெர்மனியின் ஆண்மையை நிலைநிறுத்துவது என்ற இட்லரின் கவர்ச்சிப்பேச்சு ஜெர்மன் மக்களை அணிதிரட்டுவதற்குப் பலஆண்டுகளுக்கு முன்னரே இவை நடந்தேறிவிட்டன. சேம்பர்லின்னின் கீழ் செயல்பட்டு வந்த பிரிட்டனின் இராஜதந்திரம் "போல்ஷ்விக்அபாயத்திற்கு" எதிரான ஒரு பாதுகாப்பு அரணாக ஒரு வலிமையான ஜெர்மனியை விரும்பியது. ஜெர்மனியில் ஏற்படும் புரட்சி அபாயம் எளிதாக ரைன்பகுதியைத் தாண்டிவிடும் என்று பிரான்சு கொண்டிருந்த அச்சம் அதைக் கலவரப்படுத்தியிருந்தது. வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையில் நிலைநாட்டப்பட்டிருந்த அதன் (பிரான்ஸ்) பாதுகாப்பைத் தவறான வழியைக் காட்டிய பிரையண்டின் தாராளவாதம் அழித்துவிட்டது.

நேசநாடுகளின் கட்டுப்பாட்டு ஆய்வுக்குழுவோடு தொடர்பு கொண்டிருந்த புகழ்பெற்ற ஆங்கில வழக்கறிஞரான **ஜே. எச். மார்கன்** பின்வருமாறு எழுதுகிறார்:– "இந்த இரண்டு ஒப்பந்தங்களுமே (ஆக்கிரமிப்புப் பகுதிகளைக் காலிசெய்வது, கட்டுப்பாட்டு ஆய்வுக்குழுவைத் திரும்பப்பெறுவது) பிரிட்டன், பிரான்சு, பெல்ஜியம் நாடுகளின் அரசாங்கங்களால் நிறைவேற்றப்பட்டன. பிரிட்டன், பிரான்சு அரசாங்கங்கள் இந்த ஒப்பந்தங்களை எந்த அளவுக்கு நடைமுறைப்படுத்தும் என்பது பற்றி உண்மையில் இந்த நாட்டில் இருக்கும் ஒரு சிலரே கருத்துக் கொண்டிருந்தார்கள். ஒப்புக்கொண்டதைவிட அதிக அளவு நடைமுறைப் படுத்தப்பட்டது. ஜெர்மனி தான் தொடர்ந்து செய்து வரும் தவறுகளைச் சரிப்படுத்திக் கொள்வதாகக் கொடுத்த வாக்குறுதிகளை மட்டுமே நம்பி ஆய்வுக்குழு திரும்பப் பெறப்படவில்லை. ரைன்பகுதியிலிருந்து இராணுவத்தை விலக்கிக்கொள்ளும் பணி– வேறு வார்த்தைகளில் சொன்னால் வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் 45 ஆம் பிரிவு 180ஆம் பிரிவு ஆகியவற்றின் நடைமுறைகளும்–கைவிடப்பட்டன". (*டெய்லி டெலிகிராப், லண்டன், ஏப்ரல் தொடக்கம் 1936*)

இந்த நன்கறிந்த தகுதிவாய்ந்த அதே சாட்சியாளர் பின்வரும் விசயங்களையும் உறுதிப்படுத்துகிறார் : ஜெர்மனி மீண்டும் ஆயுதபாணியாவதற்கு



படிப்பகம்

www.padippakam.com

கண்காணிப்புக்குழு மறைமுகமாக ஆதரவு தந்தது. இராணுவம் விலக்கப்பட்ட பகுதிகளில் உள்ள முக்கியமான போர்த்தளவாடக் கட்டுமானங்களை அழிக்காமல் விட்டுவிடுவது, படைதிரட்டுவதற்காக நிறுவப்பட்ட அமைப்புகளை ஜெர்மன் கேட்டுக்கொண்டதன்படி அதன் வணிக நோக்கங்களுக்குப் பயன்படுத்த விட்டுவிடுவது ஆகிய செயல்களின் மூலம் ரைன் நதியில் இடதுகரையில் இருந்த காப்பரண்களையும், போக்குவரத்து வாய்ப்புகளையும், படை திரட்டலுக்கான நிரந்தரப்பணிகளையும் கூட அப்படியே விட்டுவிட்டு லக்கர்னோ ஒப்பந்தத்தின் மையநோக்கத்திற்குப் பணிந்து நேசநாட்டுப்படைகள் வெளியேறின. அதன் பின்னர் பல ஆண்டுகள் ஜெர்மனியின் பாதுகாப்புப் போலீசார் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த பகுதிகளில் மாறுவேடத்தில் இருந்து வருவது தெரியவந்தது. ஆனால் இந்த விசயத்தில்கூட "ஜெர்மனியின் கூரிய உணர்ச்சிகளுக்கு பணிந்து பிரிட்டன், பிரான்சு அரசாங்கங்கள் ரைன்லாந்துப் பகுதியிலிருந்த இந்தக் கூட்டமைப்புக்களை இராணுவ நோக்கத்துக்குப் பயன்படுத்தாமல் ஜெர்மனியே பேணிக்காத்துவர 1927 இல் ஒப்புக்கொண்டன".(*அதே நூல்*) முக்கியத்துவம் வாய்ந்த இன்னொரு பிரச்சினை நிழற்படை (shadow army) உருவாக்கப்பட்டதாகும். லக்கர்னோ ஒப்பந்தத்துக்குப் பின்னர்பிரிட்டன், பிரான்சு அரசாங்கங்கள் இது பற்றி மௌனம் சாதித்ததன் மூலம் தங்கள் சம்மதத்தைத் தெரிவித்தனர். கட்டுப்பாட்டுக்குழுவின் கண்களுக்கு முன்பாகவே தளபதி வான்சீக்ட் 1920லிருந்து 1926 வரை பழைய இராணுவத்தை அழிந்து போகாமல் காத்துவந்தார். இதுகட்டாய இராணுவப் பயிற்சியை மீண்டும் புகுத்த வழியமைத்துக் கொடுத்தது. லக்கர்னோ ஒப்பந்தம் ஜெர்மன் மீண்டும் ஆயுதபாணியாவதைத் தடுப்பதற்குப் பதிலாக இரகசியமாக இருந்த நடவடிக்கைகளை சட்டபூர்வமாக்கியது என்றே சொல்லவேண்டும்.

தன்னை இராணுவமயப்படுத்திக் கொள்ளும் உரிமையை மீண்டும் ஜெர்மனிக்குப் பெற்றுத்தந்த அய்யத்திற்குரிய புகழ் நிச்சயம் இட்லரைச் சேராது. இட்லருக்கு முன்னதாகவே இப்பரிசை நேசநாடுகள் ஜெர்மனிக்குத் தந்துவிட்டன. இப்பரிசு ஜெர்மன் நாட்டிற்குக் கொடுக்கப்படவில்லை. மாறாக, பெரும்போரின் அழிவிற்கு அந்நாட்டை வழிநடத்திச் சென்றவர்களுக்கும் அந்த அவமரியாதை மூலம் அளவற்ற செல்வத்தைச் சுருட்டிக் கொண்டவர்களுக்குமே இப்பரிசு பயன்பட்டது. மிக எளிதாகப் பெறப்பட்ட அப்புகழை முன்வைத்து அதே சக்திகள் மேலும் இலாபம் பெற முடிவெடுத்துக் கொண்டனர். கட்டுப்பாட்டு ஆய்வுக்குழு திரும்பப் பெற்ற ஓர் ஆண்டிற்குள்ளாகவே, ஜெர்மனியின் இராணுவச் செலவு பத்து மடங்கு அதிகரித்துவிட்டது. பெருந்தொழில்களுக்குப் பணி ஆணைகள் (ஆர்டர்) பெருமளவிற்குக் கிடைத்திருக்கின்றன என்பதே இதன் பொருளாகும். பெருவணிகச் சக்திகளுக்கு அளவற்ற இலாபத்தை ஈட்டித்தந்த ஆயுதப் பெருக்க வளர்ச்சி விரைவுபடுத்தப்படுவதை மறைக்கவே நாஜிகள் குறுந்தேசியவாதத்தைப் பிரச்சாரம் செய்துவந்தனர். இட்லர் ஆட்சிக்கு வந்த உடனே ஆயுதப் பெருக்கத்திற்கான மாதச்செலவு நூறு மில்லியன் டாலர்களாக உயர்ந்தது. நாட்கள் செல்லச்செல்ல இது படுவேகமாக உயர்ந்து சென்றது. தனது நிதிநிலை அறிக்கையை வெளிப்படையாக முன்வைக்க வேண்டும் என்ற பாராளுமன்ற நடைமுறையைப் பாசிச அரசு கைவிட்டுவிட்டது. ஆகவே, ஆயுதப் பெருக்கத்திற்காகச் செலவிடப்பட்ட தொகை



படிப்பகம்

www.padippakam.com

குறித்து துல்லியமாகச் சொல்வது கடினம். ஆனால், தகுதிவாய்ந்த இராணுவ நிபுணர்களின் கணக்குப்படி 1934 இல் இது ஆயிரம் மில்லியன் மார்க்குக்கும் அதிகமாக இருந்தது. அதாவது முன்னைய ஆண்டைக் காட்டிலும் இது நாற்பது விழுக்காடு அதிகரித்திருக்கிறது. இதற்கு அடுத்த ஆண்டு இராணுவச் செலவு மீண்டும் இருமடங்காகியது. இட்லர் ஆட்சியின் முதல் நான்கு ஆண்டுகளில், ஆயுதப் பெருக்கத்திற்கான மொத்தச்செலவு பதினாராயிரம் மார்க் இருக்கும் என மதிப்பிடப்படுகிறது. இதே ஆண்டு பொது வேலைகளுக்காக நாலாயிரம் மில்லியன் மார்க் செலவிடப்பட்டது. இப்"பொதுவேலை" என்பது மறைமுகமான இராணுவக் கட்டுமான வேலைகள்தான். வேறு வார்த்தையில் சொல்வதானால், மகாயுத்தத்தில் ஜெர்மனி செலவழித்த மொத்தத் தொகையில் நான்கில் ஒரு பகுதியை இது நாள் வரை பாசிச அரசாங்கம் செலவிட்டுள்ளது.

உள்நாட்டுக்கடன்கள் மூலமாகவே செலவிற்கான பெரும்பகுதிப் பணம் திரட்டப்பட்டது. நடைமுறையில் இராணுவச் செலவானது பெருந்தொழில்களுக்குத் தரப்படும் உதவித்தொகையாகவே இருக்கிறது. 1935 இல் ஜெர்மனியின் உள்நாட்டுக்கடன் அதன் மொத்தத் தேசியச் சொத்தில் மூன்றில் ஒரு பகுதியாக இருந்தது. ஆயுதச்செலவிற்கான பணத்தைத் தற்போதைய வருவாயிலிருந்து செலுத்த முடியாததால் எதிர்கால வருவாயிலிருந்து அதைக்கட்ட வேண்டியிருந்தது. ஆயுத வியாபாரிகளிடம் நாட்டின் எதிர்காலம் அடகுவைக்கப்பட்டது. வரிவிதிப்பு ஒரு எல்லையையே தொட்டுவிட்டது. இதன் விளைவு, பெரும்பாலான மக்களின் வாழ்க்கைத்தரம் அதலபாதாளத்திற்குச் சென்றுவிட்டது. செலவுசெய்ய வாய்ப்புள்ளவர்களால் கடமையிலிருந்து விலகிச்செல்ல முடிந்தது. 1934 இல் ஒரு சட்டம் இயற்றப்பட்டது. அதன்படி ஆறு விழுக்காட்டிற்கும் மேல் பங்கு ஈவுத்தொகை(டிவிடென்ட்) வைத்துள்ள பெருந்தொழில் நிறுவனங்கள் அனைத்தும் தங்கள் எஞ்சிய பங்குத் தொகைகளை அரசாங்கத்தின் வசம் ஒப்படைத்துவிட வேண்டும். ஆயுதப்பெருக்கம் என்ற தேசியக்களியாட்டத்தின் மூலம் பெரும்இலாபத்தைச் சுருட்டிக்கொண்ட தொழில் நிறுவனங்கள் தங்கள் இலாபக்கணக்கை ஆறுவிழுக்காட்டிற்கும் குறைவாகவே கணக்கிட்டுக்காட்டின. மறுபுறம் சேமிப்பு வங்கிகள், தொழிற்சங்கங்கள், கூட்டுறவு அமைப்புகள், ஏனைய சமூகக்காப்புறுதி (இன்சூரன்ஸ்) நிறுவனங்கள் ஆகியவற்றின் சேமிப்பு நிதிகள் அனைத்தும் அரசால் எடுத்துச்கொள்ளப்பட்டன. இதற்கு மாறாக அவற்றிற்கு "ஆயுதப்பெருக்கப் பத்திரங்கள்" தரப்பட்டன. இவ்வாறாக சுமை முழுக்கவும் ஏழை நடுத்தர வர்க்கத்தின் மீதும் தொழிலாளி வர்க்கத்தின்மீதும் விழுந்தது. "தேசிய மரியாதையை நிலைநாட்டுவதற்கான போர்" நடைபெறும்போது இவர்கள் தங்கள் வாழ்க்கையையே அர்ப்பணம் செய்ய வேண்டியிருக்கும். இதற்கிடையில், தேசியச் செலவைப் பயன்படுத்தி செல்வந்தர்கள் மேலும் மேலும் பணம் குவித்துக் கொண்டனர். ஏழைமக்களை உறிஞ்சக் கடைசியாகக் கண்டுபிடிக்கப்பட்ட வழி விற்பனை வரி. இது ஒரு வகை மொத்த வருமான வரியாகும். ஒருவரின் வருவாய்க்கு நேர் எதிர் விகிதத்தில் இது விதிக்கப்பட்டது. மாதிரிக்கு



படிப்பகம்

www.padippakam.com

நூறுரூபாய் உள்ள ஒரு மனிதன் நடைமுறையில் அத்தொகை முழுவதையும் அவசியப்பொருட்களை வாங்கச் செலவிட்டால், இதன்படி அவரின் முழு வருமானமும் வரிவிதிப்பிற்கு உட்பட்டது. மறுபுறம் ஆயிரம் ரூபாய் வருமானமுள்ள ஒருவர் தன் வருமானத்தில் ஒரு சிறு பகுதியை மட்டுமே செலவழித்தால், அச்செலவினப்பகுதி மட்டும் விரிவிதிப்பிற்குட்பட்டது. அதிக வருமானம் இருந்தால் அதில் சிறுபகுதிதான் வரிவிதிப்பிற்குட்படும். இதுதான் நடைமுறையில் தேசியசோசலிசத்தின் பொருளாதாரக் கொள்கையாகும்.

ஜெர்மன் அரசாங்கத்தில் வேலைபார்த்து வந்த ஒரு முன்னாள் பிரபலப் பொருளாதார நிபுணர் பின்வருமாறு எழுதுகிறார் :''கடந்த இரண்டு ஆண்டு கால இட்லரின் ஆட்சியில் நமக்குத் தெரியவருவது ஆயுத உற்பத்தியாளர்கள் மட்டும்தான் அதில் ஆதாயம் அடைந்திருக்கிறார்கள் என்பதே. மூலப்பொருட்களின் பற்றாக்குறையை முன்னிட்டும் கூட அவர்களுக்கு நட்டம் ஏற்பட வாய்ப்பில்லை. ஏனெனில், அரசாங்கத்தின் இறக்குமதிக் கொள்கையின்படி நுகர்வுப் பொருட்களின் உற்பத்திக்குத் தேவைப்படும் மூலப்பொருட்களைத் தியாகம் செய்தாவது இராணுவ உற்பத்திக்கான மூலப்பொருட்களை இறக்குமதி செய்து கொள்ளலாம்''. (பால்கிராஸ்யர்– *புதிய குடியரசு,நியூயார்க், மார்ச் 6, 1935*) மக்களின் நுகர்வு அளவு கட்டாயமாகக் குறைக்கப்பட்டது. நுகர்வு அளவையும் கூட அரசாங்கமே நிர்ணயித்தது. உணவிற்கான எல்லா மூலப்பொருட்களின் அளவும் 25 முதல் 30 விழுக்காடு வரை குறைக்கப்பட்டது.

துணியைப் பொறுத்தளவில், அதன் அளவு பாதியாகக் குறைக்கப்பட்டது. மக்களின் நுகர்வு அளவு கட்டாயமாகக் குறைக்கப்பட்டதானது ஊதியத்தைச் சரிக்கட்டிக் கொள்ள வழியமைத்துத் தந்தது. தொழிலாளி வர்க்கத்தின் வாங்கும் சக்தி படுவேகமாகக் கீழிறங்கியதால் சிறுவணிகர்களும் கைவினைஞர்களும் உழவர்களும் பாதிக்கப்பட்டனர். நாஜித்தலைவர்களோ நிலைமையை முன்னேற்றுவது குறித்து எவ்வித வாக்குறுதியும் தரவில்லை. அதற்கு மாறாக தேசியமரியாதைக்காக மேலும்மேலும் தியாகம் செய்யும்படி அவர்கள் கோரி வந்தார்கள். ''ஊதியத்தை உயர்த்தவே முடியாது'' என கோயபல்ஸ் முடிவாக அறிவித்து விட்டார். நிச்சயமாக முடியாதுதான். தற்போதைய ஊதியத்தை வைத்துப்பார்த்தால், விலைவாசி மேலும் உயர்ந்தால் மக்களின் வாழ்க்கைத்தரம் இன்னும் கீழிறங்கிவிடும் என்பதை நாஜிப்பொருளாதாரவாதி **வின்ட்ஸ்சச்** ஒரு காரணமாக முன்வைத்தார். ஆனால் அதே சமயத்தில் இவர் ஏற்றுமதித் தொழிலை அதிகரிக்கக்கோரி அழைப்பு விடுத்தார். ஏனெனில் ஆயுதத் தொழில்களுக்காகத் தேவைப்படும் மூலப்பொருட்களுக்கான செலவை ஈடுகட்ட இது அவசியப்பட்டது. ''இந்த நோக்கத்திற்கு கீழ்ப்பட்டதாக வாழ்க்கைத் தரத்தை வைத்துக்கொள்ள வேண்டும்'' என இவர் கூறினார். இது ஏதோ தனிப்பட்ட ஒருவரின் கருத்தல்ல. அதிகாரப்பூர்வமான நாஜித்தலைவர்கள் அடிக்கடி பின்வரும் தேசியசோசலிச முழக்கத்தை அறிவித்துக் கொண்டே இருந்தார்கள்:– ''ஜெர்மனி சுதந்திர நாடாகி மற்றவர்களை எதிர்த்து நிற்கும் வல்லமையையும், தேவையான ஆயுதங்களையும் பெற்றுவிட்டால் பின் வெண்ணெய், முட்டை



படிப்பகம்

www.padippakam.com

ஆடைகள் போன்ற அற்பப் பொருட்கள் குறித்து ஏன் கவலைப்பட வேண்டும்?'' இவ்வாறாக ''தேசிய மரியாதையை'' நிலைநிறுத்த நாடு பொருளாதார ரீதியாக நாசம் செய்யப்பட்டது. ஜெர்மன் மக்கள் உணவு கேட்டுக் கூப்பாடுபோட்டால் இவர்கள் முன் கூத்து நடத்தி மகிழ்ச்சியூட்டுகிறார்கள். நாஜிகளின் போர்வெறி உண்மையில் ஜெர்மனியின் முன்னாள் எதிரிகளுக்கு எதிராகத் திருப்பப்பட்டால் இந்தக்கூத்தும் கூட (தேசியமரியாதையை மீட்கப் போர் தொடுக்க வேண்டும் என்பது– மொர்) ஆபத்தான விளையாட்டு என்பது மெய்ப்பிக்கப்பட்டுவிடும்.

சோவியத் ஒன்றியத்தின் விசயத்தில் மட்டும்தான் நாஜிகளின் போர்வெறி உண்மையாக இருந்தது. பிஸ்மார்க்கின் ஆணைதான் இவர்களின் வெளிநாட்டுக் கொள்கையை வழிநடத்தி வந்தது. போல்ஷ்விசத்தை ஒழித்து ருஷ்யாவின் வளமான பகுதிகளைக் கைப்பற்றுவதுதான் புதிய ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின் கனவாக இருந்தது. இட்லர் ஆட்சிக் கட்டில் ஏறிய கையோடு சோவியத் ஒன்றியத்தைத் தாக்கும் ஒரு சர்வதேசச் சூழ்ச்சிக்குத் அணியமானார். போல்ஷ்விசத்தின் தாய்வீட்டிற்கு எதிரான ஒரு புனிதப்போருக்காக ஜெர்மன் தன் அரசியல் எதிரிகளான பிரிட்டன், பிரான்சுடன் கூட கூட்டணி வைத்துக்கொள்ள அணியமாய் இருந்தது. வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை என்ற அவமானத்தை ஜெர்மனி மீது திணித்த சக்திகளைப் பழிவாங்க ஒரு போர் நடத்த வேண்டும் என்று நாஜிகள் செய்த ஆர்ப்பாட்டம் எல்லாம் ஒரு வாய்ச்சவடால்தான். 1933 மார்ச்சில் இட்லர் போலந்து அமைச்சருடன் ஒரு இரகசியக் கூட்டத்தை நடத்தினார். அக்கூட்டத்தில் சோவியத்தைத் தாக்கக் கூட்டுநடவடிக்கையை ஆலோசனையாக முன்வைத்தார். ஜெர்மனியின் தேசிய எதிரிகளில் போலந்தும் ஒன்றாகக் கருதப்பட்டுவந்தது. ஆனால், சோவியத் ஒன்றியத்தின் மீது போர் தொடுப்பதற்காக போலந்தின் உதவியைக் கோரிய இட்லர் போலந்துடன் தன் பழைய வெறுப்பை மறந்துவிடத் தயாராய் இருந்தார். ருசியப் பகுதிகளைப் போலந்துடன் பகிர்ந்துகொள்ளும் ஒரு ஆலோசனையும் இவரிடம் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. சோவியத்–எதிர்ப்புக் கூட்டணியில் பிரிட்டனையும் சேர்க்கத் தன் சிறப்புத் தூதராக ரோசன்பர்க்கை லண்டனுக்கு அனுப்பி வைத்தது இட்லரின் அடுத்த ராசதந்திரமாக இருந்தது. தேசியசோசலிசத்தின் உயர்ந்த மதகுரு (ரோஷன்பர்க்) தன் லண்டன் பயணத்தின்போது, ராயல் டச்சு பெட்ரோலிய நிறுவனத்தின் தலைவரான டெட்டர்டிங்கின் விருந்தாளியாகத் தங்கியிருந்தார். டெட்டர்டிங் தான் சோவியத் ஒன்றியத்திற்கு எதிராகத் தொடர்ச்சியாக சூழ்ச்சி வலை பின்னிய கேடுகெட்ட போர்வழியாவார். சோவியத் ஒன்றியத்துக்கு எதிரான போர் என்ற தன் ஆசை எண்ணத்தை இட்லர் தள்ளி வைத்தார். ஏனெனில், பிரிட்டன், பிரான்சு ஆகிய நாடுகளின் ஆட்சியாளர்கள் இம்மாதிரியான ஒரு போரை விரும்பவில்லை என்பதல்ல இதற்குப்பொருள். மாறாக, இட்லரைக் காட்டிலும் இவர்கள் நன்கு அறிந்தவர்கள். ஆகவேதான் இம்மாதிரியான ஒரு துணிகரச் செயலில் கண்மூடித்தனமாக இறங்க அவர்கள் விரும்பவில்லை.

உண்மையில் சொல்லப்போனால், நாஜிகள் இங்கிலாந்துடன் மட்டுமல்ல தங்களின் அருவெறுப்பான எதிரியான பிரான்சுடன் கூட நல்லுறவிற்கு முயற்சி



படிப்பகம்

www.padippakam.com

செய்து வந்தார்கள். வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையை மீறுவதற்காக ரைன்லாந்துப் பகுதியில் ஜெர்மன் இராணுவம் நுழைவதற்கு ஒரு சில வாரங்களுக்கு முன் இட்லர் ஒரு பிரான்சுப் பத்திரிகை நிருபருக்குச் சிறப்புப் பேட்டி அளித்திருந்தார். அப்பேட்டியில் பிரான்சுடன் ஒரு உடன்படிக்கை செய்து கொள்ளும் தன்விருப்பத்தை இட்லர் வெளியிட்டிருந்தார். தன் சுய – வரலாற்றுப் புத்தகத்தில் பிரான்சிற்கு எதிரான உணர்வுகளை வெளிப்படுத்தி இருந்ததை நிருபர் அவர் கவனத்திற்குக் கொண்டுவந்தார். அதற்கு இட்லர், அவையெல்லாம் உள்நாட்டுத் தேவைக்காகச் செய்யப்பட்டவை என்று பதிலளித்தார். ரைன்லாந்திற்கு (ஜெர்மனியின்) இராணுவ அணிவகுப்பு செல்வது, பிரான்சிற்கு எதிரான அச்சுறுத்தல் அல்ல என்பதால் வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையை மீறுவதை எதிர்த்துத் தாம் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க மாட்டோம் என முன்னதாகவே பிரான்சு உறுதியளித்திருந்தது. பிரான்சு செயல்பட்டிருந்தால் அந்த இராணுவ அணிவகுப்பை எளிதாகத் தடுத்திருக்க முடியும். இன்னமும் ஜெர்மனி ஒரு பெரும்போரை நடத்தத் தயார் நிலையில் இல்லை. ஜெர்மன் தளபதி இம்மாதிரியான ஒரு ஆத்திரமுட்டும்செயலை எதிர்த்தாகச் சொல்லப்படுகிறது. ஆனால் உள்நாட்டில் இட்லரின் கௌரவத்தை நிச்சயமாகச் சீர்குலைக்கும் எந்தச் செயலையும் செய்ய இங்கிலாந்தோ அல்லது பிரான்சோ விரும்பவில்லை. அம்மாதிரி செய்திருந்தால் அது நாஜிச ஆட்சியின் சரிவைத் துரிதப்படுத்தியிருக்கும். ரைன் பகுதியில் புரட்சி அபாயம் மீண்டும் தோன்றியிருக்கும். இதற்கும் மேலாக, பிரான்சிற்கு எதிராகப் போர் தொடுக்க ஜெர்மன் விரும்பவில்லை என பிரான்சிடம் மீண்டும் ஜெர்மன் உறதி செய்திருந்தது.

நாஜிக்கட்சியின் ''இரத்தத்தூய்மை'' நடவடிக்கைகளின்போது இட்லரின் மிக நம்பிக்கைக்குப் பாத்திரமான தளபதிகளில் ஒருவராயிருந்த ருடால்ப் ஹெஸ் என்பவர் பிரான்சின் அதிதீவிரத் தேசியவாதிகள் அமைப்பான ஓய்வுபெற்ற இராணுவீரர் சங்கத்திற்கு ஒரு ''அமைதி நல்லெண்ணச்'' செய்தியை அனுப்பியிருந்தார். அதில் அவர் பிரான்சு வீரர்களின் வீரத்தைப் பாராட்டியிருந்தார். பிரான்சு வெளியுறவு அமைச்சரான பர்த்தோவைக் கூட அவர் பாராட்டியிருந்தார். வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையை உருவாக்கிய–இதைக்கிழித்தெறிய வேண்டும் என்பதுதான் நாஜிகளின் வெளிப்படையான இலட்சியமாக இருந்தது– வெறுப்பிற்குள்ளான கிளமென்சுவின் சீடர்தான் அந்த பிரான்சு வெளியுறவு அமைச்சராவார். அமைதி குறித்து ஹெஸ் நயமாகப் பேசினார். வெறுக்கப்பட்ட எதிரிகளைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்: ''ஒரு பெருமைக்குரிய வீரன் என்ற முறையில் பெருமைக்குரிய மற்றொரு வீரனோடு பேசுகிறேன். ஒரு போர் வேண்டுமா? என நான் கேட்கிறேன். நாம் இணைந்து செல்ல முடியாதா? நல்லெண்ணத்தைப் பயன்படுத்தி மக்களைப் போரின் கொடுமையிலிருந்து நாம் காப்பாற்ற முடியாதா''. இங்குதான் நாஜிகளின் போர்–வெறி ஒரு வாய்ப்பந்தல் என்பது அம்பலமாகிறது. ஏனெனில் 1924 இல் இருந்தே ஹெஸ் பிரான்சுக்கு எதிராக மிக உரக்கக் குரலெழுப்பி வந்திருக்கிறார். இவரின் அருவெறுப்பான வெறுப்பைப் பின்வரும் வாதத்திலிருந்து



படிப்பகம்

www.padippakam.com

தெரிந்து கொள்ளலாம் : "ஏ பிரெஞ்சுக்காரர்களே, நாங்கள் இங்கே வாழ வேண்டுமானால் அங்கே நீங்கள் சாக வேண்டும்". இவை அனைத்துமே சுத்தமான வாய்ப்பந்தலாகும். குறுகிய தேசியஉணர்வை வளர்த்தவே இது பயன்பட்டது. இதில் ஆதாயம் பெற்றது பெருந்தொழிலதிபர்களே. ஏனெனில், அவர்கள்தான் ஆயுதவணிகத்தில் இலாபத்தைச் சுருட்டிக் கொண்டவர்கள். பாசிசத் தேசியம் பெற்ற ஒரே வெற்றி இதுதான்.

❖



படிப்பகம்

www.padippakam.com

# இரத்தம் சிந்தாப் புரட்சி

இத்தாலியையும், ஜெர்மனியையும் இரத்தம் சிந்தாமல் புரட்சிமயப்படுத்தி விட்டதாகப் பாசிசவாதிகள் கூறிக்கொள்கிறார்கள். இந்த இரு நாடுகளிலும் மட்டுமல்ல, மற்ற பல நாடுகளிலும் இவர்களின் செயல்பாடுகள் இந்தப் பாசாங்குத்தனம் பொய் என்பதைக் காட்டுகின்றன. எப்படியிருப்பினும், "உன்னத மனிதர்களின்" எழுச்சி குறித்து சில உண்மைகள் படிப்பதற்குச் சுவையானதாக இருக்கும்.

இத்தாலியில், ஒரு வெற்றிகரமான மக்கள் படையின் தலைவன் என்ற முறையில் முசோலினி ரோமைக் காப்பாற்ற அங்கு அணிவகுத்துச் செல்லவில்லை. ரோமை நோக்கிய அணிவகுப்பு நாடகம் அரங்கேறியபோது இந்தக் கதாநாயகன் பாதுகாப்பாக வெகுதூரம் அதிலிருந்து விலகி நின்றிருந்தார். முதலாளிகளின் தாராள உதவியால் கிடைத்த பணத்துடன், பழுப்புச்சட்டை கூலிப்படையையும் இவர் தன் பொறுப்பில் வைத்திருந்தார். புரட்சிகரத் தொழிலாளிகளுக்கும் விவசாயிகளுக்கும் எதிராக இந்த கூலிப்படையினர் எண்ணற்ற பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டுத் தங்கள் வல்லமையை மெய்ப்பித்திருந்தனர். ஆனால், அச்சத்திற்குள்ளாகியிருந்த பலவீனமான தாராளவாத முதலாளிகள் கைகளிலிருந்த அரசு அதிகாரத்தை உண்மையில் கைப்பற்றியது பழுப்புச்சட்டைப்படை அல்ல. மாறாக், இப்பணியைச் செய்தது அந்நாட்டின் நிரந்தர இராணுவம் (regular army) ஆகும். அது முசோலினியை அதிகாரத்தில் அமரவைத்தது. ஏனெனில் புரட்சிகர மக்கள் இயக்கத்திற்கு இவர் மிகக்கடுமையான, கருணையற்ற எதிரி என்பதை மெய்ப்பித்திருந்தார். நிரந்தர இராணுவத்தின் சம்மதமின்றி பாசிசவாதிகள் ரோம் அணிவகுப்பை நடத்தியிருக்க முடியாது. அன்றைய அரசுக்கு விசுவாசமாக அன்று இராணுவம் நின்றிருந்தால் "இரத்தம் சிந்தாப் புரட்சி" நடந்திருக்காது. இத்தாலியர்களும் முசோலினியின் சர்வாதிகாரம் என்ற கெடுவாய்ப்பிலிருந்து தப்பித்திருப்பார்கள்.

தாராளவாத முதலாளிகளின் அரசாங்கம் புரட்சிகரச்சூழலை எதிர்கொள்வதில் தோற்றுப்போயிருந்தது. ஆகவே, ஆளும்வர்க்கம்–நிலக்கிழார்கள், முதலாளிகள்– இந்த அரசாங்கத்திற்குப் பதிலாகப் புரட்சிகர இயக்கத்தை நசுக்குவதில் மிகத்திறமையும் அதே சமயத்தில் தங்கள் ஆணைகளைச் செயல்படுத்துவதில் விசுவாசத்தையும் காட்டக்கூடிய ஒரு அரசாங்கத்தைக் கொண்டுவர முடிவு செய்தார்கள். தங்கள் வர்க்கப் பிரதிநிதிகளை உயர் அதிகாரிகளாகக் கொண்ட ஒரு நிரந்தர இராணுவம் ஆளும் வர்க்கத்தின் வசம் இருந்து வந்தது. ஆனால், ஒரு புரட்சிகரச் சூழலின்போது இராணுவத்தில் பணியாற்றும் சாதாரணப் படைவீரர்களின் விசுவாசத்தின் மீது நம்பிக்கை கொள்ளமுடியாது. ஆகவே, ஒரு புரட்சிகர மக்கள் இயக்கத்தை நசுக்குவதற்கு



படிப்பகம்

www.padippakam.com

நிரந்தரஇராணுவத்தை மட்டுமே ஒரு கருவியாக நம்பியிருக்க முடியாது. மக்களின் சில பகுதியினரை எதிர்ப்புரட்சியின் வசம் வென்றெடுக்க வேண்டும். போலி–சோசலிசத்தையும், குறுந்தேசியவாதத்தையும் பிரச்சாரம் செய்துவந்த பாசிசவாதிகள் இந்த நோக்கத்திற்குப் பயன்பட்டார்கள். முசோலினியின் பழுப்புச்சட்டை கூலிப்படையில் நடுத்தரவர்க்கப் போக்கிரிகளும், வர்க்க உணர்வு குன்றியிருந்த தொழிலாளிகளும் அணிதிரட்டப்பட்டனர். முசோலினியைப் பதவியில் அமர்த்துவதுதான் திட்டம். இந்த எதிர்ப்புரட்சி ஒரு மக்கள் இயக்கம் போன்ற தோற்றத்தைத் தந்திருக்கக்கூடும். இந்தக் கேவலமான பணியைத் தன் "அதிமனிதர்களின்" (கூலிப்படையினர்–மொர்) துணையோடு முசோலினி செய்து முடிப்பார் என்ற நம்பிக்கை யாருக்கும் இல்லை. ஆகவே நிரந்தர இராணுவம் எப்பொழுதும் உதவிக்குத் தயார் நிலையில் இருந்தது.

அம்மாதிரியான ஒரு சூழலில்தான் முசோலினி "அதிகாரத்தைக் கைப்பற்ற இருந்தார். நிரந்தர இராணுவம் இவருக்குப் பாதுகாப்பையும் ஒத்துழைப்பையும் தர ஏற்கனவே ஒப்புக் கொண்டதால், ஒரு வலுவான எதிர்ப்பிற்கு இடமில்லாமல் போயிற்று. இவரின் காலடியில் அதிகாரம் வைக்கப்பட்டது. அப்பொழுது கூட, இறுதி நேரத்தில் இந்தக் கதாநாயகன் நடுங்கியபடிதான் இருந்தார். ரோமை நோக்கி அணிவகுத்துச் செல்ல ஆணையிட்ட இவர் இதற்குத் தலைமைதாங்க வேண்டிய பொறுப்பை எடுத்துக்கொள்ளவில்லை. அரும்பெரும் தீரச்செயல் அரங்கேறிக் கொண்டிருந்தபோது இந்தக் கதாநாயகன் மிலன் நகரில் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தார். ரோம் கைப்பற்றவுடன், இவரின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒரு சிலர் இவருக்குத் தொலைபேசியில் வெற்றிச் செய்தியைச் சொல்லி இவரை நாடகஅரங்கேற்றத்தில் காட்சியளிக்குமாறு கேட்டுக் கொண்டனர். வெளிப்படையாகவே இந்த அற்புதத்தில் நம்பிக்கை வைக்க அவர் தயாராக இல்லை. அப்பொழுது கூட, பொறுப்பை எடுத்துக் கொள்ள இவர் அணியமாய் இல்லை. இறுதியாக, தளபதி அலுவலகத்திலிருந்து அழைப்பு வந்த பின்புதான், "ரோம் அணிவகுப்பின் வெற்றியாளனாக" தொடர்வண்டியில் வந்து சேர்ந்தார்.

இதுவரை "புரட்சி" இரத்தம் சிந்தாமல் நடந்தேறியது. ஆனால், இந்த அவல நாடகத்திற்கு எழுதப்பட்ட முகவுரையில் போதுமான அளவு இரத்தம் சிந்தப்பட்டுவிட்டது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர். வன்முறையை அவர்கள் தொடங்கவில்லை. போதுமான அளவு இலாபம் ஈட்ட முடியவில்லை என்பதால் முதலாளிகளால் மூடப்பட்ட ஆலைகளைத் தாங்களே நடத்த அத்தொழிலாளர்கள் அமைதியாக ஊர்வலம் சென்றார்கள். ஆலைகளை நடத்த அத்தொழிலாளர்களை அமைதியாக அனுமதித்திருந்தால் உண்மையில் இரத்தம் சிந்தாமல் ஒரு புரட்சி நடந்திருக்க முடியும். ஆனால் அம்மாதிரி ஏதும் நடக்க அனுமதிக்கப்படவில்லை. நாட்டின் சட்டவிதிகளை மீறி அவர்கள் மீது திட்டமிட்ட வன்முறை ஏவப்பட்டது. முதலாளிகளால் முடியாமல் கைவிட்ட ஒரு செயலை, அதாவது நாட்டிலுள்ள தொழிற்சாலைகளை இயக்கி அதன் மூலம் தங்கள் வாழ்க்கைக்கு வழி கண்டும் நாட்டின் பொருளாதார வாழ்க்கை சீர்குலையாமலும்



படிப்பகம்

www.padippakam.com

இருக்க அவர்களுக்கு அனுமதி தராமல் தடுத்து நிறுத்தப்பட்டனர்.ஆட்சிக்கு வந்த பின்பு தனக்கெதிரான அனைத்து எதிர்ப்புகளையும் நசுக்க முசோலினி பெரும் வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டார். பாசிசம் பெற்ற வெற்றியை ஒரு புரட்சி என்றும் சொல்லிவிட முடியாது. அவ்வெற்றி இரத்தம் சிந்தாமலும் கிடைத்து விடவில்லை. பாசிசம் எந்த ஆட்சியைக் கவிழ்த்ததோ அங்கிருந்து அதற்கு எந்த எதிர்ப்பும் வரவில்லை. ஆகவே, அதற்காக இரத்தம் சிந்த வேண்டிய அவசியம் இல்லாமல் போனது. மறுபுறம், புரட்சிகர மக்களிடம் இருந்து வந்த எதிர்ப்பும் ஆயுதம் ஏந்திய எதிர்ப்பாக இல்லை. ஆகவே, அம் மக்களை ஒடுக்க ஏவப்பட்ட வன்முறையிலும் பெருமளவு இரத்தம் சிந்தும் அவசியமேற்படவில்லை. ஆனால், பல்லாயிரக்கணக்காக ஆண்களையும், பெண்களையும் அவர்கள் வாழ்நாள் முழுக்கவும் சிறையில் அடைக்கப்பட்ட செயலானது அவர்களைக் கொல்வதைக் காட்டிலும் மிக மோசமான தண்டனையாக இருந்தது. அதற்கும் மேலாக, ஆயிரக்கணக்கான எண்ணிக்கையில் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இனி, நாம் ஜெர்மனியின் பக்கம் செல்லலாம். இங்கு "அரசியல் சட்ட முறைப்படி" தான் இட்லர் அதிகாரத்திற்கு வந்தார் என்ற கட்டுக்கதையை உடைத்தெறிய வேண்டியது அவசியமாயிருக்கிறது. இந்தக் கருத்தில் பொதிந்துள்ள புனைவுப்பண்பு தெளிவானது. நடைமுறையில் குடியரசு அரசாங்கத்தின் அரசியல் சட்ட விதிகளை அகற்றியதன் மூலமாக இட்லர் அதிகாரத்தைப் பிடித்தது எளிதாக இருந்தது. இட்லர் அரசியல் சட்ட விதிகளை மீறவில்லை. அவருக்காக அவரின் புரவலர்களும், முதலாளிகளும் அப்பணியைச் செய்தனர். அதிகாரத்திற்கு வந்த வெற்றியைக் கொண்டாடும் ஓர் அடையாளமாக இட்லர் வெய்மர் அரசியலமைப்புச் சட்டத்தைக் கிழித்தெறிந்தார். ஆனால், ஹின்டன்பர்க் தலைமையிலிருந்த ஜங்கர் நிலக்கிழார்கள்–இராணுவத் தலைவர்களின் "குடியரசு அரசாங்கம்" நடைமுறையில் இச்சட்டத்தை ஏற்கனவே அழித்துவிட்டது. இத்தாலியைப் போலவே, ஜெர்மனியிலும் பாசிசவாதிகள் பெருமுதலாளிகளின் அடியாட்களாகவே அதிகாரத்திற்கு வந்தார்கள். தாங்கள் கவிழ்த்த அரசாங்கத்தின் தரப்பிலிருந்து எந்த எதிர்ப்பும் வராததால் இவர்கள் வெற்றியடைந்தார்கள். அரசாங்கத்தின் வன்முறை இயந்திரத்தின் மூலம் மக்களிடம் இருந்து வந்த எதிர்ப்பைச் சமாளித்தனர். இதன் மூலம் அதிகாரத்திற்காக இவர்கள் அணிவகுப்பு எளிதாக நடந்தேறியது. அதிகாரத்திற்கான இந்த அணிவகுப்பின்போது எண்ணற்ற வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. அன்று ஆட்சியிலிருந்த அரசாங்கத்தின் அறிவிக்கப்பட்ட எதிரிகள்(பாசிசவாதிகள்–மொர்) தான் இந்த வன்முறைகளைச் செய்தனர். அரசாங்கத்தின் மறைமுகச் சம்மதத்தோடு மட்டுமல்ல, உண்மையில் அவர்களின் உதவியோடும்தான் இதைச் செய்தனர்.

ஆனால், தேர்தலில் அடைந்த வெற்றியின் விளைவாகவே, இட்லர் ஜெர்மன் அரசாங்கத்தின் அதிபரானார். இந்த விதத்தில் இவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர். "மக்களின் ஆதரவோடு" இவர் பதவிக்கு வந்தார். ஆனால் இந்த உண்மையை எப்படி விளக்குவது? தேர்தலில்தான் இந்த உண்மைக்கான விளக்கத்தைக் காணமுடியும். இவரைப் பதவியிலமர்த்த பெயரளவுக்குக் காரணமாயிருந்த 1933, மார்ச் மாதத் தேர்தல், ஒரு மோசடியான தேர்தலாகும்.



படிப்பகம்

www.padippakam.com

ஜெர்மனி இராணுவ ஆட்சியாளர்களின் பிரதிநிதியான ஹின்டன் பெர்கின் அருளினால் இவர் ஏற்கனவே, ஜெர்மனியின் அதிபராகிவிட்டார். இவ்வாறாக, இந்தக் கதாநாயகர் தேர்தல் நடைமுறைகளில் சூழ்ச்சி செய்யத் தகுதியான ஒரு பதவியில் அமர்ந்து அதன் மூலம் ஒரு பெரும் வெற்றியை உருவாக்கிக் கொண்டார். உண்மையைச் சொல்லப்போனால், இவர் அத்தேர்தலில் ஒரு தோல்வியைத்தான் சந்தித்தார்.

இரண்டு தொழிலாளி வர்க்க கட்சிகளிடமிருந்து தான் இவருக்கு எதிர்ப்பு வந்தது. முந்திய தேர்தலில் இவ்விரு கட்சிகளும் சேர்ந்து ஏறத்தாழ நாற்பது விழுக்காடு வாக்குகளைப் பெற்றிருந்தனர். புதிய தேர்தல் நடந்தபோது "சட்டரீதியான" அடக்குமுறை, சட்ட விரோத–பயங்கர வாதம் ஆகிய வழிகள் மூலமாக இந்தப் பிரபல கட்சிகள் நடைமுறையில் தேர்தல் களத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருந்தன. சமூக சனநாயகக் கட்சி இன்னமும் சட்டரீதியாக இயங்கிவந்தது. ஆனால், அது பெயரளவிற்குத்தான். கம்யூனிஸ்ட் கட்சியோ முற்றிலும் நசுக்கப்பட்டிருந்தது. இக்கட்சி பாராளுமன்றத்தில் நூறு இடங்களைப் பெற்று மூன்றாவது பெரிய கட்சியாக இருந்தது. பாசிசவாதிகள் ஒரு சனநாயக வெற்றியைப் பெறுவதற்கு முன்பாகவே சனநாயகத்தை அழித்துவிட்டார்கள் என்பதற்குச் சான்று கம்யூனிஸ்ட் கட்சி நசுக்கப்பட்ட உண்மை ஒன்று மட்டுமே போதும். பெயர் பெற்ற கம்யூனிஸ்ட் தலைவர்கள் அனைவரும் சிறையிலடைக்கப்பட்டனர் அல்லது தலைமறைவாயிருந்தனர். பாசிசக் கூலிப்படையின் கொடூரத் தாக்குதல்களுக்கு கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள் உள்ளாகியிருந்தனர். இதற்குச் சமமாக சமூக சனநாயகக் கட்சியும் அச்சுறுத்தப்பட்டு வந்தது. வாக்குச்சாவடியில் பாசிசவாதக் குண்டர்கள் வெறியோடு காவல் காத்து நின்றனர். கம்யூனிஸ்ட்களுக்கு அல்லது சோசலிஸ்ட்களுக்கு ஆதரவாக வாக்களிப்பது கூட ஆபத்தான செயலாக இருந்தது. பெரும்பாலோர் வாக்களிக்கவில்லை. இன்னும் பலர் தங்கள் விருப்பப்படி வாக்களிக்க அனுமதிக்கப்படவில்லை. பாசிசவாதிகளுக்கு வாக்களித்த ஒரு சிலரும் அச்சுறுத்தலுக்கு அஞ்சியே வாக்களித்தனர். ஆயிரக்கணக்கான கம்யூனிஸ்ட்கள் தலைமறைவாக இருந்ததால் வாக்களிக்க முடியவில்லை. இட்லருக்கு வாக்களிக்க விரும்பாத வாக்காளர்களை நாஜிகளின் புயல்படையினர் கும்பலாகச் சென்று அச்சுறுத்தி வந்தனர். எதிர்க்கட்சிகளின் செய்தித்தாள்கள் ஒடுக்கப்பட்டன. அவர்களது பிரச்சார இலக்கியங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. கூலிப்படையினர் அவர்கள் கூட்டங்களில் குழப்பம் விளைவித்தனர். எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் அவர்கள் விருப்பத்திற்கு எதிராக வாக்களிக்கும்படி அச்சுறுத்தப்பட்டனர் அல்லது வாக்களிப்பதிலிருந்து விலக்கி வைக்கப்பட்டனர். அரசின் பிரச்சாரச் சாதனங்கள் முழுக்கவும் பாசிசவாதிகளின் கரங்களில் இருந்தது.

இம்மாதிரியான ஒரு சூழலில் நியாயமான தேர்தல் சாத்தியமில்லை. இம்மாதிரியான ஒரு சூழ்நிலையில் நடத்தப்பட்ட "தேர்தலின்" முடிவுகள் மக்களின் உணர்வுகளை வெளிக்காட்டுவதாக இருக்காது. ஆனால், இம்மாதிரியான ஒரு மோசடியான செயல்கூட இட்லருக்கு பெரும்பான்மையைத் தந்து விடவில்லை. பாசிசவாதிகள் நாற்பது விழுக்காட்டிற்கு மேல் வாக்குப்பெறவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

மொத்த வாக்காளர்களில் ஒரு மிகச்சிறிய பகுதியையே இது மீண்டும் பிரதிநிதித்துவப்படுத்தியது. மேலே சொல்லப்பட்ட காரணங்களுக்காக பல லட்சக்கணக்கான மக்கள் வாக்களிக்க செல்லவில்லை அல்லது வாக்களிக்க முடியவில்லை.

மறுபுறம், கட்டுப்பாடில்லாத பயங்கரவாதச் செயல்களையும் மீறிச் சமாளிக்க இயலாத இன்னல்களுக்கு இடையிலும், கம்யூனிஸ்ட்கள் எண்பது பாராளுமன்ற இடங்களைத் தக்க வைத்துக் கொண்டனர். ஆகவே, கம்யூனிஸ்ட்களைத்தான் உண்மையான வெற்றியாளர்கள் என்று ஏற்றுக்கொள்ள வேண்டும். சாதாரணச் சூழ்நிலையில் கம்யூனிஸ்ட்கள் இதைவிட அதிகமான வாக்குகளைப் பெற்றிருப்பார்கள். ஒரு உண்மையான சனநாயகத் தேர்தலில் இட்லர் ஒரு கேவலமான தோல்வியையே சந்தித்திருப்பார் என்பதையே இவை எடுத்துக் காட்டுகின்றன. கம்யூனிஸ்ட்கள் அனுபவித்த இன்னல்களை வைத்துப் பார்க்கும்போது, ஒப்பீட்டு அளவில் சுதந்திரம் பெற்றிருந்த சமூக –சனநாயகக் கட்சியும் கூட, சமமற்ற இந்தச் சண்டையில் நல்ல பலனையே பெற்றிருந்தது. கம்யூனிஸ்ட்களும், சமூக சனநாயக வாதிகளும், ஏனைய சிறுபான்மைப் பாசிச–எதிர்ப்புக்குழுக்களும் ஒன்றுசேர்ந்து பாராளுமன்றத்தில் ஏறத்தாழ பாதி இடங்களைக் கைபற்றினார்கள். இம்மாதிரியான ஒரு பாராளுமன்றத்தை இட்லரால் சமாளிக்க முடியாது. இட்லரின் அரசியல் அமைப்புச் சட்ட சர்வாதிகாரத்திற்கான பாதையை எளிதாக்க மேலும் பல வன்முறைச் செயல்கள் நடத்தப்பட்டன. சனநாயகச் சுதந்திரத்தின் மிச்ச மீதியும் துடைத்தெறியப்பட்டது. திட்டமிட்டு ஏவப்பட்ட பயங்கரவாதத்தையும் மீறி ஏறத்தாழ நான்கு மில்லியன் வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட – எண்பது கம்யூனிஸ்ட் பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவியேற்க அனுமதிக்கப்படவில்லை. சமூக – சனநாயகக் கட்சியைச் சேர்ந்த கணிசமான பாராளுமன்ற உறுப்பினர்கள் வழக்குகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் அஞ்சி பதவி ஏற்பதைத் தவிர்த்து விட்டார்கள். சுருக்கமாகச் சொன்னால், பல கட்சி உறுப்பினர்களையும் வெளியேற்றி விட்ட அந்தப் பாராளுமன்றம் – இட்லருக்கு சர்வாதிகார அதிகாரம் அளித்த அந்த பாராளுமன்றம்–மொத்தம் எழுபது விழுக்காடு வாக்காளர்களையே பிரதிநிதித்துவப்படுத்தியது. தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களில் ஏறத்தாழ பாதிப்பேர் இட்லருக்கு வாக்களிக்கவில்லை. ஆகவே, பாசிசவாதிகள் அதிகாரத்திற்கு வந்தபோது மொத்த வாக்காளர்களில் முப்பத்தைந்து விழுக்காடு ஆதரவையே அவர்கள் பெற்றிருந்தார்கள். இட்லர் "அரசியலமைப்பு" சட்ட வழிகளில் அதிகாரத்திற்கு வந்தார் என்ற பொய்மையை இது எடுத்துக் காட்டுகிறது.

இட்லர் பெற்ற வெற்றியின் பொய்மையை மற்றொரு உண்மையும் எடுத்துக் காட்டுகிறது. 1928 விருந்து நடந்த ஒவ்வொரு தேர்தலிலும் பாசிசவாதிகள் பெற்ற வாக்குகள் அதிவேகமாக அதிகரித்தே வந்தன. ஆனால், இட்லர் அரசியலமைப்பு வழிகளில் சர்வாதிகாரியாக தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று சொல்லப்படும் நிகழ்ச்சிக்கு சில மாதங்களுக்கு முன் நடந்த தேர்தலில் பாசிசவாதிகள் ஒரு தீவிரமான பின்னடைவைச் சந்தித்தனர். நாஜிகளுக்கு அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை திடீரென இரண்டு மில்லியன்களாகக் குறைந்தது. செயற்கையாக



படிப்பகம்

www.padippakam.com

முட்டுக் கொடுக்கப்பட்ட இயக்கத்தின் வளர்ச்சி நின்று, அது வீழ்ச்சி திசையில் இருந்ததையே இது தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. பின்னடைந்த நிலையிலிருந்த நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த அறிவு ஜீவிகள் பாசிசத்தின் மீது நம்பிக்கை இழந்தனர். நாஜிகளின் கவர்ச்சிப்பேச்சு என்பது வாய்ச்சடவாலும் , வெற்று ஆரவாரமும்தான் என்பதை இவர்கள் கண்டு கொண்டார்கள். இதற்கு முந்தைய தேர்தலில் நாஜிகள் பல்வேறு மாகாணங்களில் பெரும்பான்மைப் பலம் பெற்றிருந்தனர். அங்கு அவர்கள் அமைச்சரவை அமைத்திருந்தனர். தேர்தல் வாக்குறுதிகள் எதையும் அவர்கள் அந்த மாகாணங்களில் நடைமுறைப்படுத்தாமல் வாக்காளர்களை முட்டாளாக்கினார்கள். நாஜிகள் மீதான நம்பிக்கை தளர்ந்து வந்ததால் அவ்வியக்கம் சரியத் தொடங்கியது. ஆனால், நாஜிகளின் புரவலர்கள் உதவிக்கு ஓடோடி வந்ததால் அச்சரிவு தடுத்து நிறுத்தப்பட்டது. இட்லரும், அவரின் வாய்ப்பேச்சு வீரர்களும், நியாயமான களத்தில் புரட்சிகரத் தொழிலாளி வர்க்கத்தின் வலிமையைத் தடுத்து நிறுத்த முடியாத மகாக் கோழைகள் என்பதைக் கண்டு கொண்ட முதலாளிகள், உடனடியாகத் தன் கதாநாயகனை (இட்லர்) ஆட்சியில் அமர்த்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தனர்.

பழம் பிரஷ்யப் பெருமையை மூட்டை கட்டி வைத்துவிட்டு புதுபவிசுக்காரர்களிடம் ஆட்சியை ஒப்படைக்க வேண்டுமென முதுமையில் இருந்த ஹின்டன்பர்க்கை முதலாளிகள் கேட்டுக் கொண்டனர். ஏனெனில், இட்லர் அத்தேர்தலில் பெரும் பின்னடைவைச் சந்தித்ததோடு, பாராளுமன்றத்தில் சிறுபான்மை ஆதரவையே பெற்றிருந்தார். மெய்யான மக்கள் ஆதரவோடு, இட்லர் பதவிக்கு வரவில்லை. மாறாக, ஆணவமான உயர் தளபதியின் ஆணையின் காரணமாக வெறுக்கத்தக்க பொஹீமிய நாட்டு போர்ப்பயிற்சியாளர் தயக்கத்தோடு தந்த வரவேற்பின் காரணமாகவே அவர் ஆட்சிக்கு வந்தார். இவர்கள் இருவருக்குமே ஒரே எசமானனுக்குத்தான் ஊழியம் பார்த்து வந்தனர். இவர் (எசமான்) ஆணைப்படிதான் குடியரசுத்தலைவர் கெட்டபெயர் எடுத்த சனநாயகப் பெண்தேவதையை மீறுவதற்கு போர்ப்பயிற்சியாளருக்கு அனுமதி அளித்தார். இவ்வாறாக, பெரும்பான்மை வாக்காளர்கள் சனநாயகத் தீர்ப்பிற்கு விரோதமாக அதிகாரத்தில் அமர்த்தப்பட்ட இட்லர் தேர்தல் வெற்றி என்ற நாடகத்தை அரங்கேற்ற அடக்கு முறை இயந்திரத்தை சட்ட ரீதியாகவும், சட்ட விரோதமாகவும் பயன்படுத்தினார். நாகரீக வரலாறு இது வரை அறிந்திராத அரசியல் நடவடிக்கையாக தீ வைப்பு என்ற மகா அட்டூழியத்தை செய்யுமளவிற்கு இவர் சென்றார். பாசிசத்திற்கு எதிராக அமைப்பு ரீதியான எதிர்ப்பைக் காட்டி வந்த ஒரே இயக்கமான கம்யூனிஸ்ட் கட்சியை அழித்தொழிக்க எளிதில் நம்பக்கூடிய ஒரு பொய்க்காரணத்தை உருவாக்கும் பொருட்டு, நாஜிகள் பாராளுமன்றக் கட்டிடத்தை தீ வைத்துக் கொளுத்தினர். இந்தத் தீவைப்பு நிகழ்ச்சிதான் "இரத்தம் சிந்தாப் புரட்சியின்" தொடக்கத்திற்கு அறிகுறியாக இருந்தது.

பாராளுமன்றம் தீவைத்துக் கொளுத்தப்பட்ட நிகழ்ச்சியை கடவுளிடமிருந்து கிடைத்த நற்செய்தி என இட்லர் வரவேற்றார். கடவுளின் ஆசியோடு இவர் அனைத்து எதிர்ப்பையும் நசுக்கியெறிந்தார். ஆயினும் இவருக்குத்



படிப்பகம்

www.padippakam.com

தேர்தலில் பெருமபான்மை ஆதரவு தர மக்கள் மறுத்துவிட்டனர். கடவுள் இந்த நவீனஇரட்சகனைக் காப்பாற்றாமல் போயிருக்கலாம். ஆனால் முதலாளிகள் தங்கள் கதாநாயகனைப் பெருமைப்படுத்தினர். நல்ல வழியிலோ அல்லது தீயவழியிலோ தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கருவி என்ற முறையில் இவரை சர்வாதிகாரப் பதவியில் அமர்த்தினர். அதனால் தனக்கு ஒதுக்கப்பட்ட கொடூரப்பணியை இவரால் அங்கிருந்து செயலாற்ற முடிந்தது. வரம்புமீறிய வன்முறையின் மூலமாகத்தான் "இரத்தம்சித்தாப் புரட்சி" நடைமுறைக்கு வந்தது. இதன் விளைவுகள் இரத்தம் சிந்துவதாகவே இருந்தன. முதலாளிகளின் அருளாசியினால் சர்வாதிகாரப் பதவிக்கு வந்த இட்லர், இத்தாலியில் தன் முன்னோடி செய்ததைப் போலவே, தன் புரவலர்களின் ஆணைகளை அப்படியே செயல்படுத்தினார்.

மனிதகுலத்தின் அனைத்து உன்னதமான ஆன்மீகச் சாதனைகளையும் அழித்தொழித்துவிட "இரத்தம் சிந்தாப் புரட்சி உறுதி பூண்டது". "கற்பனைக்கு எட்டாத நம்பமுடியாத அளவில் ஒரு அச்சம் தரும் முன்மாதிரியாக ஜெர்மனி முன்நிற்கிறது. தங்கள் தேசியக்கலாச்சாரத்தின் தூய்மையைப் பாதுகாக்க விரும்பும் இருபதாம்நூற்றாண்டு ஜெர்மனியின் ஆன்மீகச் செயல்பாடுகளுக்கு இணையான நிகழ்ச்சிகளை மத்திய கால வரலாற்றின் தொடக்கத்தில்தான் தேட வேண்டியிருக்கிறது". (ராபர்ட் பிரிப்பால்ட்– *கலாச்சாரத்தில் தேசியவாதிகளின் வெறி தற்கால வரலாறு நியூயார்க், ஆகஸ்ட் 1933*) பண்பாட்டு வரலாறு குறித்த ஆய்வில் புகழ்பெற்றிருந்த இதே எழுத்தாளர்தான் பின்வருமாறு எழுதியுள்ளார் :

"கலை இலக்கியத்தில் பாசிச இத்தாலி காட்டிய தனிச்சிறப்பான மலட்டுத் தன்மையை அனைத்து வெளிநாட்டு விமர்சகர்களும் விமர்சித்திருந்தனர்".

நவீனப்பண்பாட்டிற்குப் பாசிசவாதிகள் காட்டிய பகைமை வெறும் முரட்டுத்தனமானது. முற்ற முழு காட்டுமிராண்டித்தனத்திற்கே இது தாவிச் சென்றது. பாசிசத்தின் இந்தப் போக்கு, நாகரீக உலகம் முழுக்கவும், பெரும் கோபத்தைக் கிளறிவிட்டது. ஆட்டம் கண்டு வரும் முதலாளியச் சமூகத்திற்கு முட்டுக்கொடுக்க வேண்டுமானால் கணக்கற்ற வன்முறைகளை ஏவி, புரட்சிகரத் தொழிலாளி வர்க்க இயக்கத்தை நசுக்க வேண்டும் என்ற பாசிசத்தின் அடிப்படைக் கடமையை ஏற்றுக் கொண்டவர்களும் கூட, அதன் கொடூரங்களைக் கண்டு வாயடைத்துப்போயினர்.

இரத்தம் சிந்தாப் புரட்சி என்ற அற்புதத்தை நிகழ்த்தியதாகச் சொல்லப்படும் "அதிமனிதர்கள்" பற்றி அதிகாரப்பூர்வமாக சில தாராளவாதிகள் சொல்லியுள்ள கருத்துகளுக்கு மேல் புதிதாக ஏதும் நான் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் அவர்களின் கருத்துக்கள் நடுநிலைமையோடு இருக்கிறது.

"குடிகாரர்கள், கொலைகாரர்கள், திருடர்கள், ஏமாற்றுப்பேர்வழிகள், தார்மீக ஒழுக்கங்கெட்டவர்கள் ஆகிய இவர்கள்தான் இன்று ஜெர்மனியை ஆண்டு வருகிறார்கள். இவை ஏதோ மனம்போன போக்கில் திட்டிய வார்த்தைகள் அல்ல. நாஜி இயக்கத்தின் பெரும்பாலான முக்கியத் தலைவர்களின் பொதுவான பண்புகளே இவை". (நாடு, *நியூயார்க், ஆகஸ்ட் 1933*)



படிப்பகம்

www.padippakam.com

''இழைக்கப்பட்ட குற்றங்களின் கனபரிமாணம் எதிர்ப்புக் குரல்களை வாயடைக்கச் செய்துவிட்டது.நம்பமுடியாத இதன் குரூரத்தைக் கண்டு நாகரீக மனம் உறைந்துபோய் நின்றது. என்றென்றும் மிகப் பண்பட்டவர்களாகவும், மிக அறிவுஜீவிகளாகவும் இருக்கும் ஜெர்மன் மக்களின் வாழ்க்கை முறை எப்படித் தேசியச்சோசலிச அரசாங்கத்தின் பைத்தியக்காரத்தனத்திற்கு ஏற்ப ஒத்துப்போகிறது என்பதைக் கண்டு கொள்வது இன்னமும் கடினமான விசயமாகும்''.(ஹாரிசன் புரவுன்–*இட்லரியத்தின் ஆறு மாதங்கள்*) அமைதிக்கோட்பாட்டு அமைப்புகளில் உறுப்பினராக இருப்பதே சட்டப்படி (!) நீண்டசிறைத்தண்டனைக்குரிய குற்றம் என நாஜிகள் சொல்லுமளவிற்கு அவர்களின் போர்ப்பிரச்சாரம் நம்பமுடியாத எல்லையைத் தொட்டதாக நான்கு ஆண்டு காலம் ஜெர்மனியில் வாழ்ந்த ஒரு ஆங்கிலப் பத்திரிகையாளர் எழுதுகிறார். புகழ்பெற்ற ஜெர்மன் எழுத்தளரான **கர்ல்வோன்ஒஸிஸ்ட்ஸ்** ஒரு அமைதிக்கோட்பாளராக இருந்ததற்காகவே சித்திரவதையையும், சிறைத்தண்டனையையும் அனுபவித்தார். சென்ற ஆண்டுதான் இவருக்கு நோபல் பரிசு தரப்பட்டது. ஆனால், இன்றுவரை அவர் சிறையில்தான் இருந்து வருகிறார். நீதிமன்றத்தில் வெளிப்படையான விசாரணை உரிமை கூட அவருக்கு மறுக்கப்பட்டிருக்கிறது.

வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையினால் ஜெர்மனிய மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்து அனுதாபம் கொண்டுள்ள ஒரு தாராளவாத அமெரிக்கப் பத்திரிகையாளர் பின்வருமாறு எழுதுகிறார் : ''போருக்கு முந்திய இராணுவவாதமும், கொடூரமும் ஒரு புறவய மதமாக அரசாங்கத்திடம் மின்னுகின்றது. அரைகுறை மாயாவாதத்தை ஒரு வெறித்தனமான சமயக்கோட்பாடாக நாடு சுவீகரித்துக் கொண்டதும், இத்துடன் சேர்ந்து கொண்டது. அதிமனிதகளுக்கு இந்த சமயக்கோட்பாடு வெல்லப்பட முடியாததாகத் தோன்றுகிறது. ஆனால் யூதர்கள், பேராசிரியர்கள், அமைதிக் கோட்பாட்டாளர்கள், சோசலிஸ்ட்கள், முற்போக்காளர்கள், தாராளவாதிகள், சனநாயகவாதிகள் ஆகியோரை இந்த அதிமனிதர்கள் தாழ்ந்தமனிதர்களாகப் (Sub-human) பார்க்கிறார்கள்''. (ஜான் குந்தர்– *நாடு நியூயார்க், சூன் 7– 1933*).

பவேரிய மாகாண முன்னாள் உள்துறை அமைச்சரும் தற்போது ஒரு பாசிச அதிகாரியால் பதவி நீக்கப்பட்டவருமான டாக்டர் **பிரிட்டிஷ் ஸ்வேயர்** அவர்கள் முன்னாள் பிரதமமந்திரிக்குத் தனிப்பட்ட முறையில் எழுதிய கடிதம் ஒன்றில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் : ''நியாயம், நீதி, சட்டம், ஒழுங்கு என்பதற்கான எந்தச் சுவடும் விட்டுவைக்கப்படவில்லை. தெய்வ உரிமைகளும், மனித உரிமைகளும் காலடியில் போட்டு நசுக்கப்படுகின்றன. தார்மீக ஒழுக்கங்கெட்டவர்கள் தங்களை ஜெர்மனியின் தார்மீக மறுஉயிர்ப்புகளாகப் பிரச்சாரம் செய்து கொள்கிறார்கள். ஆனால், எதார்த்தத்தில், அவர்கள் தங்கள் விருப்பங்களை வன்முறை மூலம் சகமனிதர்கள் மீது திணிக்கிறார்கள். கொடூரவிலங்குகள் தங்களது தன்னல இறுமாப்பு உணர்வுகளை மனநிறைவு செய்து கொள்வது போலவே இவர்களும் நடந்து கொள்கிறார்கள்''. அன்றாட நிகழ்ச்சிகள் குறித்துத் தனிப்பட்ட முறையில் தனது கருத்துக்களைக் கடிதத்தில் எழுதியதற்காக டாக்டர் ஸ்வேயர் விசாரிக்கப்பட்டு அவர் செய்த ''துரோகத்திற்காகச்'' சிறையில் அடைக்கப்பட்டார்.



படிப்பகம்

www.padippakam.com

"காட்டுமிராண்டிகளும், பிற்போக்காளர்களும் நிரம்பியுள்ள இன்றைய அரசாங்கம், அதிகாரத்தை அடைவதற்கான முயற்சியில், ஜெர்மன் கலாச்சாரத்தில் காணப்படும் நல்ல, பயனுள்ள அம்சங்கள் அனைத்தின்மீதும் போர் தொடுத்து வருகிறது". (புதிய குடியரசு, *நியூயார்க், ஏப்ரல் 26, 1933*). பெயர் தெரியாத ஒருவர் தெரிவித்த தகவலிலிருந்துதான் இந்த மேற்கோள் எடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தகவலைத் தெரிவித்தவர் பெயரை வெளியிட அவரோடு தொடர்பு கொண்டவர் அச்சப்படுகிறார். காரணம், உண்மையைச் சொன்னதற்காக அவரை (ஒருமுதியபேராசிரியர்) பாசிசவாதிகள் கொடூரமாக வஞ்சம் தீர்த்துவிடுவார்கள் என அச்சப்படுகிறார். உண்மையை அச்சுறுத்தி அடக்கி ஒடுக்கும் இந்த அமைப்பு மிகக்கொடிய முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. இந்த அச்சுறுத்தலுக்கு அஞ்சி ஜெர்மன் நாட்டிலிருந்து தப்பி வெளிநாடுகளில் வசித்து வரும் ஜெர்மனியர்கள் கூட உண்மையைப் பேசத் துணிவதில்லை. காரணம், இவர்களின் மீதான கோபம் ஜெர்மனியில் வசித்து வரும் இவர்களின் உறவினர்கள் மீதும், நண்பர்கள் மீதும் அடிக்கடி திரும்பிவிடுகிறது. அகதிகளாக வாழும் பாசிச–எதிர்ப்பாளர்களின் வாயை மூட அவர்களின் உறவினர்களைப் பணயக்கைதிகளாகப் பிடித்து வைப்பது ஜெர்மனியில் ஒரு வழக்கமாக இருந்து வந்தது.

அடிப்படை ஒழுங்கை இன்னமும் தக்கவைத்துக் கொண்டுள்ள ஒரு சில விதிவிலக்கான அதிமனிதர்களையே கோபப்படுத்தும் அளவிற்கு "இரத்தம்சிந்தாப்புரட்சியின்" வன்முறைச் செயல்பாடுகள் கொடூரமாக இருந்தன. **கவுன்ட்வால் ரிவன்ட்லோ** என்பவர் இட்லருக்கு எதிர்ப்புத் தெரிவித்தாகச் சொல்லப்படுகிறது. "தொழிற்சங்கத்தலைவர்களை–பெண்களாயிருந்தாலும் சரி– நாஜிகளின் தலைமையிடங்களுக்கு இழுத்துவந்து அடிப்பது அல்லது (பெண்களை) முறையற்றுக் கையாள்வது ஆகியன விவரிக்க முடியாத அளவிற்கு அடிக்கடி நடைபெற்று வருகிறது" என இட்லருக்கு அவர் எதிர்ப்புத் தெரிவித்தார். பாசிசவாதிகளுக்கு முன்பு அதிகாரத்திலிருந்த குடியரசு அரசாங்கத்தின் முதல் பிரதமாயிருந்த **பிலிப் ஸிடிமன்** புகலிடமான பிராக் நகரிலிருந்து பின்வருமாறு எழுதுகிறார் :

"இட்லரின் பெர்லின் ஒரு கலக நெருப்பு ஆகும். அதில் குற்றவாளிகளும் மூளை கெட்ட கும்பலும் அதிகாரத்தைச் சுற்றி விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்". (*டைம்ஸ்,லண்டன், ஜூன் 1933*). **ஸிடிமன்** இந்தக் கருத்தை வெளிப்படுத்திய குற்றத்திற்காகப் பலபெண்கள் உள்ளிட்ட அவரது குடும்பம் முழுக்கவும் இன்னமும் ஜெர்மனியில் பல முகாம்களில் தனிமைச் சிறையில் வைக்கப்பட்டுள்ளது. "குற்றவாளிகளும், மூளைகெட்டவர்களுமான இட்லரின் ரவுடிகள்" ஆண், பெண் என்ற வேறுபாடில்லாமல் அந்த முகாமிலுள்ள அனைவரின் மீதும் மத்தியகாலச் சித்திரவதைகளைப் பயன்படுத்துகின்றனர்.

தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதும் ஆசிரியர்களுக்கு அடால்ப் இட்லர் ஏமாற்றமளிப்பவராக இருக்கிறார். வாழும் ஒரு அரசியல் தலைவரின் வாழ்க்கை வரலாற்றை எழுதுவது ஒரு கடினமான பணியாகும். அதுவும் கிறுக்கர்களின் வெறித்தனத்தால் அதிகாரத்திற்கு வந்த ஒரு தலைவர்



படிப்பகம்

www.padippakam.com

ஒரு அரைக்கிறுக்காக இருந்தால், ஒரு காலத்தில் எந்த மதிப்பும் இல்லாமல் இருந்து பின் இரட்சகராக அவர் மாறியிருந்தால், கேலிக்கூத்திலிருந்து உன்னத மதிப்பிற்கும், வக்கிர மனநிலையிலிருந்துநோய்க்கூறான மனநிலைக்கும் அவர் மாறியிருந்தால், இருட்டிலிருந்து வரும் பேய்களின் குரல்களுக்கு மதிப்பும், அறிவுள்ளவர்கள் பேச்சிற்கு மறுப்பும் தெரிவிக்கும் அந்தத் தலைவரின் வாழ்க்கை வரலாற்றை எழுதுவது முற்றிலும் சாத்தியமற்ற ஒரு பணியாகும். (புதிய குடியரசு, *நியூயார்க், சூன் 10, 1936*).

"பியூரரின் சொற்பொழிவைக் கூர்ந்து கவனிக்கும் ஒருவர், அவர் மனநோயாளி என்பதை அறிந்து கொள்வார். சென்ற சூனில் நடந்த நிகழ்ச்சிகள் (தன் நம்பிக்கை உகந்த சீடர்களையே படுகொலை செய்தது) சித்திரவதை செய்வதில் இவர் பெருவிருப்பம் கொண்டிருக்கிறார் என்ற முடிவுக்கே நம்மைக் கட்டாயப்படுத்தும். மாபெரும் உன்னதப் பண்பாட்டைப் கொண்டுள்ள ஒரு நாடு, ஒரு நிலையற்ற மனநோயாளியின் தயவில் வீழ்ந்து கிடக்கிறது. திட்டமிட்டுக் கோபமூட்டுவதன் மூலம் மோதல்களை வெடிக்கச் செய்வதில் இவர் சமர்த்தர். இவரோடு உள்ள ஒரே முக்கியமான ஆள் கோயரிங் மட்டும்தான். கோயரிங் பியூரருக்கு வழிகாட்டியாக இருந்து வருகிறார். இவர் கொடூரத்திலும் துடுக்குத்தனத்திலும் பியூரரைக் காட்டிலும் முன்னணியில் இருக்கிறார் என்பது அவரது ஆவணங்களிலிருந்து தெரிய வருகிறது". (புதியஇராசதந்திரியும், நாடும் *லண்டன் ஆகஸ்ட் 14, 1934*)

"பகுத்தறிவுக்கு எதிரான கலகமே பாசிசமாகும். வன்முறை, உணர்ச்சிமயம், வெறியுணர்வு போன்ற உணர்வுகளுக்கு அறைகூவல் விடுவதுதான் பாசிசமாகும். ஆகவே, இதன் விளைவு தவிர்க்க இயலாமல், குரூரம், பேதலித்த மனம், கும்பல் தாக்குதல் ஆகியவையே". ( ராபர்ட் டெல்–*ஜெர்மனியின் முகமூடி கிழிகிறது*). இந்தக் கடுமையான முடிவுக்கு ஆதாரமாக அரசாங்க வெளியீடுகள் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. சில நேரங்களில் நாஜிகள் இது அவசியம் என நியாயப்படுத்துவதும், சில நேரங்களில் இது "யூதர்களின் பொய்" எனக் கண்டிப்பதும், ஏதோ தற்செயலாக நடக்கும தவறுகளல்ல; மாறாக, அவை தர்க்கரீதியாகவும், திட்டமிட்டும் செய்யப்படும் கொள்கைப்பூர்வச் செயல்முறைகளாகும் என நாஜிகளின் கொடூரத்தை டெல் சுட்டிக்காட்டுகிறார். "நமது கத்தியிலிருந்து யூதர்களின் இரத்தம் சிந்தினால் நாம் இருமடங்கு முன்னேறிச் செல்கிறோம்". இது "இரத்தம்சிந்தாப்புரட்சியின்" பற்பல பல்லவிகளில் ஒன்றாகும்.

பலவீனமானவர்களைக் கொன்று, வலிமையுள்ளவர்கள் வெற்றிபெறுவதே பாசிசத்தின் லட்சியம் என இட்லர் தனது சுய–வரலாற்றில் அதிகாரப்பூர்வமாக அறிவித்திருக்கிறார். சமூகத்தீமைகளுக்குப் பாசிசவாதிகள் முன்வைக்கும் சஞ்சீவிமருந்து, யூதர்களை அழிப்பதும், முதலாளியத்தை வன்மத்தோடு பேணுவதுமே ஆகும். ஆயுதங்களைப் பெருக்குவது, ஆக்கிரமிப்புப் போர், இதுவே பாசிசவாதிகளின் அரசியல் திட்டம். "வலிமையுள்ளவர்களின் உரிமையினால் காலனிகள் சொந்தம் கொள்ளப்படுகின்றன. அய்ரோப்பாவிற்கு மூலப் பொருட்களும் காலனிகளும் அவசியப்படுகிறது. வாழ்க்கை குறித்த வீரதீரக் கருத்தாக்கம்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டுள்ள வெள்ளையினம் ஆளுவதற்கென்றே விதிக்கப்பட்டது. காலனிகளை ஆட்சி செய்துவரும் ஒரு நாடு அமைதிக்கருத்துக்களுக்கு வழிவிட்டால், தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ள காலனிகளை அனுமதித்தால், அதன் பொருள் *இனிமேலும் நமக்கு அய்ரோப்பா தேவையில்லை* என்பதே''. *(சனவரி 26, 1936, ம்யூனிச்சில் நடைபெற்ற பல்கலைக் கழக மாணவர்கள் மாநாட்டில் இட்லர்)*

இட்லரின் சொந்த மதிப்பீட்டின்படியே வரலாற்றில் இட்லர் ஒரு திறமையான கவர்ச்சிப்பேச்சாளனாகவும் எந்தக் கொள்கையும் இல்லாத ஒரு தரங்கெட்ட சந்தர்ப்பவாதியாகவும் மதிக்கப்படுவார். இவர் கருத்துப்படியே மக்களுக்குத் தலைமைதாங்க மிகத்திறன் வாய்ந்த வழிமுறை அவர்களை ஏமாற்றுவதே ஆகும். மக்கள் நம்பும்வரை எளிய முழக்கங்களைத் திரும்பத் திரும்பச் சொல்லிவருவது என்பதே கிளர்ச்சி குறித்த அவர் கோட்பாடாகும். ''போருக்கு முந்திய வியன்னாவில் இவர் நாடோடியாகத் திரிந்த ஆண்டுகளே வாழ்க்கை குறித்த இவர் தத்துவம் முழுவதையும் ஆளுமை செய்துவந்தது. சூழ்நிலைக்கேற்பத் தன்னை மாற்றிக் கொள்வதைத் தவிர அந்த நாட்களிலிருந்து மேற்கொண்டு எந்த முன்னேற்றமும் இல்லை. இருபது ஆண்டுகளாக அவரிடம் அறிவுப்பூர்வமான அக்கறைகள் ஏதுமில்லை. அரசியல் குறித்த இவரின் கருத்தாக்கம் விநோதமானது. பொருளாதாரத்தின் முக்கியத்துவத்தை மறுப்பார். தொழிலாளி வர்க்கத்தை முட்டாள்கள் எனத் திட்டுவார். சராசரி அரசியல்வாதியைத் தாக்கி வரும் கவலைகள் இவரை எந்தவிதத்திலும் பாதிக்காது. அநீதியையும், ஏற்றத்தாழ்வையும் எதிர்க்க வேண்டும் என்ற உந்துதல் ஏதும் இவரிடம் கிடையாது. இராணுவத்திற்கும் முதலாளிகளுக்கும், உயர்குடி நிலக்கிழார்களுக்கும் ஆழ்ந்த மரியாதை காட்டுவார். பலவீனமானவர்களுக்கும், ஒடுக்கப்படுபவர்களுக்கும், திட்டமிட்டு ஆயுதம் வழங்குகின்ற ஒரு அமைப்பை– அதன் மூலம் வலிமையுள்ளவர்களுக்கு எதிராகத் தங்களை இவர்கள் பாதுகாத்துக் கொள்கிறார்கள்– ஒழித்துக் கட்டுவதே இவரின் பேரவா. சனநாயகப்பண்பாட்டின் அடிப்படையான கோட்பாடுகளை மறுத்தொதுக்கிவிட்டு பலவீனமானவர்கள் அடிமைகளாகவும், வலிமையானவர்கள் ஆளுபவர்களாகவும் இருந்த ஜெர்மனியின் பண்டைய புகழை நிலைநாட்டுவதே அவரின் பெருவிருப்பம். **(ருடால்ப் ஓல்டன் :** *இட்லர்* **).**

''எந்த விருப்பு வெறுப்புமின்றி'' ஜெர்மனியின் நிலைமைகளை ஆய்வு செய்ய அங்கு பதினாறு மாதங்கள் தங்கியிருந்த ஒருவர் சமீபத்தில் எழுதியுள்ள ஒரு புத்தகத்திலிருந்து இறுதியாக ஒரு சில மேற்கோன்களைப் பார்க்கலாம். இட்லரின் தனிப்பட்ட வாழ்க்கை குறித்த செய்திகள் மக்களிடையே வேகமாகப் பரவி வருவது குறித்து எச்சரிக்கும் இவர் பின்வருமாறு எழுதுகிறார் : ''ஒரு புனிதப்போராளி என இவர் தன்னைத்தானே நினைத்துக் கொள்கிறார். மனித குலத்தைப் பாதுகாப்பது குறித்துத் தானே முழு நேரமும் சிந்தித்து வருவதாக எண்ணிக் கொள்கிறார். ஆகவேதான், இவர் போல்ஷ்விக் அபாயத்திலிருந்து உலகைக் காப்பாற்றப்போவதாகப் பேசும்போது ஒருவித மாயப் பெரு மகிழ்ச்சி நிலைக்குச் சென்று விடுகிறார்''. **(ஸ்டீபன் எச். ராபர்ட்ஸ் :** *இட்லர் கட்டிய வீடு).*



படிப்பகம்

www.padippakam.com

மக்களிடையே இட்லர் உரையாற்றும்போது எப்படி ஒரு பைத்தியக்காரனைப் போலக் கத்துகிறார் அல்லது வெறுமையாக உற்று நோக்குகிறார் என்பதை இவர் விவரித்துச் சொல்கிறார் : "ஒரு இக்கட்டான சூழலை எதிர் கொள்ளும்போது நம்மால் இட்லரை அழவைக்க முடியும்", என கோயரின் சொன்னதாக பேராசிரியர் ராபர்ட்ஸ் மேற்கோள் காட்டுகிறார். கோயபல்சின் தன்னிச்சையான அணுகுமுறைகள் அனைத்தையும் கவனித்த பேராசிரியர் ராபர்ட்ஸ், அய்ரோப்பாவிலியே மிக ஆபத்தான மனிதன் என அவரை அறிவிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார். "காரணம், இந்த மனிதன் மனிதஇனத்தை வெறுக்கிறார். இருப்பினும், இவர் பொறுப்பில் 66 மில்லியன் மக்கள் இருந்து வருகிறார்கள். உடல் ஊனத்தினால் ஏற்பட்ட கடுமையான உளவியல் சிக்கலும், கடும் வேதனை கொண்ட நரம்புத்தளர்ச்சி நிலையும் கலந்ததால் இந்தக் குள்ளரான கோயபல்ஸ் மனித இனத்தின் மீது ஒரு இகழ்ச்சியான வெறுப்பைக் கொண்டிருந்தார். இவர் எப்பொழுதுமே கசப்பின் தேவதூதர் ஆவார். ஜெர்மனியில் எந்த ஒரு மூலை முடுக்கிலும் இவரைப் பற்றி அன்போடு பேசியவர்கள் யாரும் இல்லை" (*அதே நூல்*).

இம்மாதிரியான "அதிமனிதர்கள்"தான் ஜெர்மனியின் தலைவிதியை நிச்சயிக்கும் இன்றைய எசமானர்கள் ஆவர். இவர்களைப் போன்றவர்கள்தான் இத்தாலியிலும் அய்ரோப்பாவின் மற்ற பல நாடுகளிலும் ஆட்சி செய்து வருகிறார்கள். காட்டுமிராண்டித்தனத்தை வழிபடும் வெறிகொண்ட போதகர்களின் செல்வாக்கின் கீழ் முழு அய்ரோப்பாவும் வருவதைத் தடுப்பதற்கு எந்த உத்திரவாதமும் இல்லை. இன்று, பாசிசப் பேய், அய்ரோப்பியப்பணபாட்டை அழித்து விடப்போவதாக அச்சுறுத்தி வருகிறது. இந்த அருவெறுப்பான பேயைத்தான் இட்லர் பிரதிநிதித்துவம் செய்கிறார். "இட்லர் கொல்லப்பட வேண்டிய ஒரு நபர் அல்லது நீங்கள் அவரால் கொல்லப்படுவீர்கள்" (கன்ராட் கெய்டன்– *இட்லர்*).

❖



படிப்பகம்

www.padippakam.com

# பாசிசத்தின் நடைமுறை

1934, ஆகஸ்ட் மாதம் உலகம் முழுவதிலுமுள்ள அறிவியல் அறிஞர்கள் எழுத்தாளர்கள், அறிவுத்துறைச் செயல்பாடுகளில் ஈடுபட்டிருந்த தலைவர்கள் ஆகியோரில் பெரும்பாலோர் கையெழுத்திட்டு ஒரு அறிக்கையை வெளியிட்டனர். அதில் கலாச்சாரத்துறையில் பாசிசத்தின் அச்சுறுத்தலை எதிர்கொள்ள ஒரு சர்வதேச மாநாட்டைக் கூட்டும்படி அறைகூவல் விட்டிருந்தனர். அந்த வரலாற்று ஆவணத்திலிருந்து சில பகுதிகள் பின்வருமாறு :–

"பாசிச நாடுகளில் பணியாற்றிவரும் மரியாதைக்குரிய அறிஞர்கள் பெரும்பாலானோர், தங்கள் துறைச் செயல்பாடுகளிலிருந்து விரட்டப்படுகின்றனர் அல்லது தன்னிச்சையாகத் தங்கள் இருப்பிடத்தை விட்டு வெளியேறி விடுகின்றனர். காரணம், சர்வாதிகார அரசின் வன்முறைக் கோரிக்கைகளுக்குத் தங்கள் அறிவைத் தியாகம் செய்ய அவர்கள் மறுக்கின்றனர். குறிப்பாக, ஜெர்மனியில் நடந்து வரும் நிகழ்ச்சிகள், அறிவியல் சுதந்திரத்தை நிலைத்திருக்கச் செய்வதற்கான நமது ஆழ்ந்த அக்கறையைத் தூண்டிவிட்டுள்ளன."

"இந்நாட்டில், ஆயுதத் தொழிற்சாலைக்கான பணியாளனாக இதே அறிவியல் வெளிப்படையாகவே கேவலத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளது. இம்மாதிரி ஆய்வுகள் மட்டுமே ஊக்குவிக்கப்படுகின்றன. அதனால், அவை உலகத்தில் பொருளாதாரத் தொழில்நுட்ப ஆதிக்கத்தை ஏற்படுத்துகின்றன. ஏகாதிபத்தியத்தின் அரசியல் பொருளாதார நோக்கங்களுக்குப் பயன்படாத பௌதீக அறிவியல் துறைகள் அனைத்தும் தடுக்கப்படுகின்றன. கட்டுப்படுத்தப்படுகின்றன. பௌதீகப் பிரபஞ்சம் குறித்த நம் கருத்தாக்கங்களை விரிவுபடுத்த முக்கியக் காரணமாய் அமைந்த ஆய்வுகள், வீணானவை பயனற்ற அறிவுஜீவித்தனம் எனக்கூறி வெளிப்படையாகவே தூக்கியெறியப்படுகின்றன. மரபியல், இனம் குறித்து மெய்யுறுதி செய்யப்பட்ட அறிவியல் கருத்துக்கள் தூர வீசியெறியப்பட்டுள்ளன. அந்த இடத்தில் ஆயிரக்கணக்கான மக்களைப் படுகொலை செய்யக்கூடிய–நேர்மையான ஆய்வின் மூலம் 'மெய்யுறுதி செய்யப்படாத–புதிய கோட்பாடுகள் அமர்ந்துள்ளன. தேசியசோசலிசத்தின் நம்பிக்கைப்படி, உயிரியல் ரீதியாக வலுவுள்ளவர்களின் ஆதாய இழப்பின் பேரில் பலவீனமானவர்களுக்கு உதவுவது அறிவற்ற ஒரு செயல். சமூக உடல்நலவியலின் எல்லா நியாயப்பாடுகளும் வெட்டியெறியப்பட்டன. கல்லூரிகளில் இயற்கையாகக் குணப்படுத்தும் நாற்காலிகளை நிறுவும்படி கட்டாயப்படுத்துகின்றனர். மூடநம்பிக்கைக்கும், வஞ்சகத்திற்கும் கல்லூரிக் கதவுகள் திறந்துவிடப்படுகின்றன. வரலாற்று உண்மைக்கு மதிப்புத் தராமல் ஒரு நாட்டின் மேலாதிக்கத்திற்கும், மற்றவர்களின் தாழ்வுக்கும் காரணமாய் அமைந்துள்ள கோட்பாடுகளுக்கு ஆதரவாக வரலாற்றுக்கு முந்தியப் பண்டையக் காலங்கள்



படிப்பகம்

www.padippakam.com

மிகைப்படுத்தப்படுகின்றன. அருவெறுப்பான வரலாற்று உண்மைகளுக்குப் பதிலியாக அடிக்கடி உள்நோக்கம் கொண்ட மாயாவாதம் வைக்கப்படுகிறது. மத்தியக்காலங்களில் நிலவிய சட்டக் கருத்தாக்கங்களின் அடிப்படையில் குரூரமான தன்னிச்சையான செயல்முறைகளுக்குக் கருத்தியல் அடித்தளம் தரத் திட்டமிடப்படுகிறது. இந்தப் புதிய சட்ட உருவாக்கத்தில் சுதந்திரமான ஆய்வுகள் நசுக்கப்படுவதும், உண்மைகள் மீறப்படுவதும் மிகத் தெளிவாகவே தெரிய வருகிறது. சுத்த அறிவியலோடு, கற்றலும், கற்பித்தலும் அடிமையாக்கப்பட்டன. அறிவுஜீவிப் பயங்கரவாதத்தால் கல்லூரிகள் இன்னல்படுகின்றன. சுதந்திரமான ஆய்வுகள் தவறாகப் பயன்படுத்துவதும், சுதந்திர ஆய்வுகள் மீதான வெறுப்பும், அறிவியல் கருத்துக்கள் அனைத்தும் அழியப்போகும் ஒரு உடனடி அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது. அந்த இடிபாடுகளிலிருந்து போலி–அறிவியலின் புதியமுறை நிர்மாணிக்கப்படும். அது மனித இனத்தின் முன்னேற்றத்திற்குத் தடையாக நிற்கும்".

இட்லர் பதவிக்கு வந்த இரண்டு மாதங்களுக்குள்ளாகவே இருநூற்றுக்கும் மேற்பட்ட பிரபல அறிவாளிகள் அவர்களது உயர்பதவிகளிலிருந்து விரட்டியடிக்கப்பட்டனர். அந்த அறிவாளிகள் யூதர்கள் என்ற பொய்க்காரணத்தைக்காட்டி இந்த அழிவுவேலை செய்யப்பட்டது. அவர்களில் பெரும்பாலானோர் யூதர்கள்தான். அவர்களில் சிலர் சோசலிஸ்டுகள், மிகப்பலர் தாராளவாதிகள். மற்றவர்கள் "ஒர வஞ்சனை காட்டாமல் சிந்தனைக்கு நேர்மையாக இருந்தவர்கள். இது நாஜிகளின் பார்வையில் அனைத்துக் குற்றங்களிலும் பெரும் குற்றமாகும்" *(மான்செஸ்டர் கார்டியன், மே 1933).* பாசிசக் காட்டுமிராண்டித்தனத்திற்குப் பலியான உலகப்புகழ்பெற்ற பிரபலங்கள் சிலரைக் குறிப்பிடலாம். **ஆல்பர்ட் அய்ன்ஸ்டீன்,** பேராசிரியர் **ஜோன்டாக்** பெர்லினைச்சேர்ந்த பிரபலமகப்பேறு மருத்துவர் ஒருவர், முன்னோடியான வேதியியல் அறிஞர் இருவர், ஹெய்டல்பர்க் பல்கலைக் கழகத்தில் பணியாற்றி வந்த உளவியல் பேராசிரியர் **ஓட்டோமெயர்கூப்,** சர்வதேசப்புகழ்பெற்ற பொருளாதார அறிஞர் **மோரிட்ஸ்பான்,** இன்னும் அறிவியல் துறையின் பல்வேறு துறைகளில் ஈடுபட்டுள்ள பிரபல அறிஞர்களும்அடங்குவர். "விழிப்புற்ற ஜெர்மனியின்" முதல் எதிரியாக அய்ன்ஸ்டீன் கருதப்பட்டார். பண்பாட்டிற்கும், கலாச்சாரத்திற்கும் பாசிசம் ஒரு பைத்தியக்காரத்தனமான எதிரி என்பதற்காக அதனை மனிதகுல நீதிமன்றத்தில் நிறுத்தித் தண்டிப்பதற்கு, இந்த உண்மை ஒன்றே ஆதாரமானது. சமகால ஜெர்மனியைச் சேர்ந்த பிரபல அறிவியல் அறிஞர்கள், இலக்கியவாதிகள், கலைஞர்கள் அனைவரும் நாஜிகளின் ஜெர்மனியை விட்டு விரட்டியடிக்கப்பட்டுள்ள விசயத்தைத் தெரிந்து கொண்டால் மேற்சொன்ன உண்மை மிகச் சாதாரணம் என்பது தெரிந்துவிடும்.

ஜெர்மனியின் புகழை உயர்த்திய அறிஞர்களைத் துரத்தியதோடு நாஜிகள் மனநிறைவடையவில்லை. மற்ற நாடுகள் மீதும் தங்களின் இந்த அழிவு வேலையைத் திணிக்க விரும்பினர். ஜெர்மனியைவிட்டு அய்ன்ஸ்டீன் விலகிய பின், பிரான்சுக் கல்லூரி ஒன்று அவருக்குப் பதவி தந்து ஏற்றுக் கொள்ள அழைப்பு விடுத்தது.



படிப்பகம்

www.padippakam.com

இதனால் நாஜிப் பத்திரிக்கைகள் பின்வரும் கோரிக்கையை முன்வைத்தன : எதிர்காலத்தில் பதவி நீக்கம் செய்யப்படும் கல்வியாளர்களை ஜெர்மனியை விட்டு வெளியே செல்ல அனுமதிக்கக் கூடாது. அப்பொழுதுதான் "நம் எதிரிகள் அவர்களுக்கு மரியாதை தருவதன் மூலம் நம்மை அவமதிக்க முடியாது".

அலெக்சாண்டிரியா நூலகம் கொளுத்தப்பட்ட நிகழ்ச்சி இன்னமும் கூட வரலாற்று நிகழ்வுகளில் ஒரு கொந்தளிப்புத் தரும் நிகழ்ச்சியாக இருந்து வருகிறது. இறுதியில், பாசிசவாதிகள் அந்தத் தீவைப்பு நிகழ்ச்சியையும் விஞ்சிவிட்டார்கள். மனித அறிவு குறித்த அனைத்துத் துறைகளிலும் பிரபல ஆசிரியர்களால் எழுதப்பட்ட இருபதினாயிரத்துக்கும் மேற்பட்ட புத்தகங்களைப் பாசிசவாதிகள் நெருப்பு வைத்துக் கொளுத்தினர். காட்டுமிராண்டிக்காலத்தில்தான் அலெக்சாண்டிரியா நூலகம் கொளுத்தப்பட்டது. ஆனால், அதன் பின்னணியில், பழம் பண்பாடு ஒன்று வீழ்ச்சியடைந்த நிகழ்ச்சி நடைபெற்றிருந்தது. ஆனால், அறிவியல், இலக்கியம் குறித்த எண்ணற்ற நூல்களுக்கு நாஜிகள் திட்டமிட்டுத் தீவைப்பது, இருபதாம் நூற்றாண்டில் நடைபெற்று வருகிறது. அதுவும் நவீனப்பண்பாட்டின் மையங்களில் ஒன்றில் இது நடைபெற்று வருகிறது. உணர்ச்சிவயச் சூட்டினால் சில கிறுக்கர்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் செய்த செயல்கள் அல்ல இவை. மாறாக பாசிசத்தின் அநாகரீக வழிபாட்டிற்கு ஒத்துவராத, அறிவியல் ஆய்வுகள், கலாச்சார முன்னேற்றம் அனைத்தையும் ஒழிப்பதற்கான ஒரு திட்டமிட்ட முயற்சியாகும் இது. இம்மாதிரியான வெறுக்கத்தகுந்த புத்தகங்கள் அனைத்தும் பட்டியலிடப்பட்டு வன்முறை மூலம் அவை ஒன்று திரட்டப்பட்டுப் பல்வேறு இடங்களில் அவை தீக்கிரையாக்கப்பட்டன.

அறியில் இலக்கியக் கருவூலங்கள் இப்படித் திட்டமிட்டு அழிக்கப்பட்டதைக் கண்டு உலகம் திகிலடைந்தது. "பண்பாடு உருவாக்கியிருந்த அனைத்துத் தர மதிப்புகளும் வேரறுக்கப்பட்டன". (நாடு, *நியூயார்க், சூலை 5, 1933*). நம்பமுடியாத இந்த அழிவு வேலையைப் பற்றி அமெரிக்காவில் வாழ்ந்து வந்த ஒரு பிரபல ஜெர்மன் பதிப்பாளர் பின்வருமாறு எழுதியுள்ளார் :

"எல்லாவற்றையும் விட வண்மையாகக் கண்டிக்கத்தக்கது அவர்கள்(நாஜிகள்) தாமஸ்மன்னின் எல்லாப் படைப்புகளையும் எரித்ததுதான். அதன் மூலம் அவர்கள் மனிதப்பண்பாட்டின் மிக உயர்ந்த உள்ளடக்கத்தை மறுதலித்து இழிவானகாட்டுமிராண்டித்தனத்தினுள் தலைகுப்புற விழுந்து விட்டார்கள். அறிவின் வாழ்விற்கு எதிராகவும், அனைத்து அறிவார்ந்த மதிப்பீடுகளுக்கும் எதிராகவும் அனைத்துச் சார்பற்ற சிந்தனைகள், ஆய்வுகள், பற்றார்வங்களுக்கு எதிராகவும் மனித ஆற்றல் கொஞ்சம் கொஞ்சமாக வென்றெடுத்த அனைத்து உரிமைகளுக்கு எதிராகவும், மறுமலர்ச்சிக் காலத்திலிருந்து மனிதர்கள் அதற்காகவே வாழ்ந்து அடிக்கடி தங்கள் உயிரையும், பலிகொடுத்த ஒவ்வொரு கொள்கைக்கு எதிராகவும் ஒவ்வொரு உண்மைக்கு எதிராகவும், ஒவ்வொரு சுதந்திரத்திற்கு எதிராகவும் இவைகளையெல்லாம் கட்டியமைத்த மானுடப்பண்பின் மீதே கூடக் கடுமையானதும்



படிப்பகம்

www.padippakam.com

கொடூரமானதுமான தாக்குதல் தொடுக்கப்பட்டிருக்கிறது என்பது மிக முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டியதாகும்''.(லூத்விக் லெவிஸோன், *நாடு, நியூயார்க், சூன் 21, 1933*)

''அறிவுஜீவி''த்தனத்தின் மீது தாங்கள் காட்டும் வெறுப்பை நாஜிகள் பெருமையாக எண்ணிக் கொள்கிறார்கள். உண்மையில் அறியாமையை மேன்மைப்படுத்துவது அவர்களின் வழிபாட்டின் ஒரு பகுதியாகும். ''அறியாமையில் இருப்பதையும், ஜெர்மனி தலைமுறை தலைமுறையாக மெதுவாகச் சேகரித்த சாதனைகளையும், அறிவையும் இழிவாகக் கருதுவதும், இன்றைய இளம் நாஜிகளின் பண்பாக இருக்கிறது''.(கேமில்டன் பிஷ் ஆர்ம்ஸ்ட்ராங்–*பாரின் அஃபேயர்ஸ் சூலை 1933*) இது ஒரு நாஜி–எதிர்ப்புப் பிரச்சாரமல்ல. நாஜி கல்வியமைச்சரான ருஸ்ட் ''தேசியசோசலிசம் அறிவியலை மீறியதல்ல. மாறாக, அது கோட்பாடுகளுக்கு மட்டுமே எதிரானது'' என அறிவித்தார். இதைக்கேட்டு ஒருவர் புன்னகை மட்டுமே புரியமுடியும். கோட்பாடில்லாத அறிவியல் என்னவாக இருக்க முடியுமென வியப்படையவே முடியும். ஆனால், உலகம் அய்யப்பாட்டில் தவிப்பதை அமைச்சர் விரும்பவில்லை. கலாச்சார உறுதிப்பாட்டில் பாசிசவாதி, வெளிப்படையான முரட்டுத்தனத்தோடு நடக்கவில்லையென்றால் அவர் இருப்பதற்கே பொருளில்லாமல் போய்விடும். ''புயல்படையினரின் உணர்வு நோக்கில் தத்துவமும், அறிவியலும் மறு–திசை வழிகாட்டப்பட வேண்டும்'' (re-orientation) என அமைச்சர் அறிவித்தன் மூலம் கோட்பாடில்லாத அறிவிலுக்கு அவர் விளக்கம் தந்துவிட்டார். அதிகாரப்பூர்வமான நாஜிகளின் பத்திரிகையில் அம்மாதிரியான உணர்வு நோக்கு குறித்து ஒரு விவரணை தரப்பட்டுள்ளது. அது பின்வருமாறு :–

''புயல்படை நின்று கொண்டிருக்கிறது
இனப்போருக்குத் தயாராக;
யூதர்கள் இரத்தம் சிந்தி வீழ்ந்தால் மட்டுமே
நாம் உண்மையில் சுதந்திரமாக இருப்போம்''

(தேசிய கீதம்)

''சனவரி 30, 1933 இல் ஜெர்மனி தன் அகராதியிலிருந்து அமைதிக் கோட்பாடு (pacifism) என்ற சொல்லை ஏன் எடுத்து வீசியது என்பதை உலகுக்கு உணர்த்த அவர்கள் முயற்சிக்க வேண்டும்''. (வான்பாப்பன், *இட்லரின் முதல் அரசாங்கத்தில் துணை அதிபர்*) அந்த நாளில்தான், இட்லர் ஜெர்மனியின் அதிபராகப் பதவியேற்றார்.

''ஜெர்மனியர்கள் எந்த லட்சியத்துக்காகப் போரில் உயிர் நீத்தார்களோ அந்த லட்சியத்தை நிறைவேற்றுவது உயிரோடிருப்பவர்களின் புனிதக் கடமையாகும். இரத்தத்தால் எழுதப்பட்ட ஒரு சபதத்தை இரத்தத்தால் மறுஉயிர்ப்புச் செய்ய வேண்டும்'' (கோயரிங்). புயல்படையினரின் உணர்வுகளைப் பிரதிநிதிப்படுத்திய இந்த பனிதன் இந்த உணர்வு ஊட்டப்பட்டுள்ள ஒரு சமூகத்தில் பெண்களின் பணி என்ன என்பதற்கு ஒரு அடிப்படையை முன்வைத்தார். ''பெண் இருக்க வேண்டிய இடம்



படிப்பகம்

www.padippakam.com

"வீடுதான். அவரின் பணி சோர்வுற்ற வீரனுக்கு மனமகிழ்வு ஊட்டுவதுதான்". புயல்படையினரால் உற்சாகம் அடைந்த இளம் நாஜிப் பெண்கள் இதை ஏற்றுக் கொண்டார்கள். "போருக்குத் தன் குழந்தைகளை அனுப்புவதைத் தவிர பெண்களுக்கு உயரிய அல்லது உன்னதக் கடமை வேறொன்றுமில்லை". (*சிவப்பு சுவஸ்திக்கின் பெண்களுக்கான ஒழுங்கு அறிக்கை*) இறுதியாக இறைவாக்கு வெளிப்பட்டது. தேசிய மறுமலர்ச்சிப் பிரச்சார அமைச்சர் கோயபல்ஸ் பின்வருமாறு திருவாய் மலர்ந்தார் : "பெண்களின் பணி தங்களை அழகுபடுத்திக் கொள்வதும் குழந்தைகள் பெறுவதும்தான். ஆண் பறவைக்காக பெண்பறவை சிங்காரித்துக் கொள்கிறது. அதற்காக முட்டை பொரிக்கிறது. அதற்குப் பதிலாக ஆண்பறவை உணவு அல்லது அதற்குப் பாதுகாப்பாக இருக்கிறது. எதிரிகளைத் துரத்தி அடிக்கிறது". "விழிப்புற்ற ஜெர்மனியின்" புதிய ஆன்மாவானது விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் இடையில் எந்த வேறுபாட்டையும் பார்க்கவில்லை. விலங்குகளை வழிநடத்தும் அதே உள்ளுணர்வுகளே (instinct) மனிதர்களுக்கும் நன்கு பொருந்தும் போலும். தத்துவத்தையும், அறிவியலையும் நாஜிகள் மறு–திசை வழிப்படுத்துவது இப்படித்தான்.

பாசிசவாதிகளின் வெறித்தனமான இனவெறுப்பு, மத்தியகாலக் காட்டுமிராண்டித்தனத்திற்கு மேலும் ஒரு அடையாளம் என்பதோடு, அது (இனவெறுப்பு) ஒரு பொருத்தமான முகமூடியாகவும் இருந்தது. யூதர்களின் சர்வதேச நிதிநிலை மீது பாசிசவாதி தொடர்ந்து வசைபொழிந்து வந்ததானது உண்மையான நிதி, தொழில்சக்திகளுக்கு இவர்கள் ஊழியம் பார்த்து வந்ததை மறைப்பதற்குப் பயன்பட்டது. பொருளாதாரத் துறையில் யூதர்களின் ஆதிக்கம் ஏதுமில்லை. ஆனால் அறிவியல், கலாச்சாரத் துறையில் யூதர்கள் ஆதிக்கநிலையில் இருக்கின்றனர். பெருவணிகர்களில் யூதர்கள் யாருமில்லை. ஜெர்மனியின் பொருளியல் வாழ்க்கையைக் கட்டுப்படுத்துகின்ற அதன் அரசியல் தலைவிதியைத் தீர்மானிக்கின்ற பெருந்தொழில் கூட்டமைப்புகளும், வலிமையான வங்கிகளும் கிறித்துவர்களின் கட்டுப்பாட்டில்தான் இருக்கின்றன. யூத அறிவுஜீவிகளும் (இதில் சிலர் அறிவியல் கலைத்துறைகளில் உலக அளவில் முன்னணியில் நிற்கின்றனர்) சோசலிசவாதிகளும், வணிகர்களும் (பெரும்பாலும் சிறுவணிகர்கள்) செயற்கையாக உருவாக்கப்பட்ட இனவெறுப்புப் பலிபீடத்தில் பலிகடா ஆக்கப்பட்டனர். முதலாளியத்தின் பேராசைத் திட்டங்களை மேலும் துரிதப்படுத்துவதற்கு ஒரு அடிமைக்கருவியாக அப்பாவி குட்டிமுதலாளிகளைப் பிடிப்பதற்கான தூண்டில்மீன் தான் இனவெறுப்புப் பிரச்சாரம் ஆகும். நவீன வரலாறு குறித்த ஒரு நிபுணர் நாஜிகளின் மூர்க்கத்தனமான யூத–எதிர்ப்பு குறித்துப் பின்வரும் விளக்கத்தை முன்வைக்கிறார் :– "பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிலவிய சமூக வெறுப்பும் நடைமுறையும் இராணுவம், உள்நாட்டுப் பணிகள் ஆகியவற்றின் உயர்பொறுப்புகளிலிருந்து யூதர்களை முற்றிலும் விரட்டிவிட்டன. யூதர்கள் பெருமளவில், சட்டம், மருத்துவம், இலக்கியம் அதையொத்த வேலைவாய்ப்புகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.



படிப்பகம்

www.padippakam.com

இவ் வேலைவாய்ப்புகளில் இவர்கள் ஒரு ஆதிக்க நிலையையும் அடைந்து விட்டனர். இதன்மூலம் இவ்வேலைவாய்ப்புகள் மீது பேராவல் கொண்டிருந்த தேசிய சோசலிஸ்டுகளின் போட்டியையும், பொறாமையையும் தூண்டிவிட்டனர். (சிட்னிபே- *வரலாற்றுப் பேராசிரியர், ஹார்வர்டு பல்கலைக் கழகம்- நாஜிகள்யூதர்களைக் கையாள்வது, தற்கால வரலாறு, நியூயார்க், ஜூன் 1933*).

வேறொரு கதையை முன்வைத்துப் பாசிசவாதிகள் தங்கள் யூத–எதிர்ப்பை நியாயப்படுத்துகிறார்கள். யூதர்களின் சர்வதேசச் சதி என்ற முறையில் சோசலிசமும் கம்யூனிசமும் கண்டனம் செய்யப்படுகின்றன. மார்க்சியம் என்பது யூதர்களின் பேராசை வெளிப்பாடே என பண்பாக்கம் செய்யப்பட்டது. அது ஜெர்மன் மக்களின் நலன்களுக்கு ஊறுவிளைவிப்பது, டியூடானிக் இனத்தின் பண்பாட்டு மேதமைக்குச் சற்றும் பொருந்தாதது என வரையறுக்கப்பட்டது. இந்த வாதங்களின் துணையோடு புரட்சிகரத் தொழிலாள வர்க்க இயக்கத்திற்கு எதிரான ஒரு புனிதப் போரின் ஒரு பகுதியாக யூத–எதிர்ப்பு மாற்றப்பட்டது. ஆனால் உண்மை என்னவென்றால் ஜெர்மன் மக்களின் ஏனையப் பகுதியினரைக் காட்டிலும், ஜெர்மன் தொழிலாளி வர்க்கம்தான்–ஏறத்தாழ முழுவதுமே டியூடானிக் இனத்தைச் சேர்ந்ததாகும். தொழிலாளிவர்க்க இயக்கத்தின் அறிவுத்தலைமையில் ஒரு சில யூதர்கள் இருக்கலாம். ஆனால் தொழிலாளி வர்க்கத்தின் அடித்தட்டு அணி முழுக்கவும் கிறித்துவர்களே.

இன்றும் கூட, நாஜி ஜெர்மனியில் அய்ம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட ஆண்களும் பெண்களும் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். அல்லது நாஜி முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர். பாசிசவாதிகளின் இந்த அச்சுறுத்தலுக்குப் பலியானவர்களில் யூதர்களின் எண்ணிக்கை ஒரு விழுக்காட்டிற்கும் குறைவே. தொண்ணூறு விழுக்காட்டினர் தொழிலாளர்களே ஆவர். வெறிகொண்ட இனவெறுப்பிற்குப் பின்நோற்கும் நோக்கம், "அறிவியலோ" அல்லது அரசியலோ அல்ல. மாறாக, சுத்தமான பொருளியல் சம்பந்தப்பட்டது. யூதப்பேராசிரியர் அல்லது ஒரு வேலைவாய்ப்பில் உள்ள ஒரு யூதர் அல்லது யூதவணிகர் பதவியிலிருந்து விரட்டப்பட்டால் அவ்விடத்தில் தன் சொந்தத் தகுதியில் அப்பதவிக்கு வரமுடியாத ஒரு நாஜி வெறியன் அமர்த்தப்படுகிறான். உண்மையில் யூத–எதிர்ப்பின் பலன் ஒரு சில ஆரியவணிகர்களுக்கே நன்மைதருவதாக அமைந்தது. ஆனால், ஜெர்மனியின் கல்வி, கலாச்சாரத்தளத்தில் இது (யூத–எதிர்ப்பு) சீரழிவையே உண்டு பண்ணியது. அறிஞர்களும், சர்வதேசப் புகழ்பெற்ற கல்வியாளர்களும் வகித்த பதவிகள் சாதாரண நபர்களைக் கொண்டு நிரப்பப்பட்டது. ஜெர்மனியின் அறிவார்ந்த வாழ்க்கையை நாசம் செய்த வெறுப்பு வழிபாடு, மானுடவியல் குறித்த அறிவியலைக் கெடுத்ததன் மூலம் ஒரு போலி–அறிவியலுக்கு அடித்தளம் இட்டுத்தந்தது.தூய்மை, இரத்தத்தகுதி போன்ற கோட்பாடுகளுக்கு ஒரு அடித்தளம் இடப்பட்டது."புயல்படையினர் இக்கோட்பாட்டை ஒரு அறிவியல் என்ற தளத்திற்கு உயர்த்தினர்". ஜெர்மனியையே நரகமாக்கிய ஒரு விரக்தியான பெயிண்டர்தான்(இட்லர்–மொர்) இந்தக்கோட்பாட்டை உருவாக்கியவர்.



படிப்பகம்

www.padippakam.com

"கறுப்பு மயிர் கொண்ட யூத இளைஞன் முகத்தில் ஒரு சாத்தானின் மகிழ்ச்சியோடு ஒரு அப்பாவிப்பெண்ணை எதிர்நோக்கி மணிக்கணக்கில் மறைந்திருக்கிறான். பின் அப்பெண்ணுடன் உறவு கொண்டு அப்பெண்ணின் இனத்தை (race) அவளிடமிருந்து திருடிக்கொள்கிறான். தான் அடிமைப்படுத்த நினைக்கும் ஒரு நாட்டின் இனஅடிப்படையைச் சீர்குலைக்க அவன் எல்லா வழிகளிலும் முயற்சிக்கிறான். தலிப்பட்ட முறையில் அவன் திட்டமிட்டே பெண்களையும், சிறுமிகளையும் கெடுக்கிறான். அந்நியச் சக்திகளுக்கு எதிராக உருவாக்கப்பட்டுள்ள இனத்தடையை உடைக்க அவன் தயங்குவதே இல்லை. இதைத்தான் யூதர்கள் செய்துவந்தார்கள். இப்போதும் செய்து வருகிறார்கள். இப்பணிக்காகத்தான் ரைன் பகுதியில் கறுப்பர்களைக் கொண்டுவந்து இறக்கியிருக்கின்றனர். தொடர்ச்சியான கலப்புறவு மூலம் தான் வெறுக்கும் வெள்ளை இனத்தைத் திட்டமிட்டு அழிப்பது; வெள்ளை இனம் இதுவரை எட்டியுள்ள அரசியல், கலாச்சார உயரத்தில் இருந்து அதனை வீசி எறிவது; அவ்வினத்தின் எசமானனாகத் தன்னை உயர்த்திக் கொள்வது; இதுதான் அவர்களின் நோக்கம். தனிநபர்களைக் கறைபடுத்துவதன் மூலம் இனத்தளத்தை (race level) கீழிறக்கத் திட்டமிட்டே இவன் (யூத இளைஞன்) பணியாற்றி வருகிறான்". (இட்லர்: *சுயவரலாறு*).

இந்த இனவெறுப்புப் பல்லவியை எழுதிய அம்மனிதனே கூட கறுப்பு முடி கொண்ட ஒரு கலப்பினத்தவன்தான். தன் கற்பனையில் உதித்த யூத இளைஞன் மீது சுமத்திய அதே குற்றத்தை உண்மையில் இவன்தான் செய்திருக்கிறான். வரலாற்றின் விடியலிலேயே இரத்தத்தூய்மை மறைந்து போன ஒரு அய்ரோப்பியப் பகுதியில் பிறந்த இவன், சிறந்த ஜெர்மனியை அசுத்தப்படுத்த முயற்சிக்கிறான். ஆனால், இனம், இரத்தம் குறித்த இந்த வழிபாட்டின் உண்மைப் பொருள் ஏகாதிபத்தியம்தான். இளம் பொன்னிறத் தலைமுடியும், நீலக்கண்களும் கொண்ட நார்டிக் (nortic) இன உன்னத மனிதன்தான் ஏனைய இனங்களைக் காட்டிலும் உயர்ந்தவன். ஆகவே, அவன்தான் "இயற்கையிலேயே உலகை ஆளப்பிறந்தவன்" என்பதுதான் இக்கருத்தின் அடியோட்டம். **கோபிநூ, ஹஸ்டன்–ஸ்டீவர்ட் சேம்பர்லின்** ஆகியோரின் கோட்பாடுகள் வளர்ந்து ஒரு அகண்ட ஜெர்மானிய வண்ணத்தோடு தேசிய சோசலிசமாக மாறியது. "ஆரிய மேலாதிக்கக் கோட்பாட்டின் அடிப்படை மீதுதான் பாசிசத்தின் அடிப்படைச் சமூக அரசியல் கூறுகள் அமைந்துள்ளன". (இட்லர் :– *எப்பொழுது? எங்கிருந்து?*) நாஜி ஏகாதிபத்தியவாதிகளின் ஆரிய மூதாதையர்கள் மத்திய ஆசியப் பகுதிகளில் இருந்து வந்திருக்க மாட்டார்கள். மாறாக அவர்கள் வடதுருவப் பகுதியிலிருந்துதான் வந்திருப்பார்கள்.

இட்லர் ஆட்சிக்கு வருவதற்கு முன்பே, தேசிய சோசலிஸ்டுகளின் பிரபல முழக்கங்களில் ஒன்று "ஜெர்மனிக்குக் காலனிகள் தேவை" என்பதே. பின் நாட்களில் இம்முழக்கம் மிகமிக முனைப்புப் பெற்று, போர் அச்சுறுத்தலின்போது அழுத்தம் பெற்றது. காலனிய விரிவாக்கம் ஜெர்மனிக்குத் தேவை என்ற வலியுறுத்தல் தேசிய சோசலிசப் பிரச்சாரத்தின் தொடர்ந்த அம்சமாக இருந்து வந்திருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

உண்மையில், போலி–சோசலிச முழக்கங்கள் ஒருபுறம் ஒதுக்கிவைக்கப்பட்டன. ஜெர்மனியின் விரிவாக்கக் கொள்கைகளை நிறைவேற்றாத வரையிலும், சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்ற ஒரு காரணம் முன்வைக்கப்பட்டது. "ஜெர்மனியைப் பொறுத்த அளவில் ஒரு தீவுப் பரப்பிற்குள் அறுபத்தைந்து மில்லியன் மக்கள் வாழ்கிறார்கள். அதுன் சமூகப் பிரச்சினைகைளைத் தீர்க்க முயற்சிப்பதில் எந்தப் பயனுமில்லை. காரணம் ஒரு தீர்விற்கான அவசியச் சூழல்கள் அங்கு முழுமையாக நிலவவில்லை. ஒரு நாட்டின் வெளி வலிமையை (outward strength) நிர்மாணித்து அதன்மூலம் தனி நபர்களும் இந்நாடு முழுக்கவும், தங்கக்கூடிய ஒரு இடத்தை நாட்டிற்கு வெளியில் உண்டாக்குவதே உள்நாட்டு சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒரு நிபந்தனையாகும்". (**கோயரிங் :** *பெர்லினில் தொழிலாளர் கூட்டத்தில் ஆற்றிய உரை,ஏப்ரல், 9, 1933*).

"வெளிவலிமையை" அடைவதற்காக ஜெர்மன் மக்களைப் பொருளாதார ரீதியாக நாசாமாக்குவதன் மூலம் நாட்டை மிருகத்தனமாக மறு–ஆயுதப்படுத்த வேண்டியிருந்தது. "வெள்ளைமனிதனின் சுமை"யில் தாங்களும் பங்கு கொள்ள வேண்டி, நாஜிகள் ஜெர்மனியைப் போர்ப்பாதையில் இட்டுச் சென்றனர். இதற்கு அடுத்த நாள், இட்லர் பின்வருமாறு அறிவித்தார் : "ஜெர்மனி தன்னை வலுப்படுத்திக் கொள்வது மிகமிக அவசியம். அப்பொழுதுதான் அது தன் குடியேற்ற நாடுகளை (காலனிகளை) வெற்றிகரமாகத் திரும்பக்கோர முடியும்". கோயரிங் தனக்கே உரித்தான வெளிப்படையான முரட்டுத்தனத்தோடு, தன் லட்சியத்தை எப்படி அடையலாம் என்பதை விளக்குகிறார். "காலனிகளுக்கான கோரிக்கையை நாங்கள் தொடர்ந்து எழுப்பி வருவோம். உரத்து, உரத்துக் கூறுவதால், உலகம் இதை மறுக்க இயலாத ஒரு சூழல் உருவாகும். இப்பொழுது ஜெர்மனியிடம் ஒரு புதிய வலிமையான இராணுவம் இருக்கிறது என்பது ஒரு முக்கிய உண்மையாகும். ஜெர்மனி தன் தாழ்வுமனப்பான்மையை விரட்டிவிட்டது". ஜெர்மனியின் அதிகாரத்தில் அதிமனிதர்கள் அமர்ந்திருக்கிறார்கள். தங்களின் இன மேலாண்மையை உணர்ந்தவர்கள் அவர்கள். சூரியக் கிரகத்தில் தனக்கென ஒரு இடத்தை மீண்டும் பிடித்துக் கொள்வது என்பதில் அவர்கள் உறுதியாய் இருக்கிறார்கள். இனம், இரத்தம் குறித்த மாய வழிபாட்டின் நடைமுறை வெளிப்பாடு இப்படித்தான் இருக்கும்.

பாசிசம் தன் பிறப்பிலிருந்தே ஒரு சர்வதேச நிகழ்வாக–தன்னை ஏகாதிபத்தியம் என்று அறிவித்துக் கொண்ட ஒரு நிகழ்வாக–இருக்கிறது. 1919லேயே முசோலினி பின்வருமாறு எழுதியுள்ளார் : "ஏகாதிபத்தியம் என்பது வாழ்க்கையின் நிரந்தரமான மாற்றமுடியாத விதி ஆகும்". இன்று இவர் ஒரு ஏகாதிபத்திய விரிவாக்கத் திட்டத்தோடு தயார் நிலையில் இருக்கிறார். அபிசீனியாவை ஆக்கிரமிப்பதற்குச் சற்று முன், முசோலினி தன் திட்டத்தை அறிவித்தார். "மேற்கிலும் வடக்கிலும் இத்தாலிக்கு எந்த எதிர்காலமும் இல்லை. கிழக்கிலும் தெற்கிலும்– அதாவது ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும்–தான் அதன் எதிர்காலம் அடங்கியுள்ளது. ஆசியாவின் விரிவான வளங்கள் உரிமையாக்கப்பட வேண்டும். பண்பாட்டு வட்டத்திற்குள் ஆப்பிரிக்காவைக் கொண்டு வரவேண்டும். ஏற்கனவே



படிப்பகம்

www.padippakam.com

ஆப்பிரிக்காவை எட்டிவிட்டோம். இத்தாலியின் விரிவாக்கம் எதனையும் தடுக்க வேண்டாமென ஏற்கனவே அங்கு வந்து சேர்ந்திருக்கும் நாடுகளைக் கேட்டுக் கொள்கிறோம்''. தங்களது விரிவாக்க லட்சியங்களைப் பாசிசவாதிகள் ஒருபோதும் மறைத்துக் கொள்வதில்லை. "இடத்திற்கும் வேலைவாய்ப்பிற்கும் ஒரு போர்'' என்பதே அவர்களின் கூக்குரல் ஆகும். போரின் மூலம் காலனிகள் வெல்லப்பட வேண்டும். அவை உடனடியாக உள்நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்த்துவிடும் எனச் சொல்லி வேலையில்லாப் பட்டாளம் போருக்கு அணி திரட்டப்பட்டது. முதலாளியம் அதன் அழுகிய காலகட்டத்தில் அதிகரித்து வரும் தொழிலாளி வர்க்கத்திற்கு வேலைவாய்ப்பு அளிக்க முடியாது. நிரந்தரமாக வேலை இல்லாமல் இருப்பவர்களுக்கு எந்த நிவாரணமும் அதனால் தரமுடியாது. காரணம் அதன் லாபவிகிதம் சரிந்து வருகிறது. ஆகவே அழுகிய முதலாளியத்தால் உருவாக்கப்பட்ட வேலையில்லாச் சிக்கலுக்குத் தீர்வு அந்த அமைப்பையே ஒழித்துவிட்டு, உள்முரண்பாடுகளிலிருந்து பொருளாதாரத்தை விடுவிப்பதுதான். சமூகத்தின் பொதுநலத்திற்குப் பகைமையாயுள்ள, நைந்துபோன சமூக அமைப்பைப் பாதுகாப்பதுதான் பாசிசத்தின் வரலாற்றுப் பாத்திரமாக இருந்து வருகிறது. ஆகவேதான் பாசிசம் வேலையில்லாச் சிக்கலுக்குத் தீர்வாகப் போரை நாடுகிறது. பாசிசம் என்றாலே போர்தான் என மிகச் சரியாகச் சொல்லப்பட்டுள்ளது. பின்வரும் புகழ்பெற்ற அறிக்கையிலிருந்துதான் மேற்சொன்ன வரையறையே உருவானது :

"போரினால்தான் பாசிசம் பிறந்தது. போரில்தான் அது தனக்கான தீர்வைப் பெறமுடியும். ஒரு பெரும்போர் இன்றி நமது நாடு முன்னேறவே முடியாது''.(**மேரியோ கர்லி**).

"போருக்காக மூன்று முறை வாழ்த்துக்கள். இந்த முழக்கத்தை எழுப்ப அனுமதி தருகிறேன். இத்தாலியின் போருக்காக மூன்று முறை வாழ்த்துக்கள். உன்னதமான, அழகான அனைத்திற்கும் மேல் பொதுவாகப் போர் என்பதற்காக மூன்றுமுறை வாழ்த்துக்கள்''. பாசிச இயக்கத்தின் மிகத்துவக்கத்தில், முசோலினி எழுதியிருந்த எழுத்துக்களிலிருந்து இந்த மேற்கோள் எடுக்கப்பட்டுள்ளது. இரண்டு ஆண்டுகளுக்குப் பின்பு இன்னமும் அதிகாரத்தில் அமராத ஒரு கட்டத்தில் தான் முன்பு எழுதிய தனது கட்சியின் அதே பத்திரிகையில் முசோலினி பின்வருமாறு எழுதுகிறார் : "அமைதி என்பது அபத்தம் அல்லது இன்னும் சரியாகச் சொல்வதானால் போரில் ஏற்படும் இடைவேளை எனலாம்''. 1926 இல் பிரதிநிதிகள் சபையில் உரையாற்றும்போது, "இத்தாலிய நாடு ஒரு நிரந்தரப் போரில் ஈடுபட வேண்டும்'' என முழக்கமிட்டார்.

அடுத்த ஆண்டு அவர் பாசிசத்தின் லட்சியத்தை விளக்கமாக விவரித்தார். "நாம் ஓர் அறிவிப்புக் கிடைத்த அந்தக் கணத்தில் அய்ந்து மில்லியன் மக்களை அணிதிரட்டவும், அவர்களுக்கு ஆயுதம் அளிக்கவும் தயாராய் இருக்க வேண்டும். நம் கப்பல், விமானப் பிரிவுகளை வலுப்படுத்த வேண்டும். இதன் மீதுதான் அதிக நம்பிக்கை வைத்துள்ளேன். கப்பல் படையின் இயந்திரச் சத்தம் இந்தத் தீபகற்பத்தில் ஏற்படும் மற்ற சத்தங்களை மூழ்கடிக்கும் அளவிற்கு



படிப்பகம்

www.padippakam.com

எண்ணிக்கையிலும், சக்தியிலும் இதனைப் பெரிதாக்க வேண்டும். விமானப்படையின் இறகுகள், சூரிய ஒளியை இந்தப் பூமியில் படாதவாறு மறைக்கவேண்டும்". இந்த நிபந்தனைகளை நிறைவேற்றவும், பாசிசவாதிகளின் லட்சியத்தை அடையவும், இத்தாலிய மக்கள் பொருளாதார ரீதியில் நாசமாக்கப்பட்டனர். இத்தாலியத் தீபகற்பத்தில் போர் முழக்கங்களைத் தவிர வேறொன்றும் கேட்கவில்லை என்று சொல்லுமளவிற்கு மக்களின் வேதனையும் எதிர்ப்புக் குரலும் இரக்கமின்றி நசுக்கப்பட்டன.

அபிசீனியாப் போருக்கு முன்னமே, இத்தாலிய அரசாங்கத்தின் கடன் நூற்று அய்ம்பது ஆயிரம் மில்லியன் லிரா (இத்தாலிய நாணயம்) என்ற நம்பமுடியாத பெருந்தொகையை எட்டிவிட்டது. அதிலிருந்து, இன்னும் அய்ம்பது விழுக்காடு உயர்த்த அது கணக்கிட்டிருந்தது. நிதிநிலையில் திவாலாகிப்போன அரசாங்கம் சர்வதேச வணிகத்திற்கு அவசியமாகத் தேவைப்படும் நிதியை ஈடுகட்ட இயலாத நிலையில் இருந்ததால், இறக்குமதியின் அளவுகள் படிப்படியாகக் கட்டுப்படுத்தப்பட்டன. வரையறுக்கப்பட்ட இறக்குமதி என்ற நிலையில், போருக்குத் தேவையான பொருட்களுக்கு மட்டுமே முன்னுரிமை அளிக்கப்பட்டது. இதன் விளைவு உணவுப் பொருட்கள் விலையும், ஏனைய நுகர்வுப் பொருட்களின் விலையும் தொடர்ந்து ஏறின. மறுபக்கம் கூலியும் தொடர்ந்து வீழ்ச்சியடைந்து– ஒரு சில மேட்டுக்குடிமக்களைத் தவிர–அனைத்து மக்களும் கட்டாயமாக ஏழ்மையை நோக்கி மென்மேலும் தள்ளப்பட்டனர்.

ஜெர்மனியில், பாசிசவாதிகள் தாங்கள் இத்தாலிய முன்னோடிகளின் பாதையைப் பின்பற்றியது மட்டுமின்றி, அதனை மேலும் வளர்க்கவே செய்தனர். "பலவீனமான பின்னடைந்த நிலையிலுள்ள இனங்களை", போரின் மூலம் வெல்லப் பாசிசவாதிகள் செய்த போர்த் தயாரிப்புகளுக்கு முன்னேற்பாடாக உள்நாட்டில் தன் எதிரிகளைத் தீர்த்துக்கட்ட வேண்டியிருந்தது. அதற்காக அவர்கள் செய்த குரூரங்களைச் சொல்லில் விவரிக்க முடியாது. தேசிய சோசலிசத்தின் வெற்றிக்காக ஒழித்துக்கட்ட வேண்டிய எதிரிகள் பட்டியலில் தொழிலாளி வர்க்கம் மட்டுமல்ல– தாராளவாதிகள், அமைதிவாதிகள், மனிதநேயர்கள், உண்மைக் கிறித்துவர்கள் என – அனைத்து முற்போக்குச் சக்திகளும் உள்ளடக்கப்பட்டிருந்தனர். எண்ணற்ற சிறைச்சாலைகளிலும், முகாம்களிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அடைத்து வைக்கப்பட்டனர். அங்கு மத்தியகால சித்திரவதை வழிமுறைகள் பின்பற்றப்பட்டன. நாஜி ஆட்சிக்கு எதிரான குற்றவாளிகள் என முடிவு செய்ய ஆதரவற்ற அந்த அப்பாவிகளிடமிருந்து குற்றவாக்குமூலங்கள் பெறப்பட்டன. உள்நாட்டில் தங்கள் எதிரிகளை இவ்வாறு ஒழித்ததை, 1935 இல் பெர்லினில் நடைபெற்ற சர்வதேசக் குற்றவியல் மாநாட்டில் நாஜிகள் நியாயப்படுத்திப் பேசினர். சிறையில் கைதிகளை "மனிதாபிமானத்தோடு கையாள வேண்டும்" என ஏனையநாட்டுப்பிரதிநிதிகள் வற்புறுத்தியபோது கோயபல்ஸ் தலைமையில் வந்த நாஜிப் பிரதிநிதிகள் "சிறையில் கடுமை காட்ட வேண்டும்" என்று கூறினர். சிறையில் கைதிகளைச் சித்திரவதை செய்வது அவசியமானது, பயனுள்ளது" என கோயபல்ஸ்



படிப்பகம்

www.padippakam.com

துணிச்சலாகவே நியாயப்படுத்தினார். நாஜிகளின் இந்தக் கேவலமான அறிவிப்பு வெளிநாட்டுப் பிரதிநிதிகளை மிகவும் திகிலடையச் செய்தது. ஒரு பிரபல பிரான்சு நீதிபதி பின்வருமாறு கூறினார் : "பழி வாங்குவது என்ற கருத்து நீதியின் அனைத்து இடங்களிலிருந்தும் மறைந்துவிட வேண்டும். இல்லையெனில் காட்டுமிராண்டிக் காலத்திற்குத் திரும்பிவிடுவோம்". தங்கள் நாட்டில் நிலவிவரும் குற்றவியல் குறித்த கருத்தாக்கங்களுக்கும், ஜெர்மனியின் நிலைக்கும் பெருத்த இடைவெளி காணப்படுவதால், ஜெர்மன் பிரதிநிதிகள்– ஜெர்மனியின் சட்ட அமைச்சரும் அதில் அடக்கம்– உருவாக்கிய கொள்கைகளை அடிப்படையும் இல்லையெனக் கூறி பெரும் எண்ணிக்கையில் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் மாநாட்டை விட்டு வெளியேறி விட்டனர்.

"நான் ஜெர்மனியின் வதைமுகாமில் இருந்திருக்கிறேன். ஜெர்மன் சிறையில் இருந்திருக்கிறேன். சகிக்க முடியாத காட்சிகளை அங்கு நான் பார்த்திருக்கிறேன். ஜெர்மன் ஒரு நரகம். அந்த நரகத்தில் நீங்களும் சிக்கிக் கொள்ளாதீர்கள். ஏனெனில் ஒருவர் அங்கு நம்பிக்கையை இழந்து விடுகிறார். நான் ஒரு கிறித்துவனாயிருந்தாலும் நான் எம்மக்களிடையே பேசமுடியாது. ஆனால் நான் கம்யூனிஸ்டுகளுடன் பேசமுடியும். காரணம் ஒருபக்கம் அவர்கள் முன்னறிவுள்ளவர்கள். இன்னொரு பக்கம் அவர்கள் மனிதகுலத்தின் நலனில் அக்கறை கொண்டவர்கள்". தேர்தலின்போது சார் பள்ளத்தாக்குப் பகுதியில் தொழிலாளிகள் மத்தியில் நடந்த ஒரு கூட்டத்தில் ஒரு கத்தோலிக்கப் பாதிரியார் பேசிய பேச்சு இது. இந்தத் தேர்தல் முடிவுகள் நாஜிகளின் மக்கள் செல்வாக்கிற்கு ஆதாரமாக உயர்த்திப் பிடிக்கப்பட்டன. பாசிசத்தின் நடைமுறைகள் உருவாக்கிய ஒரு சூழலைப் பற்றி இது ஒரு உண்மையான சித்திரத்தைத் தருகிறது. அந்தக் கத்தோலிக்கப் பாதிரியார் அனுபவித்த கொடுமைகள்– அவர் போல்ஷ்விசத்திற்கு நண்பராக இல்லையென்ற போதிலும்–மனிதகுல நலத்தின் பாதுகாவலர்கள் போல்ஷ்விக்குகள் என்பதை ஒப்புக் கொள்ளவைத்துவிட்டன. பாசிசத்தின் அறிவிக்கப்பட்ட லட்சியமே போல்ஷ்விக்குகளை அழிப்பது தான். பாசிசம் ஒரு கொள்ளை நோய் எனக் கண்டிப்பதற்கு இந்த ஆதாரம் ஒன்றே போதுமானது.

❖❖❖



படிப்பகம்

www.padippakam.com

பின்னிணைப்பு :–

## எம்.என். ராயின் வாழ்க்கைக் குறிப்பு

| | | |
|---|---|---|
| 1887 | மார்ச், 21 | : பிறப்பு – அர்பெலியா கிராமம், கல்கத்தா அருகில். |
| இயற்பெயர் | | : நரேந்திரநாத் பட்டாச்சார்யா |
| 1906 | | : புரட்சி இயக்கத்தில் சேருதல் |
| 1907 | டிசம்பர் | : சிங்கிரிபோட்டா ரயில்நிலையத்தில் கொள்ளையடித்தல் |
| 1910 | ஏப்ரல் | : நேத்ராவில் கொள்ளையடித்தல் |
| 1910 | | : ஹௌரா சதிவழக்கில் கைது |
| 1911–13 | | : புரட்சிகரக் குழுக்களை அமைப்பதற்காக இந்தியாவில் பலநகரங்களுக்கும் பயணம். பிரிட்டிஷ் ஆட்சியை ஒழிப்பதற்கு ஜதீன் முகர்ஜியின் தலைமையில் இரகசியத் திட்டம் உருவாக்குதலும் பங்கெடுத்தலும். |
| 1915 | பிப்ரவரி | : கார்டன்ரீச்சில் கொள்ளையடித்தல். |
| 1915 | ஏப்ரல் | : படேவியாவிற்குப் பயணம். |
| 1915 | சூன் | : ஆயுத உதவிக்கு ஏற்பாடு செய்தபிறகு இந்தியா திரும்புதல். |
| 1915 | ஆகஸ்ட் | : ஆயுதக்கொள்முதலுக்காக மீண்டும் படேவியா பயணம் |
| 1915 | | : ஜதீன் முகர்ஜி மரணம் |
| 1915 ஆகஸ்ட் முதல் | | : ஆயுத உதவி கோரி இந்தோனேசியா, மலேசியா |
| 1916 சூன் வரை | | சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்குப் பயணம். |
| 1916 | சூன் | : பெர்லினுக்குப் போகின்ற நோக்கத்துடன் அமெரிக்காவிற்குப் பயணம். |
| 1916 | சூன் 14 | : சான்பிரான்சிஸ்கோவில் தங்கல் |
| 1916 | சூன் | : ஸ்டான்போர்டு பல்கலைக்கழகத்திற்குச் செல்லல்– மனவேந்திரநாத் ராய் எனப்பெயரை மாற்றிக் கொள்ளல். |
| 1916 | ஆகஸ்ட் | : நியூயார்க் நகரத்திற்கு வருதல் |



படிப்பகம்

www.padippakam.com

| | | |
|---|---|---|
| 1917 | ஜூன் | : இந்து–ஜெர்மன் சதிக்கூட்டத்தின் உறுப்பினர் என்று குற்றம் சாட்டப்பட்டு நியூயார்க்கில் கைதுசெய்யப்படுதல். |
| 1917 | ஜூலை | : மெக்சிகோவிற்குத் தப்பிச் செல்லுதல் |
| 1918 | டிசம்பர் | : மெக்சிகோவின் சோசலிஸ்ட் கட்சி மாநாட்டில் பங்கெடுப்பு |
| 1919 | | : ரசியப்புரட்சியாளர் போரோடினைச் சந்தித்தல் |
| 1919 | அக்டோபர் | : மெக்சிகோவின் சோசலிஸ்ட் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சியாக மாற்றமடைதல். ரஷ்யாவிற்கு வெளியே நிறுவப்பட்ட முதல் கம்யூனிஸ்ட் கட்சி இதுதான். |
| 1919 | நவம்பர் | : கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது மாநாட்டில் பங்கெடுப்பதற்காக மெக்சிகோவிலிருந்து மாஸ்கோ புறப்படுதல். |
| 1919 | டிசம்பர் | : பெர்லின் சேருதல். |
| 1920 | ஏப்ரல் | : மாஸ்கோ சேருதல். |
| 1920 | மே (அ) ஜூன் | : லெனினுடன் முதல் சந்திப்பு. |
| 1920 | ஜூலை – ஆகஸ்ட் | : கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது மாநாடு. |
| 1920 | ஆகஸ்ட் | : டாஸ்கண்ட் பயணம். |
| 1920 | அக்டோபர் | : இந்தியர் இல்லம் – இராணுவப்பயிற்சிப்பள்ளி ஆகியன நிறுவுதல். |
| 1920 | அக்டோபர் 17 | : டாஸ்கண்டில் இந்திய கம்யூனிஸ்ட்கட்சியை அமைத்தல். |
| 1921 | | : **மாறிவரும் இந்தியா** என்னும் நூல் ரசிய மொழியில் வெளியிடப்படுதல். 1922 மத்தியில் இதன் ஆங்கிலப்பதிப்பு வெளியிடப்படுதல். |
| 1922 | மே | : **முன்னணிப்படை**– பத்திரிக்கை வெளியிடப்படல். |
| 1924 | | : கான்பூர் கம்யூனிஸ்ட் சதி வழக்கு. |
| 1927 | சனவரி–ஆகஸ்ட் | : சீனாவில் அரசியல் பணி. |
| 1928 | ஏப்ரல் | : மாஸ்கோவிலிருந்து வெளியேறுதல். |
| 1928 | செப்டம்பர் | : கம்யூனிஸ்ட் அகிலத்தின் ஆறாவது மாநாடு. |
| 1929 | மார்ச் | : மீரட் கம்யூனிஸ்ட் சதிவழக்கு. |



படிப்பகம்

www.padippakam.com

| | | |
|---|---|---|
| 1929 | டிசம்பர் | : கம்யூனிஸ்ட் அகிலத்திலிருந்து வெளியேற்றப்படுதல். |
| 1930 | டிசம்பர் | : இந்தியாவிற்கு ரகசியமாகத் திரும்புதல். |
| 1931 | மார்ச் | : இந்திய தேசிய காங்கிரசின் கராச்சி மாநாட்டில் பங்கெடுத்தல். |
| 1931 | சூலை | : ஏழு மாத தலைமறைவு அரசியல் பணிகளுக்குப் பின்பு பம்பாயில் கைது செய்யப்படுதல். |
| 1931 | ஆகஸ்ட்–டிசம்பர் | : கான்பூர் சதிவழக்கு விசாரணை. |
| 1932 | சனவரி | : பன்னிரெண்டு ஆண்டுகள் நாடு கடத்தல் தண்டணை.மேல்முறையீட்டில் நான்கு ஆண்டுகள் கடுங்காவலாகத் தண்டனை குறைக்கப்படுதல். |
| 1936 | நவம்பர் | : மேராடூன் சிறையிலிருந்து விடுதலை. |
| 1936 | டிசம்பர் | : இந்திய தேசிய காங்கிரசின் பெய்ஸ்பூர் மாநாட்டில் பங்கெடுத்தல். |
| 1937 | ஏப்ரல் | : சுதந்திர இந்தியா – இதழ் வெளியீடு. |
| 1939 | செப்டம்பர் | : இரண்டாம் உலகப்போர் தொடக்கம். |
| 1940 | அக்டோபர் | : உலகப்போர் பற்றிய கருத்துவேறுபாட்டினால் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகுதல். |
| 1940 | டிசம்பர் | : தீவிரவாத சனநாயகக் கட்சி என்னும் பெயரில் ஒரு அரசியல் கட்சி தொடங்கப்படல். |
| 1944 | ஏப்ரல் | : மக்கள் திட்டம் என்னும் கொள்கை அறிக்கை வெளியிடல். |
| 1945 | | : இந்திய அரசியலமைப்புச் சட்டம் – ஒரு நகல் என்ற பெயரில் அறிக்கை வெளியிடல். |
| 1948 | டிசம்பர் | : தீவிர சனநாயகக் கட்சியின் நான்காவது மாநாட்டில் அக்கட்சி கலைக்கப்படுதல். |
| 1952 | சூலை | : முசௌரியில் விபத்து – பல மாதங்கள் மருத்துவ உதவி நாடல்: |
| 1954 | சனவரி | : டெராடூனில் மரணம். |



படிப்பகம்

www.padippakam.com

## எம்.என்.ராயின் முக்கிய நூல்கள்

1. Reason, Romanticism and Revolution part I & II
2. Materialism.
3. New Orientation.
4. New Humanism - A Manifesto
5. Beyond Communism.
6. Revolution and Counter Revolution in China.
7. Politics, Power and Parties
8. Science and Philosophy.
9. Historical role of Islam.
10. Scientific Politics
11. Science and Superstition.
12. Memoirs of M.N. Roy.
13. Men - I met.
14. From savagery to civilisation.
15. சீனாவில் எனது அனுபவங்கள்
16. ரசிய புரட்சி
17. நமது வேறுபாடுகள்
18. மாறிவரும் இந்தியா.
19. இந்திய அரசியலின் எதிர்காலம்
20. நமது பிரச்சினைகள்
21. காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சிக்குக் கடிதங்கள்
22. இந்தியாவும் போரும்
23. தேசியவாதம் – காலங்கடந்த வழிபாட்டு மரபு
24. தேசிய அரசாங்கமா அல்லது மக்கள் அரசாங்கமா?
25. இந்தியதேசிய இராணுவமும் ஆகஸ்ட் புரட்சியும்.
26. ஜவகர்லால் நேரு
27. இந்தியஅரசியலமைப்புச்சட்டம் – ஒரு நகல்

*1 முதல் 14 முடிய உள்ள புத்தகங்கள் கிடைக்குமிடம் :*

Ajantha Books International
1-U.B. Jawahar Nagar, Bungalow Road,
Delhi - 110 007.



படிப்பகம்

www.padippakam.com

SEELAN BOOK
SIGNATURE
NORWAY

## எமது வெளியீடுகள்

| | | ரூ.பை |
|---|---|---|
| இசுலாமின் வரலாற்றுப் பாத்திரம் | எம்.என்.ராய் | 25.00 |
| பாசிசம் | ,, | 35.00 |
| காசுமீரின் தொடரும் துயரம் | | 60.00 |
| சட்டமும் பெண்களின் பாலியல் உரிமைகளும் | பிளேவியா அக்னீஸ் | 40.00 |
| அன்புள்ள டாக்டர் மார்க்ஸ்... | ஷீலா ரௌபாத்தம் | 40.00 |
| தான் பிரின்: தொடரும் பயணம் | பா.ராமசாமி | 50.00 |
| பெரியார் : ஆகஸ்ட் 15 | எஸ்.வி.ராஜதுரை | 225.00 |
| பெரியார் : சுயமரியாதை - சமதர்மம் | ,, | 250.00 |
| ஆகஸ்ட் 15 : இன்ப நாள் துக்க நாள் (பதிப்பாசிரியர்) | ,, | 30.00 |
| தேர்ந்தெடுக்கப்பட்ட இராணுவப் படைப்புகள் | மாஓ சேதுங் | 175.00 |
| மார்க்சியம் - பெண்ணியம் உறவும் முரணும் | வெ.கோவிந்தசாமி - நடராஜ் | 100.00 |
| கவர்ன்மெண்ட் பிராமணன் | அரவிந்த மாளகத்தி | 45.00 |
| பின்னை நவீனத்துவம் கோட்பாடுகளும், தமிழ்ச்சூழலும் | தி.க. நடராசன் - அ.ராமசாமி | 55.00 |
| அறம் / அதிகாரம் | ராஜ் கௌதமன் | 75.00 |
| பொய் + அபத்தம் = உண்மை | ,, | 32.00 |
| பின் நவீனத்துவம் இலக்கியம் அரசியல் | அ.மார்க்ஸ் | 35.00 |
| மார்க்சியத்தின் பெயரால்... | ,, | 25.00 |
| உரையாடல் தொடர்கிறது | ரவிக்குமார் | 30.00 |
| குணா: பாசிசத்தின் தமிழ் வடிவம் | அ.மார்க்ஸ் - கோ.கேசவன் | 20.00 |
| இந்து சட்டத் தொகுப்பு: மாயையும் எதார்த்தமும் | மது கிஷ்வர் | 20.00 |
| புதியதோர் உலகம் | கோவிந்தன் | 70.00 |
| கிளுக்கி | பாப்லோ அறிவுக்குயில் | 30.00 |
| தாய் மண் | விழி.பா. இதயவேந்தன் | 20.00 |
| மரணத்துள் வாழ்வோம் | (ஈழத்துக் கவிதைகள்) | 75.00 |

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



''நான் ஜெர்மனியின் வதைமுகாமில் இருந்திருக்கிறேன். ஜெர்மன் சிறையில் இருந்திருக்கிறேன். சகிக்க முடியாத காட்சிகளை அங்கு நான் பார்த்திருக்கிறேன். ஜெர்மன் ஒரு நரகம். அந்த நரகத்தில் நீங்களும் சிக்கிக் கொள்ளாதீர்கள். ஏனெனில் ஒருவர் அங்கு நம்பிக்கையை இழந்து விடுகிறார். நான் ஒரு கிறித்துவனா யிருந்தாலும் நான் எம்மக்களிடையே பேசமுடியாது. ஆனால் நான் கம்யூனிஸ்டுகளுடன் பேச முடியும். காரணம் ஒரு பக்கம் அவர்கள் முன்னறிவுள்ளவர்கள். இன்னொரு பக்கம் அவர்கள் மனிதகுலத்தின் நலனில் அக்கறை கொண்டவர்கள்.''

*(தேர்தலின்போது சார் பள்ளத்தாக்குப் பகுதியில் தொழிலாளிகள் மத்தியில் நடந்த ஒரு கூட்டத்தில் ஒரு கத்தோலிக்கப் பாதிரியார் பேசிய பேச்சு இது)*

விடியல்

படிப்பகம்